# விழியே உனக்கு உயிரானேன்!

ஹன்சிகா சுகா



## முன்னுரை

அன்புள்ள வாசகப் பெருமக்களே!

அனைவருக்கும் எனது அன்பான வணக்கங்கள்.

எழுத்துப் பிரியர்களைப் புகழ்க் கொடியில் ஏற்றி அமர்த்தும் அருண் பதிப்பகத்தின் மூலமாக என்னுடைய இரண்டாம் கதையான 'விழியே உனக்கு உயிரானேன்!' நாவலை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

எந்த நொடி, எப்படி, யாரிடம் மலரும் என்று புரியாத வினோதமான உணர்வு காதல். அந்த உணர்வு உண்மையாய் இருக்கும் பட்சத்தில், அந்தக் காதல் ஜெயிப்பது நிஜம். ஆணும், பெண்ணும் நேசமென்னும் பாச வலையில் விழுந்து விட்டால், அவர்கள் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் காதல் என்பது, வாழ்க்கையை ஜீவனுள்ளதாய் நடத்திச் செல்கிறது.

காதல், மோதல், குறும்பு, கேலி என்று அத்தனை உணர்வு களையும் கொண்ட இக்கதையில், காதலின் வெவ்வேறு நிலை களையும் சரியான விகிதாச்சாரத்தில் கலந்து கொடுத்திருப்ப தாகத்தான் நினைக்கிறேன்.

சடக் - புடக் என்று விவாக ரத்துகளும், ஜாதி வெறியால் ஏற்படும் காதல் பிரிப்புச் சம்பவங்களும் நடைபெற்று வரும் காலகட்டத்தில், காதல் வயப்பட்ட நம் நாயகனும், நாயகியும் வாழ்க்கையை எப்படிக் களிப்போடு வாழ்ந்தார்கள்? கதைக்குள் செல்வோமா?

என்னுடைய கதைகளுக்கு எப்போதும் வரவேற்பளித்து, என்னை ஆதரித்துக் கொண்டிருக்கும் ஆன்லைன் தோழமைகளுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். புத்தக வடிவில் என் கதைகளை அச்சேற்றி, எழுத்துலகில் என் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் அருண் பதிப்பகத்தாருக்கு மனமார்ந்த நன்றி.

என்றும் அன்புடன்,

**ஹன்சிகா சுகா**



# விழியே உனக்கு உயிரானேன்!

## 1

காதல் வந்ததும் கன்னியின் உள்ளம்
காதலை யாருக்கும் சொல்வதில்லை!
புத்தகம் மூடிய மயிலிறகாக
புத்தியை மறைப்பாள் தெரிவதில்லை!
நெஞ்சே என் நெஞ்சே
செல்லாயோ அவனோடு...
சென்றால் வர மாட்டாய்
அதுதானே பெரும்பாடு...
தந்தானானா... தந்தானானா... தந்தானானா...!

நிலவுப் பெண்ணின் பாதம் பட்ட பூமியில், வைகறையின் வருகையை அறிவிப்பதாய்ச் சூரியக் கதிர்களின் வெளிச்சப் பரவல். இருட்டுப் போர்வையை மெல்லக் கலைத்து விட்டு வானம் நிறம் மாறத் தொடங்க, இயற்கையின் சுப்ரபாதமாய்ப் பறவைகளின் கீச்சுக் குரல்.

நந்தனா அபார்ட்மெண்ட்ஸ் காலை நேரப் பரபரப்பில் இயங்கிக் கொண்டிருந்தது.

மீனாட்சி எப்போதும் போல வெள்ளனே எழுந்து சமையலறையில் உருட்டிக் கொண்டிருந்தார். லாவண்யா ஹாலில் உரக்கப் படித்துக் கொண்டிருக்கும் சப்தம் கேட்டது. சோம்பலாய் அரைக் கண் திறந்து, வானவீதியின் மேக ஊர்வலத்தை ஜன்னல் வழியே ரசித்து விட்டு, மீண்டும் தலையணையை இழுத்துப் பிடித்துக் கொண்டு தூங்கினாள் இளவரசி.

நித்ரா தேவி அவளை அடுத்த ரவுண்ட் தூக்கத்திற்கு அழைத்துச் செல்ல, சாவகாசமாய் எழுந்து குளித்து, டைனிங் டேபிளுக்கு வந்த தன் மகளின் வனப்பைக் கண்களில் நிறைத்துக் கொண்டார் மீனாட்சி.

"குட் மார்னிங் மம்மி... காலங்கார்த்தால உங்க பொண்ணை சைட் அடிக்கிறீங்க... என்ன விஷயம்?" அம்மாவின் தோளில் செல்லமாய் முகம் பதித்தாள்.

"இது காலங்கார்த்தாலயா? ஊரே பரபரன்னு இயங்கிக்கிட்டு இருக்கு. தங்க விக்ரகமாட்டம் இருக்கே இளா... அந்தப் பிரம்மதேவன் உன்னைப் படைக்கிற



போது நல்ல மூட்ல இருந்திருப்பாரோன்னு யோசிக் கிறேன்."

"நோ... நோ... உங்களைப் படைக்கும் போது நல்ல மூட்ல இருந்திருப்பார். அங்க இருக்கிறதுதான் இங்க கொஞ்சம் ட்ரான்ஸ்பர் ஆகி வந்திருக்கு..." கலகலவென்று சிரித்தாள்.

"இப்படியே மாறி மாறி ரெண்டு பேரும் கொஞ்சிக்கிட்டு இருந்தா பிரம்மதேவன் எஸ்கேப் ஆகி ருத்ர தேவன் வந்து நிற்கப் போறாரு. இன்னைக்குத்தானே உன்னுடைய புது பாஸ் பதவி ஏற்கப் போறதாச் சொன்னே? சீக்கிரம் சாப்பிட்டு ஆபீஸ் கிளம்பற வழியைப் பாரு."

"லவா காலேஜ் போயாச்சா?" என்று கேட்டுக் கொண்டே டைனிங் டேபிளில் அமர்ந்தாள்.

"ஆச்சு! இன்னைக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்குன்னு சீக்கிரமே கிளம்பிட்டா!"

ஆவி பறந்த இட்லியும், சாம்பாரும் உள்ளே இறங்கிக் கொண்டிருந்தபோதே,

"இளா... மேரேஜ் பீரோ மூலமா நேற்று தபால்ல ரெண்டு ஜாதகம் வந்திருக்கு, பார்க்கறயா?" என்று இழுத்தார் மீனாட்சி.

"வந்திருந்தா எடுத்து உங்க பீரோல வெச்சுப் பூட்டிக்கோங்க. புது எம்.டி. வரும்போது என்னை

மூட்-அவுட் பண்ணி அனுப்பாதீங்க அம்மா. கல்யாண விஷயமெல்லாம் இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்னு நான் ஏற்கெனவே சொல்லிட்டேனே..."

கையைக் கழுவிக் கொண்டு வந்தவளுக்குக் கமகமக்கும் இன்ஸ்டன்ட் காபி தயாராக இருந்தது.

"காபியில இருக்கிற கேபைன் கன்டன்ட் பற்றி ஒரு வெப்சைட்ல பக்கம் பக்கமாப் படிச்சேன். விட்டு விடத்தான் நினைக்கிறேன். ஆனாலும் விக்ரமாதித்தன் வேதாளம் போல அம்மாவின் காபி வாசனை விடாமல் என்னை இழுக்கிற...தே!" என்று அவள் ராகம் பாட,

"நடிச்சதெல்லாம் போதும். எப்ப கல்யாணப் பேச்சு எடுத்தாலும் இதே மாதிரி ஏதாவது பேசி மழுப்பிடு!"

கோபத்தில் சிவந்த தாயின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டு ஸ்கூட்டியை இயக்கினாள் இளவரசி.

என்.பிரபாகரன், மேனேஜிங் டைரக்டர்

குருப்ரபா இண்டஸ்ட்ரீஸ்

தங்க நிறத்தில் பளபளத்த எழுத்துக்களைத் தாங்கி நின்ற அறைக் கதவை நாசூக்காய்த் தட்டி விட்டு உள்ளே நுழைந்தாள்.

"ஹாய் அங்கிள்... குட் மார்னிங்..."

"வெல்கம்... மை டியர் கேர்ள்...! இன்றைய நாள் இனிய நாளாகட்டும்."



புத்தம் புது மலராய்த் தன் அறைக்குள் நுழைந்தவளை, அதே உற்சாகத்தோடு வரவேற்றார் பிரபாகரன்.

"பிரபா... என் பொண்ணுக்குப் படிப்பு முடிஞ்சதுடா... வேலைக்குப் போகணும்னு ஆசைப்படறா... உனக்குத் தெரிஞ்ச நம்பிக்கையான இடத்துல வேலைக்குச் சேர்த்து விடேன்..."

குடும்பத்தை விட்டுத் துபாயில் வேலையிலிருந்த பால்ய கால நண்பன் சுந்தரத்தின் கோரிக்கைக்கு உடனே செவிமடுத்தார் பிரபாகரன்.

"ஏன்டா... என் பேக்டரியில வேலை தர மாட்டேனா? அவ எனக்கும் பொண்ணு மாதிரிதானடா...!"

"அதனாலதான் வேற இடத்துல சேர்த்து விடுன்னு சொல்றேன். உன்கிட்ட வேலை செய்தா, சலுகை எடுத்துட்டுச் செல்லம் கொஞ்சிட்டு இருப்பா. வேற எங்கேயாவதுன்னா... செய்யற வேலையில ஒரு பயமும், பக்தியும் வரும்."

"சரிதான்டா ஞானப்பழமே! அவ என் கிட்டேயே இருக்கட்டும். அதுதான் பாதுகாப்பா இருக்கும்," என்று பிரபா ஓங்கிப் பேச, அதற்கு மேல் சுந்தரத்தால் மறுத்துப் பேச முடியவில்லை.

அரசிக்கு வேலை கிடைத்த விவரத்தை, அவளுக்குப் போனில் தெரிவித்தார் சுந்தரம்.

"ஐயோ அப்பா... அங்க வெயில் ரொம்ப அதிகமாப்பா? நான் இன்னும் ரெஷ்யூம் ரெடி பண்ணவே இல்லை... அதுக்குள்ள எப்படி வேலை கிடைக்கும்?" என்று அலறினாள்.

தன் கணவரைக் கிண்டல் செய்த மகளைச் செல்லமாய்த் தலையில் குட்டினார் மீனாட்சி.

"எந்த ரெஷ்யூமும் தேவையில்லை... பிரபா என்னோட பால்ய கால நண்பன். நீ வேலைக்குப் போக ணும்னு ஆசைப்படறதை அவன் கிட்டச் சொன்னேன். தன்னோட ஆபீஸ்லேயே வேலை தர்றதாச் சொல்லிட் டான்."

அரசிக்குத் தலை கால் புரியாத கொண்டாட்டம். அவனவன் கம்பெனி கம்பெனியாக ரெஷ்யூமை அனுப்பி விட்டு, நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு வருமா என்று கொட்டாவி விட்டுக் கொண்டு காத்திருக்கிறான். அவளுக்கோ, 'கண்ணா, லட்டு தின்ன ஆசையா?' என்று கை மேல் வேலை.

"ஐ லவ் யூ ஸோ மச் டாடி..." என்று செல்லில் முத்தமிட்டாள்.

"போதும்டி... அப்பாவும், மகளும் கொஞ்சிக்கிட்டது! நான் என் புருஷன் கிட்டப் பேச வேண்டாமா?" என்று செல்லைப் பிடுங்கிக் கொண்டார் மீனாட்சி.

"அட... மீனாட்சி சுந்தரேஸ்வரா! இந்த வயசுலேயும் ரொமான்ஸா? நடக்கட்டும்... நடக்கட்டும்!" என்று கேலி



செய்து கொண்டே, அப்பாவும், அம்மாவும் பேசுவதற்கு ஆயிரம் இருக்கும் என்று நாகரிகமாக விலகிச் சென்றாள் இளவரசி.

எதற்கும் இருக்கட்டும் என்று தன் சர்டிபிகேட் களையும் கையோடு எடுத்துக் கொண்டு, சுந்தரம் சொன்ன முகவரி தேடிச் சென்றாள். என்னதான் அப்பாவின் பழைய நண்பராக இருந்தாலும், ஆள் எப்படியோ, என்னவோ என்று மனதுக்குள் இனம் புரியாத திகிலாகத் தான் இருந்தது.

நினைத்ததெல்லாம் தவறு என்று நிரூபிக்கும் விதமாக, அவள் உள்ளே நுழையும்போதே, "வாம்மா மகளே...!" என்று அவர் வரவேற்கவும், சற்றே அசந்துதான் போனாள்.

எம்.டி. நாற்காலியில் அமர்ந்திருந்தவரின் முகத்தில் அப்படியொரு கனிவு, தேஜஸ், கம்பீரம். ஒரு புதியவரைப் பார்க்கும் உணர்வே அரசிக்கு எழவில்லை. நீண்ட நெடுங்காலமாக அவரோடு பழகியது போல், பச்சக்கென்று ஒரு பாசம் நெஞ்சில் பசை போட்டு ஒட்டிக் கொள்ள, அரசி அவரிடம் காரியதரிசியாக வேலைக்குச் சேர்ந்து முழுதாக ஐந்து மாதங்கள் உருண்டோடி விட்டன.

வாழ்க்கை அவளுக்கு ஏற்றாற்போல் வண்ண மயமாய்ச் சென்று கொண்டிருந்த நேரம்... அந்தத் தொழிற்சாலையின் நிர்வாகத்தைப் பிரபாகரனின் மகன் தருண் ஏற்கப் போகிறான் என்ற செய்தி காட்டுத் தீயாகப்

பரவியது. தருணைப் பற்றிக் கேள்விப்பட்ட விவரங்கள், வேலை செய்பவர்களின் வயிற்றில் புளியைக் கரைத்தது.

"புது முதலாளி ரொம்ப ஸ்ட்ரிக்ட்டாமே...!" என்று ஊழியர்கள் பேசிக் கொள்வது, அட்டெண்டர் முருகேசன் மூலமாக அவள் செவிக்கு வந்து சேர்ந்தது. எப்போதும் லோ ஹிப் புடவையில் வந்து அலம்பல் செய்து கொண்டிருக்கும் தாரிணி கூட, ஒரு சில நாட்களாக அடக்க ஒடுக்கமாகத்தான் வந்து கொண்டிருக்கிறாள்.

நிஜமாகவே அவன் கறாரானவனா...? புதிதாக ஒருவர் பொறுப்பேற்றுக் கொள்ளும் போது பொதுவாகக் கிளப்பப்படும் புரளிகளா...?

பிரபாகரனின் மதிப்பான தோற்றத்தையும், கனிவான வார்த்தைகளையும் வைத்துப் பார்க்கும் போது, அவர் மகன் ஒரேயடியாய்க் கொம்பேறி மூக்கனாக இருக்க வாய்ப்பில்லை என்றுதான் இளவரசி நினைத்திருந்தாள் – அவனைப் பார்க்கும்வரை!

"அரசி... நம்ம கம்பெனி சார்பா என் மகனை வரவேற்க ஏர்போர்ட் வரைக்கும் போயிட்டு வந்துடும்மா... கம்பெனி காரையே எடுத்துட்டுப் போ..." என்று பிரபாகரன் உத்தரவிட,

மறு வார்த்தை பேசாமல் புறப்பட்டாள். அனைவராலும் பரபரப்பாகப் பேசப்படும் அந்தத் தருணை நேரில் பார்க்க வேண்டும் என்ற ஆசை கொம்பு முளைத்து ஆடியது.



'குருப்ரபா இண்டஸ்ட்ரீஸ்' புதிய முதலாளியை வரவேற்பதற்காக, விமான நிலையத்தில் காத்திருந்தாள் இளா.

தலைக்குக் குளித்துக் க்ளிப்பிடப்பட்டிருந்த அடர்த்தியான கூந்தல். வெள்ளை நிறச் சுரிதாரில் பச்சைப் பூக்கள் எம்ப்ராய்டரி செய்யப்பட்ட சுரிதார். ஒப்பனை எதுவும் இல்லாமலே களையான முகம். புன்னகை சிந்தும் ரோஜா உதடுகள்.

விமானம் சரியான நேரத்தில் தரையிறங்கி விட, அவள்தான் வரவேற்க வருவாள் என்று முன்பே புகைப்படத்தோடு இ-மெயில் வந்ததால், எளிதில் அடையாளம் கண்டு கொண்டு அருகில் வந்தான் தருண்.

"என்னை எதிர்பார்த்துத்தானே காத்திருக்கே...?" கணீரென்று ஒலித்த குரல்.

அவன் அணிந்திருந்த கருப்புக் கண்ணாடியை முகத்திலிருந்து அகற்றும் வரை, ஆள் அடையாளம் தெரியாமல் பார்வையால் துழாவிக் கொண்டிருந்தவள், அருகில் குரல் கேட்டதும் சட்டென்று திரும்பினாள்.

அச்சு அசல் பிரபாகரனின் பிரதிபிம்பமாய்...! பனை மரத்தில் பாதி இருப்பானோ...? சற்றே நீளமான முகவெட்டு. ஆளைத் துளைத்தெடுக்கும் கூர்மையான பார்வை. எடுப்பான நாசி. அழுத்தமான உதடுகள்.

"ஹலோ சார்... ஐ ஆம் இளவரசி... நம்..." என்று முடிக்கும் முன்பே,

"எந்த நாட்டுக்கு...?" என்று புருவங்களை உயர்த்தி, இடக்காகப் பதில் கேள்வி வந்தது.

முகத்தில் கிலோ கணக்கில் திகைப்பைக் காட்டி நின்றவள், அதற்கு மேல் பேச்சு வராமல், மலர்க்கொத்தை அவனிடம் கொடுக்க, அதை அலட்சியமாக வாங்கி, அவளருகில் நின்ற கம்பெனி டிரைவர் செழியனிடம் கொடுத்தான் தருண்.

ஒப்புக்குக் கூட அவளுக்கு நன்றியோ, புன்னகையோ பதிலாகத் தராத அவனுடைய சுபாவம், முதல் சந்திப்பிலேயே ஓரளவுக்குப் புரிந்து விட, வாயை இறுக மூடிக்கொண்டு அவன் பின்னே நடந்தாள். இனி அலுவலகத்திலும் இப்படித்தான் நடந்து கொள்வானோ...?

ஷ்... அப்பா... தொடர் ஓட்டமா ஓடிக் கொண்டிருக்கிறான்? சற்றே மெதுவாக நடந்தால்தான் என்ன? அவன் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறினாள்.

லக்கேஜ்களை வண்டியில் ஏற்றி வைத்ததும், 'நீ வருகிறாயா?' என்ற கேள்வியே இல்லாமல், தருண் அந்த வெண்ணெய் நிற ஸ்கோடாவில் ஏறிக் கொள்ள,

'நீ புறப்படு!' என்று டிரைவருக்குக் கண்ணால் ஜாடை செய்து விட்டுச் சொந்தச் செலவில் கால் டாக்ஸி பிடித்து அலுவலகம் வந்து சேர்ந்தாள்.

"தருணை ரிஸீவ் பண்றதுல ஒரு சிக்கலும் இல்லையே அரசி...?"



பரபரப்பாகத் தன் முன்னே வந்து அமர்ந்த இளவரசியிடம் தண்ணீர் பாட்டிலை நீட்டினார் பிரபாகரன். அந்த நேர அவதிக்கு, அவளுக்கு மிகவும் தேவையாகவே இருந்தது.

கடகடவென்று மொத்த பாட்டிலையும் காலி செய்தவள், அவரை நிமிர்ந்து பார்த்தாள். 'மகனைப் பற்றித் தெரிந்து கொண்டே இதென்ன விஷமம்?' என்று அவள் பார்வை, அவரைக் கேள்வி கேட்க,

அவர் முகத்திலோ எப்போதும் ஒட்டிக் கொண்டிருக்கும் மெல்லிய புன்னகை. கோபமென்றால் எந்த ஊரில், என்ன விலையில் கிடைக்கும் என்று கேட்கும் ரகமோ?

"நீங்க வட துருவம்னா உங்க மகன் தென் துருவமா இருப்பார் போலிருக்கே அங்கிள்! அவரை ரிஸீவ் பண்ணிட்டு வந்தது 'தானே' புயல்ல அடிபட்டுத் தப்பிச்சு வந்த மாதிரியே இருக்கு. புயல் இன்னும் இங்க வரல போல இருக்கே! வாசல்ல வண்டியைக் காணோம்?"

"முதல்ல அவன் அம்மாவைப் பார்த்துக் கொஞ்சிக் குலாவிட்டு வருவான். வந்த பிறகு அந்தப் புயலை எதிர்கொள்ள நீ தயாராக இரு மகளே!"

"ப்ளீஸ் அங்கிள்... எனக்கு உங்க ஃபிரெண்ட் கம்பெனி எதுலயாவது வேலை வாங்கிக் கொடுத்துடுங் களேன். புயலோட தாக்குதலைச் சமாளிக்க முடியுமான்னு பயமா இருக்கு."

"அதுக்குள்ளே பயம் வந்துடுச்சா? உன்னை என் ஃபிரெண்ட் கம்பெனிக்குத் தாரை வார்த்துக் கொடுத்துட்டு, இங்க நிலவரத்தைச் சமாளிக்கிறது யாரு? உன்னைத் தவிர வேறு யாரு இங்க வந்தாலும் அவன் பேசுற பேச்சுக்கு நிலவரம் கலவரம் ஆயிடும்."

எதுகை மோனையாக அவர் பேசியதை நினைத்துச் சிரித்துக் கொண்டாள்.

"நிஜமாகவே உங்க மகன் ஆஸ்திரேலியாவிலதான் இருந்தாரா அங்கிள்?"

திடீரென்று அரசி கேட்ட அதிரடிக் கேள்வியில், சற்றே ஆடித்தான் போனார் பிரபாகரன்.

"அடிப்பாவி மகளே...! லட்சம் லட்சமாக் கொட்டி அவனை மேனேஜ்மெண்ட் கோர்ஸ் படிக்க வெச்சிருக்கேன். இப்படி ஒரு சந்தேகமா?"

"அவர் ஏர்போர்ட்ல நடந்துக்கிட்டதைப் பார்த்தா, அமேசான் காட்டுல இருந்து தப்பிச்சு வந்த மாதிரியே இருந்தது. அதுதான் ஒரு சின்னச் சந்தேகம்."

"என் கிட்டயே என் பையனைக் காட்டுவாசின்னு சொல்றே... ஆனாலும் உனக்குக் கொழுப்பு அதிகம் தான். நீ சொன்னதை அப்படியே அமேசான் கிட்டச் சொல்லட்டுமா? என்னதான் நடக்குதுன்னு நானும் வேடிக்கை பார்க்கிறேனே...!"

பிரபாகரன் வேண்டுமென்றே மிரட்ட, சட்டென்று இரண்டு கைகளையும் தலைக்கு மேல் வைத்துக்



கும்பிட்டாள். ஏழுமலையானை வணங்குவது போல அவள் வணங்கி நின்ற அதே நொடி, 'தானே' புயல், தானே கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தது.

அத்தனை சீக்கிரம் வந்து நிற்பான் என்று எதிர்பார்க்காததால், அவள் கண்கள் இருப்பதை விட இரண்டு மடங்கு பெரிதாக, டபக்கெனக் கைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தவள், "குட் மா..." என்று ஆரம்பித்த பொழுதே,

"மிச்சத்தை அப்புறமாச் சொல்லிக்கலாம். நீ வெளியே இரு. நான் முக்கியமான விஷயங்கள் சிலது பேச வேண்டியிருக்கு. இன்னும் அரை மணி நேரத்துக்கு எந்தத் தொந்தரவும் இருக்கக் கூடாது." அமேசானின் வார்த்தைகள் கணீரென்று வந்து விழுந்தன.

தஞ்சாவூர்ப் பொம்மையைப் போல அவள் தலை யாட்டி விட்டுச் செல்ல, அதற்குள் பிரபாகரன், தான் அமர்ந்திருந்த சுழல் நாற்காலியில் இருந்து எழுந்து அவனுக்கு இடம் கொடுத்திருந்தார். பெற்ற பிள்ளையிடம் பயமா? பாசமா?

அதுவரை அவர் முகத்திலிருந்த சிரிப்பு, வெயிலைக் கண்ட பனித் துளியாய்க் கரைந்து போனதை அவள் கவனிக்கத் தவறவில்லை.

அரை மணி நேரம் உள்ளே என்னதான் நடக்கும்?

அப்பாவுக்கும், பிள்ளைக்கும் நடுவில் கார்கில் யுத்தமா? இல்லை, நீண்ட நாள் கழித்துச் சந்திக்கும் பாசமலர்களாய்க் கொஞ்சிக் கொள்வார்களா?

சத்தியமாகக் கொஞ்சல் இல்லை... குடைச்சல்தான் என்பது, நேரம் கழித்து வெளியே வந்த பிரபாகரனின் வாடிய முகத்திலேயே தெரிந்தது. என்னதான் நடந்திருக்கும் என்று மாம்பழத்து வண்டாய் இளவரசியின் மனதுக்குள் ஒரு குடைச்சல்.

அடுத்தவர் முகத்தில் புன்னகை இருந்தாலே கசக்கி எறிந்து விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பானோ?

வருத்தப்படாத வாலிபி சங்கத் தலைவியாக அவள் யோசித்துக் கொண்டிருந்த போதே இன்டர்காம் அழைத்தது.

'அழைக்கிறானே... அழைக்கிறானே...' என்று மனதுக்குள் புலம்பியபடியே, "எஸ் சார்..." என்று அவன் முன்னே சென்று நின்றாள்.

"உன் பேர் என்ன சொன்னே...? ஏர்போர்ட்ல என்னவோ சொன்னியே?"

'இதைக் கேட்பதற்கு முகம் ஏன் இப்படி அஷ்ட கோணலாக மாறுகிறதாம்? எந்த நாட்டு இளவரசி என்று கேலி செய்து விட்டுத் திமிரைப் பார்...!'

மனதுக்குள் நடத்திய அர்ச்சனை வெளியே தெரியாதவாறு, "இளவரசி சார்..." என்று புன்னகைப் பூவாய் மாறிப் பதில் சொன்னாள்.

"இந்தத் தொழிற்சாலையில் இருந்து முப்பத்தைந்து ஆட்களைப் பணி நீக்கம் செய்யறோம். அதற்கான வேலை நீக்க உத்தரவை அரை மணி நேரத்துல பிரிண்ட் அவுட் எடுத்துத் தர முடியுமா?"



ஹாங்... மூச்சை இழுத்து நிறுத்தினாள். 'வந்ததும் வராததுமாக வேலை நீக்கமா? அதுவும் மொத்தமாக முப்பத்து ஐந்து பேர்...!'

"சார்... திடீர்னு எப்படி...? முதல்லேயே நோட்டீஸ் தர வேண்டாமா?" குழப்பமாகக் கேட்டவளைக் கடுமையாகப் பார்த்தான்.

"முதல் டிஸ்மிசல் ஆர்டர் உனக்கு நீயே அடிச்சிக்கோ. பேக்டரியில என்ன நடக்குதுன்னே தெரியாத ஒரு மர மண்டையை அப்பா செக்ரட்டரியா போட்டு வெச்சிருக்காரு. குறிப்பிட்ட கால அவகாசம் கொடுத்து யூனியனுக்கு நோட்டீஸ் கொடுத்தாச்சு. யூனியன் லீடர், சூபர்வைசர், மேனேஜர் எல்லோரும் கொடுத்த பெர்பார்மன்ஸ் ரிப்போர்ட்டை அடிப்படையா வெச்சுத்தான் இந்த வேலை நீக்க உத்தரவு தயாரிக்கப்பட்டிருக்கு... இங்க இருக்கிற சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வேலை செய்யலேன்னா யாரா இருந்தாலும் இதே நிலைமைதான்!"

வார்த்தைகள் சீற்றத்தோடு வந்து விழ, அரசியின் முகம் காய்ந்த மலராய்ச் சுருங்கியது. தனக்குத் தெரியாமல் யூனியனுக்கு எப்படி நோட்டீஸ் போகும்? இந்த நான்கைந்து மாதங்களில் ஒரு நாள் கூட அவள் விடுப்பெடுத்ததும் இல்லை. மனதைக் குடையும் எண்ணங்களோடு அவள் பர்ச்சேஸ் ஆர்டர் ஃபைலை அவனிடம் நீட்டினாள்.

"என்னது...?" அவன் பார்வையே கேள்வியானது.

"கம்பெனிக்கு வந்ததும் முதல் முதல்ல கையெழுத்துப் போடறீங்க... அது ஒரு நல்ல விஷயத்துக்காக இருக்கட்டுமே... எடுத்தவுடனே வேலை நீக்க உத்தரவுல கையெழுத்துப் போட...றது..." என்று இழுத்தவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

"எனக்கு இந்த சென்டிமெண்ட்ஸ் எல்லாம் பிடிக்காது. போய் வேலையைப் பார்!" அலட்சியமாகக் கை காட்டினான் தருண்.

சற்று நேரத்தில் மீண்டும் இன்டர்காமின் அழைப்புச் சத்தம். "எஸ் சார்..." என்றவளிடம்,

"நான் கேட்டது இன்னும் அரை மணி நேரத்துல டேபிள்ள இருக்கணும். இன்னைக்கு பார்மலா ஒரு ஸ்டாப் மீட்டிங் ஏற்பாடு செய். இந்தக் கம்பெனியில செய்யப்படப் போற மாற்றங்களைப் பற்றி நான் விளக்கமாப் பேச வேண்டியிருக்கு. ஒருத்தர் தவறாம அத்தனை பேரும் மீட்டிங்குக்கு வந்தாகணும்..."

"பிரேமா, சத்யன் ரெண்டு பேர் மட்டும் லீவுல இருக்காங்க சார். மற்றவங்களை வரச் சொல்லி எலெக்ட்ரானிக் சர்குலர் அனுப்பிடறேன்."

அவள் குரலில் சுரத்தே இல்லை. கடனே என்று பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

"குட்... கேட்கறதுக்குக் கொஞ்சம் சுறுசுறுப்பாய்ப் பதில் சொல்லிப் பழகு. எது மேலயோ மழை பெய்த மாதிரி இருக்க வேண்டாம்."



இன்டர்காம் தொடர்பு துண்டிக்கப்பட, உள்ளுக்குள் ஆர்ப்பரித்து எழுந்த எரிமலையை அடக்க முயன்று கொண்டிருந்தாள் இளவரசி.

'என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறான்? வந்ததிலிருந்து அவளை மர மண்டை, எது மேலயோ மழை என்றால், எருமை என்றுதானே அர்த்தம்...?'

(ஹும்... படிக்கும் காலத்தில் கமலா புரொபஸர் கூட அவளை அப்படித் திட்டியதாக ஞாபகம்.)

வார்த்தைகளை வரம்பு மீறித்தான் உபயோகப் படுத்திக் கொண்டிருக்கிறான்.

## 2

இளவரசிக்கு இன்னும் கொதித்துக் கொண்டுதான் இருந்தது.

'உன் வேலையும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம் என்று ராஜினாமா செய்து விடலாமா?' என்று கூடத் தோன்றியது.

'சரிதான் போ... நீ இல்லாவிட்டால் ஆயிரம் பேர்...' என்று முகத்தில் அடித்தது போல் அவன் பதில் சொன்னால் அவள் நிலை என்னாகும்?

இயற்கையாகவே அவளுக்குள் இருந்த வீம்பான குணம், 'இதற்கெல்லாம் புறமுதுகிட்டு ஓடுவதா?' என்று கேள்வி கேட்க, அதன் பிறகு அவள் கைகள், தானாக உத்தரவுகளை டைப் செய்யத் தொடங்கின.

வேலையிலிருந்து நீக்கி விட்டால், இந்தக் குடும்பங்கள் எல்லாம் வருமானத்துக்கு என்ன செய்யும்? மண்டைக் குடைச்சலோடு அவன் முன்னே சென்று நின்றாள். ஒரு காகிதம் தவறாமல் படித்துப் பார்த்து விட்டு, மடமடவென்று கையெழுத்திட்டான்.

"மேனேஜர் கிட்டக் கொடுத்து, சம்பந்தப்பட்ட ஆளுங்க கிட்டச் சேர்த்துடச் சொல்லு... ஹே... உன் பேர் அடிக்கடி மறந்துடுது. இந்த ஃபைல்ல இருக்கிற டீடெயில்ஸ் சார்ட் அவுட் செய்து கொண்டு வா."

அடுத்த வேலைக்குக் கட்டளையிடப்பட, அதையும் தூக்கிக் கொண்டு தன் அறைக்கு நடந்தாள். பிரபாகர னிடம் வேலை செய்த போது இருந்த உற்சாகமும், துள்ளலும் இப்போது டாட்டா காட்டிச் சென்றிருந்தது. 'மகளே... மகளே...' என்று தட்டிக் கொடுத்து வேலை வாங்கும் அவர் எங்கே? 'அதைச் செய்... இதைச் செய்...' என்று மிரட்டும் இவன் எங்கே?

அன்று மாலை அலுவலகத்தில் இருந்த அத்தனை பேரும் புறப்பட்டுச் சென்ற பிறகும், அவளுக்கு மட்டும் விடுதலை கிடைப்பதாக இல்லை. ஹனுமார் வால் போல அவன் உத்தரவுகள் நீண்டு கொண்டே இருக்க, மிகவும் களைத்துப் போனாள்.

'இப்படியாடா ஈவு இரக்கமில்லாம வேலை வாங்குவே...? உன்னையெல்லாம் உல்பா தீவிரவாதிங்க இருக்கிற அஸ்ஸாம் காட்டுக்குள்ள விடணும்டா...!'



மனதுக்குள் அவனைச் சபித்தவாறே தன் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருந்தவள்,

மீனாட்சிக்குப் போன் செய்து, வருவதற்கு நேரமாகும் என்று தகவல் தெரிவித்து விட்டு, மீண்டும் கணினியில் கை வைத்த போது, வயிறு கபகபவென்று பசித்தது.

ஸ்டாப் மீட்டிங்கின் போது ஒப்புக்கு இரண்டு பிஸ்கெட் கொறித்தது... மதியமும் வெறும் தக்காளிச் சாதம், உருளை வறுவல்.

'முடியாது... இதற்கு மேல் சத்தியமாக ஒரு துரும்பைக் கூடக் கிள்ளிப் போட முடியாது. நாளை வந்து செய்து கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டுக் கிளம்ப வேண்டியதுதான்...! ச்சே... போகும் வழியில் பழப் பண்ணையில் இரண்டு டம்ளர் பழச் சாறாவது குடித்தால்தான் ஸ்கூட்டியை ஓட்டுவதற்குத் தெம்பிருக்கும்.'

"சார்... ரொம்ப டயர்டா இருக்கு... மீதி இருக்கிற வேலையை நாளைக்கு வந்து செய்து கொடுக்கட்டுமா? நிச்சயம் நாளைக்கு முடிச்சுக் கொடுத்திடுவேன் சார். எனக்கு ஓவர் டைம் செய்து பழக்கம் இல்லை."

அவன் முன்னே அவள் பரிதாபமாக நின்றபோது, அவனுக்கும் சற்று இரக்கம் வந்திருக்குமோ? முதன் முறையாக அவள் முகத்தை ஆராய்ந்தான். விமான நிலையத்தில் பளிச்சென்ற பார்வையோடு அவனை வரவேற்ற கண்களில் இப்போது கனத்த சோர்வு.

"எனக்கு இந்தத் தொழிற்சாலை வேலைகள் அத்துப்படி ஆகிற வரைக்கும் உனக்கும் வேலை அதிகமாகத்தான் இருக்கும். இன்னைக்கு ஒரு நாள் பெர்மிஷன் தர்றேன். நாளையில இருந்து என் ஸ்பீடுக்குத் தகுந்த மாதிரி வேலை பார்த்துப் பழகு!"

மண்டையை ஆட்டி விட்டு வெளியே வந்தபோது, இலங்கைக் கடற்படையிடம் தப்பித்த தமிழக மீனவர் களைப் போலப் புஸ்ஸென்று அவளிடம் ஒரு பெருமூச்சு!

செல்லின் ஒலி அழைக்க, செய்து கொண்டிருந்த வேலையிலிருந்து கவனத்தைத் திருப்பினான் தருண். சசி அழைத்திருந்தாள்.

"ஹாய் அண்ணா... இன்னைக்கு என்னோட பர்த்டே பார்ட்டி இருக்கிறது ஞாபகமிருக்கா? மூணு வருஷமா நீங்க இல்லாமலே கேக் கட் பண்ணிட்டேன். இந்த வருஷமாவது கலந்துக்குவீங்களா? மதியமே ஒரு முறை போன் செய்து ஞாபகப்படுத்தினேன்..."

"யா... பேபி... சுத்தமா மறந்துட்டேன். நல்ல வேளை... மறுபடியும் ஞாபகப்படுத்தினே! எத்தனை மணிக்குன்னு இன்னொரு முறை சொல்லிடும்மா... இருந்த வேலையில் அண்ணனுக்கு டைம் மறந்துடுச்சு..."

"நான் உங்க சித்தி பொண்ணுங்கற அளவுக்காவது நினைவில இருந்தா சரிதான். எத்தனை மணிக்கு, எங்கே பார்ட்டின்னு நான் எஸ்.எம்.எஸ். அனுப்பி விடுறேன். மறுபடியும் மறக்காம இருக்க அதுதான் நல்ல வழி. எனக்காக ஆஸ்ல இருந்து என்ன வாங்கிட்டு வந்தீங்க?"



"ரெண்டு கங்காரு குட்டி வாங்கிட்டு வந்திருக்கேன்... போதும்தானே?"

"ஹூம்... போங்கண்ணா..." என்ற சிணுங்கலோடு அவள் செல்லை அமர்த்த, அந்த நாளின் முதல் புன்னகையை உதிர்த்தான் தருண்.

குடும்ப விழாக்களில் கலந்து கொண்டு அவனுக்கும் வெகு நாட்கள் ஆகிவிட்டன. முதுகு பிடித்துக் கொள்ளும் போல இருக்க, இப்படியும் அப்படியும் வளைந்து உடலை முறுக்கிக் கொண்டவன், மிச்சத்தை மறுநாள் பார்த்துக் கொள்ளலாம் என்று இடத்தை விட்டு எழுந்தான்.

"ஏன்டி இப்படிப் பேயடிச்ச மாதிரி வந்து நிற்கறே?"

ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு, அரசி உள்ளே வரும் போதே மகளின் முகம் கண்டு திகைத்துப் போய்க் கேட்டார் மீனாட்சி.

"நிஜமாவே பேய்தான் அடிச்சிடுச்சு. சாதாப் பேய் இல்லை... ஆஸ்திரேலியன் பேய். மனுஷனா அவன்? என் விரலெல்லாம் தனித்தனியாக் கழண்டு விழுந்துடும் போல இருக்கு... ஃபெவிஸ்டிக் போட்டுத்தான் ஒட்டணும்."

புலம்பிக் கொண்டே தொப்பென்று சோபாவில் சரிந்த மகளுக்கு, ப்ரிஜ்ஜிலிருந்து குளிர்ந்த நீரைக் கொண்டு வந்தார் மீனாட்சி.

"இந்தக் கண்ராவிக்குத்தான் வேலைக்குப் போக வேண்டாம்னு சொன்னேன். இந்நேரம் ஒரு வரன் பார்த்திருந்தா, எனக்கு ஒரு வேலை முடிஞ்சா மாதிரி

இருந்திருக்கும். இன்னைக்கு ரேகாவோட ஃபங்ஷன் இருக்கு. அதாவது நினைவிருக்கா?"

"ஐயையோ... சுத்தமா மறந்துட்டேன். நல்ல வேளை, ஞாபகப்படுத்துனீங்க... போகாம விட்டிருந்தா வாயாலேயே கிழிச்சுத் தோரணம் கட்டியிருப்பா. மை ஸ்வீட் மம்மி..." மீனாட்சியின் கன்னத்தில் முத்தமிட்டு விட்டுக் குளியலறை நோக்கி ஓடினாள்.

ஷவரைத் திறந்து கொண்டு நின்றதில் களைப் பெல்லாம் காணாமல் போனது. மயில் நிறச் சுரிதார் அணிந்து, அதற்குப் பொருத்தமாய் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்ட தங்க நகை செட் அணிந்து கொண்டு, அவள் தன் அறையை விட்டு வெளியே வந்தபோது, மகளின் அழகை மனம் குளிர ரசித்தார் அன்னை.

"லவா... நீ வர்றியாடி...? ரேகாவோட பர்த்டே பார்ட்டி... உன்னையும் சேர்த்துத்தானே இன்வைட் செய்தா?"

"வரணும்னு ஆசையாத்தான் இருக்கு... பார்ட்டி முடிய லேட் ஆயிடும். நாளைக்கு மாடல் எக்ஸாம் இருக்கே! நீ போயிட்டு வாக்கா!"

"சரியான படிப்ஸ் கேஸ்... இன்னமும் ஸ்கூல்ல இருந்த மாதிரியே இரு."

கொஞ்சமே கொஞ்சமாய்ப் புதினா பக்கோடாவைக் கொறித்து விட்டு சாக்லெட் டீ அருந்தியவள், "தேங்க்ஸ் மம்மி... நைட் டின்னர் அங்கதான். எனக்காக எதுவும் செய்ய வேண்டாம்..." என்று புறப்பட்டுச் செல்ல...

"சீக்கிரம் வந்துடு... பத்திரம்..." என்ற மீனாட்சியின் குரல் காற்றோடு தேய்ந்து மறைந்தது.

**பா**லிமர் ஹாலை அடைந்தவள், ஸ்கூட்டியைப் பார்க்கிங்கில் போட்டு விட்டு உள்ளே நுழைய, "ஹாய்..." என்று அவள் நண்பர்களின், நண்பிகளின் கோரசான குரல்கள்.

"இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்..." தான் கொண்டு வந்திருந்த பரிசினைத் தன் தோழி சசிரேகாவிடம் கொடுத்தாள் இளவரசி.

"என்னடி, இவ்வளவு லேட்டா வர்றே? நான் மதியம் மூணு மணிக்கே சசி வீட்டுக்கு வந்துட்டேன்..." என்றாள் சுலோ.

"ஆமாம்... என் பிறந்த நாள் அன்னைக்கு மொக்கை போட்டே கொல்றதுன்னு சீக்கிரமே கிளம்பி வந்துட்டா..." என்று சசி அவளைக் கேலி செய்ய,

"போடி கும்கி..." என்று பதிலுக்கு சுலோ அவளை வார, மீண்டும் கல்லூரி நாட்களின் கலகலப்பு அங்கே தொற்றிக் கொண்டது.

"காலேஜ் டேஸ்ல இருந்ததை விட நீ இன்னும் அழகா இருக்கே!"

எப்போதும் போல் அரசியிடம் வழிந்தான் வினோத். "தேங்க்ஸ்..." என்ற ஒற்றை வார்த்தையோடு முடித்துக் கொண்டாள் இளவரசி.

"மேடம் இப்போ வேலைக்குப் போறாங்க தெரியுமா?" என்று ஆரம்பித்தாள் வினயா.

"ஹேய்... நிஜமாவா இளா...? எங்க அம்மா வேலைக்குப் போக விடமாட்டாங்கன்னு சொல்லுவே...?" சசிரேகா அவளை ஆச்சரியமாய்க் கேட்டாள்.

"ம்ம்... இப்பவும் அப்படித்தான் சொல்லிட்டு இருக்காங்க. இது அப்பாவோட ஃபிரெண்ட் பேக்டரி. பாதுகாப்புக்குப் பயமில்லேன்னு ஒரு வழியா வேலைக்குப் போகச் சம்மதிச்சிட்டாங்க."

"ஓ... தட்ஸ் கிரேட். காலேஜ் முடிஞ்சதும் நான் என் அத்தை வீட்டுக்கு மும்பை போனதுதான்... இங்க நடந்தது எதுவுமே எனக்குத் தெரியாமப் போயிடுச்சு. எந்தக் கம்பெனிப்பா? என்ன போஸ்ட்ல இருக்கே?"

"பெர்சனல் செக்ரட்டரி... குருப்ரபா இண்டஸ்ட்ரீஸ்னு கேள்விப்பட்டிருப்பியே?"

இளவரசி சொல்லி வாயை மூடவில்லை... வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்தாள் சசிரேகா.

"அநியாயமா பர்த்டே பேபிக்கு மறை கழண்டு போச்சே! இந்தச் சிரிப்புச் சிரிக்கிறா...!" போலியாக வருத்தப்பட்டான் உமேஷ்.

எதற்குச் சிரிக்கிறாள் என்று புரியாமல் சுற்றியிருந்த நண்பர்கள் கூட்டம், அவளையே பார்த்துக் கொண் டிருக்க,



"உன் கம்பெனி பாஸ் எனக்குப் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல வந்துட்டு இருக்காரு பாரு..." என்று ரகசியமாகச் சொல்லிச் சிரித்தாள் சசிரேகா.

சசிரேகா கை காட்டிய திசையில் இளவரசி குழப்பத்தோடு பார்க்க,

உலகின் மொத்தப் புன்னகையும் அவன் முகத்தில் கொண்டவனாய் வந்து கொண்டிருந்தான் தருண்.

'இவன்தா...னா? இவன்தா...னா? சிரிக்கத் தெரிந்தவன் இவன்தா...னா?' அவனைப் பற்றி அவள் மூளைக்குள் முளைத்த இன்ஸ்டன்ட் கவிதை.

'வாட் எ பியூட்டிஃபுல் ஸ்மைல்...?' என்று அவள் மனதுக்குள் ஸ்லாகித்துக் கொண்டிருக்க, அந்த நொடி, "ஆச்சரியமா இருக்கா...?" என்று ரேகாவின் குரல் காதருகே கேட்க, தலையை மேலும் கீழுமாக ஆட்டினாள் இளவரசி.

"தருண் என்னோட அண்ணா... பிரபா பெரியப்பா வோட பையன்...! பெரியப்பா, பெரியம்மாவும் பார்ட்டிக்கு வந்திருக்காங்க, வர்றியா... உன் பாஸ் கிட்டப் பேசிட்டு வரலாம்?"

"நீ பேசிட்டு வா ரேகா. அண்ணன் தங்கைக்குள்ள பேச எவ்வளவோ இருக்கும்... நான் நம்ம ஃபிரெண்ட்ஸ் கிட்டப் பேசிட்டு இருக்கேனே... மறுபடியும் எப்போ சந்திப்போமோ?"

நட்பு வட்டத்தோடு பேசிக்கொண்டே நைஸாக அந்த விழா ஹாலை ஒட்டியிருந்த தோட்டத்திற்குச் சென்றாள் இளவரசி.

பின்னே...! 'ஓவர் டைம் செய்ய முடியவில்லை... இங்கே வந்து லூட்டி அடிக்கத் தெம்பிருக்கா...?' என்று அவன் கேட்டு விட்டால்...?

எப்படியும் அவன் பார்வையில் மாட்டத்தான் போகிறோம்...! அது சற்று நேரம் கழித்துத்தான் நடக்கட்டுமே! ஸ்ப்ரைட் பாட்டில்களை ஆளுக்கொன்றாய் எடுத்துக் கொள்ள, நண்பர் பட்டாளத்தின் உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்தது.

"**ஹாய்** அண்ணா...!" என்று தருணை அன்போடு வரவேற்று எதிர்கொண்டாள் சசிரேகா.

"ஹாய் டாலி... லுக்கிங் மார்வெலஸ்...! நூறு வயசு நீ அமோகமா வாழ இந்த அண்ணனின் பிறந்த நாள் வாழ்த்துக்கள். அப்பா, அம்மா எல்லாம் எங்கேடா?"

"எல்லோரும் உள்ளே உட்கார்ந்து பேசிட்டு இருக்காங்க. பங்ஷன் ஆரம்பிக்க இன்னும் நேரமிருக்கே!" தருணைத் தன் குடும்பத்தினர் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றாள் சசிரேகா.

"டேய் தருண்... வா... வா... வா...!" சித்தப்பா ரகுநந்தன் அவனை அருமையாய்த் தழுவிக் கொள்ள, சித்தி சுபத்ராவுக்கு, மகனைக் கண்டதும் முகமெல்லாம் புன்னகைப் பூ...!



ரகு, சுபத்ரா இருவருமே தங்களுக்கு ஒரு ஆண் வாரிசு வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டவர்கள். ஆண்டவன் சித்தப்படி சசிரேகா மட்டுமே வாரிசு என்று ஆகி விட, தருண் அவர்களுக்குப் பெறாத பிள்ளையாகிப் போனான்.

"என்னடா... ஏர்போர்ட்ல இருந்து வந்ததும் வராததுமா பேக்டரியில போய் உட்கார்ந்துட்டியாம்? நானும், சித்தப்பாவும் வீட்டுக்கு வந்து உன்னைப் பார்க்கலாம்னு இருந்தோம். அக்காதான் நீ பேக்டரியில இருக்கிற விஷயத்தைச் சொன்னாங்க..."

குங்குமப் பூ தூவப்பட்டிருந்த ரசமலாய்க் கிண்ணத்தை அவனிடம் கொடுத்தார் சுபத்ரா.

"அப்புறம் சாப்பிடறேன் சித்தி. இந்த டாலி மட்டும் சரியான நேரத்துக்கு ஞாபகப்படுத்தலேன்னா, இப்பவும் ஆபீஸ்லதான் இருந்திருப்பேன்."

வந்ததும் வராததுமாகத் தன் அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுத்துக் கொண்டே, குடும்பத்தாரோடு அரட்டை அடிக்கத் தொடங்கினான் தருண்.

"நூறு கழுதை வயசாச்சு... இன்னமும் பெரியம்மா மடியில படுக்கிற பழக்கத்தை விடலையா அண்ணா...? என் பர்த்டேக்கு ஒரு பரிசும் இல்லையா? வெறும் வாழ்த்துக்கள் மட்டும்தானா?"

"உனக்குப் பரிசாக் கொண்டு வந்ததை வாசல்ல கட்டிப் போட்டிருக்கேனே... பார்க்கலையா சசி...?"

"டாபர்மேனா? அதுதான் வீட்டுலயே ஒண்ணு இருக்கேப்பா...!" என்று ரகு, சுபத்ராவைப் பார்க்க, "ஹூம்..." என்ற மனைவியின் 'செல்ல' முறைப்புக்கே அவர் கரைந்து காணாமல் போய் விடுவார் போலிருந்தது.

"ஏம்பா இப்படிச் சொந்தச் செலவுல சூனியம் வெச்சுக்கறீங்க...?" என்று சசி அலுத்துக் கொள்ள, அங்கு குபீரென்று ஒரு சிரிப்பலை.

தருண், தன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறிய நகைப் பெட்டியை எடுத்துத் தர, "வாவ்..." என்று மகிழ்ச்சிக் குரலோடு அதை ஆர்வமாய்த் திறந்து பார்த்தாள் சசிரேகா.

நடுவில் ரோஜா வண்ண ஆஸ்திரேலியன் வைரம் பதிக்கப்பட்டுச் சுற்றிலும் வெள்ளை நிற வைரக் கற்கள் ஜொலித்த அழகான மோதிரம். பட்டை தீட்டப்பட்ட வைரங்கள், அங்கிருந்த விளக்கொளியில் டாலடித்து மின்னின.

## 3

**மோ**திரத்தின் அழகிலிருந்து கண்களை விலக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள் சசிரேகா. அந்த வைரங்கள் எத்தனை லட்சம் பெறும் என்பது, நகை ஷோரூம் வைத்திருக்கும் ரகுநந்தனுக்கு நன்றாகவே தெரியும். ஒரு பிறந்த நாள் பரிசாக இத்தனை விலையுயர்ந்த பரிசைத் தரத் தாராள மனம் வேண்டுமே என்று நினைத்துப் பூரித்துப் போனார்.



"ரொம்ப காஸ்ட்லியா இருக்கும் போல இருக்கே தருண்..." சுபத்ரா ராகமிழுத்தார்.

"வாங்கச் சொன்னதே அம்மாதான். நீங்க அம்மா கிட்டப் பேசிக்கோங்க. எனக்கெப்படி சசியோட மோதிர அளவு தெரியும்? அம்மாதான் போன்ல சொன்னாங்க. ஏய் வாலு... அந்த பிங்க் வைரம் ஆஸ்ல மட்டுமே அபூர்வமாக் கிடைக்கிறது... பத்திரமா வெச்சுக்கோ!"

"ம்ம்... கிம்பர்லி பிங்க் ஸ்டோன்ஸ் பற்றி நானும் படிச்சிருக்கேன் அண்ணா. இன்னைக்குத்தான் நேர்ல பார்க்கிறேன். என் ஃபிரெண்ட்ஸ் கிட்டக் காமிச்சுட்டு வந்துடறேன்."

அறையை விட்டுச் சிட்டாகப் பறந்தவள், போகும் முன் தன் பெரியம்மாவின் கன்னத்தில் அழுந்த முத்த மிட்டு விட்டுச் சென்றாள்.

"சரியான ஐஸ் காக்கா. வாங்க சித்தப்பா, எல்லோரையும் பார்த்து நாள் கணக்கா ஆச்சு... ஒரு ஹாய் சொல்லிட்டு வரலாம்..." ரகுவையும் அழைத்துக் கொண்டு அவன் அறையை விட்டு வெளியேறினான்.

"என்னக்கா, இவ்வளவு செலவு பண்ணியிருக்கீங்க...?" உடன் பிறந்த தமக்கையிடம் உள்ளம் நெகிழ்ந்தார் சுபத்ரா.

சசிரேகா, அந்த ரோஜா நிற வைரத்தைத் தன் நண்பர்களிடம் காட்டிப் பெருமையடித்துக் கொண்டிருந்தாள். அத்தனை பேரின் விழிகளும் ஆச்சரியத்தில் விரிந்தன.

"வாவ்! பிங்க் டயமண்ட். நான் பார்த்ததே இல்லப்பா. கட்டிங் செமையா இருக்கு!"

"எந்தக் கட்டிங்? குவார்ட்டரா? ஹாப்பா?" என்று உமேஷ் வேண்டுமென்றே கேட்க,

"போடா போங்கு... எலிசபெத் மகாராணிக்கு அவங்க திருமணத்தின் போது இருபத்து மூணு கேரட் எடை கொண்ட பிங்க் நிற வைரம் யாரோ பரிசாக் கொடுத்தாங்களாம்... இங்க நம்ம செட்லையே ஒரு எலிசபெத் ராணி இருக்கா பாரேன்.

"சசி... உனக்கு செம அதிர்ஷ்டம்டீ... பிறந்த நாளுக்கு இவ்வளவு காஸ்ட்லியா பரிசு தர்ற ஒரு அண்ணன் கிடைச்சிருக்காரு. எனக்கும் ஒரு அண்ணன் இருக்கானே...! அப்பா எனக்குக் கொடுக்கிற பாக்கெட் மணியையும் சேர்த்து அபேஸ் பண்ணுவான். ஹூம்... எல்லாம் அவங்கவங்களுக்கு அமையறதுதான்..."

"போதும் வினி... நீ விடற பெருமூச்சுல மோதிரம் எங்கேயாவது பறந்துடும் போல இருச்கு!" உமேஷ் அவளைக் கேலி செய்து கொண்டிருந்தான்.

நிஜமாகவே மோதிரம் அரசியின் கைக்குப் பறந்து தான் போயிருந்தது. அழகு பார்ப்பதற்காகப் போட்டுப் பார்த்தவள், கழற்ற முடியாமல் அவதிப்பட்டுக் கொண் டிருந்தாள்.

"உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? அவளுக்குப் பரிசாக வந்ததை நீயேன்டி கையில போட்டே? இப்ப என்ன பண்ணப் போறே?"



ஆளாளுக்குப் பிடித்து இழுத்தும், திருகியும் கூட அரசியின் விரலைத் தாண்டி வர மாட்டேன் என்று மோதிரம் அடம் பிடித்தது.

"ஏய்... அவளை எதுவும் சொல்லாதீங்கப்பா. சும்மா ஆசைக்காகப் போட்டுப் பார்த்திருப்பா... டென்ஷன் ஆகாம முயற்சி பண்ணு இளா..." சசிதான் சமாதானப்படுத்தினாள்.

"ஆயில் அப்ளை பண்ணிப் பார்க்கலாமா?"

"லூசு... வைர நகையில எண்ணெய் படக்கூடாது. சோப் சொல்யூஷன் இருந்தா ஈஸியா வந்துடும்."

ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனையில் இறங்க, "ரேகா... நேரமாச்சு! வந்து கேக் கட் பண்ணும்மா..." என்று ரகு தன் மகளை உரக்க அழைக்கும் குரல்...!

"நீ போ சசி... எல்லோரும் காத்துக்கிட்டு இருப்பாங்க. டேய்... நீங்களும் போங்கடா. நான் அரசிக்கு ஹெல்ப் பண்ணிட்டு வர்றேன்..." என்று அனைவரையும் அனுப்பி வைத்தாள் சுலோ. அதற்குள் அரசி லேசாய் அழவே தொடங்கியிருந்தாள்.

"பைத்தியம்... எதுக்கு அழறே? கை கழுவற இடத்துல சோப் இருந்தது. போட்டுப் பார்க்கலாம் வா!" என்று அழைத்துச் சென்றாள் சுலோ.

இளவரசியின் விரல்களுக்குத் தாராளமாகவே சோப் தேய்த்து விட்டு மெல்ல மெல்ல மோதிரத்தை வெளியே இழுத்தாள். ஐந்து நிமிடப் போராட்டத்திற்குப் பின் ஒரு

வழியாக மோதிரம் கழன்று வெளியே வர, "ஷ்ஷ்ஷ்..." என்ற பெருமூச்சு இருவரிடமும் புறப்பட்டது.

"ஒரு நிமிஷத்துல என்னைப் பயமுறுத்திப் பார்த்திடுச்சுப்பா..." என்று புலம்பியபடியே மோதிரத்தை நன்றாகக் கழுவி ஈரம் போகத் தன் துப்பட்டாவால் ஒற்றியெடுத்தாள் இளவரசி.

"எதுக்குப் பயப்படணும்? ரொம்ப முடியலேன்னா, விரலோட வெட்டி எடுத்துட வேண்டியதுதான்..." என்று சுலோ கண் சிமிட்ட, களுக்கென்று சிரித்தாள் இளவரசி.

உள்ளே பிறந்த நாள் வாழ்த்துக்குப் பின் கரவொலிகள் கேட்டன.

"பார்ட்டி ஆரம்பிச்சிட்டாங்க... அங்க போய் எல்லோர் முன்னாடியும் மோதிரத்தை நீட்டாதே. சசியைத் தனியாக் கூப்பிட்டுக் கொடு!" என்று அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தாள் சுலோ.

தங்கையின் விரலில் மோதிரம் இல்லாததைத் தருண் கவனிக்கவும் செய்திருந்தான். "வைர மோதிரம் போட்டுக்கலையா சசிம்மா? உனக்காகப் பார்த்துப் பார்த்து வாங்கினேனே...!" முகத்தில் கவலையோடு மெல்லிய குரலில் கேட்டான்.

"சாரிண்ணா... என் ஃபிரெண்ட் அதைப் போட்டுப் பார்க்கிறேன்னு விரல்ல போட்டா... கழட்ட முடியல... சோப் போட்டுக் கழட்டப் போயிருக்கா!" அவளும் மெல்லிய குரலிலேயே முணுமுணுத்தாள்.



"உனக்கு ஏதாவது அறிவிருக்கா? அதோட விலை என்னன்னு தெரியுமா? இவ்வளவு அலட்சியமா...?" என்று அவன் குரலில் உஷ்ணத்தை ஏற்றிக் கொண்டிருந்த போதே சுலோவும், அரசியும் பக்கவாட்டு கேட் வழியாக ஹாலுக்குள் நுழைந்தனர்.

"அண்ணா... ப்ளீஸ்... என் ஃபிரெண்ட்ஸ் எல்லோருமே நல்லவங்க. நீங்க நினைக்கிற மாதிரியெல்லாம் இல்ல... அவ வந்துக்கிட்டு இருக்கா..."

தங்கையின் பார்வை சென்ற திசையில் தமையனும் பார்க்க, அங்கே முகத்தில் முத்து முத்தாய்ப் பூத்த வியர்வையோடு இளவரசி...! 'இவள் சசியின் தோழியா?' என்று மனதுக்குள் வியந்தவன், அரசியின் பார்வை அவன் மீது படியும் முன் யாரிடமோ பேசுவது போல ஒதுங்கிச் சென்றான்.

"என்னடி... மூஞ்சியெல்லாம் இப்படி இருக்கு...?" பாவமாய் நின்ற அரசியை மெல்லிய குரலில் கேட்டுக் கொண்டே ரேகா அவளை நெருங்கினாள்.

"அட நீ வேற... மோதிரம் கழட்ட வரலேன்னவுடனே அழவே ஆரம்பிச்சிட்டா... பயத்துல உடம்பு முழுக்க வேர்த்துக் கொட்டிடுச்சு. மோதிரத்தை முதல்ல உன் விரல்ல போடு தாயே!"

மோதிரத்தைத் தன் விரலில் அணிந்து கொண்ட சசிரேகா, இளவரசியின் விரலைப் பார்க்க, நடந்த போராட்டத்தில் கன்றிச் சிவந்து போயிருந்தது.

"என்னப்பா இப்படி ஆயிடுச்சு?" என்று சசி உச்சுக் கொட்டினாள்.

"இப்படியே மாறி மாறி சென்ட்டிமென்ட்டா பிழிஞ்சிட்டு இருந்தா, நாங்க எப்ப கேக் சாப்பிடறதாம்...?" சூழ்நிலையைச் சகஜமாக்கினாள் சுலோ.

கேட்ட வேகத்தில் சாக்லேட் க்ரீம் வழியும் மிருதுவான கேக் அவர்கள் கைக்கு வந்து சேர, கூடவே ஐஸ்க்ரீமும்...!

"இங்க முதல் ரவுண்ட் ஒரு கட்டு கட்டிட்டு, செகண்ட் ரவுண்ட் பஃப்பே ஹாலுக்குப் போறதா? நம்ம ஃபிரெண்ட்ஸ் தடியனுங்க இந்நேரம் அங்க டேபிள் ரிசர்வ் பண்ணியிருப்பாங்களே?" கிண்டலடித்துக் கொண்டே ஐஸ்க்ரீமைச் சுவைக்கத் தொடங்கினாள் சுலோ.

பஃப்பே ஹாலில் நண்பர்களோடு அரட்டையடித்தபடி சிக்கன் புலாவையும், மெத்தென்ற புல்காவையும், பன்னீர் பீஸ் குருமாவையும் ஒரு வெட்டு வெட்டிக் கொண்டிருந்த நேரம்...! கும்பலாக நின்று யாரிடமோ தருண் உரக்கப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பது கேட்டது. நடந்த களேபரத்தில் இவனை எப்படி மறந்தோம்?

அவனும் தன்னைப் பார்த்திருப்பானா? பாஸ் என்ற முறைக்கு ஒரு வணக்கம் கூடத் தெரிவிக்க வில்லையே என்று நினைப்பானோ? ஆபீசில் உர்ரென்று இருப்பவனுக்கு இங்கே மட்டும் என்ன இப்படியொரு கோல்கேட் சிரிப்பு...?



(உன்னைப் பார்க்காமல் இருக்க அவனுக்கென்ன மாலைக்கண் நோயா? நிச்சயம் பார்த்திருப்பான். ஒரு வணக்கம் கூடத் தெரிவிக்காத கர்வம் பிடித்த ஸ்டாஃப் என்றும் நினைத்திருப்பான். ஒரு வேளை உன் முகத்தைப் பார்த்தால் மட்டும் அவனுக்குச் சிரிப்பு மறந்து போகிறதோ என்னவோ...?) மைண்ட் வாய்ஸ் பளிச்சென்று பதில் சொன்னது.

"புது முதலாளி வந்த பிறகு பழைய முதலாளியை மறந்தாச்சு!"

மிகவும் பழக்கப்பட்ட குரல் கேட்டு, வெடுக்கென்று திரும்பியவள் கண்களில் ஆயிரம் மின்னல்களின் பிரகாசம்.

"ஹையோ பிரபா அங்கிள்...! சசி உங்க சொந்தம்னு தெரிஞ்சதும் நான் முதல்ல உங்களைத் தான் தேடினேன். கண்ணுல பட்டதென்னவோ அமேசான் தான். இவ்வளவு நேரம் எங்கே இருந்தீங்க...?"

"பழைய ஃபேமிலி ஃபிரெண்ட் ஒருத்தரை ரொம்ப வருஷம் கழிச்சுச் சந்திச்சேன். ரெண்டு பேரும் எந்தத் தொந்தரவும் இல்லாமப் பேசிட்டு இருக்கலாமேன்னு ரூப் கார்டன்ல உட்கார்ந்துட்டோம். இன்னைக்கு ஆபீஸ் எப்படி இருந்தது?"

"அதை ஏன் கேட்கிறீங்க...? கரும்பு மிஷின்ல மாட்டின சக்கை மாதிரியே இருந்தது. ஓரளவு சமாளிச்சுப் பார்த்தேன்... அப்புறம் ஓவர் டைம் செய்து பழக்கம்

இல்லைன்னு ஓடியே வந்துட்டேன். 'வேலை செய்யத் தெம்பில்லை, பார்ட்டிக்கு வர நேரமிருக்கா?'ன்னு நாளைக்கு அமேசான் கிட்ட டோஸ் விழும். அதெல்லாம் இருக்கட்டும்... உங்களைத் திருமணம் செய்து கொண்ட அந்தத் தியாகி யாருன்னு எனக்கு அடையாளம் காட்டுங் களேன்!"

அவள் கேள்விக்குச் சற்றுச் சத்தமாகவே சிரித்தார் பிரபாகரன்.

"அங்க ஐவரி கலர் மெரூன் பார்டர் புடவையில் இருக்கா பாரு... அவதான் என்னுடைய மனைவி. அமேசானைப் பெற்ற அன்னை. பேரு இந்திராதேவி, நான் இந்துன்னு செல்லமாக் கூப்பிடுவேன். சில நேரங் கள்ல தேவின்னும் கூப்பிடுவேன். எங்க ரொமான்ஸ் இதுக்கு மேல நான் சொல்ல முடியாது. அவ பக்கத்துல நிக்கறது என் கொழுந்தியா...! சசியோட அம்மா சுபத்ரா... உனக்கே தெரிஞ்சிருக்குமே...!" என்று அவர் கேட்டதற்குத் தெரியும் என்று தலையாட்டினாள்.

"அங்கிள்... நான் ஒரு விஷயம் கேட்டாத் தப்பா நினைச்சுப்பீங்களா?" பீடிகையோடு ஆரம்பித்தாள்.

"நீ என்னோட பொண்ணு மாதிரின்னு ஒரு லட்சத்து ஒண்ணாவது தடவையாச் சொல்லணுமா? சுந்தரத்தைக் கேள்வி கேட்கிற மாதிரி என்னையும் நீ நிக்க வெச்சுக் கேள்வி கேட்கலாம். ஆனா இந்தக் கிழவனுக்கு இப்பக் கால் வலிக்குது. அப்படி ஒரு சேர்ல உட்கார்ந்துக்கலாமா?"



காலியாக இருந்த நாற்காலிகளில் இருவரும் எதிரெதிரே அமர்ந்து கொள்ள, தூரத்திலிருந்தே தருணின் பார்வை அவர்கள் மீது கூர்மையாகப் படிவதை உணராமல் பேசத் தொடங்கினாள்.

"நம்ம தொழிற்சாலையிலே இருந்து நிறையப் பேரை உங்க மகன் தடாலடியா வேலை நீக்கம் பண்ணிட்டாரு. கேட்டா, மூணு மாசம் முன்னாடியே நோட்டீஸ் கொடுத்தாச்சுன்னு சொல்றாரு. நானும் அதே பேக்டரியிலேதானே இருக்கேன். ஒரு செகரட்டரியான எனக்குத் தெரியாம இது எப்படி நடந்தது?"

"நிர்வாகம் அவன் கைக்கு மாறப் போகுதுன்னு தெரிஞ்சவுடனே, அவன் எனக்குப் போட்ட முதல் கண்டிஷன் இதுதான். முடிஞ்ச வரைக்கும் எல்லாமே மெகனைஸ்டா மாற்றப் போறேன். தேவையில்லாத ஆளுங்களைத் தூக்குங்கன்னு சொன்னான். அந்தப் பாவத்தை நான் செய்யலப்பா... நோட்டீஸ் மட்டும் வேணா கொடுக்கறேன். நீ வந்த பிறகு பார்த்துக்கோன்னு சொன்னேன்.

"உன் கிட்ட முன் கூட்டியே சொன்னா, இத்தனை பேருக்கு வேலை போகப் போகுதான்னு நீ வருத்தப் படுவே! உன்னுடைய இளகின சுபாவம் எனக்குத் தெரியுமே! அதனாலதான் சொல்லல... அவனே சூபர்வைசருக்குக் கால் செய்து, பேசி, பெர்ஃபார்மன்ஸ் ரிப்போர்ட் வாங்கிட்டான். இன்னைக்கு வந்ததும் வராத துமா வேலையும் முடிச்சுட்டான்."

அவள் மேலும் எதையோ கேட்க வர, நிம்மதியாகப் பேச விடாமல் கைபேசியின் ஒலி குறுக்கிட்டது.

"ஓ... ஆதித்யன்...! மறந்தே போயிட்டேன் பாருங்க... இதோ இப்ப வந்துட்டேன்..." யாரிடமோ அவசரமாகப் பேசியவர், அதை விட அவசரமாக இடத்தை விட்டு எழுந்தார்.

"சாரி பொண்ணே...! உன் கிட்டே சாவகாசமா அரட்டையடிக்கலாமேன்னு இங்க வந்து உட்கார்ந்தேன்... எங்க நிம்மதியா இருக்க விடறாங்க...? இப்ப நான் கிளம்பட்டுமா...?"

சரியென்று தலையாட்டினாள். பார்ட்டி முடிந்து அவள் ரேகாவிடம் விடைபெற்றுத் தன் ஸ்கூட்டியை நெருங்கிய நேரம்...! அவனும் சற்றுத் தள்ளி நிறுத்தப் பட்டிருந்த தன் ஸ்கோடாவை நெருங்கியிருந்தான்.

கண்ணும் கண்ணும் நேர் கோட்டில் சந்திக்கவும், "ஹலோ சார்..." என்று தானாகவே வார்த்தைகள் உதிர்ந்தன.

"நான்தான் உனக்குப் பாஸ்னு ஞாபகம் இருக்கா?"

அலட்சியமாய் வார்த்தைகளை உதிர்த்து விட்டு, அவன் கார் கதவை அறைந்து சாத்த, அவளுக்கோ கண்ணைக் கட்டியது. வீடு வந்த சேர்ந்த பிறகும், அவன் அலட்சியமாய்ப் பேசியதே நினைவில் வந்து அலைக் கழித்தது.



'ஐயோ... நீ தூங்குடி... காலையில ஆபீஸ்ல தூங்கி வழிஞ்சா, அதுக்கும் அமேசான் அசமஞ்சமேன்னு திட்டும்...' என்று கண்கள் கெஞ்சத் தொடங்கின.

விடியலின் வெளிச்சம் தாங்கி வந்த மறுநாள் காலை. எப்போதும் சாகவாசமாய்க் கண் விழிப்பவள், அன்று ஒரு மணி நேரம் முன்னதாகவே எழுந்து விட்டாள்.

"ஏன்டி இப்படி அரக்கப் பரக்க ஆபீசுக்குக் கிளம்பறே? ஓவர் டைம் இருக்குன்னு சொல்றே... சரியாச் சாப்பிட்டுப் போக வேண்டியதுதானே?"

காற்றில் அலையும் காகிதம் போல மகள் இங்கே சுற்றி, அங்கே சுற்றி, கைப்பை எடுத்து, நின்ற நெக் கிலேயே காலை டிபனை அரைகுறையாக விழுங்கி விட்டுச் செல்வதைக் கவலையோடு பார்த்தார் மீனாட்சி.

"எக்ஸ்ட்ரா டிபன் பேக்ல வெச்சுட்டீங்க இல்ல... நான் அங்க போய்ப் பார்த்துக்கிறேன். ராத்திரி அந்த அமேசான் வீட்டுக்குப் போனதோ... இல்லை ஆபீசையே காவல் காத்துட்டு உட்கார்ந்ததோ? பிரபா அங்கிள் இருந்தபோது அரை மணி நேரம் தாமதமாப் போனாலும் ஒண்ணும் சொல்ல மாட்டாரு. இப்ப அப்படியா? கொஞ்ச நாள்தான் மம்மி... அந்தப் பனை மரத்துக்கு ஆபீஸ் விஷயங்கள் பழகுன உடனே எல்லாமே நார்மல் ஆயிடும்."

"செக்ரட்டரி மாதிரியா பேசுறே...! ரவுடி மாதிரிப் பேசிட்டு இருக்கே! பனை மரம், அமேசான்... என்ன வார்த்தைடி இதெல்லாம்? உன்னை இன்னும் வேலையில

விட்டு வெச்சிருக்கான் பாரு... அந்தத் தம்பியைச் சொல்லணும். உனக்கு முதல்ல சீட்டுக் கிழிச்சிருந்தா இந்த வாய்க் கொழுப்பெல்லாம் அடங்கியிருக்கும்..." காபி தம்ளரை அவள் எதிரில் வைத்தார் மீனாட்சி.

"ஹை... ஆசையைப் பாரேன். எனக்கு வேலை போயிட்டா உடனே வரன் பார்த்து, என்னை இந்த வீட்டை விட்டே துரத்தியடிச்சிடலாம்... அதுதானே உங்க பிளான்? அதெல்லாம் நடக்கவே நடக்காது."

நம்பியார் போலக் கையைப் பிசைந்து, வில்லத்தனமாய் ஒரு சிரிப்புச் சிரித்து விட்டுச் சென்ற மகளைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டார். இவகிட்ட எவன் வந்து மாட்டப் போறானோ என்று அவர் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நேரம், அங்கே தருணிடம் வகையாய் மாட்டிக் கொண்டு முழி பிதுங்கிக் கொண் டிருந்தாள் இளவரசி.

அவள் அலுவலகம் சென்று சேர்வதற்கு முன்பே அவனுடைய வண்டி காம்பவுண்டில் நிற்க, 'ஹூக்கும்... நினைச்சேன்டா...' என்று நொந்தபடியே அவதியாய்த் தன் அறைக்கு விரைந்தாள்.

கைப்பையை வைத்து விட்டு, அவனுக்கு ஒரு சலாம் அடித்து விட்டு வந்து விடுவோம் என்று நினைத்த வளுக்கு, மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த குறிப்புப் புத்தகம் கண்ணில் பட்டது.

மதியத்திற்குள் அவள் முடித்துத் தர வேண்டிய வேலைகளைப் பற்றிய லிஸ்ட் அது. 'அடப்பாவி... ஏதோ



ஹோட்டல் பலகார மெனுவைப் போல இப்படிப் போட்டு வைத்திருக்கிறானே...!' என்று நொந்து போனாள்.

இப்போது ஆரம்பித்தாலும் இவளுக்கு இருக்கும் வேகத்திற்கு, அதில் பாதியாவது முடிக்க முடியுமா என்று சந்தேகமாக இருந்தது.

அழைப்பு மணிச் சத்தம் கேட்டு, அட்டெண்டர் முருகேசன் உள்ளே வந்து வணக்கம் தெரிவித்தான். பாஸ் எங்கே என்பது போல அவள் சைகையால் கேட்க,

"பேக்டரி பக்கம் ரவுண்ட்ஸ் போயிருக்காரு மேடம். இந்தக் குறிப்பு உங்க டேபிள்ல வைக்கச் சொன்னாரு. நான்தான் வெச்சிட்டுப் போனேன் மேடம்..." என்று பவ்யமாய்ப் பதில் சொன்னவன், தயங்கித் தயங்கி நின்றான். என்ன என்பது போல் பார்வையை உயர்த்தி னாள் இளவரசி.

"என் பொண்ணுக்குத் திடீர்னு உடம்பு சரியில்லாம இருக்கு மேடம்... விஷக் காய்ச்சல், அது இதுன்னு ஆஸ்பத்திரியில பயமுறுத்தறாங்க. பக்கத்துலயே இருந்து பார்த்துக்க நாலஞ்சு நாள் லீவு வேணும். புது முதலாளி கிட்ட நீங்கதான் சிபாரிசு பண்ணணும்..."

"ஐயோ... நான் எப்படிக் கேட்க முடியும்? நிலைமையை எடுத்துச் சொல்லி, நீங்களே கேளுங்க முருகேசன்."

"காலையில வந்தவுடனே கேட்டேன் மேடம்... வேலையில இருக்கணுமா வேண்டாமான்னு நீயே முடிவு

பண்ணிக்கோன்னு கத்தரிச்சு விட்ட மாதிரிப் பேசிட்டாரு. நீங்க ஏதாவது பேச்சு வாக்குல..."

"உங்க கிட்ட அப்படிச் சொன்ன பிறகு நான் என்ன செய்ய முடியும்னு தெரியலையே! உங்க நிலைமையைப் பார்த்தாலும் பாவமாத்தான் இருக்கு. எத்தனை நாளாக் காய்ச்சல் இருக்கு? இப்போ மஹா எப்படி இருக்கா? மஹாதானே உங்க பொண்ணு பேரு?"

அவன் மகளைப் பற்றி இரக்கப்பட்டு அவள் நலம் விசாரிக்க ஆரம்பித்து விட, இருபது நிமிடங்கள் ஓடிப் போனதோ, தருண் அவள் அறையைத் தாண்டிச் சென்றதோ, அவளுக்கு உறைக்கவே இல்லை.

சரியாகப் பன்னிரண்டு மணிக்கு அவனிடமிருந்து இன்டர்காம் அழைப்பு...!

அவன் சொன்னதில் பாதி வேலைதான் முடிந்திருந்தது. அடி வயிற்றில் பய அலையோடு அவன் எதிரே அவள் நிற்க, பார்த்துக் கொண்டிருந்த கோப்பில் இருந்து அவன் பார்வையை நகர்த்தவில்லை.

அவளும் மரப்பாச்சிப் பொம்மை போல அப்படியே நின்றாள்.

"இங்க மாடலிங்கா நடந்துகிட்டு இருக்கு...? அப்படியே நின்னுட்டு இருக்கே! வேலையை முடிச்சாச் சுன்னா டேபிள்ல சப்மிட் பண்ணிட்டுப் போகலாம்!"

'டேய்... நான் என்ன ஸ்கூல்ல ரிவிஷன் டெஸ்ட்டா எழுதிட்டு இருக்கேன்...? சப்மிட் அது இதுன்னு பேசறே?'



மனதுக்குள் வசனம் பேசிக் கொண்டிருந்த இளவரசி, நெற்றியில் விழுந்த அவனது அடர்ந்த தலைமுடி காற்றின் வேகத்துக்கு அசையும் அழகைத் திருட்டுத்தனமாய் ரசித்துக் கொண்டிருந்தாள்.

அவளிடமிருந்து பதில் வராமல் போகவே, அவன் நிமிர்ந்து பார்த்த பார்வையில் உடம்பு சற்றே அதிரத் தான் செய்தது. "ஹ்ம்..." என்று நரசிம்மனாய் அவன் புருவங்களை உயர்த்த,

"பாதி வேலைதான் முடிஞ்சிருக்கு..."

காற்று பாதி, வார்த்தை பாதி என்று பதில் தந்தவளை, ஏளனமாகப் பார்த்தான்.

"ஸ்கூல் பிள்ளைங்க தர்ற எக்ஸ்க்யூஸ் மாதிரி இருக்கு. நீ ஆபீஸ் காம்பவுண்டுக்குள்ள ஸ்கூட்டியைப் பார்க் செய்த நேரம் காலை ஒன்பது இருபத்திரண்டு. டெரெஸ்ல இருந்து பார்த்துட்டுத்தான் இருந்தேன். அங்கிருந்து வாத்து நடையா நடந்திருந்தாக் கூட பத்து நிமிஷத்துல உன் ரூமுக்கு வந்திடலாம்.

"ரொம்பவும் வெட்டி முறிச்ச மாதிரி ரிலாக்ஸ் பண்ணிட்டு வேலையை ஆரம்பிச்சிருந்தா கூட இந்நேரம் தொண்ணூறு சதவிகித வேலையாவது முடிஞ்சிருக்கணும். நீ என்னடான்னா அந்த முருகேசன் பொண்ணைப் பற்றிக் கதை பேசிட்டு, நேரத்தைக் கடத்திட்டு இருக்கே...! வீட்டுக் கதையெல்லாம் பேசுறதுக்குத்தான் ஆபீஸ்ல சம்பளம் கொடுக்கிறோமா?" அவன் குரலில் ஒரு நையாண்டி.

'ஹாங்...' என்று திகைத்துப் போய்ப் பார்த்தாள் இளவரசி. 'எப்படி முருகேசன் பெண்ணைப் பற்றிப் பேசியதெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறான்? யாரிடமும் பேசாமல், சாவி கொடுத்த பொம்மை போல வேலை செய்து கொண்டே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறானா?'

எங்கிருந்துதான் அவளுக்கு அவ்வளவு கோபம் வந்ததோ?

"பெத்த பொண்ணுக்கு உடம்பு சரியில்லேன்னு அவர் விசனப்படறாரு... அது உங்களுக்குக் கதை பேசுற மாதிரி இருக்கா சார்? அப்படியே இருந்தாலும் என் ரூம்ல பேசுனது உங்களுக்கு எப்படிக் கேட்கும்னு எனக்குப் புரியல. ஒரு ஸ்டாஃப் வீட்ல பிரச்னைன்னா என்ன ஏதுன்னு விசாரிக்கறது மனிதாபிமானம்..."

கோபத்தில் அவள் மூக்கு விடைத்துக் கொள்ள, வார்த்தைகளின் கோபம் அவள் கண்களிலும் பிரதி பலித்தது. சினத்தில் சிவந்திருந்த அவள் முகத்தை ஒரு நிமிடம் உற்றுப் பார்த்தவன், "போய் வேலையைப் பாரு... போ..." என்று சாதாரணமாக அனுப்பி விடவும், சற்றே திகைத்துப் போனாள்.

சரமாரியான, படுபயங்கரமான, கதிகலங்க வைக்கும் பதில் தாக்குதலை அவனிடமிருந்து எதிர்பார்த்தவளுக்கு, எதுவும் நடக்காமல் போகவே, சிலை போல நின்றிருந்தாள்.



"போ என்று சொன்னேன்... காது கேட்காதா?"

கண்களில் சலிப்பைக் காட்டி அவன் பேச, அடுத்த நிமிடம் அவள் கால்கள் தானாக அறையை விட்டு வெளியே...!

## 4

'அளவுக்கு மீறித்தான் பேசிட்டோமோ? முருகேசனுடைய பிரச்னையில், தான் மூக்கை நுழைத்திருக்க வேண்டாமோ? உனக்கு எதற்கு இந்த வேண்டாத வேலை அரசி?'

'ஒழுங்காக வந்தோமா... வேலையைப் பார்த்தோமா... நல்ல பெயர் வாங்கினோமா என்று உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போயேன். உனக்குச் சம்பளம் கொடுப்பவனையே எதிர்த்துப் பேசுகிறாயா என்று அவன் சீட்டைக் கிழித்து விட்டால்...? அதற்குப் பிறகு திருமணம், டும், டும்...! எல்லாம் முடிந்து வீட்டு மருமகளாய், சட்டியைச் சுரண்ட வேண்டியதுதான்!'

மூளை எச்சரிக்கை மணியடிக்க, அதன் பிறகு கைகள் மடமடவென வேலையைத் தொடர்ந்தன.

கணினியை விட்டு விரல்கள் நகர்ந்த போது உணவு நேரத்தையும் தாண்டியிருந்தது.

எப்போதும் பள்ளிக்கூட பெல் போல டாணென்று மணியடிக்கும் வயிறு, இன்று அமைதியாக இருந்தது அவளுக்கே சற்று ஆச்சரியமான விஷயம்தான்!

'வொர்க் கான்சென்ட்ரேஷன் என்று இதைத்தான் சொன்னானோ...? அப்படியானால் இத்தனை நாட்கள் பிரபாகரனிடம் சலுகை எடுத்துக் கொண்டு வேலையில் ஏனோதானோ என்று இருந்திருக்கிறாய்!'

இடித்துரைத்த மனச்சாட்சியிடம் 'ஹி... ஹி... ஹி...' என்று இளித்து விட்டுக் கோப்புகளைத் தூக்கிக் கொண்டு தருணின் அறைக்கு வந்தபோது, கான்பெரன்ஸ் ஹாலில் ஆடிட்டரிடம் புருவங்கள் முடிச்சிடப் பேசிக் கொண் டிருந்தான்.

பிரபாகரன் எம்.டி.யாக இருந்த நேரம், சில நாட்கள் உணவை அவரோடு பகிர்ந்து சாப்பிடுவாள். பொதுவாக மதியம் வீட்டுக்குச் சென்று விடும் அவருக்கு, மாதத்தின் சில நாட்கள் மட்டும் வீட்டிலிருந்து சாப்பாடு வரும்.

"நான் கொண்டு வந்ததே நிறைய இருக்கு அங்கிள்..." என்று அவள் மறுத்தாலும்,

"வளர்ற பிள்ளை சாப்பிடற மாதிரியா இருக்கு... என்னமோ பேருக்குக் கொறிச்சிட்டு இருக்கே!" என்று அதட்டிச் சாப்பிட வைப்பார்.

எப்போதும் அவரோடு செல்ல மகளாய் ஒட்டிக் கொண்டிருந்த காரணத்தால், முதலாளிக்கு வேண்டியவள் என்ற எண்ணத்தில், மற்ற ஊழியர்கள் அவளுக்குத் தனி மரியாதை தரத் தொடங்கியிருந்தனர். விடுமுறை வேண்டி முருகேசன் அவளிடம் சிபாரிசு கேட்டதும் அதன் அடிப்படையில்தான்.



'ஹூம்... இனி பிரபா அங்கிள் வரப் போவதில்லை. இத்தனை நாள் இல்லாமல் திடீரென்று மற்ற ஊழியர் களோடு ஒட்டிக் கொள்ளவும் முடியாது. தனியாகத்தான் சாப்பிட வேண்டும். இவன் என்னடாவென்றால், எதுவும் சாப்பிடாமல் வேலையே கதியென்று கிடக்கிறான்.

'அவள் கொண்டு வந்த தேங்காய் சாதத்தையும், கேரட் பொரியலையும் பகிர்ந்து கொடுக்கலாம். என்ன நினைத்துக் கொள்வானோ?' என்று சங்கோஜமாக இருந்தது.

'ஒரு வேளை சாப்பாட்டு நேரம் என்பதையே மறந்து விட்டானோ? இருந்தாலும் இருக்கும்... வொர்க் ஆல்க ஹாலிக் மேன். இன்டர்காமில் ஞாபகப்படுத்தி விடலாமா? ம்ம்... அதுதான் சரி...!'

இன்டர்காமில், "யெஸ்..." என்று அவன் குரல் கேட்டபோது,

திடீரென்று அவள் தொண்டை கமறிக் கொள்ள,

"அது வந்து... நீங்க... சாப்பாடு... லஞ்ச் டைம்... தாண்டிடுச்சு..." வார்த்தைகள் குத்திக் குத்தி வந்தன.

"ஒரு வழியாச் சொல்லி முடிச்சிட்டியா? ஞாபகப் படுத்தினதுக்கு நன்றி... உனக்குத் திக்குவாய் ஒண்ணும் இல்லையே?"

"சார்..." என்று அவள் திகைப்பாய்க் கேட்ட நேரம், தொடர்பைத் துண்டித்திருந்தான்.

'மவனே... எனக்குத் தேவைடா... ஐயோ பாவமேன்னு ஞாபகப்படுத்துனா... என்னையே கிண்டல் பண்றே! நீ சாப்பிட்டாச் சாப்பிடு, இல்லாட்டிப் போ! எனக்கென்ன வந்தது?' மனதுக்குள் மற்றுமொரு அர்ச்சனை.

அடுத்த சில நிமிடங்களில் அவன் தன் அறையைக் கடந்து செல்வது கதவின் இடைவெளியில் தெரிய, 'காலையில் முருகேசனுடன் பேசும்போது கதவு சரியாகச் சாத்தப்படாமல் இப்படித்தான் இருந்திருக்குமோ...?' என்று உறுத்தலாக இருந்தது.

'பிரச்னை கதவில் இருக்க, அவன் ஒட்டுக் கேட்டான் என்று என்னென்னவோ உளறிக் கொட்டியிருக்கிறோம். அவன் சொன்னது போலவே நீயொரு மர மண்டை, மட்டிதான் அரசி! எப்படித்தான் உன்னைத் திட்டாமல் விட்டானோ?'

உண்ட மயக்கம் தொண்டனுக்கும் உண்டு. அவன் தலை மறைந்ததும், மேஜையில் தலை சாய்த்து ஒரு குட்டித் தூக்கம் போட்டாள். அவன் திரும்பி வர ஒரு மணி நேரத்திற்கு மேலாகும் என்ற அவளது கணிப்புத் தவறாகிப் போனது.

நான்கைந்து முறை இன்டர்காம் அழைத்த பிறகே கண்கள் உறக்கத்தைத் துறந்தன. அவள் முகத்தைத் துடைத்துக் கொண்டு அவனெதிரே சென்று நிற்பதற்குள், அவன் பொறுமை, ஆடிக் காற்றில் ஆடும் பட்டமாய்த் தாறுமாறாய் ஆடிக் கொண்டிருந்தது.



"இந்த எட்டு மாசத்துக்கு உண்டான ப்ரொடக்ஷன் டீடெயில்ஸ் தேடிக்கிட்டு இருக்கேன். எந்த ஃபைல்ல வெச்சிருக்கே?"

"அது என்னோட சிஸ்டத்துல இருக்கு சார்... உங்க கம்ப்யூட்டருக்கு ட்ரான்ஸ்பர் செய்யட்டுமா? பிரிண்ட் அவுட் எடுக்கட்டுமா?"

"இதை நீ இன்டர்காம்லேயே கேட்டிருக்கலாம். சிம்ப்ளி வேஸ்ட்டிங் மை டைம். நீ பிரிண்ட் அவுட் எடுக்கறதுக்குள்ள எனக்கு வயசாயிடும். மெயில் பண்ணி விடு. நானே பார்த்துக்கறேன். ரெகமன்டேஷன்ல வேலைக்கு வந்தா இப்படித்தான் அசமஞ்சமா இருக்கும்..."

அவன் சலிப்பாய் முகத்தைச் சுழித்துக் கொள்ளவும், உள்ளுக்குள் சுரீரென்று இருந்தது. கடைசியாய்ச் சொன்ன வார்த்தைகள், கண்ணில் விழுந்த துரும்பாய் அவள் மனதில் வந்து விழ, அவளையும் மீறிக் கண்ணோரம் கரித்துக் கொள்வதாய்...!

சட்டென்று அந்த இடத்திலிருந்த விலகியவள், அந்த எக்ஸெல் கோப்பைத் தன் கணினியில் தேடியெடுத்து, அவனுக்கு மெயில் செய்து விட்டாள்.

இளவரசிக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. வேலையில் சேர்ந்ததிலிருந்து இன்றுதான் முதல் முறையாகத் திட்டு வாங்குகிறாள். 'வேலைக்குச் செல்பவர்கள் எல்லாம் இப்படித்தான் தன் மேலதிகாரிகளிடம் திட்டு வாங்கிக் கொண்டிருப்பார்களா? அம்மா சொன்னது

போலத் திருமணமே போதும் என்று போயிருக்கலாமோ?' முதன் முறையாக அவள் மீதே கழிவிரக்கம் வந்தது.

'சிபாரிசில் வந்தவளாமே! ஏன் சிபாரிசில் வந்தால் மட்டும் அவளிடம் திறமையில்லையா என்ன?' கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டே, மடமடவென்று ஒரு ராஜினாமாக் கடிதத்தைக் கைப்படவே எழுதினாள்.

மனதின் ஓரத்தில் ஒரு வெறுமை...!

'இந்த வேலை இல்லாவிட்டால் வேறு வேலை கிடைக்காதா என்ன?' எப்போதும் உள்ளே ஒளிந்திருக்கும் வீம்பு, இன்னும் கொஞ்சம் அவளை உசுப்பேற்றி விட, கடகடவென்று கடிதத்தை எழுதி முடித்தவள், ஒரு உறையில் அதைப் போட்டு விரைப்பாய் எழுந்த நேரம், "ஹலோ..." என்ற உற்சாகக் குரலோடு உள்ளே நுழைந் தாள் சசிரேகா.

கையிலிருந்த கவரை டபக்கென்று மேஜை டிராயரில் வைத்து மூடியவள், முடிந்தவரை முகத்தைச் சீராக வைத்துக் கொண்டு, அவளை வரவேற்றாள். என்னதான் மூடி மறைக்க முயன்றாலும், கலங்கிய விழிகள் எட்டப்பனாய் நின்று காட்டிக் கொடுக்கத்தான் செய்தன.

"பேக்டரிப் பக்கம் வந்து ரொம்ப நாள் ஆச்சு... சும்மா வந்துட்டுப் போகலாமேன்னு வந்தேன். மேடம் ரொம்பப் பிஸியோ? மில்கிவே வரைக்கும் போகலாமா இளா...? ஃபிரெண்ட்ஸ் கூட ஊர் சுத்தி ரொம்ப நாள் ஆச்சுப்பா!"



"இப்ப வேலை நேரமாச்சே! பெர்மிஷன் கிடைக்காது சசி. நீ மட்டும் போயிட்டு வாயேன். இல்லேன்னா இன்னொரு நாள் போகலாம்."

"அண்ணா கிட்டப் பெர்மிஷன் வாங்க வேண்டியது என் பொறுப்பு. காலையில இருந்து ஆபீஸ்லதானே இருக்கே? அரை மணி நேரம் ஜாலியாப் போயிட்டு வரலாம்பா... நான் தருண் கிட்டச் சொல்லிட்டு வந்துட றேன்!"

அவள் சென்றதும், அடக்கி வைத்திருந்த கண்ணீரை அவசரமாக வழிய விட்டாள் அரசி. மனதில் இருந்த பாரம் சற்றே குறைந்ததும், வாஷ்பேசினில் முகம் கழுவிக் கொண்டவளை மீண்டும் இன்டர்காம் அழைத்தது. பொம்மை போல் அவன் முன்னே நின்றவளை, விநோத மாகப் பார்த்தான் தருண்.

"ஏற்கெனவே இங்க அரைகுறை வேலையா இருக்கு... சசியோட வெளியே போகணுமா?"

"நான் ஏதும் கேட்கலையே...! அவதான்..."

"அண்ணா... இவ்வளவு நேரம் மஸ்கா போட்டும் மறுபடியும் ஆரம்பிக்கறீங்களே...!" என்று ரேகா சிணுங்கினாள்.

"ஹும்... டாலி, இதுதான் கடைசி. இனிமே ஆபீஸ் நேரத்துல டிஸ்டர்ப் பண்ணக் கூடாது. உங்க ஃபிரெண்ட்ஷிப் எல்லாம் ஃப்ரீ டைம்ல மட்டும்தான். ஓ.கே...?" என்று செல்லமாய் மிரட்டினான்.

"டாலி... போற வழியில எனக்கு ஒரு சின்ன உதவி பண்ணிட்டுப் போடா. ஒரு அட்ரஸ் தர்றேன்... நம்ம கம்பெனியில வேலை செய்யற அட்டெண்டர் வீடு... அவன் பொண்ணுக்கு உடம்பு சரியில்லையாம்... நான் கொடுக்கற பணத்தைக் கொண்டு போய் அவன் வீட்டுல கொடுத்து, வைத்தியச் செலவுக்கு வெச்சிக்கச் சொல்லு! ஒரு சின்ன மனிதாபிமான உதவிதான்!"

"இங்கேயே அட்டெண்டர் கிட்டே கொடுத்துடலாமே அண்ணா?"

"நான் ஏதாவது சொன்னாக் காரணம் இருக்கும்ன்னு என் தங்கைக்குத் தெரியுமா தெரியாதா?"

அவனது அழுத்தமான பார்வை, அருமைத் தங்கைக்கு ஏதோ சேதி சொல்ல, மறுத்துப் பேசாமல் பணத்தையும், முகவரியையும் வாங்கிக் கொண்டாள் சசிரேகா.

**அ**து லைன் வீடு போலக் குடித்தனங்கள் நெருக்கமாய் அமைந்த வாடகை வீடு. ஸ்கூட்டியில் இருந்து இறங்கிய இரண்டு பெண்களையும் பார்த்து மலைத்துப் போனாள் முத்தாயி.

'முருகேசன் வேலை செய்யும் கம்பெனியில் இருந்து வந்திருக்கிறோம்...' என்று சொன்னதும் மிகவும் பவ்யமாய் நாற்காலியைக் காட்டினாள்.

வந்த விவரத்தைச் சொல்லிப் பணத்தைக் கொடுத்த போது மொத்தமாக அதிர்ந்து போனாள் முத்தாயி.



"ஐயோ... என் பொண்ணுக்கு உடம்பு சரி யில்லையா? இப்பத்தான் இஸ்கூல்ல இருந்து வந்து கைகால் கழுவப் போயிருக்கு. இந்தா கூப்பிடறேன்... 'ஏய் மஹா... இந்தாடி... சித்த இங்க வந்துட்டுப் போ... உனக்கு உடம்புக்கு நோவுன்னு உன்ற அப்பன் பொரளி கௌப்பி விட்டிருக்கான்..."

அந்தச் சிறுமிக்கு மிஞ்சிப் போனால் பத்து வயது இருக்கும். வயதுக்கேற்ற வளர்ச்சியோடு ஆரோக்கியமாக இருந்தாள்.

"உன் பேர்தான் மஹாவா? உனக்குக் காய்ச்சல்ன்னு உன் அப்பா எதுக்குப் பொய் சொன்னாரு...?"

சசி கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் அந்தச் சிறுமி மலங்க மலங்கத் தன் தாயின் முகத்தைப் பார்த்தாள்.

"அது வெவரமில்லாத சின்னப் புள்ளம்மா... அதுக்கு என்ன சொல்லத் தெரியும்? நீ உள்ள போடி ராசாத்தி... நான் பேசிட்டு வந்து டீத்தண்ணி போட்டுத் தாரேன்."

மஹா உள்ளே போனதும், மகளுக்குக் கேட்காமல் மெல்லிய குரலில் பேசத் தொடங்கினாள் முத்தாயி.

"அந்த ஆளுக்கு ஊருக்கு வடக்கே ஒரு சின்ன வீடு இருக்குதும்மா... இந்த மாதிரி நாலஞ்சு நாளு லீவு கேட்டான்னா... அங்க போயி தண்ணியடிச்சிட்டு, அலம்பல் பண்ணிக்கிட்டுக் கெடப்பான் கசுமாலம்... பணங்காசு அந்தாளு கேட்டாருங்களா...?"

"இல்லை... முருகேசன் லீவு மட்டும்தான் கேட்டாரு. உடம்பு சரியில்லேன்னு சொன்னதால உதவிக்கு இருக் கட்டுமேன்னு கம்பெனியில இருந்து கொடுத்தாங்க. பரவா யில்லை... வேணும்ன்னா வெச்சிக்கோங்க..."

"ஐயோ... அப்படி யெல்லாம் மொறையில்லாம வாங்குனா நிசமாவே என் பொண்ணுக்கு சீக்கு வந்துடும். அதிகமாக் காசு பணம் இல்லாட்டியும் மாரியாத்தா புண்ணியத்துல பாவத்தைத் தேடாமத்தான் இருக்கோம் தாயி..."

மில்கிவேயில் வந்து அமர்ந்த பிறகு கூட, நடந்த தெல்லாம் இளவரசியால் நம்பவே முடியவில்லை. எப்படி யெல்லாம் அந்த முருகேசன் உருகி உருகிப் பேசினான்! படுபாவி!

முருகேசன் பொய் சொல்கிறான் என்று தெரிந்து தான் தருண் அவனுக்கு விடுமுறை மறுத்தானா? கம்பெனி விதிமுறைகளைக் காரணம் காட்டி மறுத்தானா? எது எப்படி இருந்தாலும், தேவையில்லாமல் இந்த விஷயத்தில் மூக்கை நுழைத்து, அவள்தான் பல்ப் வாங்கிக் கொண்டு நிற்கிறாள்.

இனி அடுத்தது என்ன? மட சாம்பிராணி என்ற பட்டமா?

சொல்லி விட்டுப் போகட்டும். அதுவே அவனிட மிருந்து வாங்கும் கடைசிப் பட்டமாக இருக்கட்டும். போனவுடனே ராஜினாமாக் கடிதத்தைக் கொடுத்து விட வேண்டியதுதான்.



ஆர்டர் செய்த சாக்லேட் கோனை ருசித்துக் கொண்டே பல்வேறு சிந்தனையில் ஆழ்ந்திருந்த வளுக்கு, சசி லொடலொடவென்று பேசிக் கொண்டிருந்த விஷயங்கள் மண்டையில் ஏறவே இல்லை.

"ஹேய்... என்னடி யோசனையெல்லாம் பலமா இருக்கு? அடுத்தது என்ன ஆர்டர் பண்ணட்டும்?"

"எனக்குப் பனானா பிரிட்டர்ஸ்..." என்றவளுக்குக் கல்லூரி நாட்களில் கும்பலாக வந்து இடத்தை அடைத்துக் கொண்டு, அரட்டைக் கச்சேரி நடத்தியது நினைவில் வந்தது.

"காலேஜ் முடிச்சு ரொம்ப வருஷம் ஆயிட்டா மாதிரி ஒரு ஃபீலிங் வருது ரேகா. இதே மில்கி வேல எப்படிக் கும்பலா வந்து அரட்டையடிச்சிட்டு இருப்போம்... ஞாபக மிருக்கா?"

"அதெல்லாம் மறக்க முடியாமத்தானே நான் என் அத்தை வீட்டுக்கு ஓடிப் போனேன் இளா. என்னதான் போன்லயும், மெயில்லயும் சேட் பண்ணிட்டாலும், நேர்ல பார்க்கற மாதிரி வருமா? நேத்துப் பங்ஷன்ல உங்க எல்லோரையும் பார்த்தவுடனே எவ்வளவு சந்தோஷமா இருந்தது தெரியுமா?

"ஆனா நைட் நீங்க எல்லோரும் கிளம்பிப் போனதும், வீட்டுக்குப் போய் ரொம்ப நேரம் அழுதேன் இளா. எங்க வீட்லயும் கல்யாணப் பேச்சுப் பேச ஆரம்பிச்சுட்டாங்க... அதுக்குள்ளே பேச்சலர் லைஃப்

முடியப் போகுதேன்னு இருக்குடி. உன்னை மாதிரி ஏதாவது வேலையில இருந்தாக் கூடக் காரணம் காட்டித் தப்பிக்கலாம். எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலே..."

"உன் அப்பாவுக்கும், பெரியப்பாவுக்கும் தெரியாத ஆளுங்களா? ஈஸியா வேலை கிடைக்குமே! உன் அண்ணா பேக்டரிக்கே கூட நீ வந்துடலாமே!"

"அங்கதான்டி நாம போடற கணக்கெல்லாம் தப்பாப் போகுது. படிக்கும் போது நான் எது கேட்டாலும் அப்பா சரின்னு தலையாட்டுவாரு... வேலைக்குப் போறதுக்கும் சரின்னு சொல்லுவாருன்னு நினைச்சேன். இப்ப என்னடான்னா உன்னை வேலைக்கு அனுப்பித்தான் சம்பாதிச்சு ஆகணுமான்னு ப்ரெஸ்டிஜ் இஷ்யூ பேசறாரு. என்ன படிப்புப் படிச்சாலும் கடைசியில வீட்டுக்குள்ள கொலுப் பொம்மையாட்டம் இருக்கணும்னு நினைக் கிறாங்க...

"சுலோவுக்கு இன்னும் நல்ல வேலை செட்டாகல. வினிக்கு ப்ரைவேட் ஸ்கூல் ஜாப்... பிடிக்கலையாம். சம்பளம் ரொம்பக் கேவலமா இருக்குன்னு ஃபீல் பண்றா... வவுச்சர்ல நிறையச் சம்பளம் கொடுக்கற மாதிரிக் கையெழுத்து வாங்கிக்கறாங்க... நிஜத்துல கம்மியாத்தான் கொடுக்கறாங்கன்னு வருத்தப்பட்டா...

"எங்களை எல்லாம் பார்க்கும் போது, நீ ரொம்ப அதிர்ஷ்டசாலி இளா. நல்ல கம்பெனியில ஒரு வேலையும் கிடைச்சு, அண்ணா மாதிரி ஒரு பாஸும் அமையறதுக்குக்



கொடுத்து வெச்சிருக்கணும். அவனுக்கு ஒருத்தரைப் பிடிச்சுப் போச்சுன்னா ரொம்பவும் அக்கறை எடுத்துப் பார்த்துப்பான். பிடிக்கலேன்னு ஆயிட்டாலும் கொம்பேறி மூக்கன்தான்!"

இளவரசிக்குப் புரையேறியது.

"என்னடி ஆச்சு?" என்று தண்ணீர் டம்ளரை அவள் பக்கம் நகர்த்தினாள் ரேகா.

"ஐ திங்க்... தி கொம்பேறி மூக்கன் இஸ் காலிங். நாம வந்து ரொம்ப நேரமாச்சுன்னு டெலிபதில வார்ன் பண்றாரு..."

"அடிப்பாவி... என் அண்ணனைப் பற்றி என் கிட்டேயாவா? மிஸ்டர் கொம்பேறி கிட்டச் சொல்லட்டுமா?" என்று விளையாட்டாய் மிரட்டினாள் சசி.

"சசி... இந்த சன்டே நம்ம கேங் மறுபடியும் மீட் பண்ணுவோமா? வொய் நாட் எ மூவி பா? இத்தனை மணிக்கு இந்த ஷோ... நேராத் தியேட்டருக்கு வந்துடுங்கன்னு மெஸேஜ் பண்ணிடுவோம். மறுபடியும் நாம எல்லோரும் ஒண்ணா சந்திச்சதா இருக்கும் இல்லையா?"

"நல்ல ஐடியா... எனக்குத் தோணவே இல்லை பாரேன். பேக்டரியில் உட்கார்ந்து பசங்களுக்கு மெஸேஜ் அடிப்போம். நீயும், உன் பாஸும் உங்க வேலையைப் பாருங்க. நான் என் வேலையைப் பார்க்கிறேன்."

தருணுக்குப் பட்டர் பாப்கார்ன் வாங்கிக் கொண்டு மீண்டும் தொழிற்சாலைக்குத் திரும்பினார்கள்.

கம்பெனிக்குச் சொந்தமான சரக்குகள் லாரிகளில் ஏற்றப் படுவதை மேற்பார்வையிட்டு, அந்தப் பரவலான நிலப்பரப்பில் அவன் நடந்து வந்து கொண்டிருந்தான்.

அவனோடு பேசியவாறு குடோன் சூபர்வைசர் முனியாண்டியும், லேபர் யூனியன் தலைவரும் வந்து கொண்டிருந்தனர்.

வேகமாகக் கால் வீசி நடக்கும் அவன் நடையின் லாவகத்தை மனதுக்குள் ரசித்த இளவரசி, ரேகாவின் கார் அருகிலேயே தன் ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு, அலுவலக அறை நோக்கி நடந்தாள்.

அறைக்குள் நுழைந்ததும் கைப்பையை வைத்து விட்டு, இளவரசி அக்கடா என்று அமர, ராஜினாமாக் கடிதம் நினைவில் வந்தது.

அவசரமாக மேஜை டிராயரை இழுத்தவளுக்கு ஆயிரம் வோல்ட் மின்சாரம்...!

கடிதம் கால் முளைத்துப் போய் விட்டதா?

மேஜை டிராயரில் இருந்தவைகளை லேசாகப் புரட்டி விட்டுத் தேடினாள். 'இங்கேதானே வைத்தோம்? ரேகா அறைக்குள் நுழைந்த போது அவதியாக வைத்த ஞாபகம். கீழே எதுவும் விழுந்திருக்குமோ...?' மேஜைக்கு அடியில் பார்வையால் தேடிக் கொண்டிருந்த போதே இன்டர்காம் அழைத்தது.



"இளா... இந்த பாப்கார்ன் அண்ணா கிட்டக் கொடுத்துடேன்..." என்று பட்டர் பாப்கார்ன் பொட்டலத்தை அவளிடம் நீட்டினாள் ரேகா. அச்செடுத்த குறிப்புகளோடு அதையும் சேர்த்து அவன் மேஜையின் மீது வைத்தவளிடம்,

"முருகேசன் பொண்ணை நலம் விசாரிச்சுட்டு வந்தாச்சா மிஸ் மனிதாபிமானம்...? ஹௌ இஸ் ஷி?" என்று நக்கலாய் விசாரித்தான்.

## 5

முருகேசன் மகளுக்காகக் கொண்டு சென்ற பணத்தை அமைதியாக மேஜையின் மீது வைத்தாள் இளவரசி.

"அவங்க கிட்ட கொடுக்கச் சொன்னேனே...? வைத்தியச் செலவுக்குத் தேவைப்படுமே? தருணுக்குத் தன்னோட ஸ்டாஃப்ஸ் மேல அக்கறையில்லேன்னு யாரும் சொல்லிடக் கூடாதே!"

ஊசியாய்க் குத்தும் பேச்சினூடே அவன் குறுகுறு வென்று அவளைப் பார்க்க, அவளுக்கோ தணலின் மேல் நிற்பது போல் பெரும் அவஸ்தையாய்...!

"சாரி சார்... இந்த விஷயத்துல நான் மூக்கை நுழைச்சிருக்கக் கூடாது. தேவையில்லாம வார்த்தைகளை விட்டு உங்களை ஹர்ட் பண்ணிட்டேன்..."

குரல் கம்ம... அவள் மன்னிப்புக் கேட்டதும், அவன் முகம் சற்றே இளகியது.

"குட்... அந்த வலி உனக்குப் புரியணுமேன்னுதான் நானும் சிபாரிசுல வந்தவதானேன்னு கேலி செய்தேன். நான் அப்படிச் சொன்னதும் நீ உன் ரூமுக்குப போய் அழுதிருக்கே...

"அம்மாடி... உடனே சந்திரமுகி ஸ்டைல்ல பார்க்காதே! நான் உன் ரூமுக்குள்ள எட்டிப் பார்க்கலம்மா. நீ ரேகாவோட வந்து நின்ன போது முகம் பூசணிக்காய் மாதிரி வீங்கியிருந்தது. அதை வெச்சுத்தான் சொன்னேன்."

சொல்லும்போதே அவன் உதட்டில் குறும்பாய் ஒரு புன்னகை நெளிய, அடக்க முயன்றும் முடியாமல் சிரித்து விட்டாள் இளவரசி.

"ஓ மை காட்... என்னுடைய பி.ஏ.வைச் சிரிக்க வைக்க நான் என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கு...!"

அவன் பொய்யாக அலுத்துக் கொள்ள, அவளுக்கோ இனம் புரியாத உற்சாகம். வழக்கத்தை விடச் சுறுசுறுப்பாகவே வேலைகள் முடிந்தன. ராஜினாமா கடிதம் மட்டும் போன இடம் தெரியவில்லை.

அவனைத் தவிர அவள் அறைக்குள் அனுமதி யின்றி நுழையக் கூடியவர்கள் யாருமில்லை. இதுவரை அவள் அறைக்கு அவன் வந்ததும் இல்லை. எத்தனை முறை பேசுவதாக இருந்தாலும் அவன் இன்டர்காமில்தான் பேசுவான். கடிதம் என்னதான் ஆகியிருக்கும்?

மண்டையைப் பிய்த்துக் கொள்ளும் யோசனை களோடு அவள் வீடு வந்து சேர்ந்த போது வானம்



அந்தக் கண்ணனின் கருமை நிறத்தைப் பூசத் தொடங்கியிருந்தது.

"நேத்து வரும்போதே உன் புது பாஸைத் திட்டிக் கிட்டே வந்தே! இன்னைக்கு வானிலை நிலவரம் மாறி யிருக்கு...!"

உற்சாகமாக உள்ளே வந்த மகளைத் தனக்கே உரிய பாணியில் வரவேற்றார் மீனாட்சி.

"அட... இங்க மட்டும் என்னவாம்? சில நேரம் என் மேல் பாச மழை. பல நேரம் காளிகாம்பாள் அர்ச்சனை தானே! உங்க பொண்ணு உங்களை மாதிரிதானே இருப்பா மம்மி. சொல்ல மறந்துட்டேன்...

"இந்த சன்டே மதியம் எங்க ஃபிரெண்ட்ஸ் எல்லோரும் சேர்ந்து மூவி போக ப்ளான் பண்ணி யிருக்கோம். டாம் க்ரூஸோட ஆப்லிவியன் லெவன். நீயும் வர்றியாடி...?"

"சான்ஸ் இல்லக்கா... இந்த சனி, ஞாயிறு காலேஜ்ல ஸ்பெஷல் செமினார் இருக்கு. அது போக லேப வொர்க்கும் இருக்கு. அதுக்குப் பிறகு க்ரூப் ஸ்டடீஸும் இருக்கு..."

"ஐயோ சாமி... தெரியாத்தனமா கேட்டுட்டேன். ஆளை விடு தாயே... நீயும் உன் க்ரூப் ஸ்டடீஸும்...!"

"என்னடி இது...? ரெண்டு பேரும் இப்படிச் சொல்லிட்டு இருக்கீங்க? எனக்கு சன்டே ஒரு மேரேஜ் அட்டெண்ட் பண்ணணும். உங்க ரெண்டு பேரையும்

கூட்டிட்டுப் போலாமேன்னு நினைச்சேன். நிர்மலா வீட்டுல பத்திரிகை வைக்கும்போதே பொண்ணுங்களையும் அழைச்சிட்டு வாங்கன்னு ஒரு தடவைக்கு நாலு தடவை சொன்னாங்க..."

ஹேண்ட் பேக்கில் இருந்த இரண்டு டிபன் டப்பாக்களில் ஒன்று திறக்கப்படாமலே இருப்பதைக் கண்டார் மீனாட்சி.

"ஓவர் டைம் செய்யணும்... பயங்கரமா டயர்ட் ஆகுது... ஆச்சா போச்சான்னு எக்ஸ்ட்ரா டிபன் பாக்ஸ் கேட்டே... நானும் அவசர அவசரமா அவல் உப்புமா கிண்டிக் கொடுத்தேன். அப்படியே கொண்டு வந்திருக்கே?"

"ஓ மம்மி... இன்னைக்கு அந்த ரேகா கழுதை வந்திருந்தாளா...! அவளோட அப்படியே மில்கிவே வரைக்கும் போயிட்டேன். அப்படியே வைங்க... ஒரு குளியல் போட்டுட்டு வந்து இதையே வேணா அடுத்த ரவுண்டுக்கு வெச்சிக்கிறேன்."

"இது வேண்டாம்... காலையிலே பொழுதோட செய்தது. ஒரு பத்து நிமிஷத்துல ரவா இட்லி வெச்சுடறேன். சுடச்சுட முழுங்குவியாம்...!"

அந்த நேரக் குளியலுக்குப் பின் ரவா இட்லியும், எண்ணெய்ப் பொடியும் அமிர்தமாய் உள்ளே இறங்க, சிறிது நேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஆழ்ந்தவள், அறுவை தாங்காமல் அணைத்து விட்டு, ஒரு புத்தகத்தை விரித்துக் கொண்டு கட்டிலில் விழுந்தாள்.



அது ஒரு காதல் ரசம் சொட்டும் கதை. தூக்கம் வரும்வரை படிக்கலாம் என்று நினைத்தவள், கதையைப் பாதியில் நிறுத்த முடியாமல் தொடர, "வாவ்... வாட் எ லவ்லி ஸ்டோரி...!" என்று வாய் தானாக முணுமுணுத்தது.

எப்படித்தான் சினிமாவிலும், கதைகளிலும் நாயகனுக்கும், நாயகிக்கும் காதல் ஏற்படுகிறதோ? அந்த நேரம் தோழி நீலாவைப் பற்றிய நினைவுகள் மலர்ந்தன.

முதல் வருடம் படித்த போது, இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்று அமைதியாக இருந்த நீலா, அதே வகுப்பில் படித்த தீபனுடன் மெல்ல மெல்லக் காதல் வயப்பட்டு, அவனோடு ஜோடியாக ஊர் சுற்றத் தொடங்கி, ஒரே ஒரு நாள் அவனைப் பார்க்காவிட்டாலும் பைத்தியம் பிடித்தவள் போல இருந்து, கடைசியில் இரு வீட்டாரின் எதிர்ப்பையும் மீறி, வாழ்ந்தால் அவனோடுதான் வாழ்வேன் என்று ஒற்றைக் கால் நாரையாய் நின்று, அப்பப்பா... ஒரு வழியாய்த் திருமணம் நடந்து முடிந்த போது, ஏதோ இந்த உலகத்தையே புரட்டிப் போட்டது போல இருந்தது.

"காதல், மண்ணாங்கட்டின்னு இந்த அவஸ்தையெல்லாம் தேவையா நீலா?"

இளவரசி எப்போதோ அவளிடம் விளையாட்டாய்க் கேட்டிருக்கிறாள்.

"காதல் வராத வரைக்கும் மனசு ஸ்படிகம் மாதிரி தான் இருக்கும் இளா. கண்ணுக்குத் தெரியாத அந்த

வைரஸ் மனசுக்குள்ள புகுந்த பிறகு, படுத்தற பாடு இருக்கே... இம்சையாகவும் இருக்கும், சுகமாகவும் இருக்கும். சில சமயம் ஏன்டா இந்த வைரஸ் கிட்ட மாட்டிக்கிட்டோம்னு எரிச்சலாக் கூட இருக்கும். காதல் ஜெயிச்சாலும், தோற்றாலும் சாகற வரைக்கும் அந்த வைரஸ் ரெண்டு பேர் மனசுலயும் அப்படியேதான் இருக்கும் இளா. அது ஒரு அழகான உணர்வு!"

ஏதோ அந்தக் காதல் வைரஸ் வானத்து மேகங் களில் குடியிருப்பது போல, அவள் வெட்ட வெளியை வெறித்துக் கொண்டு பேசிய போது, நட்டு கழண்ட கேஸ் என்று கூட நினைத்திருக்கிறாள்.

காதல் திருமணத்தை ஏற்க முடியாது என்று நீலாவைப் பெற்றவர்கள் வெறித்தனமாய் மறுத்தபோது, அத்தனை அடி உதைகளையும் தாங்கிக் கொண்டு, தீபனுக்கு வேலை கிடைக்கும் வரை பொறுமையாகக் காத்திருந்தவள், ஒரு நல்ல முகூர்த்த நாளில் ரெஜிஸ்டர் ஆபீசில் திருமதி தீபனாக முடிசூடிக் கொண்டாள். மாலை மாற்றிக் கொண்ட அந்த நிமிடம் அவர்கள் இருவரது முகத்திலும் ஜெயித்து விட்டோம் என்ற பெருமிதம்!

இன்னமும் இளவரசியால் அந்தக் காட்சியை மறக்க முடியவில்லை. அதன் பிறகு நான்கு மாத இடை வெளியில் அவள் பெற்றோர் அவனை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டது தனிக் கதை. இப்போதும் எங்காவது கடை வீதியில் அவர்களைச் சந்திக்கும் போது, அந்த முகங்களில் தெரியும் பிரத்யேகமான பூரிப்பு!



இப்படியெல்லாம் பூரித்துப் போகும் அளவுக்கு அந்தக் காதலில் அப்படி என்னதான் இருக்குமோ என்று சுகமாய்ச் சலித்துக் கொண்டாள் இளவரசி.

அவளுக்கென்னவோ கல்லூரியில் படித்த காலத்தில் சக மாணவர்களைத் தோழர்களாகத்தான் நினைக்கத் தோன்றியது.

தன்னிடம் எந்நேரமும் வழிந்து கொண்டிருந்த வினோத்திடம் கூட, அவளுக்கு எந்த ஈர்ப்பும் ஏற்பட்ட தில்லை.

இன்னும் சொல்லப் போனால், வழியும் ஆண் களைக் கண்டால் எரிச்சல்தான் பற்றிக் கொண்டு வந்தது.

"இன்னும் தூங்காம என்னக்கா பண்றே?" அரைத் தூக்கத்தில் லாவண்யா கேட்டபோது இரவு பதினொரு மணி என்று கடிகார முட்கள் அறிவித்தன. இதென்ன திடீரென்று காதலைப் பற்றிய ஆராய்ச்சியில் இறங்கி விட்டோம் என்று அரசிக்கே சற்று வியப்பாக இருந்தது.

எல்லாம் புத்தகம் செய்த லீலை என்று சிரித்துக் கொண்டே விளக்கை அணைத்து விட்டுப் படுத்தவளின் ஸ்படிகமான மனதுக்கு நித்ராதேவி தாலாட்டுப் பாடினாள்.

அந்த வாரம் முழுவதும் அலுவலக வேலை, ஓவர் டைம் என்று சென்று விட, தருண் அவளிடம் சிடுசிடுப்பதைச் சற்றுக் குறைத்துக் கொண்டிருந்தான். ரேகாவின் தோழி என்பதால் கரிசனம் காட்டுகிறானோ என்று நினைத்தவள்...

'எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். இப்படியே சுமுகமாகப் போனால் சரி...' என்று அதற்கு மேல் ஆராய்ச்சி செய்யாமல் விட்டு விட்டாள்.

**ஞா**யிற்றுக் கிழமையன்று தகதகக்கும் காஞ்சிப் பட்டில் தன்னை அலங்கரித்துக் கொண்டு திருமண வீட்டுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார் மீனாட்சி.

"கண்ணா... என்னை மண்டபம் வரைக்கும் டிராப் பண்ணிட்டு வந்துடும்மா... ஆட்டோவிலேயோ, கால் டாக்ஸியிலேயோ போனா எப்படியும் முன்னூறு, நானூறு ரூபாய் பழுத்துடும்."

லாவண்யா செமினாருக்குச் சென்று விட்டிருக்க, மீனாட்சிக்கு இளவரசியிடம் கெஞ்ச வேண்டிய நிலைமை.

"என் வண்டிக்கு மட்டும் பெட்ரோல் மலிவு விலைக்குத் தர்றானா? தங்கத்தோட விலைக்குச் சமமா பெட்ரோல் விலையும் ஏறுது மம்மி. குதிரைச் சவாரி பண்ணிட்டே ஆபீசுக்குப் போயிடலாமான்னு பார்க்கிறேன். உங்க வீட்டுக்காரரை துபாய்ல இருந்து ரெண்டு பேரல் அனுப்பச் சொல்லுங்க!"

சோபாவில் அமர்ந்து காலாட்டிக் கொண்டு கலாட்டா செய்து கொண்டிருந்தவளைக் காதைப் பிடித்துத் திருகி னார்.

"இப்போ என்னை மண்டபத்துக்குக் கூட்டிட்டுப் போக முடியுமா? முடியாதா?"



"எனக்கு இன்னைக்குப் பாக்கெட் மணி குறைஞ்சது ரெண்டாயிரம் ரூபாயாவது வேணும். நீங்க தர்றதா இருந்தா நான் கூட்டிட்டுப் போறேன்."

"சினிமாவுக்குப் போறதுக்கு எதுக்குடி ரெண் டாயிரம்?"

"இன்னைக்கு ஒரு பெரிய பட்டாளமே அங்க வரப் போகுது. படம் முடிஞ்சதும் ஹோட்டல், ஸ்நாக்ஸ் பார்னு திடீர்னு எவளாவது திரியைக் கொளுத்திப் போட்டா நான் என்ன பண்ணுவேன்? என்கிட்டே பணமில்லப்பா... எங்க டாடி துபாய்ல எண்ணெய்க் கிணத்துல தூர் வாரிட்டு இருக்காருன்னு சொல்லட்டுமா?"

"வாய் மேல போடுவேன். என் புருஷனுக்கு என்னடி குறைச்சல்? கெமிக்கல் என்ஜினியரிங் படிச்சுட்டுக் கத்தை கத்தையாய் சம்பாதிச்சுட்டு இருக்காரு..." சொல்லும்போதே அன்னையின் முகத்தில் பெருமிதம் ஜொலிப்பதைக் கண்டு, பொங்கிச் சிரித்தாள் இளவரசி.

"அந்தக் கத்தையில் ஒண்ணாவது என்கிட்டே தள்ளலாமே...!" அம்மாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கட்டிக் கரும்பாய்ப் பேசினாள்.

"பைசா பாக்கியில்லாமப் பத்திரமாச் சேர்த்து வெச்சாத்தான் உன் பேருக்குத் தகுந்த மாதிரி உன்னை அரசியாட்டம் வாழ வைக்க முடியும். கழுத்தில இருந்து கையை எடு... பேசிட்டே நைசா நெக்லஸை உருவிடாத... கூட்டிட்டுப் போடா கண்ணா... விசேஷத்துக்கு லேட்டாகுது."

"ம்ம்... சரி, சரி... டிரைவர் பேட்டா மட்டுமாவது கொடுங்க... மிச்சத்தை நான் என் ஏ.டி.எம்.ல எடுத்துக் கறேன். வரும்போது எப்படி வருவீங்க?"

"கல்யாணத்துக்கு ஆஷா வருவா... அவளோட சேர்ந்து வந்துடுவேன். நீ சினிமாவுக்குப் போயிட்டுப் பத்திரமா வந்து சேரு. இன்னொரு செட் சாவி எடுத்துட்டுப் போ!"

அன்றைய மேட்னி ஷோவுக்கு அழகிய வெளிர் நீல நிற டாப்ஸும், அதற்கேற்ற ஓவர் கோட்டும், ஜீனசும் அணிந்து ஸ்கூட்டியை' ஆன் செய்தபோது, பெட்ரோல் ரிசர்வைக் காட்டியது.

மண்டபத்துக்குச் சென்று வரும் வழியிலேயே பங்க்கில் நுழைந்திருக்க வேண்டும்.

பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சோம்பேறி யாய் வந்ததில் இப்போது உயிரெடுக்கிறது.

தியேட்டர் வரை தாங்கும்... திரும்பி வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று வண்டியை அதன் முழு வேகத்தில் பறக்க விட்டாள் இளவரசி.

"ஹாய்... ஹாய்... ஹாய்..."களுக்குப் பிறகு, அந்த நண்பர்கள் கூட்டம், வரிசை எண் தேடி அமர்ந்தனர்.

உமேஷ், ஸ்டீபன், சுலோ, வினயா, அரசி, ரேகா என்று வரிசையாக அமர்ந்து கொள்ள, ரேகாவுக்கு அடுத்து ஒரு இருக்கை காலியாக இருந்தது.



வினோத் வருவானாக இருக்கும் என்று அதைப் பற்றிப் பேச வாயெடுத்த போதே திரையரங்கின் விளக்குகள் அணைந்து டி.டி.எஸ். ஒலியதிர்வோடு வெள்ளித்திரை ஒளிரத் தொடங்கியது.

மற்றவர்களை விட ரேகாவுக்கு சினிமாப் பைத்தியம் அதிகம். டி.வி.டி.யில் படம் பார்த்தாலே உலகம் மறந்து பார்த்துக் கொண்டிருப்பாள். தியேட்டரிலோ கேட்கவே வேண்டாம். கட்டெறும்பு கடிக்க வந்தால் கூட, "அப்புறம் வந்து கடியேன்... ப்ளீஸ்... டோன்ட் டிஸ்டர்ப் மீ..." என்று சொன்னாலும் சொல்லும் ரகம்.

அப்படிப் பட்டவளைச் சோதிப்பதற்கென்றே அவளுக்கு நேர் முன் இருக்கையில் வந்து அமர்ந்தான் ஒருவன். நாட்டியம் கற்றுக் கொள்பவனைப் போல, அவன் நிமிடத்திற்கு ஒரு முறை இப்படியும், அப்படியும் மாறி மாறித் தலையைச் சாய்க்க, கிடைத்த இடை வெளியில் சர்க்கஸ்காரி போல் படம் பார்த்துக் கொண் டிருந்தாள் சசிரேகா.

அவன் நடு மண்டையிலேயே நச்சென்று அடிக்க லாம் போல ஆத்திரம் வந்தது.

"இளா... இந்த சீட்ல மாறி உட்கார்ந்துக்கோப்பா... நீ என்னை விட உயரம்தானே! உனக்கு இந்தப் பனங்காய் மண்டை மறைக்காது!" மெல்லிய குரலில் அவள் முணு முணுக்க, இளாவும், ரேகாவும் இடம் மாறி அமர்ந்தனர்.

இளாவுக்கு அருகே காலியாக இருந்த அந்த இருக்கை இன்னமும் வினோத்தின் வருகையை எதிர்

பார்த்துக் காத்திருந்தது. படம் ஆரம்பித்து அரை மணி நேரம் கழித்து, அருகில் யாரோ அமர்வது போல இருக்க, "ஹாய் வினோத்..." என்று சொல்ல வாய் திறந்தவள், சிலையாக உறைந்தாள்.

அருகில் அமர்ந்தவனைப் பார்த்ததும் இதயம் தடதடவென்று அடித்துக் கொண்டது.

இமைகள் படபடக்க, திருதிருவென்று விழித்துக் கொண்டிருந்தவளைப் பார்த்து மெலிதாய்ப் புன்னகைத்து விட்டுத் திரைப்படத்தில் ஆழ்ந்தான் அவன்.

"சசி... இடம் மாறி உட்காருப்பா... வினோத் வரலே... உன் அண்ணா வந்திருக்காரு...!" மெதுவாகத் தோழியின் காதருகே கிசுகிசுத்தாள் இளவரசி.

"திடீர்னு இன்னைக்குப் பெங்களூர் வரைக்கும் போக வேண்டியிருக்கு... வர முடியாதுன்னு வினோத் போன் பண்ணிச் சொல்லிட்டானே... வினோத் பக்கத்தில உட்காரலாம், அண்ணா பக்கத்துல உட்காரக் கூடாதோ? பேசாம உட்காருடி..."

படம் பார்க்க விடாமல் தொணதொணவென்று பேசிக் கொண்டிருக்கிறாளே என்று ரேகாவின் குரலில் சீற்றம். அதற்கு மேல் இளவரசி வாயே திறக்கவில்லை.

எந்த விதமான ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தருண் நிம்மதியாகப் படம் பார்த்துக் கொண்டிருக்க, அவளுக்குத் தான் இனம் புரியாத குறுகுறுப்பு...!



எத்தனையோ முறை நண்பர்கள் கூட்டத்தோடு தியேட்டரில் படம் பார்த்திருக்கிறாள். அப்போதெல்லாம் வராத விசித்திரமான சங்கோஜம் இன்று புதிதாய்...! அவன் பாஸ் என்பதாலா?

ஏதோ ஒரு புரியாத அவஸ்தை மனதின் மூலையில் ஒட்டிக் கொண்டே இருக்க, அந்த அவஸ்தையைத் தாங்கிக் கொண்டே படம் பார்த்தாள் இளவரசி.

திரைப்படத்தின் சில காட்சிகளில் ரசனை மிகுதியாக, தன்னையும் மறந்து இருமுறை அவன் பக்கம் தலை சாய்த்துச் சிரித்தாள். வசீகரமான அந்தப் புன்னகை, விரலிடுக்கில் நின்ற ஐஸ் கட்டியாய் அவனுக்குள் சிலீரென்று இறங்கியது.

முதன் முறையாகப் படத்திலிருந்து பார்வையை விலக்கி, அவளைப் பார்த்தான் தருண்.

திரையின் வெளிச்சத்தில் அவள் கண்கள் பளபளக்கும் கோலிக் குண்டுகளாய்...! புன்னகையால் சற்றே புடைத்திருந்த அவள் கன்னக் கதுப்புகள், பாதாம் நிறத்தில் கவர்ந்தன. காது மடலை உரசி நின்ற விரித்த கூந்தல்... ஒரே ஒரு நிமிடம் அவள் வரி வடிவத்தை இயல்பாய் ரசித்தவன், மீண்டும் திரையில் கவனம் செலுத்தினான்.

படம் முடிந்த வேகத்தில்... "இன்னொரு நாள் எல்லோரும் சந்திக்கலாம் ஃபிரெண்ட்ஸ்..." என்று கையாட்டி விட்டு, உமேஷ், ஸ்டீபன் இருவரும் ஒரே

பைக்கில் சென்று விட... சுலோர், வினயா இருவரும் ரேகாவோடு காரில் ஏறிக் கொண்டனர்.

'கூட்டம் குறையட்டும், ஸ்கூட்டி எடுக்கலாம்...' என்று காத்திருந்தவளை செல் அழைத்தது.

"இளா... படம் முடிஞ்சுதா? ஆஷா வீடு வரைக்கும் வர முடியுமா?" மீனாட்சிதான் அழைத்தார்.

"நான் எதுக்கும்மா? நீங்கதான் ஆஷா ஆன்ட்டி யோட வந்திடுவேன்னு சொன்னீங்களே...? இல்லேன்னா ஒரு கால் டாக்ஸி பிடிச்சு வாங்க. என்னால இப்ப அங்க வர முடியாது. ஏற்கெனவே வண்டி ரிசர்வ்ல இருக்கு... இனி பங்க்ல க்யூவில நின்னு நிரப்பிட்டு வர்றதுக்குள்ள நேரமாயிடும்."

"அதுக்கில்லடி. ஆஷாவோட நாத்தனார் ஸ்டேட்ஸ்ல இருந்து வந்திருக்காங்க. அவங்களுக்கு ரெண்டு பசங்களாம். மூத்தவனுக்குப் பொண்ணு பார்த்துட்டு இருக்காங்களாம். ஆஷா உன்னைப் பற்றி அவங்க கிட்ட நிறையச் சொல்லியிருக்கா... உன்னை நேர்ல பார்க்க ணும்னு பிரியப்படறாங்க..." சொல்லும்போதே மகள் என்ன சொல்லுவாளோ என்ற தயக்கம் மீனாட்சியின் குரலில் தெரிந்தது.

"ஓஹோ... அந்தம்மாவை நான் தேடி வந்து பார்க்கணுமா? நான்தான் உங்க கிட்ட இப்போ எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்டேனா? தியேட்டருக்கு வந்து கூட நிம்மதியா இருக்க விடாம,



இதையேதான் பேசுவீங்களா? என்னால இப்போ எங்கேயும் வர முடியாது."

பதிலை எதிர்பாராமல் செல்லை அணைத்த போது, அவனது காரின் ஹாரன் சத்தம்...! வண்டி அருகில் வந்து நின்றதைக் கூட அறியாமல் பேசிக் கொண்டு இருந்திருக்கிறாள்.

"இங்கேயே காத்திருந்து அடுத்த ஷோ பார்க்கிற அபிப்பிராயமா?"

கார் கண்ணாடியின் இடைவெளியில் அவன் புருவம் நிமிர்த்திக் கேட்ட போது, அவளுக்குச் சிரிப்புதான் வந்தது.

"கூட்டம் குறைஞ்சதும் ஸ்கூட்டி எடுக்கலாம்னு நின்னேன்..."

"ஓகே... தென்... ஆபீஸ்ல மட்டும்தான் ஸ்லோன்னு நினைச்சேன்... டேக் கேர்..."

அவன் கார் மின்னல் வேகத்தில் கிளம்பிச் செல்ல, அவன் என்ன சொன்னான் என்று மண்டையில் ஏறுவதற்கே சில நிமிடங்கள் ஆனது.

தியேட்டருக்கு வந்து கூட அவளைக் கேலி செய்வானேன்? அப்படி என்ன அவள் ஆபீசில் ஸ்லோவாக இருக்கிறாள்...? மீனாட்சியின் மேலிருந்த கோபம், தருண் கேலி செய்து விட்டானே என்ற ஆதங்கம் எல்லாம் ஒன்று சேர்ந்து கொள்ள, வீட்டுக்கு வந்ததும்

மீனாட்சியிடம் காச்மூச்சென்று எகிறிக் கொண்டிருந்தாள் இளவரசி. பதிலுக்கு அவரும் காரசாரமாகவே பேசிக் கொண்டிருந்தார்.

"உன் மனசுல என்னடி நினைச்சிட்டு இருக்கே? கல்யாண வயசுல பொண்ணுங்க இருந்தா நாலு பேர் விசாரிக்கத்தான் செய்வாங்க. வீடு தேடி வந்துதான் பொண்ணு கேக்கணுங்கற வழக்கமெல்லாம் மாறிட்டு வருது. ஹோட்டல்ல வெச்சுப் பொண்ணு பார்க்கிறாங்க... இன்னும் சில பேர் கல்யாண மண்டபத்துல வெச்சே பேச்சு வார்த்தையைக் கூட முடிச்சிக்கிறாங்க...

"அந்தம்மா, கால் கொஞ்சம் இழுத்து இழுத்து நடக்கறாங்க... திடீர்ன்னு இந்த ஆறு மாசமா நரம்பு இழுத்துக்கிச்சாம். ஆபரேஷன் பண்ண வேண்டி வந்தாலும் வரும்ன்னு பேசிக்கிட்டாங்க. அதனாலதான் உன்னை அங்க வரச் சொல்லி ஆஷா சொல்லச் சொன்னா! நீ என்னடான்னா, பெரிய இவ மாதிரி முறுக்கிக்கிட்டு நிக்கறே!

"உனக்கு நல்ல இடம் அமைஞ்சிட்டா லாவண்யாவுக்கும் தானா அமையும். வாழ்க்கையில புத்திசாலித்தனமா முடிவெடுக்கணும் இளா...! தானா வர்ற இடத்தைத் தட்டி விட்டுட்டு நல்ல இடம் கிடைக்குமான்னு பிற்பாடு அலைவானேன்? அந்தப் பையன் பிரஜேஷ் வெளிநாட்டுப் பேங்க்ல வேலை செய்யறான். தங்கமான குணமாம். கை நிறையச் சம்பாதிக்கிறான். தனக்கு வர்றவளை ராணியாட்டம் வெச்சிக்குவான்னு ஆஷா சொல்லிச்



சொல்லி மாய்ஞ்சு போனா...! அந்தப் பையனோட போட்டோ கொடுத்து அனுப்பியிருக்கா... உன் ரூம்ல டி.வி. மேல வெச்சிருக்கேன்..."

'ச்சே... கல்லூரி வாழ்க்கை என்ற ஒன்று முடிந்து விட்டால், திருமணத்தைத் தவிர வேறு பேச்சே இருக்காதா? இப்போது கல்யாணம் வேண்டாம் என்று எத்தனை முறைதான் சொல்வது?'

'அந்த ஆஷா அம்மாவை நன்றாக மூளைச் சலவை செய்திருக்கிறாள். இனி என்ன சொன்னாலும் விடியும் வரை மீனாட்சி இதைத்தான் பேசிக் கொண்டிருக்கப் போகிறார். விடிந்த பின் அலுவலகத்துக்குத் தப்பித்து ஓடி விடலாம்...' சலிப்போடு கட்டிலில் வந்து விழுந்தவளுக்கு, கை தானாக ரேகாவின் நம்பரை டயல் செய்தது.

"என்னடி...? இப்பதானே பை சொன்னோம்... ஏதாவது முக்கியமான விஷயமா?"

"முக்கியமே இல்லாத விஷயம். வீட்டுக்கு வந்தவுடனே அம்மா கல்யாணப் பேச்சு ஆரம்பிச்சுட்டாங்க. பத்தாததுக்கு மாப்பிள்ளைப் பையனோட போட்டோ வேற வந்திருக்கு..."

"வாவ்...! சூப்பர்...! ஹீரோ சார் எப்படி இருக்காரு? நல்லா இருந்தா ஓ.கே. சொல்லிடேன்."

"நானே கடுப்புல இருக்கேன். நீ இன்னும் கொஞ்சம் ஏத்தி விடாதே! இப்போதைக்கு அம்மாவோட நச்சரிப்புல

இருந்து தப்பிக்கணும். இங்கேயே இருந்தா ராத்திரி வரைக்கும் இதையே பேசிக் கொன்னுடுவாங்க... லைப்ரரி, பார்க்னு எங்கேயாவது போலாமான்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன். ஃப்ரீயா இருந்தா நீயும் வர்றியா ரேகா? வீட்ல உட்கார்ந்து என்ன பண்ணப் போற?"

"ஹேய்... சாரிப்பா... இப்ப நான் எங்கேயும் வரமுடியாது. பெரியம்மாவுக்குத் திடீர்னு மூச்சுத் திணறல் மாதிரி வந்துடுச்சு. நீ போன் பண்றதுக்கு ஒரு பத்து நிமிஷம் முன்னாடிதான் தருண் அண்ணா போன் செய்தான். நாங்க எல்லோரும் பெரியம்மா வீட்டுக்குக் கிளம்பிட்டு இருக்கோம். டேக் கேர் டா... தப்பா எடுத்துக் காதப்பா..."

"ச்சே... ச்சே... நான் எதுவும் தப்பா எடுத்துக்கலை. ஃப்ரீயா இருக்கியான்னு கேட்டேன். தட்ஸ் ஆல்... பை..."

லாவண்யா இருந்தாலாவது அவளோடு சேர்ந்து ஊர் சுற்றலாம். அவளும் செமினார் முடிந்ததும் க்ரூப் ஸ்டடீஸ் செய்கிறேன் என்று தோழி வீட்டிற்குச் சென்று விட்டாள்.

முகம் கழுவி நைட்டிக்கு மாறியவள், அம்மா சொன்ன அந்த மாப்பிள்ளையின் புகைப்படத்தை எடுத்துப் பார்த்தாள். குறை சொல்லும்படி ஏதுமின்றி அழகனாய்த்தான் இருந்தான்.

அழகு, அறிவு, வருமானம், வசதி எல்லாமே நன்றாகத்தான் இருக்கிறது. அவளுக்குத் திருமணத்தில்



நாட்டமில்லாமல் இருக்கிறதே! என்ன சொல்லி வேண்டா மென்று மறுப்பது?

## 6

அன்று மாலை பூரியும், உருளைக் கிழங்கும் உம்மென்று உள்ளே போனது.

அவளாக ஒரு நல்ல முடிவுக்கு வரட்டும் என்று மீனாட்சி முடிந்த வரை பொறுமையாக மௌனம் காத்திருக்க, அந்த விவகாரத்தையே மறந்த வளாகத் தொலைக்காட்சிப் படத்தில் ஆழ்ந்திருந்தாள் இளவரசி.

'பறவைகள் செய்யுதே... பட்டாம்பூச்சி செய்யுதே...
நதிகள் செய்யுதே... மரங்கள் செய்யுதே...!'

இளவரசியும் உடன் சேர்ந்து காலாட்டிக் கொண்டே பாடிக் கொண்டிருக்க,

"எல்லாம் அதோட வேலையை ஒழுங்காத்தான் செய்யுது, உன்னைத் தவிர...!"

அவளுக்காகக் கலந்து வந்த பூஸ்ட் டம்ளரை ணங்கென்று மேஜை மீது வைத்து விட்டு, முறைத்துக் கொண்டு நின்றார் மீனாட்சி.

"அம்மா... ப்ளீஸ்... இன்னும் ஒரே ஒரு வருஷம் உங்க பொண்ணா சுதந்திரமா இந்த வீட்ல இருந்துக் கறேனே! இதுக்கு மேல தயவு செய்து என்னை நீங்க வற்புறுத்த வேண்டாம். நீங்க சொன்ன அந்தப் பையனுக்கு

எந்தக் குறையும் இல்லை. ஆனா எனக்குத்தான் மனசு ஒட்ட மாட்டேங்குது. நான் என்ன பண்ணுவேன்?" கண்களில் பொங்கிய கண்ணீரோடு மகள் பேசவும் அதிர்ந்து போனார் மீனாட்சி.

"இளா... நான் என்னடா சொல்லிட்டேன்? என் பொண்ணு எதுக்குமே அழ மாட்டான்னு பெருமையா எல்லோர் கிட்டேயும் சொல்லுவேன். நீ என்னடான்னா, நல்ல விஷயம் பேசும்போது கண்ணுல தண்ணி வைக்கிறே... என்ன நடந்து போச்சுன்னு இப்ப உனக்கு அழுகை வருது...?

"தெரியலம்மா... பொண்ணு நல்ல இடத்துல வாழ்க்கைப்பட்டு சௌக்கியமா இருக்கணும்ன்னு பெத்தவங்க எல்லோருமே பொதுவா நினைக்கறதுதானே... வீட்டை விட்டு வெளியே துரத்துறோம்னு அர்த்தமா? அது தான் உன்னோட பிரச்னைன்னா வீட்டோட மாப்பிள்ளையா பார்த்துடலாமா? ஆனா எனக்குத்தான் தலைவலியா இருக்கும்."

"என்ன தலைவலியாம்?"

"ரெண்டு சோம்பேறிகளுக்கும் நானே வடிச்சுக் கொட்டணுமே..." என்று அவர் அகலமாய்க் கை விரிக்க, களுக்கென்று சிரித்தாள் இளவரசி.

"என்ன அம்மாவும், பொண்ணும் ஒரே கொஞ்சல்ஸ்...?" என்று உள்ளே வந்தாள் லாவண்யா.

"ஹேய் லவண்... நிஜமாவே படிக்கத்தான் போனியா? இல்ல ஃபிரெண்ட்ஸ் கூட ஆட்டமா?"



"எல்லோரையும் உன்னை மாதிரியே நினைச்சா எப்படிக்கா? நான் யுனிவர்சிடி கோல்ட் மெடலுக்கு ட்ரை பண்ணிட்டு இருக்கேன்னு அடிக்கடி உனக்கு மறந்து போகுது..." வெடுக்கென்று பதிலளித்தாள் லாவண்யா.

"நான் உன்னை ஒரேயடியா டென்ஷனாக்க விரும்பல இளா... ஆஷாவோட நாத்தனார் இன்னும் மூணு மாசம் இங்கதான் இருக்கப் போறாங்க. நிதானமா யோசிச்சுக் கூட உன் முடிவைச் சொல்லு.

"அந்தக் காலம் மாதிரி இந்தக் காலத்துல கட்டாயக் கல்யாணம் பண்ணி வைக்க முடியாது. உன் வாழ்க்கை உன் கையில். நான் லாவண்யாவுக்குச் சாப்பாடு கொடுத் துட்டு வர்றேன்."

நீண்ட நெடிய பெருமூச்சோடு மீனாட்சி சென்றதும், தொலைக்காட்சியை அணைத்து விட்டுப் படுக்கச் சென் றாள் இளவரசி.

காலையில் எழுந்ததும் அம்மா பழைய பல்லவியைப் பாடிவிடக் கூடாதே என்று எப்போதும் விட சற்று முன்ன தாகவே அலுவலகம் கிளம்பினாள்.

என்றுமில்லாத விநோதமாக அன்று வெகுநேரம் ஆகியும் தருண் வரவில்லை. தினசரி வேலைகள் அந்த அலுவலகத்தில் என்ன இருக்கும் என்று தெரியுமாதலால், தட்டுத் தடுமாறிச் சமாளித்துக் கொண்டிருந்தவளுக்கு, நேரம் கழித்தாவது அவனைக் கண்ட பிறகுதான் உயிர் திரும்பி வந்தது.

இரவு முழுவதும் அவன் தூங்கவே இல்லையோ? முகத்தில் அப்பட்டமான சோர்வு. கண்களில் செவ்வரி ஓட, முகத்தின் களைப்பு நீங்காமல் அவன் அப்படியே சேரில் அமர்ந்தபோது, பார்க்கவே பாவமாக இருந்தது.

"இன்னைக்கு நாகர்கோயிலுக்கு லோடு போக ணுமே... போயிடுச்சான்னு செக் பண்ணிடு. ரொம்ப முக்கியமான போன் கால்ஸ் வந்தால் மட்டும் எனக்கு லிங்க் பண்ணிவிடு. இன்னும் கொஞ்ச நேரத்துல ஆடிட்டரைப் பார்க்கக் கிளம்பிடுவேன். மதியம் வரைக்கும் நீ தனியா ஹேண்டில் பண்ணிக்க முடியுமா?"

சரியென்று தலையாட்டியவள், "அம்மாவுக்கு எப்படியிருக்கு சார்?" என்று தயக்கத்துடன் கேட்க, அவன் கண்களில் சிறு வியப்பு!

"ரேகா சொன்னாளா? இது ஒரு வகையான மூச்சுத் திணறல். அதிகமா டென்ஷன் ஆனாங்கன்னா வரும். நௌ ஷி இஸ் ஆல்ரைட். ரெஸ்ட்ல இருக்காங்க..."

"அம்மாவுக்கு உடம்பு சரியில்லாததால நீங்க ஆபீஸ் வர லேட்டாயிடுச்சோ? உங்களுக்கே உடம்பு சரியில்லாத மாதிரித் தெரியுது."

கவலையோடு கேட்டவளின் முகத்தையே உற்றுப் பார்த்தான். உள்ளத்தைக் கீறிக் கொண்டு செல்லும் பார்வை.

அவன் பதில் சொல்லாமல் அவளையே பார்க்க, உதட்டைக் கடித்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள்.



திரையரங்கில் அவனைப் பார்த்த கொழுப்பில் ரொம்பவும் உரிமை எடுத்துப் பேசி விட்டோமோ?

'அவனுடைய ஆபீஸ்... அவன் லேட்டாக வந்தால் என்ன? எப்படி வந்தால் உனக்கென்ன? உன் வேலையைப் பார் முந்திரிக் கொட்டை...' என்று ஆணையிட்ட மூளைக்கு, 'ஓகே பாஸ்!' என்று சலாமடித்தாள்.

வருகிறேன் என்று சொன்ன நேரத்தையும் தாண்டி மதியம் அவன் வராமல் போகவே, லோடு ஏற்றும் இடத்திற்கு அவளே நேரில் சென்றாள்.

அலுவலகத்தில்தான் பெரும்பாலும் அவளுக்கு வேலை என்பதால், தொழிற்சாலையின் மற்றப் பிரிவு களுக்கு அவள் அதிகமாகச் செல்வதுமில்லை.

பிரபாகரன் எம்.டி.யாக இருந்தபோது நான்கைந்து முறை அவருடன் சென்றது. இன்று மீண்டும் ஒரு ரவுண்ட்ஸ் போனால் நன்றாக இருக்கும் போல் தோன்றியது.

"வாங்கம்மா... குடோன் பக்கமெல்லாம் நீங்க வந்தே மாசக் கணக்கா ஆச்சுங்களே! நல்லா இருக்கீங்களாம்மா? முதலாளி ஐயா வரலீங்களா?"

தலையில் கட்டியிருந்த துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டே அருகில் வந்தார் தங்கராசு.

நாற்பது வயதிருக்கும். நல்ல திடகாத்திரமான உடல். உழைப்பதற்குச் சோம்பேறித்தனப்படாத ஆள் என்று கேள்விப்பட்டிருக்கிறாள்.

"சின்ன முதலாளியைத்தானே சொல்றீங்க...? எங்கேயோ வெளியில் போயிட்டு வரேன்னு காலை யிலேயே புறப்பட்டுப் போனவர்தான். இதுவரைக்கும் வரலே... இன்னைக்கு நாகர்கோயிலுக்குச் சரக்குப் போகுதுன்னு சொல்லிட்டுப் போனாரு.

"சும்மா பார்த்துட்டுப் போலாமேன்னு ரவுண்ட்ஸ் வந்தேன். நீங்க எல்லோரும் நல்லா இருக்கீங்கதானே?"

"சின்னவரு மாதிரி ஆளுங்க இருக்கிற வரைக்கும் எங்களுக்கு என்னம்மா குறை இருக்கப் போகுது? பெரியவரும் நல்ல விதமாத்தான் பழகுவாரு. ஆனா சின்னவரு அவரை விட ஒரு படி உசத்தி."

வியப்பும், குழப்பமும் கலந்து அவரைப் பார்த்தாள். முப்பத்தைந்து பேரை வேலையை விட்டுத் தூக்கியிருக் கிறான். அவன் மேல் கோபப்படாமல் நல்லவன் என்று சொல்வது ஆச்சரியமாக இருந்தது.

'ஹூம்... இவர்களிடமே இதைப் பற்றிக் கேட்க முடியாது. அவனுக்குத் தெரிய வந்தால், தொழிலாளர் களிடம் என்னைப் பற்றி விசாரித்தாயா என்று சண்டைக்கு வருவான்.'

சுற்றிலும் பார்வையை ஓட விட, காரிடாரில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நவீன இயந்திரங்கள் கண்ணில் பட்டன.

"புது மிஷினுங்க வந்து இறங்கியிருக்கும்மா. நாலாளுங்க செய்யற வேலையை ஒத்த மிஷினு



செய்யுமாமே! இனிமேதான் ஃபிட் பண்ணணும்னு சூப்பர் வைசர் சாரு சொல்லிக்கிட்டு இருந்தாரு..." அவள் பார்வை போன திசையறிந்து தங்கராசுவே பதில் சொன்னார்.

அவரோடு பேசிக் கொண்டே தொழிற்சாலையை முழுவதுமாக ஒரு முறை சுற்றி வந்தாள் இளவரசி.

வேலை, இயந்திர கதியில் நடைபெற்றுக் கொண டிருந்தது. இதற்கு முன்பு வந்தபோது, தூணுக்கருகே சோம்பி நின்று அரட்டையடித்துக் கொண்டிருந்த ஒரு சிலர் கூட, இப்போது சுறுசுறுப்பாய் வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தொழிற்சாலைக்குள் தானியங்கி டீ மிஷின் புதி தாகப் பொருத்தப்பட்டிருந்தது.

அவரவருக்குத் தேவையான போது காகிதக் கோப்பையில் பிடித்து அருந்திக் கொள்ளலாம்.

"இலவசமாக் கிடைக்கட்டுமேன்னு சின்னவரு செய்து கொடுத்த ஏற்பாடுங்க. வெச்ச மொதல் நாளு ஓசியில கிடைக்குதேன்னு நம்ம பயபுள்ளைங்க நாலு கப்பு, அஞ்சு கப்புன்னு குடிச்சிப்புட்டானுங்க.

"அன்னைக்கே வயித்தைப் பெரட்டிக்கவும் இப்போ ஒழுங்கா வேளைக்கு ஒரு தரம்ன்னு குடிச்சுப் பழகு றானுங்க."

பேசிக் கொண்டே தங்கராசு அவளிடம் ஒரு தேனீர்க் கோப்பையைத் தர, சிரிப்பை அடக்கிக் கொண்டு வாங்கிக் கொண்டாள்.

"சரி, நீங்க போய் வேலையைப் பாருங்க ராசண்ணே. முதலாளி கேட்டா நாகர்கோயில் லோடு ஏறிக்கிட்டு இருக்குன்னு சொல்லிடவா?"

"சொல்லுங்கம்மா... நான் என் சோலியைப் பார்க்கறேனுங்க..."

அவர் விலகிச் செல்லவும், தேனீரை அருந்திக் கொண்டே அவள் அலுவலக ப்ளாக் நோக்கி மெல்ல நடந்து கொண்டிருந்தாள்.

எந்நேரமும் கணினி, பிரிண்டர், செல்போன், டெலிபோன் என்று அமர்ந்திருந்ததில் மற்ற கட்டடங் களில் புதிதாய் என்ன நடந்திருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமலே போயிருந்திருக்கிறாள். தன்னைத் தானே கடிந்து கொண்டு அடியெடுத்து வைத்தபோது...

"மனிதாபிமான மேடம் இந்தப் பக்கம் எங்க வாக்கிங் போயிட்டு இருக்கீங்க...?"

காது வழியே சென்ற அந்தக் குரலின் குளுமை அடிவயிற்றைத் தொட்டது. திடீரென்று தென்றல் வந்து அவள் முகத்தைத் தீண்டிச் செல்வது போல் என்ன ஒரு பரவசம்...! உள்ளே ஏதோ சிலிர்ப்பாக ஓட, குரல் வந்த திசையில் திரும்பிப் பார்த்தாள்.

முகத்தில் மெல்லிய புன்னகையோடு அவன்தான். கைகளை இலகுவாய் வீசியபடி அவன் ஸ்டைலாக நடந்து வர, அதுவரை அவனைக் காணாத எரிச்சல் நீங்கி, அவள் மனதுக்குள் இதமாய் ஒரு இதம்!



அவனைக் கண்டால் சுகம், காணாவிட்டால் எரிச்சல். ஏன் இந்தப் புதிய தடுமாற்றம் இளவரசி? தியேட்டரில் கூட ஏதோ ஒரு புதிய உணர்வு அடி வயிற்றில் நண்டாய் ஊர்ந்தது அல்லவா?

மனச்சாட்சி கொக்கி கொக்கியாய்க் கேள்வியைப் போட... 'ஷட்-அப்...' என்று அடக்கினாள்.

சத்தமாகச் சொல்லி விட்டாளோ?

"வாட்...?" அதிர்ந்து போய் நின்றான் அவன்.

"ஐயோ... நான் உங்களைச் சொல்லலை சார்..." அவசரமாகத் தலையாட்டி மறுத்தாள்.

"இங்க இருக்கிறதே நாம ரெண்டு பேர்தான். வேற யாரைச் சொன்னதா எடுத்துக்கணும்...?" அவன் குரலில் கோபம் தொனித்தது.

"நான் நடந்து வரும்போது மனசுக்குள்ள ஒருத்தரைத் திட்டிக்கிட்டே வந்தேன். உள்ள இருந்த வார்த்தை வாய் தவறி வெளியே வந்து தொபுகடீர்ன்னு விழுந்துடுச்சு. சத்தியமா நான் உங்களைச் சொல்லலை... உங்களை ஏதாவது சொல்லிட்டு, வேலையில் நீடிக்க முடியுமா?"

பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு பேசினாள்.

அவள் சொன்னதைக் கேட்டுச் சற்றே எக்காள மிட்டுச் சிரித்தவன்... "வேலையில மட்டும்தான் ஸ்லோன்னு நினைச்சேன். இந்த மாதிரிக் கோளாறெல்லாம் இருக்கா? உருப்பட்ட மாதிரிதான்."

எப்போதும் போல அவன் கேலி பேச, எதிர்த்துப் பேச வேண்டும் என்பதையே மறந்து அவன் பளீர்ச் சிரிப்பிலேயே லயித்திருந்தாள். ஒவ்வொரு முறையும் அவன் புன்னகைக்கு முன் அவள் தோற்றுப் போவது போல இருந்தது.

"கண்ணாலேயே அளவெடுத்துட்டு இருக்கே... என்ன விஷயம்?"

புருவம் சுருக்கி அவன் கேட்க, அரசிக்குத் தூக்கி வாரிப் போட்டது.

எங்கோ பார்த்துக் கொண்டு நடந்தவன் இதை எப்படி அறிந்தான்?

ஐயோ... எதையாவது சொல்லிச் சமாளிக்க வேண்டுமே? வழிசல் கேஸ் என்று நினைத்துக் கொள்ளப் போகிறான்.

"நான் உங்களை ஒண்ணு கேட்கலாமா?"

"ஓவர் டைம் பண்ண வைக்கிறியே... சம்பளம் சேர்த்துக் குடடான்னு கேட்கப் போறே. அதுதானே?"

"ச்சே.. அதெல்லாம் இல்ல சார். அந்த முருகேசன் பொய் சொல்றான்னு எப்படிக் கண்டுபிடிச்சீங்க?"

"ஹூப்... இதுதானா! டிரைவர் செழியனோட அக்காவைத்தான் முருகேசன் கல்யாணம் பண்ணி யிருக்காரு. ஏர்போர்ட்ல இருந்து வரும்போதே இங்க இருக்கிற ஊழியர்களைப் பற்றி உனக்குத் தெரிஞ்சதைச் சொல்லிட்டே வான்னு சொன்னேன்.



"முதல் வேலையா தன் அக்கா புருஷனோட யோக்கியதையைச் சொல்லிட்டான். தட்ஸ் இட்."

நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். போட்டு வாங்குவதில் இவன் கில்லாடியோ என்று தோன்றியது.

"இன்னொண்ணு கேட்கலாமா?" என்று அவள் ஆரம்பிக்க, அவள் கேட்ட விதத்தில் சிரித்துக் கொண்டே தலையசைத்தான்.

"நீங்க இத்தனை பேரை வேலையிலிருந்து தூக்கியும் தொழிலாளர்களுக்கு உங்க மேல கோபமே வரலையே...? அதெப்படி? போராட்டம் அது இதுன்னு ஆரம்பிப்பாங்கன்னு நான் நினைச்சேன்..."

"இதைப் பாருடா. அவங்க சும்மா இருந்தாலும் என் காரியதரிசியே எடுத்துக் கொடுப்பா போல இருக்குதே..."

"ஹையோ... நான் அப்படிச் சொல்லலை. அவங்க கோபத்தை அடக்க என்ன மாயமந்திரம் போட்டீங்கன்னு கேட்கறேன். நஷ்டஈடு அந்த மாதிரி ஏதாவது...? இந்தக் கம்பெனியோட சம்பந்தப்பட்ட விஷயம்தானே! நான் தெரிஞ்சிக்கக் கூடாதா?"

"தெரிஞ்சிக்கலாம். முப்பத்தைந்து பேர்ல பத்துப் பேர்வரைக்கும் கொடுத்த நஷ்ட ஈட்டுத் தொகை போதும்னு போயிட்டாங்க. அவங்க எதிர்பார்த்ததை விட தாராள மாகவே அள்ளிக் கொடுத்திருக்கோம்.

"சில பேர் தங்களுக்குப் பதிலா தங்கள் வாரிசு களுக்கு வேலை போட்டுக் கொடுங்கன்னு கேட்டாங்க.

அவங்க கேட்ட மாதிரிக் கொடுத்தாச்சு. மீதி இருக்கிறவங்க கொடுத்த பணத்தை வெச்சு அவங்களாவே சுய தொழில் மாதிரி ஆரம்பிச்சிட்டாங்க. அவங்கவங்க சொந்தத் தொழில்னு வரும்போது அக்கறை தானா வரும்.

“வேலையில இருக்கிற மிச்சத் தொழிலாளர்களுக்கு ஊக்கத் தொகை அதிகமா கொடுக்கிறதா சொல்லி யிருக்கேன். எனக்கு என் கம்பெனி வேலை சுறுசுறுப்பா நடக்கணும். அதே சமயம் என்னால யாரும் கஷ்டப் பட்டதாவும் இருக்கக் கூடாது. கேள்விகள் இன்னும் மிச்சம் இருக்கா மேடம்?” என்று அவன் கிண்டலாய்க் கேட்க...

தியேட்டருக்கு வந்தது எப்படி என்று கேட்க நினைத்தவள்... அலுவலக வேலை தவிர, வேறு எதை யாவது பேசினால் தவறாக எடுத்துக் கொள்வானோ என்று அமைதியாக இருந்து விட்டாள்.

அவள் எதிர்பார்த்ததைப் போலவே அவன் அலுவலக வேலைகளை மட்டுமே பேசிக் கொண்டு வந்தான்.

அவனோடு சேர்ந்து நடப்பது இனம் புரியாத உற்சாகத்தைக் கொடுத்தது.

மனதில் ஒரு துள்ளலோடு அன்று மாலை சீக்கிரமாகவே வீடு திரும்பி விட்டாள் இளவரசி.

“சீக்கிரமே வந்துட்டியா? நல்லதாப் போச்சு. இன்னைக்குப் பிரதோஷம். கோவிலுக்குப் போலாம். வர்றியா இளா?”



ஏற்கெனவே பூக்கூடை எடுத்து வைத்துத் தயாராக இருந்தார் மீனாட்சி.

லாவண்யாவும் அம்மாவோடு கோவிலுக்குச் செல்லத் தயாராகிக் கொண்டாள். தங்க மெடல் வாங்க வேண்டுமே...! இப்போதே நந்தீஸ்வரர் காதில் போட்டு வைத்தால்தானே சிவபெருமானிடம் சிபாரிசு சென்று சேரும்.

“ஆளை விடுங்கம்மா. நீங்க போயிட்டு வாங்க. ஏய்... லவண்... நல்லா ஸ்ட்ராங்கா வேண்டிட்டு வாடி. முடிஞ்சா கொஸ்டின் பேப்பரை அவுட் பண்ணிவிடச் சொல்லி நந்தீஸ்வரர் கிட்டச் சொல்லிட்டு வா.”

“வாய் அடங்குதா பாரு. முதல்ல உன் வாயை அடக்கச் சொல்லி வேண்டிட்டு வரணும்.”

அடுத்து வரும் நாட்களில் அதுதான் நடக்கப் போகிறது என்று தெரியாமல் விளையாட்டாய் மகளின் கன்னத்தில் தட்டிச் சென்றார் மீனாட்சி.

எப்போதும் போல ஒரு குளியலைப் போட்டு விட்டு, புதியதாய் வாங்கிய சாக்லேட் நிற நைட்டியில் கையில் டிபன் பிளேட்டுடன் தொலைக்காட்சியின் முன் அமர்ந்தாள் இளவரசி.

நெஞ்சில் நெஞ்சில் இதோ இதோ
காதல் காதல் பிறந்ததோ!
கொஞ்சும் காற்றில் மயங்கியே
கொஞ்சம் மேலே பறந்ததோ!

மாலை வேளை வேலை காட்டுதோ

என் ஜீலை வானம் ஜுவாலை மூட்டுதோ!

சின்னத் திரையில் ஜெயம் ரவி, ஹன்சிகா இருவரும் டூயட் பாடிக் கொண்டிருக்க, கண்கள் திரையிலிருந்து விலகாமல் உருகிப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஜெயம் ரவியின் உயரம் தருணை ஞாபகப் படுத்தியது.

அவன் முகம் பார்த்துப் பேச வேண்டுமென்றால் சற்றே நிமிர்ந்து பார்த்துத்தான் பேச வேண்டும். நடக்கும் போது அழகாய் வீசி நடக்கும் அந்த நீண்ட கால்கள்.

மனிதாபிமான மேடம் என்று அவளை அழைக்கும் போது குறுகுறுவென்று பார்க்கும் அந்தப் பார்வை.

அந்த நையாண்டிக் குரலில் என்னதான் வசியம் இருக்குமோ?

புன்னகை புரியும்போது அவன் முகத்தின் அழகே தனி. ஆண்மை கலந்த வசீகரப் புன்னகை.

என்னைக் கலைத்துவிட்டு விளையாடேன் என்று நெற்றியில் படியும் தலைமுடி. கட்டுக் குலையாத அவனது அழகான தோற்றம்.

உலுக்கி விட்டது போல நிமிர்ந்தாள் இளவரசி.

என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறோம்? ஏன் அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறோம்? நிமிடத்தில் நெற்றியில் வியர்வை பூத்தது.



டிஃபன் முடிந்து, சாக்கோ டீ கலந்து கொண்டு, மீண்டும் சோபாவில் அமரும்வரை அவன் முகம் மனதின் மூலையில் ஒட்டிக் கொண்டே வர, “டேமிட்... வாட் இஸ் ஹேப்பனிங் டு மீ?” என்று வாய்விட்டே கத்தினாள்.

‘நோ இளா... ஒருத்தரைப் பற்றி அதிகமாக நினைக்க ஆரம்பிச்சா அது எங்கேயோ கொண்டு போய் நிறுத்திடும். அவனைப் பற்றிய நினைவுகளை உதறித் தள்ளு. ஆபீஸ்ல மட்டும்தான் அவன் உனக்குப் பாஸ்.’

மீண்டும் மீண்டும் தனக்குத் தானே எச்சரிக்கை செய்து கொண்டாள். என்ன எச்சரிக்கை செய்து என்ன பலன்?

மனம் என்னும் சண்டிக் குதிரை கடிவாளத்துக்குக் கட்டுப்படவா செய்கிறது?

விமான நிலையத்தில் அவனைப் பார்த்ததிலிருந்து... மாலையில் ‘பை சார்!’ என்று சொன்னதுவரை அத்தனையும் அவள் அனுமதியின்றியே ரீவைண்டில் மனதுக்குள் ஓட, தலையைப் பிடித்துக் கொண்டு கட்டிலில் விழுந்தாள். தவறு செய்கிறோம் என்ற பயத்தில் கண்களில் புதிதாய் நீர் முத்துக்கள்.

பூச்சாண்டியைக் கண்ட குழந்தை போல அவள் கண்களை இறுக மூடிக் கொள்ள... அவனோ விஸ்வரூபமாய் வளர்ந்து அவள் இமைகளை நிறைத்து நின்றான்.

‘தானே புயல்’ தானாய் அவள் மனதை அலைக் கழிக்கத் துவங்கியது.

## 7

நீண்ட நேரம் பிரமை பிடித்தவளைப் போலப் படுத்திருந்தாள் இளவரசி.

நீலாவைச் சொல்லி விட்டு நாமே கிறுக்குத்தனமான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்று உறைக்க வெடுக்கென்று கட்டிலை விட்டு எழுந்தாள்.

முகம் கழுவி, உடை மாற்றிக் கொண்டு அந்த நகரத்திலிருந்த மிகப் பெரிய புத்தகக் கடை நோக்கிப் புறப்பட்டாள்.

இருள் வந்து படியாத வான வீதியில் அந்திநேரச் சூரியனின் ஆரஞ்சுக் கிரணங்கள்.

பெட்ரோல் வாடை கலந்த காற்று முகத்தில் அறைந்து சென்றது.

'மனதைக் கடிவாளமிட்டுப் பழக வேண்டும். சண்டிக் குதிரையாக ஓட விட்டால் குப்புறத் தள்ளிவிடும்.'

கடைக்குச் செல்லும்வரை மந்திரம் ஜெபிப்பது போல மனம் உருப்போட்டது.

புத்தகக் கடையில் மிதமான கூட்டமே இருக்க... அழகாக அடுக்கப்பட்டிருந்த ரேக்குகளைச் சுற்றி வந்தவளுக்கு, ரவீந்தர் சிங் எழுதிய புத்தகமும், சேத்தன் பகத் எழுதிய புத்தகமும் கண்ணில் பட, இரண்டையும் எடுத்து வைத்துப் புரட்டிக் கொண்டிருந்தாள்.

"கிரேட் பீப்பிள் திங்க் அலைக்..."



சிலீரென்று ஐஸ் கட்டியாய் இதயம்வரை பாயும் அதே குரல்.

ஒரு நிமிடம் கண் மூடித் திறந்தாள் இளவரசி. நிச்சயம் இது பிரமையில்லை. அவன்தான்!

இளம் மஞ்சள் நிற முழுக்கை டி-ஷர்ட். அதற்குப் பொருத்தமான சினோஸ்.

எப்போதும் கம்பெனிக்கு அணிந்து வரும் ஃபார்மல் உடையிலேயே அவனைப் பார்த்துப் பழகியவளுக்கு இன்று கண்களுக்கு விருந்தாய்... கருகருவென இருந்த அடர்த்தியான சிகையின் மீது ஏறி நின்ற ஸ்பீடோ சன் கிளாஸ். அவன் உயரத்திற்கு அற்புதமாய்ப் பொருந்தி நின்ற ஆஸ்திரேலியன் லெதர் ஷூஸ்.

தட்டுக்கெட்டுப் போயிருந்த மனம் திருட்டுத்தனமாய் அவனை ரசித்தது.

அவன் மீது வைத்த பார்வையை அகற்ற முடியாமல் அவள் தடுமாற, அவள் கண்களின் அவஸ்தையை அணு அணுவாய் ரசித்தான் தருண்.

'ஒரு அழகான பெண்ணைத் திடீர்னு ஆண்டவன் ஊமையாக்கிட்டானே...!' என்று வேண்டுமென்றே அவன் பரிதாபப்பட, இயற்கையாய் எழுந்த நாணத்தில் அவள் முகம் சிவந்து போனது.

"உங்களை இங்க சந்திப்பேன்னு நினைக்கல சார்! திடீர்னு பார்த்தவுடனே பிரமையோன்னு நினைச்சிட்டேன்." அந்த நேரத்திற்கு எதையோ சொல்லிச் சமாளித்தாள்.

"நல்லாச் சமாளிக்கறே...! உனக்கும் புத்தகம் படிக்கிறது ஹாபியா? ஆஸ்ல இருந்து நான் திரும்பி வர்றதுக்குள்ள காலேஜ் ஃபிரெண்ட்ஸ் எல்லாம் கனடா, லண்டன், பெங்களூர்னு ஆளுக்கு ஒரு பக்கமா செட்டில் ஆயிட்டாங்க. இப்போதைக்குப் புத்தகங்கள்தான் எனக்கு பெஸ்ட் ஃபிரெண்ட்ஸ்."

சகஜமாகப் பேசிக் கொண்டே அவனும் அவள் மீது பார்வைப் பந்தல் விரித்தான்.

செழுமையான அவள் கன்னங்களும், ரோஜா நிற உதடுகளும் மெலிதாகக் கிறக்கத்தை ஏற்படுத்த, அவள் அணிந்திருந்த ஸ்கின்னி ஜீன்ஸ் அவள் உருவத்திற்குக் கன கச்சிதமாய்ப் பொருந்துவதை ரசித்தான்.

மெடாலிக் டாப்ஸ் போன்ற சாக்லேட் நிற உடை அவள் நிறத்தை இன்னும் அதிகப்படுத்திக் காட்டியது. அலுவலகத்தில் எந்நேரமும் சுரிதார்லேயே அவளைப் பார்த்துப் பழகிய கண்களுக்கு இன்று புது விருந்தாய்...!

தொடர்ந்து அவன் மட்டுமே பேசிக் கொண்டிருக்க... அவள் ஊமைச் சிலையென அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவன் புருவங்கள் சற்றே நெரிந்தன.

"ஒண்ணுமே பேச மாட்டேங்கறே! நீ புத்தகம் வாங்குவதை நான் டிஸ்டர்ப் பண்றேனா? கேரி ஆன்."

சொன்ன வேகத்தில் வெடுக்கென்று அவன் இடத்தை விட்டு நகர, 'ஐயோ! அப்படியில்லை...' என்று



சொல்ல வந்த நாக்கு ஃபெவிஸ்டிக் போட்டு ஒட்டிக் கொண்டது.

'ஒவ்வொரு முறை இவனைக் காணும்போதும் வசமிழந்து போகிறாயே... இளா! இவ்வளவுதானா நீ?'

மனம் கெக்கலி கொட்டிச் சிரித்தது.

வழியில் எந்த விபத்திலும் மாட்டிக் கொள்ளாமல் எப்படி வீடு வந்து சேர்ந்தோம் என்று புரியவில்லை.

யாருடைய நினைவுகளில் இருந்து விடுபட வேண்டும் என்று புத்தகக் கடைக்குப் புறப்பட்டுச் சென்றாளோ மனம் முழுக்க அவனே... அவனே...!

'யுவர் ஆனர்!' என்று ஆரம்பித்து மனச்சாட்சியார் வேறு கேள்வி கேட்கத் தொடங்கினார்.

கேள்வி: சித்தி பொண்ணு பிறந்த நாளைக்கே லட்சக் கணக்கா செலவு பண்ணுவன். அவன் ரேஞ்சுக்கு நீயெல்லாம் பக்கத்துல நிக்க முடியுமா?

பதில்: முடியாதுதான். ஆனா பணத்தைப் பார்த்தா மனசு அவன் பின்னாடி போகுது? அந்த அமெரிக்கா மாப்பிள்ளை கிட்ட பணமில்லையா என்ன? திடீர்னு எனக்கு என்னாச்சுன்னு தெரியலையே?

கேள்வி: ஒருவேளை நீலா சொன்ன மாதிரி உன் மனசுக்குள்ள வைரஸ் புகுந்திருக்குமோ! காதல் வைரஸ்.

பதில்: நோ... நோ... ஒரு நாளும் என்கிட்ட அதெல்லாம் நடக்கவே நடக்காது.

"எதுடி நடக்கவே நடக்காது?"

மீனாட்சியின் குரல் சத்தமாக ஒலித்த பிறகு தான் டைனிங் டேபிளில் அமர்ந்திருக்கிறோம் என்ற சுய நினைவே வந்தது.

"மனசுக்குள்ள என்ன ரீல் ஓட்டிக்கிட்டு இருக்கே? கல்யாணம் வேண்டாம்னு சொல்லக் காரணம் தேடிக்கிட்டு இருக்கியா? தட்டுல வெச்சதெல்லாம் அப்படியே இருக்கு. ஒழுங்காச் சாப்பிடு."

திருதிருவென்று விழித்த மகளை அதட்டிச் சாப்பிட வைத்தார்.

அவள் எதையோ நினைத்துச் சொன்னதை மீனாட்சி எதற்கோ எடுத்துக் கொள்ள, 'தப்பித்தோம்...' என்ற ஆசுவாசப் பெருமூச்சோடு தட்டில் இருந்தவற்றை மடமடவென்று காலி செய்தவள், தாய் கலந்து கொடுத்த பூஸ்ட்டையும் கடகடவென்று பருகிவிட்டுக் கட்டிலில் சென்று விழுந்தாள்.

ஸ்படிக மனமாக இருந்தவரை துணைக்கு வந்த நித்ரா தேவி இன்று அவளிடம் டூ விட்டுக் கொள்ள, வைரஸ் தன் வேலையைக் காட்டத் தொடங்கியிருந்தது.

அவள் தூங்காமல் புரண்டு புரண்டு படுத்ததில் கட்டில் ஆட்டம் காணக் கடுப்பானாள் இளையவள்.

"தூங்காம என்னக்கா யோசிக்கறே? அந்த அமெரிக்க மாப்பிள்ளையைப் பற்றின நினைப்பா? சரின்னு சொல்லேன். ஆள் நல்லாத்தான் இருக்கார்."



"நல்லா இருந்தா நீயே கட்டிக்க, போ. காலேஜ் வாழ்க்கை முடிஞ்சிட்டா கட்டில்ல படுத்து யோசனை பண்றதுக்குக் கூட சுதந்திரம் இல்லையா! என்ன கொடுமை சரவணா இது?" என்று இளவரசி சீன் போட...

"முடியலடி மொக்கை. கம்முன்னு படுத்துத் தூங்கு..." என்று மேலும் கடுப்பானாள் அருமைத் தங்கை.

'அவன் முகத்தைப் பார்த்துப் பேசக் கூடாது. அலுவலக வேலை தவிர வேறு எதைப் பற்றியும் அவனிடம் பேசக் கூடாது. முக்கியமாக அவன் சிரிக்கும் போது வசமிழக்கவே கூடாது.'

வீர மங்கையாய் இந்த முப்பெரும் சத்தியப் பிரமாணங்களையும் மனதில் சுமந்து அடுத்த நாள் அலுவலகம் சென்றடைந்தாள் இளவரசி.

அதற்கெல்லாம் அவசியமே இல்லை என்பது போல வந்ததிலிருந்தே அவன் கடுகடுவென்றுதான் இருந்தான். முதல் நாள் அந்த எம்.டி. சீட்டில் அமர்ந்தபோது அவளிடம் காட்டிய அதே அலட்சியம்...! பேசும்போது வெடுக்கென்று வந்து விழுந்தன வார்த்தைகள்.

மருந்துக்குக் கூட அந்த முகத்தில் இளக்கம் இல்லை. மறந்தும் கூட அவன் புன்னகைக்கவில்லை.

புத்தகக் கடையில் அவனிடம் சரியாகப் பேசாதது தான் இந்தப் பாராமுகத்திற்குக் காரணமா? அது ஒரு சாதாரண விஷயம்தானே...! இதற்குப் போய் இப்படிக் கோபித்துக் கொள்வானேன்?

தேவைக்கதிகமாகப் பேசக் கூடாது என்று நினைத்த மனது இப்போது அவன் வார்த்தைச் சாரலை எதிர் நோக்கும் வறண்ட பூமியாய்...!

இருவருக்குமிடையே தென்றலாய் வீசத் தொடங்கி யிருந்த நட்பில் கனத்த திரை விழுந்தது போல அன்று முழுவதும் அசாத்திய மவுனம். அந்த மவுனம் தந்த வலியில் துவண்டு போனாள் இளவரசி.

**அ**ன்று மாலை குழம்பிய குட்டையாய் வீடு வந்து சேர்ந்தபோது வீடே கலகலத்துப் போயிருந்தது.

"பாட்டி..." என்ற கீச்சுக் குரலோடு மீனாட்சியின் தாயாரைக் கட்டிக் கொண்டாள் இளவரசி.

"ஏய்... பார்த்துடி! பாட்டிக்கு வயசாச்சு. இப்படி யெல்லாம் கட்டிக்கிட்டு ரங்கராட்டினம் சுத்தாதே! கீழே விழுந்து வெக்கப் போறாங்க..." - அம்மாவைத் தாங்குவ தற்காக அவசரமாக அருகில் வந்தார் மீனாட்சி.

"என் பேத்தி தள்ளிவிட்டு எனக்கு என்னடி ஆயிடப் போகுது? இளாக்கண்ணு... எப்படிம்மா இருக்கே? வேலைக்குப் போறதெல்லாம் பிடிச்சிருக்கா? இளைச்ச மாதிரி இருக்கியேம்மா? உன் மாமாவும் வந்திருக்கான்டி... வெளியே போயிட்டு வர்றேன்னு போயிருக்கான்." - வாஞ்சையுடன் பேத்தியின் முகத்தைத் தடவினார் ரங்க நாயகி.

"இளைச்சிட்டயான்னு என்னைக் கேட்டாலும் அர்த்தம் இருக்கும்மா! இவளைப் போய்க் கேட்கறீங்க?



வேளா வேளைக்கு நான் சமைச்சு வெக்கறதைக் கொட்டிக்க வேண்டியது. ஆபீஸ் போறேன்னு போக வேண்டியது. மிச்ச நேரத்துல தூங்க வேண்டியது... இல்லேன்னா... ஊர் சுத்த வேண்டியது. இதுக்கே உங்க பேத்தி இளைச்சிட்டாளாம்மா?" - போலியாய் முகத்தை நொடித்துக் கொண்டார் மீனாட்சி.

"அவ அப்படியே இருந்துட்டுப் போகட்டும். அவளுக் கேத்த ராஜா எங்கிருந்தாவது வருவான்டி... இதே மாதிரி அவளை உள்ளங்கையில் வெச்சுத் தாங்கறவனா இருப்பான் பாரு..."

இளவரசிக்குள் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருந்த ராஜகுமாரன் மீண்டும் உயிர்த்தெழ, "நான் டிரஸ் மாத்திட்டு வந்துடறேன் பாட்டி!" என்று தன் அறைக்குச் சென்றாள்.

எப்போதும் போன வேகத்தில் குளித்து விட்டு வருபவள்... அன்றோ மனதின் தீ தணிய வெகு நேரம் ஷவருக்கு அடியில் நிற்க வேண்டியிருந்தது.

நைட்டியில் அவள் ஹாலுக்கு வந்தபோது, மீனாட்சி, லாவண்யா, ரங்கநாயகி, நடேசன் அனைவரும் டைனிங் டேபிளைச் சுற்றி அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தனர்.

பாட்டி கொண்டு வந்த பழங்களும், பட்சணங்களும் டேபிள் முழுக்க நிறைந்திருந்தன.

"நல்லா இருக்கீங்களா மாமா? அத்தை நல்லா இருக்காங்களா? மனோ, கனகா எல்லாம் சவுக்கியமா?"

பேசிக் கொண்டே கை டேபிளில் இருந்த வெல்லப் ப்ணியாரத்தை நோக்கி நீண்டது.

"வாம்மா மருமகளே! நாங்க எல்லோரும் சுகமே. நீ எப்படிடா இருக்கே? நம்ம வீட்டு மருதாணிச் செடி நீ எப்ப வருவேன்னு கேட்குது.

"பூவரசி அம்மன் கோவில் திருவிழா இருக்கே. நீ, அம்மா, லாவண்யா எல்லோரும் ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி திருவிழாவுக்கு வந்தது. இந்த வருஷமாவது கையோட கூட்டிட்டுப் போலாமேன்னு கிளம்பி வந்தோம். என்னக்கா... ஊருக்குப் போக எல்லாம் எடுத்து வைக்க வேண்டியதுதானே!"

"நான் மட்டும் கிளம்பி என்ன செய்யறதாம்? அவ ஆபீஸுக்கு லீவ் போட்டுட்டு வரணுமே, நடேசு! இவ காலேஜுக்கு என்ன சொல்லப் போறாளோ? எனக்கும் நம்ம ஊர்ப் பக்கம் வரணும்னு ஆசையாத்தான் இருக்கு."

"நீங்க ரெண்டு பேரும் என்னம்மா சொல்றீங்க? அம்மா பாவம்தானே! அப்பாவும் வெளிநாடே கதின்னு கிடக்கிற ஆளு. தாய் வீட்டு ஜனங்கன்னு நாலு பேரைப் பார்த்தாத்தானே அக்காளுக்கும் திருப்தியா இருக்கும்.

"வெள்ளிக்கிழமை உற்சவம். சனிக்கிழமை தேர் வடம் புடிச்சு இழுப்பாங்க. ஞாயிறு மறுபடியும் நிலைக்கு வந்து சேர்ந்துடும். எப்படிப் பார்த்தாலும் ரெண்டு நாள் கணக்குத்தான் லீவு கேட்க வேண்டியிருக்கும்."



ஊருக்குச் செல்வது என்றதும் லாவண்யாவிட மிருந்து உடனே சம்மதம் கிடைத்தது. இடம் மாறிச் சென்றால் புதிதாய்த் தனக்குப் பிடித்திருக்கும் கிறுக்குத் தெளியும் என்றுதான் இளவரசிக்கும் தோன்றியது.

வேலையில் சேர்ந்ததிலிருந்து இதுவரை விடுமுறை எடுக்கவில்லை. இரண்டு நாள் விடுமுறையில் ஒன்றும் குறைந்துவிடப் போவதில்லை.

நாளை அவனிடம் இதைப் பற்றிப் பேசிவிட வேண்டும் என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டாள்.

**ம**றுநாளும் அவனுடைய சுபாவம் பழைய விதமாகவே தொடர... மீண்டும் அவன் முகத்தில் புன்னகையைப் பார்க்க மாட்டோமா என்று அரசிக்கு அலுப்பாக இருந்தது.

அன்று உணவு நேரத்தின்போது இரண்டு நாள் விடுமுறை வேண்டும் என்று கேட்டு வாய் திறந்தாள்.

"எதுக்கு?" அவள் முகத்தைப் பார்க்காமலே ஒற்றை வார்த்தையாய்க் கேள்வி.

"ஊர்ல திருவிழா சார்! திருவிழாவுக்குப் போய் முழுசா ரெண்டு வருஷம் ஆச்சு. இங்க வேலையில சேர்ந்ததுல இருந்து லீவு எடுத்ததில்லை. இதுதான் முதல் முறையா கேட்கிறேன்."

உனக்கு மட்டும்தான் வீம்பா என்பது போல, அவள் குரலிலும் சற்று விரைப்பு ஏறத்தான் செய்தது.

ஒரு நிமிடம் அவன் எதுவும் பேசாமல் கணினியை வெறித்துக் கொண்டிருக்க... அவளும் எங்கோ பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றாள்.

"சரி போ. ரெண்டு நாள்தானே! நான் சமாளிச்சுக்கறேன். திங்கட்கிழமை வந்துடு. உன் சிஸ்டம் பாஸ்வேர்ட் மட்டும் சொல்லிட்டுப் போ. ஃபைல் ஏதேனும் தேவைப்பட்டா நானே பார்த்துக்கறேன்."

முகம் பார்க்காமலே அவன் அனுப்பி வைக்க... கொஞ்சம் சிரித்துக் கொண்டே சொன்னால்தான் என்னவாம் என்று முகத்தைச் சுருக்கிக் கொண்டு வெளியே வந்தாள் இளவரசி.

## 8

**கா**ர் ஜன்னலின் வழியே காற்று முகத்தில் அறைய, இளவரசியும், லாவண்யாவும் சாலையின் இருபுறமும் வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தார்கள். பச்சையும், மஞ்சளும் கலந்த பாய் விரிப்பாய்ப் பூமித்தாய் கண்ணுக்குக் குளிர்ச்சியாகக் காட்சியளித்தாள்.

ஊருக்குச் செல்லும் வழியெல்லாம் செண்டுப் பூத் தோட்டங்கள்.

"இன்னமும் நம்ம ஊர்ல பூவெல்லாம் நல்லா குண்டு குண்டா விளையுதா மாமா?"

"பழைய மாதிரி இல்லை அரசி! மழை இல்லை. பாசனத்துக்குத் தண்ணிப் பற்றாக்குறை. பூப்பறிக்க



ஆளுங்க கிடைக்கிறதில்ல. தப்பித் தவறிக் கிடைச்சாலும் பறிப்புக் கூலி சேர்த்துக் கொடுன்னு கேட்கிறாங்க. எல்லாம் மில்லு வேலை, அது இதுன்னு போகப் பழகிட்டாங்க.

"பொதுவாவே விவசாயமெல்லாம் பட்டுப் போயித் தான் கிடக்குது. போற காலத்துல அரை கிலோ தங்கத்தை அள்ளிக் கொடுத்தாலும் திங்கறதுக்குக் குண்டுமணி அரிசி கிடைக்குமான்னு தெரியலே. குடிக்கத் தண்ணி கிடைக்குமான்னு தெரியலே.

"போன வாரம் நம்ம ஊரு ஜனங்க குடிதண்ணி கேட்டுச் சாலை மறியல்ல இறங்கினாங்க. என்ன செய்து என்ன புண்ணியம்?

"பத்து நாளைக்கு ஒரு தரம்தான் குடிக்கிற தண்ணி முனிசிபாலிட்டில இருந்து கிடைக்குது. அண்டா அண்டாவா ரொப்பி வெச்சிக்கறோம். இப்ப திருவிழா காலத்துனால ஒரு நாள் விட்டு ஒரு நாள் திறந்து விடறான்."

"உண்மைதான் மாமா! காசு காசுன்னு எல்லாம் காசைத்தான் சேர்த்து வைக்கிறோம். இயற்கையைப் பாதுகாக்காம போனா எத்தனை கோடி கையில இருந்தாலும் ஒரு புண்ணியமும் இல்லை.

"வெய்யில் காலம் வந்துட்டா கேன் வாட்டர் வாங்கியே ஆகணும்னு கட்டாயம் வந்துடுச்சு. அது நிஜமாவே சுத்திகரிச்சதுதானா? எப்படிச் சுத்தம் பண்ணானோன்னு பயந்துட்டே குடிக்க வேண்டியதா இருக்கு.

காத்து மட்டும்தான் காசு போட்டு வாங்கற நிலைமை வரல. இன்னும் கொஞ்ச நாள் போனா அதுவும் வந்துடும். இதெல்லாம் எங்க போய் முடியப் போகுதோ?"

"அதுவும் ஆக்சிஜன் பார்லர்ஸ்னு இப்ப நடத்த ஆரம்பிச்சிட்டாங்களே... நிறைய மெட்ரோஸ்ல ஃப்ரெஷ் ஏர் பார்லர்ஸ் திறந்தாச்சு." இடையில் புகுந்து பேசினாள் லாவண்யா.

"தண்ணி மட்டும் என்ன? அங்க வடக்குப் பக்கம் யாத்திரை போனவங்களை வெள்ளம் அடிச்சிட்டுப் போய்க் கும்பல் கும்பலா சாவடிக்குது. இங்க ஆறு, கால்வாய் எல்லாம் பசங்க கிரிக்கெட் விளையாடற இடமா மாறிக் கிட்டு இருக்கு..."

மாமனும் மருமகள்களும் பேசிக் கொண்டே வர, மீனாட்சி தான் பிறந்து வளர்ந்து ஓடி விளையாடிய இடங்களை யெல்லாம் அசை போட்டுக் கொண்டே வந்தார்.

ஐந்தாவது வரை பள்ளிக்குப் போகும்போது, குதிரை வண்டியில் போனது... அதன் பிறகு மோட்டார் பைக்கில் அப்பாவுடன் பெருமையாய் அமர்ந்து சென்றது... பத்தாவது தேர்வு மதிப்பெண் வந்தவுடன் வளர்ந்த பெண் என்றும் பார்க்காமல் பெற்றவர்கள் அவளைக் குலதெய்வத்துக்கு மொட்டை போட வைத்தது...

முடி வளரும்வரை வெளியே தலை காட்ட மாட்டேன் என்று மீனாட்சி பிடிவாதம் பிடித்தது... பதினோராம் வகுப்பு



போவதற்குள் கூந்தல் வளர வேண்டும் என்று தேங்காய் எண்ணெயைத் தடவிக் கொண்டு உர்ரென்று உட்கார்ந் திருந்தது...

'வளர்ந்த புள்ளைக்கு யாராவது மொட்டை போடுவாங்களா?' என்று அக்கம்பக்கத்தவர்கள் தன் பெற்றோரைத் திட்டித் தீர்த்தது... என்று வரிசையாக நினைவுக்கு வர, பழைய நினைவுகளின் ஆனந்தத்தில் அமிழ்ந்து போயிருந்தாள்.

சுந்தரத்தோடு தனக்குத் திருமணம் நடந்த நாட்கள் நினைவில் வர, இப்போது அவருக்கே திருமண வயதில் குதிர் குதிராய் இரண்டு பெண்கள்.

காலம்தான் கண் இமைக்கும் நேரத்திற்குள் கடந்து சென்று விட்டது.

ரீவைண்ட் பட்டனைப் போல வாழ்க்கையில் பின்னோக்கிச் செல்லக் கூடிய நாட்கள் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று பெருமூச்சோடு நினைத்தபோதே, வீட்டு வாசலில் டாக்சி நின்றது.

"பார்த்து நிதானமா இறங்குங்கம்மா...!" தன் தாயாரைக் கைப்பிடித்து டாக்சியிலிருந்து மெல்ல இறக்கி விட்டார் நடேசன்.

"வாங்க நாத்தனாரே...! வாம்மா அரசி...! வாம்மா லாவண்யா...!" என்று வரவேற்றார் நடேசனின் மனைவி சிவகாமி.

"சவுக்கியமா இருக்கியா சிவகாமி... மனோ, கனகா எல்லோரும் சவுக்கியம்தானே?" - தம்பியின் மனைவியை நலம் விசாரித்துக் கொண்டே உள்ளே சென்றார் மீனாட்சி.

வாசலில் நிழல் பரப்பி நின்ற சிறுநெல்லிக்காய் மரம். கொடிக்காலைச் சுற்றியிருந்த ஜாதிமல்லி. அன்று மாலை மலரப் போகும் மொட்டுகள் கொத்துக் கொத்தாய்...!

அதன் அருகே எப்போதும் அரசிக்கு மிகவும் பிடித்த மருதாணிச் செடி. அதனைத் தொடர்ந்து வரிசையாய் ஆரஞ்சு நிற மலர்களைத் தாங்கிய செண்டுப் பூச் செடிகள். இது போக, பால்கனியையும், மொட்டை மாடி யையும் அலங்கரித்த வண்ண ரோஜாத் தொட்டிகள்.

சிவகாமிக்கு வீட்டுத் தோட்டத்தைப் பராமரிப்பது என்றால் கொள்ளைப் பிரியம். வாசலில் மலர்ச் செடிகளை நட்டு வைத்தவர், கொல்லைப் பக்கம் தண்டுக் கீரை, மணத்தக்காளி, சுண்டைக்காய்ச் செடி, தக்காளிச் செடி, கறிவேப்பிலை மரம் என்று சமையலுக்கு உதவும் வகையில் கிச்சன் கார்டன் உருவாக்கி வைத்திருந்தார்.

"அத்தைக்கு இன்னும் தோட்டத்து மேல இருக்கிற ஆசையெல்லாம் குறையல மாமா! எவ்வளவு அழகாப் பராமரிக்கிறாங்க!"

மலர்களின் சிருங்காரத்தை ரசித்தவளாய் அரசி சொன்னதைப் புன்னகையோடு ஏற்றுக் கொண்டார் நடேசன்.



"எங்க மம்மி இஸ் தி மோஸ்ட் டைனமிக் லேடி ஆன் எர்த். எப்படி நல்லா இல்லாமப் போகும்?" - பின்னால் மனோவின் குரல்.

"டேய்... எங்கடா ஊர் சுத்திட்டு வர்றே?" என்று புன்னகையோடு தன் அத்தை மகனுக்குக் கை கொடுத் தாள் இளவரசி.

அவளை விடச் சற்றே இளையவன். முதுகலை இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கிறான்.

லாவண்யா அவனைப் பார்த்துச் சிநேகமாய்ப் புன்னகைத்து விட்டு உள்ளே சென்று விட்டாள்.

"ஊருக்குள்ள திருவிழாவாச்சே பொம்மக்கா! இரண்டு நாளா ஐயா காலேஜ் கட். நீ எப்படி இருக்கே?"

"ஏய்... பொம்மக்கான்னு கூப்பிடாதேன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்... ஒழுங்கா அரசின்னு கூப்பிடு...!" - கண்களை உருட்டி மிரட்டினாள்.

"அதெப்படி? எங்களுக்கு நீ எப்பவுமே பொம்மக்கா தான். பொம்மக்கா... பொம்மக்கா..." என்று வேண்டு மென்றே நாலைந்து முறை அவளைக் கேலி செய்து விட்டு மனோ உள்ளே ஓட...

அவனைத் துரத்திக் கொண்டே ஓடினாள் அரசி.

"ஏய்... பார்த்துடி. ஏழு கழுதை வயசாச்சு. இன்னும் ஓடிப் பிடிச்சு விளையாடிட்டு இருக்கே!"

மீனாட்சியின் அதட்டல் அங்கே எடுபடவில்லை.

மனோவின் சட்டைக் காலரை இழுத்துப் பிடித்து அவன் மண்டையில் 'ணங்'கென்று குட்டிய பிறகுதான் அவளுக்கு நிம்மதியானது.

"என்னடி மருமகளே... என் பையன் மண்டையில இப்படி ஓங்கி அடிக்கிறியே?" - கிண்ணத்தில் பால் பணியாரத்தோடு அருகில் வந்தார் சிவகாமி.

"அப்படிக் கேளுங்கம்மா! எனக்குச் சப்போர்ட் எப்படி?" என்று கேட்டுப் பெருமையாய்க் காலரை நிமிர்த்திக் கொண்டான் மனோ.

"ஓங்கி அடிச்சா அவன் தலையில இருக்கிற களிமண் வெளியே வந்துடாது?"

அதே வேகத்தில் மகனை அவர் வாரி விட்டுச் செல்ல... இளவரசிக்கும், லாவண்யாவுக்கும் புரையேறும் அளவுக்குச் சிரிப்பு மூண்டது.

"இப்பதான் உங்களை டைனமிக் லேடின்னு பெருசா பீத்திக்கிட்டேன். எனக்கே ஆப்படிக்கறிங்களே மம்மி. அழகான பெண்களைக் கண்டா ஆண்கள்தான் மதி மயங்கிப் போவாங்கன்னு சொல்வாங்க. நீங்களுமா மம்மி!"

"சரிடா... என்னவோ வாய் தவறி உண்மையெல்லாம் வெளியே வந்துடுச்சு. விடுவியா!" என்று சிவகாமி மீண்டும் கேலி செய்தார்.



"அப்பா... இதெல்லாம் தட்டிக் கேட்கிறதே இல்லையா?" என்று தந்தையிடம் உதவி கேட்டு நின்றான் தனயன்.

"உன் அம்மா என்னைக்காவது ஒரு நாள்தான் உண்மையைப் பேசுவா மகனே...!" என்று நடேசன் சேம் சைட் கோல் அடிக்கவும்...

தலையில் கை வைத்து அமர்ந்து கொண்டான் மனோ.

"விடு மனோ! அத்தையும் மாமாவும் சொந்தப் பிள்ளையாச்சேன்னு விட்டு வெச்சாலும் நான் இங்க இருக்கிற வரைக்கும் உன்னை ஓட்டத்தான் போறேன். நீதான் எதையும் தாங்கும் சிங்கக் குட்டியாச்சே!"

அவித்து உரித்த சோளத்தைக் கிண்ணத்தில் போட்டு அவனிடம் கொடுத்தாள் இளவரசி.

"ஓட்டு... ஓட்டு. என்னைய வம்பிழுக்க நீ வந்திருக்கே. உன்னை வம்பிழுக்க ஒருத்தன் வராமலா போயிடுவான்."

வம்பிழுப்பவன்...!

இளவரசிக்குத் திடீரென்று தருணின் நினைவு மனதை அலைக்கழித்தது. ஸ்லோ, மரமண்டை, மிஸ் மனிதாபிமானம் என்றெல்லாம் அவன் கேலி செய்தது இனிய நினைவுகளாய்...!

எந்த முகத்தை மறக்க வேண்டும் என்று நினைத்தாளோ, அந்த முகம் மீண்டும் நெஞ்சில் மலர்ந்து, இனம்

புரியாத சுகமாக மாற, மெதுவாக எழுந்து கொல்லைப் புறம் சென்றாள்.

அங்கிருந்த பப்பாளி மரத்தைப் பிடித்துக் கொண்டு அவன் நினைவுகளில் ஆழ்ந்தவள் நீண்ட நேரமாகியும் உள்ளே வராததால் மீனாட்சி அவளைத் தேடிக் கொண்டு வந்தார்.

"இங்க என்னடி பண்றே? பாட்டி உன்னைக் கூப்பிடறாங்க பாரு..." – தாயின் குரலைக் கேட்டு உள்ளே செல்லத் திரும்பியவளை மீண்டும் அவள் குரலே தடுத்தது.

"முகமெல்லாம் ஒரு மாதிரியா இருக்கே இளா! உடம்புக்கு எதுவும் பண்ணுதாம்மா?"

அவள் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார்.

உள்ளத்தில் நடக்கும் விபரீதமான போராட்டங் களைத் தன் முகமே காட்டிக் கொடுக்கிறதோ என்று இளவரசிக்குப் பயமாக இருந்தது.

"லேசாத் தலைவலி. பாட்டி கையால சுக்குக் காபி சாப்பிட்டா சரியாப் போயிடும்."

காதல் வைரஸ் பொய் சொல்லும் கலையை நன்றாகவே கற்றுக் கொடுத்தது.

"இளாம்மா... இங்க வா. உனக்காகக் கழுத்துச் சங்கிலி, அட்டிகை எல்லாம் வாங்கி வெச்சிருக்கேன் பாரு. போட்டுப் பாருடா செல்லம்!" – பாட்டி கொடுத்த நகைகளை அலுப்போடு பார்த்தாள்.



"இன்னும் எவ்வளவு நகைதான் சேர்த்து வைக்கிறது பாட்டி? ஏற்கெனவே அப்பா அனுப்புற பணமெல்லாம் தங்க பிஸ்கட்டா மாறி பேங்க் லாக்கர்ல தூங்குது. நீங்களுமா!"

"பொம்பளப் புள்ளைங்களுக்கு வேற என்னம்மா சேர்த்து வைக்க முடியும்? டெபாசிட்டா போட்டு வைக்க லாம்னா நாம எதிர்பார்க்கிற அளவுக்கு வட்டி வர்றதில்ல. வட்டிக்கு ஆசைப்பட்டு வெளிய ஃபைனான்ஸ்ல போட்டா முதலுக்கே மோசங்கற நிலைமையா இருக்கு.

"பாக்கு மரம், தேக்கு மரம், ஈமு கோழின்னு எல்லாம் சுருட்டிட்டுப் போறவனாவே இருக்கான். தங்கமா இருந்தாலாவது விலையேறும்போது அதோட மதிப்பாவது கூடும்."

சிவகாமி அந்தப் பெண்களுக்காகத் தான் வாங்கி வைத்திருந்த புதிய சுரிதார் ரகங்களைக் கொண்டு வந்து கொடுத்தார்.

"சூப்பர் மம்மி! சமுதாயத்தில நடக்கறது எல்லாம் ஃபிங்கர் டிப்ஸ்ல வெச்சிருக்கீங்க. ஆனா தங்கமா வாங்கி வெச்சாலும் திருட்டுப் பயம் அதிகமா இருக்கே. அதுக்கு என்ன சொல்வீங்க?"

"அதுவும் சரிதான். பேப்பரைக் கையில எடுத்தாலே இன்னைக்கு எந்த வீட்டுப் பூட்டை எவன் உடைச்சாங் கறதுதான் நியூஸா இருக்கு."

இளவரசிக்குக் கொடுத்தது போலவே லாவண்யாவுக்கும் ரங்கநாயகி நகைகளைப் பரிசாய்க் கொடுத்திருக்க... உடனே அதை அணிந்து கொண்டவள் ஆளுயரக் கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

சுவாரசியமாக அரட்டை அடித்துக் கொண்டிருந்த நேரத்தில் கழுத்தில் தொங்க விட்டிருந்த செல்போன் இளவரசியைப் பேசச் சொல்லி அழைத்தது.

எம்.டி. காலிங் என்று திரையில் ஒளிர்ந்ததும், இதயத்தில் ஒரு பனிச் சாரல்.

"பேசிட்டு வந்து போட்டுப் பார்க்கறேன் பாட்டி..." என்று அவசரமாய் அறையை விட்டு வெளியேறினாள். முன்பக்கம் தோட்டத்திற்கு விரைந்தவள், "ஹலோ சார்!" என்று குரல் கொடுக்க...

"ஆபீஸை அம்போன்னு விட்டுட்டு ஊருக்குப் போயாச்சு. ம்ம்..." என்றான் கணீரென்ற குரலில் தருண்.

அந்தக் குரலைக் கேட்டதும் ஜில்லென்று அவளுக்குள் ஊற்றெடுத்தது.

அடிவயிற்றில் ஆர்ப்பரித்து எழுந்த அலைகள். அடங்கு மனமே அடங்கு என்று உத்தரவிட்டுப் பேசினாள் இளவரசி.

"ரெண்டு நாள்ல வந்திடுவேன் சார்! முக்கியமான விஷயம் இல்லாம நீங்க போன் பண்ண மாட்டீங்க?"



"நேரா விஷயத்துக்கு வாடா. நேரத்தை வீணடிக்காதேன்னு சொல்றே... ரைட். இன்கம் டேக்ஸ் ஃபைல் பாஸ்வேர்ட் மட்டும் சொல்லிடுங்க மேடம்... நான் அதுக்குப் பிறகு டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்."

தலையில் அடித்துக் கொண்டாள் இளவரசி.

'ஐயோ அறிவே...! இன்று முழுக்க நீ பேசினாலும் நான் கேட்டுக் கொண்டே இருப்பேன். கொஞ்சம் கொஞ்சமாக என் கட்டுப்பாடுகளை இழந்தல்லவா அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இது சரியா, தவறா என்றுதான் புரியவில்லை.'

"என்னம்மா... லைன்ல இருக்கிறியா இல்லையா?"

மீண்டும் அவன் குரல் அவள் கற்பனைக் குதிரையைத் தட்டி நிறுத்த... அவன் கேட்ட தகவலைக் கொடுத்த வேகத்தில் அந்தப் பக்கம் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

அவசரக் குடுக்கை. இன்னும் கொஞ்ச நேரம் பேசினால்தான் என்னவாம்? ஏங்கிய நெஞ்சம் வாடிப் போக, ரங்கநாயகியின் குரல் கேட்டு உள்ளே சென்றாள்.

பாட்டியின் ஆசைக்காக நகைகளை அணிந்து அழகு பார்த்தவள் மீண்டும் அதைக் கழற்றி வைக்க... "இன்னைக்கு வெள்ளிக் கிழமையாச்சே. கொஞ்ச நேரம் போட்டிருந்தாதான் என்னவாம்? லாவண்யா போட்டிருக்கா பாரு..." என்று ஆதங்கப்பட்டார்.

"சாயந்தரம் கோவிலுக்குப் போகும்போது போட்டுக் கறேன் பாட்டி. அதுகூட உங்க ஆசைக்காகத்தான்..." என்று சோர்ந்த முகத்தோடு உள்ளே சென்றவளை வினாவோடு பார்த்தார் ரங்கநாயகி.

"மீனா... இளவரசிக்கு என்னம்மா? நல்லாப் பேசிட்டு இருக்கா. திடீர்த் திடீர்னு சோர்ந்த மாதிரித் தெரியுறா! உன் வீட்ல இருந்தபோதே நான் கவனிச்சேன்."

"கொஞ்ச நாளாவே அப்படித்தான் இருக்கா. அமெரிக்காவுல இருந்து ஒரு நல்ல வரன் வந்திருக்கு. அதைப் பற்றிப் பேச ஆரம்பிச்சதுல இருந்து இப்படித்தான் ஏதோ யோசனையாவே இருக்கா. இப்பவே கல்யாணம் பண்ணிக்கணுமா... என்னை இந்த வீட்ல இருந்து துரத்தப் பார்க்கறீங்களான்னு கண்ணுல தண்ணி வெக்கறா.

"அவ அப்பா கிட்ட சொன்னேன். 'அவளை அவ போக்குல விடு. அவளா ஒப்புதல் சொல்லட்டும்,'னு ஒரேயடியா அடிச்சுப் பேசறாரு. நான் என்னதான் பண்ணுவேன்? நீங்களும், சிவகாமியும் சொல்லிப் பாருங்க. கேட்டா கேட்கட்டும். சீக்கிரமா ஒரு நல்லது நடந்தா சரி."

தாயார் கொடுத்த நகைகளையும், சிவகாமி பரிசாகக் கொடுத்த உடைகளையும் பெட்டியில் அடுக்கிக் கொண்டே புலம்பிக் கொண்டிருந்தார் மீனாட்சி.

"அவகிட்ட பேசறதுக்கு முன்னாடி சாமி கிட்ட பூப் போட்டுப் பார்ப்போம். ஆண்டவன் கிருபை இருந்தா எல்லாம் தானாவே நடக்கப் போகுது."



மகளைச் சமாதானப்படுத்திச் சாப்பிட அழைத்துச் சென்றார் ரங்கநாயகி.

"மாம்பழக் குழம்பு சூப்பர் அத்தை!"

சப்பணங்கால் இட்டு அமர்ந்து வக்கணையாகச் சப்புக் கொட்டிக் கொண்டிருந்தாள் இளவரசி. வெங்காயம் சேர்த்த வெண்டைக்காய் வதக்கலும், பருப்புச் சேர்த்த பீட்ரூட் பொரியலும், வாழைக்காய்ப் புளி ரோஸ்ட்டும் வழுக்கிக் கொண்டு உள்ளே சென்றன.

"உனக்காகக் காலையில ஆறு மணிக்கே எழுந்து மார்க்கெட்டுக்குப் போனேன் இளா! அரசிக்கு அது பிடிக்கும், இது பிடிக்கும்னு ஒரே அலம்பல்தான் போ. வர்ற வழியில நான்தான் காய்கறி விக்கறவனு நினைச்சு நாலு பேர் என்கிட்டயே காய் வாங்குனாங் கன்னா பார்த்துக்கோயேன்." - வெகுவாகச் சலித்துக் கொண்டான் மனோ.

"அடடே... ஐயா, இன்னைக்குத்தான் சூரிய உதயம்னா என்னன்னே பார்த்திருக்காரு. இதுல ரொம்பவும் வெட்டி முறிச்ச மாதிரி அலட்டல்தான். எட்டு மணிக்கு முன்னாடி என்னைக்குடா எழுந்திருக்கிறே?" கரண்டியால் லொட்டென்று அவன் தோளில் செல்லமாய்த் தட்டினார் சிவகாமி.

"விளையாட்டெல்லாம் இருக்கட்டும். அவங்க ரெண்டு பேரும் சாப்பிட்டதும் நம்ம தென்னந்தோப்பு பக்கமா சுத்திக் காமிடா மனோ. நாளைக்கும் தேர்

வடம் பிடிக்கப் போறதுன்னு நேரம் சரியா இருக்கும். ஞாயித்துக்கிழமை பக்கத்துல இருக்கிற அணைக்கட்டுக்குப் போயிட்டு வருவோம்."

நடேசன் உத்தரவுக்குச் சரியென்று தலையசைத்தான் மனோ.

சிலுசிலுவென்று காற்று முகத்தில் அறைய... அவனோடு அந்த ஒற்றையடிப் பாதையில் இருவரும் நடந்து கொண்டிருந்தனர். தென்னங்கீற்றின் ஓலைகள் காற்றின் அசைவுக்குச் சரசரத்தன. பறவைகளின் கீச்சுக் குரல். மரங்களுக்கு இடையே கண்ணாமூச்சி விளையாடிய சூரியக் கதிர்கள்.

"கனகா எத்தனை மணிக்கு ஸ்கூல்ல இருந்து வருவா, மனோ அத்தான்?"

நெற்றியின் குறுக்கே கை வைத்து வானத்தை அண்ணாந்து பார்த்தான் மனோ.

"டேய்... அவ என்ன கேக்கறா... நீ என்ன பண்ணிட்டு இருக்கே?" அவன் முதுகில் ஓங்கி வைத்தாள் இளவரசி.

"வந்ததுல இருந்து என்கிட்ட வாயே திறக்காதவ திடீர்னு பேசினாளே! மழை ஏதும் கொட்டப் போகுதோன்னு பார்த்தேன்."

"அவ சுபாவமே அதுதான்னு தெரியாதா! எங்க வீட்லயே எப்பவும் படிப்பு படிப்புன்னு படிப்ஸ்லதான் இருப்பா. ஒழுங்கா அவ கேட்டதுக்குப் பதில் சொல்லுடா."



"கனகா ப்ளஸ் டூ படிக்கிறாளே, லாவண்யா! இஷ்டமிருந்தா சீக்கிரம் விடுவாங்க. இல்லேன்னா ஸ்பெஷல் கிளாஸ் போட்டுத் தாளிப்பாங்க. எதுக்கும் இருக்கட்டும்னு அம்மா ரெண்டு டிஃபன் பாக்ஸ் கொடுத்து விட்டுடுவாங்க. சில சமயம் சண்டே கூட ஸ்பெஷல் கிளாஸ் போட்டு உயிரெடுப்பாங்க."

"ஆமாம்டா! சென்டம் ரிசல்ட் வரணும்னு இவங்க ஸ்டூடண்ட்ஸைப் படுத்தற பாடு ரொம்ப அதிகமாத்தான் இருக்கு. எல்லா ஊர்லயும் இப்போ இதுதான் நடக்குது. கேள்வி கேட்க ஆளில்லை."

அன்று மாலைவரை தோப்பில் அமர்ந்து அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். அவளுடைய வேலையைப் பற்றி அவன் விசாரித்துத் தெரிந்து கொண்டான்.

அவனுடைய எதிர்காலக் கனவுகளைப் பற்றி அவளும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

இடையே ஒரு முறை குட்டை மரத்திலிருந்த இளநீர்க் காயை அவனே பறித்துச் சீவியும் கொடுத்தான். நடக்கும் உரையாடலில் முடிந்தவரை மௌனமாய்த் தன்னை ஆழ்த்திக் கொண்டிருந்தாள் லாவண்யா.

"வந்ததுல இருந்து படிப்பு, வேலைன்னே பேசிட்டு இருக்கோம். உன்னோட டும் டும் எப்போன்னு பாட்டி ஆர்வமா காத்துக்கிட்டு இருக்காங்களே! நான் இருக்கும் போதே அவ கல்யாணத்தைப் பார்த்துடணும்னு மாசத்துக்கு நாலு தடவை புலம்புவாங்க."

'எங்கு சென்றாலும் திருமணத்தைப் பற்றிய பேச்சுதானா?' சலிப்புடன் மெல்லக் கண்களை மூடிக் கொண்டு அருகில் இருந்த மரத்தில் சாய்ந்து கொண்டாள் இளவரசி.

'முடிந்தால் என்னைப் பற்றி நினைக்காமல் இரேன்...' என்று பிடிவாதமாய் அவள் இமைகளுக்குள் வந்து சிரித்தான் தருண். உடலின் மயிர்க்கால்கள் உயிர் பெற்று அடங்கின.

'ஐயோ... கடவுளே! இது என்ன அவஸ்தை!'

அவள் மனதுக்குள் அவன் கவிதையாய் வழிய... இளவரசிக்கோ இம்சையாக இருந்தது. அவனை மறக்க வேண்டும் என்று நினைக்க நினைக்க... எண்ணங்கள் இன்னும் வலுப்பெறுகின்றனவே!

தருணைப் பற்றிய நினைவுத் தீண்டலில் தேகம் சிலிர்த்துக் கொள்ளத் தலையை லேசாக உலுக்கிக் கொண்டாள்.

"இளா... நல்லாப் பேசிட்டு இருந்தே... திடீர்னு என்னாச்சு? கல்யாணத்தைப் பற்றிப் பேசினதும் வெட்கமா?"

இளவரசியின் அந்தரங்கம் ஆயிரம் கதை பேசி னாலும்... அத்தை மகனுக்குப் புன்னகை மட்டுமே பதில்!

"போலாமா மனோ...! டிரஸ் பண்ணிட்டுக் கோவிலுக்குப் போனா சரியா இருக்கும்."



அங்கே குருப்ரபா இன்டஸ்ட்ரீஸில் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்தான் தருண். இத்தனை நாட்களில் எதற்கெடுத்தாலும் இளவரசியை இன்டர்காமில் அழைத்துப் பழக்கமாகி யிருந்தது.

அன்றும் அதே போல் இரண்டு மூன்று முறை இன்டர்காம் ஆன் செய்து விட்டு, அந்தப் பக்கம் பதில் இல்லாமல் போனதும், அவள் இல்லை என்பது நினைவி லாடுவதாய்...!

ஓம் பைரவியே போற்றி ஓம்...!

ஓம் சங்கரியே போற்றி ஓம்...!

ஓம் சாம்பவியே போற்றி ஓம்...!

பூவரசி அம்மன் கோவிலில் அர்ச்சனை மந்திரங்கள் ஸ்பீக்கரில் ஒலித்துக் கொண்டிருந்தன.

வாழை மரங்களும், மாவிலைத் தோரணங்களும், தாழம்பூச் சரங்களும், குப்பென்று நாசியை நிறைக்கும் சூடத்தின் வாசனையும், திருவிழாவுக்கே உண்டான சிறப்பாய்...!

தூரத்தில் எங்கோ உருமி மேளம் அடிக்கும் ஓசை. தீச்சட்டி எடுப்பவர்கள் கையில் வேப்பிலையோடு வேக மாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

லாவண்யாவும், இளவரசியும் அழகான பட்டுப் புடவையில் செதுக்கப்பட்ட சிலைகளாய்...!

"என் கண்ணே பட்டுடும் போலிருக்குடி...!" – பேத்திகளுக்கு நெட்டி முறித்தார் ரங்கநாயகி.

"ரெண்டு பேரும் தங்க விக்ரகமாட்டம் இருக்கீங்க. அடிக்கடி புடவை கட்டினா எவ்வளவு லட்சணமா இருக்கும்! அதை விட்டுட்டு எந்நேரம் பார்த்தாலும் தலைகாணி உறை கணக்கா எதையாவது மாட்டிட்டு திரியறது?" - இளவரசியின் காதருகே கிசுகிசுத்தார் மீனாட்சி.

"சரியாச் சொன்னீங்க. எங்களையும் விக்ரகம்னு நினைச்சுப் பாலாபிஷேகம், தேனாபிஷேகம்னு யாராவது ஆரம்பிச்சுட்டா நாங்க என்ன ஆகறது?

"ஏற்கெனவே கட்-அவுட்டுக்கு எல்லாம் லிட்டர் லிட்டரா பாலைக் கொட்டி வீணாக்கிட்டு இருக்காங்க. இனி, நாங்க வேற அந்தப் பொல்லாப்பைத் தேடிக்கணுமா?"

இளவரசி துடுக்காய்ப் பேச... லாவண்யா சிரித்துக் கொண்டிருந்தாள்.

"மீனாட்சி... எப்பம்மா வந்தே?"

நாலாவது வீட்டுப் பங்கஜம் பேச்சுத் துணைக்கு மீனாட்சியைப் பிடித்துக் கொள்ள...

அம்மாவும், பாட்டியும் சமாளித்துக் கொள்ளட்டும் என்று மனோவோடு சந்நிதி நோக்கி நழுவினார்கள்.

எலுமிச்சை மாலை, அரளி மாலை, மல்லிகை மாலை என்று வண்ண வண்ண மாலைகளால்... அலங்கரிக்கப்பட்டிருந்த அம்மன் 'உங்கள் கவலை தீர்க்க



நான் இருக்கிறேன்!' என்று அருள் பாலித்துக் கொண்டிருந்தாள்.

"ரொம்பவும் சக்தி வாய்ந்த அம்மன். என்னென்ன வேணுமோ, எல்லாமே வேண்டிக்கோங்க. நிச்சயம் நடக்கும். அர்ச்சனை டிக்கெட் வாங்க மறந்துட்டேன். வாங்கிட்டு வந்துடறேன்."

மனோ இடத்தை விட்டு அகல... இளவரசி அம்மனை நினைத்துக் கண் மூட...

'உன் விழிகளுக்குள் நிற்பது அம்மனா? நானா?' என்று கேட்டு அழகாய்ச் சிரித்தான் தருண்.

விதிர்த்துப் போனது தேகம்.

கோவிலுக்கு வந்தும் என்ன நடக்கிறது?

அம்பாளை நினைக்க வேண்டிய மனம் அவன் உருவத்தை அல்லவா நிரப்பிக் கொள்கிறது.

கண்களில் நீர் தளும்ப, "மன்னிச்சுக்கோ தாயே...!" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டவளைப் பார்த்துப் பூவரசி அம்மன் புன்னகை புரிந்தாள்.

"அக்கா... கோவில்ல வந்து ஏன் கண்ணெல்லாம் கலங்கியிருக்கு?"

"என்னன்னே தெரியலை லவண்! மனசுக்குள்ளே என்னவோ பயமா இருக்கு...!" என்று சொன்னவளை வினோதமாகப் பார்த்தாள் லாவண்யா.

# 9

நிலவு தூங்கும் நேரம்
நினைவு தூங்கிடாது!
இரவு தூங்கினாலும்
உறவு தூங்கிடாது!
இது ஒரு தொடர் கதை
தினம் தினம் வளர்பிறை!

**வெ**ள்ளிக்கிழமை பௌர்ணமி நிலவு வான வீதிக்கு வெளிச்சம் சேர்த்துக் கொண்டிருந்தது.

காற்று பலமாக வீசாவிட்டாலும் இரவின் குளுமையும், நட்சத்திரங்களின் கண் சிமிட்டலும் கவனத்தைக் கவருவதாய் இருந்தது.

அன்று இரவு ரங்கநாயகியோடு முற்றத்தில் அமர்ந்து மீனாட்சியும், நடேசனும் பேசிக் கொண்டிருந்தனர்.

"என்னம்மா...! நமக்குச் சாதகமா கோவில்ல பூ விழும்னு பார்த்தா எதிர்ப் பதமா ஆயிடுச்சே?" - கவலையோடு பேசிய அக்காளை நடேசன்தான் தேற்றினார்.

"இதுக்கு ஏனக்கா கவலைப்படறே? அம்மன் சொல்ற வாக்கு சரியாத்தான் இருக்கும். இன்னாருக்கு இன்னாருன்னு அவளே எழுதி வெச்சிருப்பா. இதை விட நல்ல இடம் அமைஞ்சு வரும்."

"அவன் சொல்றதுதான் சரி மீனாட்சி! இனி, நீ இந்த அமெரிக்க வரனைப் பத்திப் பேச்சே எடுக்க வேண்டாம்.



"உனக்கும் சரி, நம்ம நடேசுக்கும் சரி, இதே மாதிரிப் பூப் போட்டு வாக்குக் கேட்டுத்தான் திருமண விஷயத்துல முடிவு செய்தது. நீங்க ரெண்டு பேருமே ஒரு குறையும் இல்லாம அமோகமாத்தான் வாழ்ந்துட்டு இருக்கீங்க. எனக்கு அமைஞ்ச மாப்பிள்ளை தங்கம்னா... எனக்கு வாய்ச்ச மருமக வைரக் கட்டி."

"இந்த வைரக் கட்டி ஹார்லிக்ஸ் கொண்டு வந்திருக்கேன். எல்லோரும் எடுத்துக்கோங்க..." என்று சிவகாமி வந்து நிற்கவும்... சன்னமாக ஒரு சிரிப்பலை.

இரவு நேரத்தில் கூட மொட்டை மாடியில் அமர்ந்து ஹோம் ஒர்க் செய்து கொண்டிருந்தாள் கனகா.

"ராத்திரி கூடப் படிப்பியா கனகா?"

"ஆமா இளவரசி அண்ணி! ஏகப்பட்ட மாடல் கொஸ்டின் பேப்பர் கொடுக்கிறாங்க. முடிக்காமப் போனா... இன்னமும் நாலு பேப்பர் சேர்த்து எழுதுன்னு கையை ஒடிச்சிடுவாங்க. ரூமுக்குள்ளேயே உட்கார்ந்து படிச்சா தூக்கம் வர்ற மாதிரி இருக்கு. அதுக்குத்தான் இப்படிக் காத்தாட கொசு வத்திச் சுருள் ஏத்தி வெச்சிட்டு உட்கார்ந்துடுவேன். பாதுகாப்பா இருக்கட்டுமேன்னு மொட்டை மாடியில கூட அப்பா வலைக் கம்பியெல்லாம் போட்டிருக்காரு.

"என்னால யாருமே வீட்ல கேபிள் டி.வி. பார்க்கிறதில்லை. கனெக்ஷனைக் கட் பண்ணிட்டாங்க. அம்மா சாமத்துல ஒரு தடவை எழுந்து டீ போட்டுத் தருவாங்க.

பாவம். காலையில இருந்து வேலை பார்த்துட்டு மறுபடியும் எனக்காக எழும்போது கஷ்டமா இருக்கும்."

"சரிதான்டி பெரிய மனுஷி! நீ நல்ல மார்க் வாங்கிட்டா பட்ட கஷ்டமெல்லாம் மறந்து போயிடும்." - அரசிக்கும் மகளுக்கும் ஹார்லிக்ஸ் கொண்டு வந்தார் சிவகாமி.

"நீ தூங்கலயாம்மா அரசி? அம்மா, பாட்டியெல்லாம் தூங்கப் போயிட்டாங்களே!"

"எனக்குத் தூக்கம் வரலே அத்தை! கொஞ்ச நேரம் இங்க உட்கார்ந்திருக்கேனே..."

"மருதாணி அரைச்சு வெச்சிருக்கேன். இப்ப வெச்சு விடவா இளவரசி? நீ தூங்கப் போறதுக்குள்ள நிறம் பத்திக்கும். லாவண்யா வெச்சிட்டுப் படுக்கப் போயிட்டா."

"நீங்க தூங்க வேண்டாமா அத்தை? எனக்கு மருதாணி வெச்சு விட்டுட்டு இருந்தா நேரமாயிடுமே!"

"தூக்கம் கிடக்குது போ. என்னைக்கோ ஒரு நாள் வர்றீங்க. இப்ப உங்களுக்கெல்லாம் செய்தாதான் உண்டு."

விரல்களின் மீது பச்சைத் தொப்பியாய் அமர்ந்த மருதாணியை அழகு பார்த்தாள் இளவரசி.

"மனோ எங்க ஆளைக் காணோம்?"

"செகண்ட் ஷோ சினிமா போயிருக்கான். சினிமான்னா உசுரு. வீட்ல கேபிள் இல்லை. சரி,



போகட்டும்னு விட்டுடறது. நான் தூங்கப் போகட்டுமா? ரெண்டு பேரும் பத்திரமா இருங்க. ஒண்ணும் பயமில்ல. கம்பிக் கிராதி போட்டுத்தான் இருக்கு.

"கனகா... நீ தூங்கறதா இருந்தா மொட்டை மாடி லைட்டை ஆஃப் பண்ணிட்டு வந்து படு. அன்னைக்கு மாதிரி அப்படியே எரிய விட்டுட்டு வந்துடாதே."

சிவகாமி கீழே இறங்கிச் சென்றுவிட... கனகா மாடல் பேப்பர் எழுதுவதில் ஆழ்ந்து போனாள்.

இளவரசி ஏதேதோ நினைவுகளில் வான மண்டலத்தை வெறித்தபடி மதிலில் சாய்ந்து அமர்ந்திருந்தாள்.

அங்கே தருணும் உறக்கமின்றித் தவித்துக் கொண்டிருந்தான்.

கட்டிலில் புரண்டு புரண்டு படுத்தவனுக்கு நித்திரை வர மறுத்தது. லேப்டாப்பும், புத்தகமும் துணைக்கு வர மறுத்தன.

எழுந்து சென்று பால்கனியில் இப்படியும் அப்படியும் உலவிக் கொண்டிருந்தவனுக்கு ஏதோ ஒரு வெறுமை இதயத்தைச் சூழ்வதாய் இருந்தது.

கால்கள் கெஞ்சிய நேரத்தில் பால்கனியில் இருந்த கூடை நாற்காலியில் விஸ்தாரமாய்க் கால் மீது கால் போட்டு அமர்ந்து கொண்டான்.

புதிதாய்க் கலவரப்படுத்திய எண்ணங்களில் சற்று நேரம் அவன் விரல்கள் மீசையை வருடி விட்டுக் கொண்டன.

"ஹலோ சார்... ஐ அம் இளவரசி!"

அமைதி தேடிய நேரத்தில் அழகான அஜந்தா ஓவியமாய் அவள் உருவம் கண்ணெதிரில் வந்து நின்றது.

"எந்த நாட்டுக்கு?" என்று வந்த இடக்கான கேள்வியில் திகைத்து விரிந்த அவள் விழிகள். உடல் குலுங்கச் சிரித்துக் கொண்டான்.

விமான நிலையத்தில் அவளை முதன் முதலாய்க் கண்ட முகம் நினைவில் நிழலாட, அவள் அருகாமையை மனம் நாடியது.

எது என்னை உன்னிடம் ஈர்க்கிறது பெண்ணே? நீ அருகில் இல்லாத நேரம் மனம் உன்னை நினைக்கத் தொடங்கி விட்டதே! உனக்கும் இதுபோன்ற உணர்வு இருக்கிறதா? இன்று ஒரு கணமேனும் என்னைப் பற்றி நினைத்தாயா?

நான் உனக்கு பாஸ் மட்டும்தானே! அதனால்தான் புத்தகக் கடையில் கூட நீ என்னிடம் அதிகம் பேச விரும்பவில்லை. இன்று கைபேசியில் பேசியபோது கூட அளவாகப் பேசி முடித்துக் கொண்டாய். நீ உன் எல்லைக்குள் இருக்கிறாய் பெண்ணே! நான்தான் எல்லை தாண்டி உன்னோடு பயணிக்கத் தொடங்கி விட்டேனோ?

"இளா..." என்று அவன் உதடுகள் அழகாய் உச்சரித்தன. இரவில் நிலவிய பனிக்காற்றை ஆழ்ந்து உள்ளுக்குள் இழுத்தான்.



இதயம் நிறைந்தவளின் இனிய நினைவுகளோடு வான வீதியில் பார்வை பதிய...

உனக்காக நான் அவளிடம் தூது செல்லவா என்ற பால்நிலா அவனிடம் அனுமதி கேட்டது.

'ஹேய்... மன்மதனின் மலர்க் கணைகள் உன்னையும் விட்டு வைக்கவில்லையா? காதல் விளையாட்டு ஆரம்பித்து விட்டதா?' என்று நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கேள்வி கேட்டன.

"அண்ணி... ஹோம் ஒர்க் முடிஞ்சது. தூங்கப் போலாமா?"

கனகா உறக்கம் கலந்த விழிகளோடு இளவரசியை உலுக்க... அதுவரை எந்த உலகத்தில் சஞ்சரித்தோம் என்று புரியாமல் மலங்க மலங்க விழித்தாள்.

திரிசங்கு சொர்க்கம் போல அவளாக ஒரு உகைத்தை சிருஷ்டித்துக் கொண்டு அவனைப் பற்றிய நினைவுகளில் மூழ்கிக் கிடந்திருக்கிறாள்.

"உட்கார்ந்த நிலையிலேயே தூங்கிட்டிங்களா?" என்று கனகா வெகுளியாகக் கேட்க...

'ஆம்!' என்று தலையாட்டத்தான் முடிந்தது.

அங்கே அவனும், இங்கே இவளும் இமை மூடி உறங்கிய நேரம்... விடியலின் வாசலைத் தொட்டிருக்க, காலை நேரக் குயில்களின் கூவலை இருவருமே உணர்ந்திருக்கவில்லை.

தன் அறையில் இன்டர்காம் ஒலித்தபோது, புரண்டு படுத்தான் தருண்.

கண்கள் மிளகாய்ப் பழமாய்...!

மீண்டும் ஓயாமல் அடிக்கவே... ஏ.சி.யின் குளிரைப் பொருட்படுத்தாமல் போர்வைக்குள்ளிருந்து நீளமான கரம் இன்டர்காமை நோக்கி நீண்டது.

"ம்ம்..." என்ற ஒற்றை ஓசை.

"இன்னும் எந்திரிக்கலையா தருண்! தொழிற் சாலைக்குப் போக நேரமாயிடுமே...?"

வெடுக்கென்று எதையோ சொல்ல வந்தவன்... தேவியை உசுப்பி விட வேண்டாம் என்று அமைதியாகி விட்டான்.

"குளிச்சிட்டு வர்றேன்," என்று இணைப்பைத் துண்டித்து விட்டு மீண்டும் கவிழ்ந்து படுத்தபோது... இமைகள் சரிவரத் திறக்காத நிலையிலும், காலைப் பொழுதின் முகத் தாமரையாய் அவள் கண் முன்னே...!

வயதின் வாலிபம் புதிதாய்க் கதை பேச, அருகில் இருந்த தலையணையை அவளாக நினைத்து இறுக்கிக் கொண்டான்.

உறக்கத்திலிருந்து மீளாத இளவரசியின் உடலிலும் இனிய பரவசம்.

'மிஸ் மனிதாபிமான மேடம்!' காதருகே அவன் குறும்பான குரல் ரகசியமாய்க் கேட்டது.



புரண்டு படுத்தாள். இமைகளுக்குள் அவன் புன்னகையின் ஆர்ப்பரிப்பு.

அவன் நீண்ட கைகள் அவளைத் தீண்ட நெருங்க... அவள் விலகி விலகிச் செல்ல...

அலுவலக மேஜை அதற்கு மேல் செல்ல விடாமல் தடுத்தது.

அவன் விரல்கள் இப்போது அவள் மீது ஊர்ந்து கொண்டிருக்க... என்ன நடக்கிறது என்றே புரியாத மயக்கத்தில் அவள் பார்வை.

"ஊருக்குப் போனதும் ஒரு நிமிஷமாவது என்னை நினைச்சியா?"

அவள் முகத்தருகே குனிந்து அவள் கண்களை ஊடுருவியவனைச் சந்திக்க மறுத்துச் சத்தியாக்கிரகம் செய்தன விழிகள்.

கையில் தொடங்கிய ஊர்வலம் கழுத்தருகே நெருங்கியிருக்க... அவன் தீண்டத் தீண்ட இருவருக் குள்ளும் தீ மூண்டு கொண்டிருந்தது. அவள் கூந்தலில் கை நுழைத்து அவளை நிமிர்த்தியவன், 'இளா...' என்ற பரிதவிப்போடு அவள் கழுத்தில் முகம் பதித்தான்.

உடல் முழுவதும் பரவசத்தில் விதிர்த்துக் கொண்ட அந்த விநாடி... வியர்த்துப் போய்க் கனவிலிருந்து வெளி வந்தாள் இளவரசி.

கண்களுக்கு முன் தெரிந்தவை யெல்லாம் கண்ணாமூச்சி ஆடிக் கொண்டிருக்க... கிறுகிறுத்த

தலையை இரண்டு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டாள்.

கனவில் கிடைத்த முத்தத்திற்கே இத்தனை கிறக் கமா?

அவள் குரலைக் கேட்க வேண்டும் என்ற வெறியை அவனாலும் அடக்க முடியவில்லை. உறவினர் வீட்டில் இருக்கிறாளே என்ற தயக்கத்தைப் புறக்கணித்து அவள் செல்லுக்கு டயல் செய்தான்.

அலைபேசியில் ஒளிர்ந்த எண்களையே மலைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள் இளவரசி.

அலுவலக நேரம் தவிர அவனிடமிருந்து போன் வருவது என்பது இதுவரை நடந்திராத ஒன்று.

இது நிஜமில்லை. கனவுதான்.

அவள் சுய உணர்வுக்கு வந்த நேரம் நிஜமான செல்போன் அழைப்பு நின்று போயிருந்தது.

நாமே அவனை அழைக்கலாமா என்று நினைத்த நொடியில் சிவகாமி உள்ளே நுழைய, பேச்சு திசை மாறிச் சென்றது.

"ராத்திரி வெகு நேரம் கண்ணு முழிச்சயோ? மருதாணி பொடிப் பொடியா உதிர்ந்து கிடக்குது பாரு. கை நல்லா கழுவிட்டுப் பல்லு தேய்ச்சிட்டு வாம்மா. டிஃபன் சாப்பிட்டு பிறகு கூடக் குளிச்சிக்கலாம். பத்து மணிக்குத் தேர் புறப்படும். வேலையை முடிச்சிட்டு கோவில் பக்கம் போனாக்கா சரியா இருக்கும்."



அத்தை சொன்னதற்குத் தலையாட்டி விட்டுக் குளியலறை நோக்கிச் சென்றாள். முகத்தில் நீரை அறைந்து அறைந்து தெளித்த பிறகுதான் பிடித்த கிறுக்கு விலகுவது போல இருந்தது.

பல் தேய்த்து விட்டுக் கீழே இறங்கிச் சென்றபோது, மாமா, தன் மெர்ச்சன்ட் ஸ்டோருக்குப் புறப்பட்டுச் சென்றிருக்க... கனகாவும் ஸ்கூல் பஸ் வந்துவிடும் என்ற அவசரத்தில் அரக்கப்பரக்க ஆயத்தமாகிக் கொண் டிருந்தாள்.

"இளா... அப்பா ஃபோன்ல இருக்காருடா..." என்று மீனாட்சி அழைக்கவும்... பாய்ந்து ஃபோனைப் பிடுங்கி, "அப்பா!" என்று குரல் கம்மப் பேசத் தொடங்கினாள்.

தந்தையும், மகளும் நீண்ட நேரம் பேசுவதை அங்கேயே அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார் ரங்க நாயகி.

"குழந்தை அப்பாவை நினைச்சு ரொம்பவும் ஏங்கிப் போயிருக்கா போலிருக்கு, மீனா! ஒரு தரம் மாப்பிள்ளையை இங்க வந்துட்டுப் போகச் சொல்லேன்."

"அவருக்கு லீவு கிடைக்கும்போதுதான் வர முடியும் அம்மா. ஃபிளைட் டிக்கெட்டுக்குப் போடுற காசு இருந்தா பொண்ணுக்கு இன்னும் பவுன் சேர்த்து வைக்க லாமேன்னு நினைப்பாரு."

"ஆமாண்டியம்மா! உன் பொண்ணு பவுனே வேண்டாங்கறா. நீ என்னடான்னா பிஸ்கட் பிஸ்கட்டா

எண்ணி எடுத்து வை. முதல்ல பிள்ளைங்க மனசு சந்தோஷமா இருக்கான்னு பாரு. கத்தை கத்தையா சேர்க்கறதெல்லாம் அதுக்குப் பிறகுதான். உன் வீட்டுல இருந்ததைவிட இங்க வந்ததும் கொஞ்சம் இளைச்சா மாதிரி தெரியறா."

மெத்து மெத்தென்றிருந்த வெந்தயத் தோசை, தொட்டுக் கொள்ளப் பூண்டுச் சட்னி, எண்ணெய் விட்ட கறிவேப்பிலைப் பொடி.

அத்தையின் கைப்பக்குவத்தை அடித்துக் கொள்ளத் தான் ஆளில்லை.

மனோ சொன்னது போல் நிச்சயம் டைனமிக் லேடிதான்.

எந்த வேலைக்கும் முகம் சுழிக்காமல் செய்வதற்கு இந்த அத்தையால் எப்படித்தான் முடிகிறதோ?

"என்னடி! அப்படிப் பார்த்துட்டு இருக்கே இளா? அத்தையோட சமையல் பிடிக்கலையா?"

"அப்படிச் சொன்னா அடுப்பில்லாமலே என் வாய் வெந்துடும். நான் என்னைக்கு இதெல்லாம் கத்துக்கப் போறேன்னு யோசிக்கறேன். யாராவது வக்கணையா சமைச்சுப் போட்டா சாப்பிட மட்டும்தான் தெரியுது அத்தை! கிச்சன் பக்கம் எட்டிப் பார்க்கவே சோம்பேறித்தனமா இருக்கு."

"உன் சோம்பேறித்தனம்தான் உலகப் பிரசித்த மாச்சே பொம்மக்கா! சின்ன வயசுல உட்கார்ந்த இடத்தை



விட்டு அசையவே மாட்டியாம். பொம்மையாட்டம் உட்கார்ந் துட்டே இருப்பியாம். அதனாலதான் உனக்கு பொம்மக் கான்னு பேர் வெச்சாங்களாம். பாட்டிதான் சொல்வாங்க."

கேலி செய்து கொண்டே, எதிரில் அமர்ந்த மனோவை முறைத்தாள் இளவரசி.

பொம்மக்கா என்று சொன்னால் பிடிக்காது என்று தெரிந்தும்... மீண்டும் மீண்டும் வம்பிழுப்பானேன். மனோவின் வம்பு அடங்குவதாய் இல்லை.

"உன் கூடப் பொறந்தவதானே லாவண்யா! காலங்கார்த்தால எந்திருச்சு குளிச்சு ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போகணும்னு கேட்டா. கூட்டிட்டுப் போயிட்டு வந்தேன். நீ என்னடான்னா இன்னும் குளிக்கக் கூட இல்லை. அப்படியே நாலு தோசையை முழுங்கிட்டு இருக்கே."

"எதுக்கு மெனக்கெட்டு ஆஞ்சநேயர் கோவிலுக்குப் போவானேன். அதுதான் என் எதிர்லேயே ஒண்ணு உட்கார்ந்திருக்கே!" – இளவரசியும் விடுவதாக இல்லை.

இருவரும் மாறி மாறிக் கேலி செய்து கொண் டிருக்க...

அமைதியாய் இருந்த லாவண்யாவின் மீது சிவகாமியின் எண்ணம் திரும்பியது.

"ஏன்டி லாவண்யா! இதுங்க ரெண்டும் இப்படி சண்டை போட்டுக்குதுங்க. நீ மட்டும் எப்படி இவ்வளவு அமைதியா இருக்கே?

"ஆனா ஒண்ணு... உன்னைக் கட்டிக்கப் போற வனுக்கு உன்னால எந்த வம்பு தும்பும் வராது..." என்று அத்தை சொன்னபோது லாவண்யாவிடமிருந்து மெல்லிய புன்னகை மட்டுமே...!

அன்றைய தினம் தேர் வடம் பிடித்து இழுத்து, மறுநாள் அணைக்கட்டுக்குச் சென்று கும்மாளமடித்து விட்டுத் தாயும், மகள்களுமாய் மனோவின் துணையோடு ஞாயிறு மாலை ஊர் திரும்பினர்.

"ரெண்டு நாள் தங்கிட்டுப் போயேன்டா!" என்று மீனாட்சி வற்புறுத்த...

"ஏற்கெனவே ரெண்டு நாள் காலேஜ் கட் அத்தை! இன்னைக்காவது போகணும்..." என்றவன், விடிகாலை யிலேயே பஸ் ஏறி விட்டான்.

**அ**ன்றைய தினம் எப்போதும் போல் அலுவலகம் புறப்பட்டுச் சென்றாள் இளவரசி.

உறவுகளைப் பார்த்து விட்டு வந்தது அவள் முகத்திற்குப் புதிய தெம்பையும், உற்சாகத்தையும் கொடுத்தது.

நடையில் ஒரு துள்ளலோடு தன் அறைக்குச் சென்றவள்... அதிரடியாய் நின்று விட்டாள்.

கால் மீது கால் போட்டபடி அவள் கணினியின் முன் அமர்ந்திருந்தான் தருண்.

"குட் மார்னிங் சார்!" என்று தயக்கத்தோடு உள்ளே நுழைந்தவளை,



"மார்னிங்!" என்று அவனுடைய அழகான புன்னகை வரவேற்றது.

"ஸோ... பேக் டு ஒர்க் அகெய்ன். ரெண்டு நாள் நீ இல்லாம எப்படியோ சமாளிச்சுட்டேன்."

புத்தம் புதிதாய்ப் பார்ப்பது போல் அவன் பார்வை மேலிருந்து கீழ்வரை அவளை அளவெடுக்க...

அவள் முகத்தில் செம்மை கலந்த குறுகுறுப்பு.

'ஏன் இப்படிப் புதிதாய்ப் பார்க்கிறான்?' என்று மனதுக்குள் வியந்தாள்.

சிவகாமி நெருக்கமாய் தொடுத்துக் கொடுத்திருந்த ஜாதிமல்லி அவள் விரித்த கூந்தலை அலங்கரிக்க... அறை முழுவதும் வாசமாய் இருந்தது.

சிறிதும் சங்கோஜமின்றி, "பியூடிஃபுல் ஃப்ராக்ரன்ஸ்!" என்று அவன் தன் சுவாசத்தை இழுத்து நுகர்ந்தபோது... பார்வையை ஜன்னல் பக்கம் திருப்பிக் கொண்டாள் இளவரசி. வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் பறந்தன.

அவனுடைய நடவடிக்கைகள் எல்லாமே புதிதாய் இருக்க... அவள் மனதில் எழுந்த கிளர்ச்சி அவள் கண்களில் கள்ளமின்றி வெளிப்பட்டது.

அவன் பார்வை இளந் தென்றலாய் அவளை வருடிச் செல்ல, "மூணு நாளா ஆபீஸ்ல என்ன நடந்ததுன்னு கேட்டுக்கவும் இல்லை. நானா போன் செய்தபோது ஒரு முறை அவசரமாப் பேசியாச்சு.

இன்னொரு முறை எடுக்கவே இல்லை. மேடம் அந்த அளவுக்குப் பிசி!" அவளுடைய சுழல் நாற்காலியில் ஒய்யாரமாய்ச் சாய்ந்து கொண்டு புன்னகையுடன் கலந்து வந்தது அவனது குற்றச்சாட்டு.

'ஐயோ... சிரிக்காதேடா! இப்படிச் சிரித்துச் சிரித்துத் தானே என்னைப் பைத்தியமாக்கிக் கொண்டிருக்கிறாய். பிஸியாம் பிஸி. மூன்று நாட்களாக உன்னைத் தவிர வேறு எதைப் பற்றி நான் நினைத்தேன்?

'உன்னை மறக்கத்தான் ஊருக்கே சென்றேன். இன்னும் அதிகமாக உன்னை நினைத்ததைத் தவிர, வேறொன்றும் பெரிதாய் நடக்கவில்லை. நாளுக்கு நாள் கிறுக்குப் பிடித்தது போல இருக்கிறது. இதெல்லாம் எங்கே போய் முடியப் போகிறது? எனக்கே தெரியவில்லை!'

"பேசி முடிச்சாச்சா?"

திடுக்கிட்டுப் போய் அவன் முகத்தைப் பார்த்தாள்.

ஆளைக் கொல்லும் பளீர்ப் புன்னகை!

"மனசுக்குள்ளேயே என்னவோ பேசிட்டு இருக் கேன்னு தெரியுது. எப்போ வெளியே வர்றியோ வா. டேக் யுவர் சீட் அண்ட் கேரி ஆன் தி ஒர்க்."

அவனுடைய முழு உயரத்திற்கு நிமிர்ந்து, அவன் கம்பீரமாய் நடந்து சென்றபோது...

'போகாதே... இன்று முழுக்க இப்படியே என்னிடம் பேசிக் கொண்டிரு!' என்று வெட்கத்தைத் துறந்த மனம் அவன் பின்னாலேயே ஓடியது.



அடுத்து வந்த பத்து நாட்களும் சிறகு முளைத்துத் தான் பறந்தனவா?

மருந்துக்குக் கூட அவளிடம் எரிந்து விழாமல் அவன் வேலை வாங்கியபோது மயிலிறகால் வருடிச் செல்வது போல இதமாக...!

அவ்வப்போது அவள் மீது படிந்து மீளும் அவனது ரசனையான பார்வை. அவன் பார்வை பட்ட இடமெல்லாம் அவளது உடலின் ரசவாதங்கள் பரிதவித்தன. விரல் தீண்டல் இல்லாமல் விழித் தீண்ட லால் எழுதப்பட்டுக் கொண்டிருந்த உயிர்க் காவியம்!

இதெல்லாம் நிஜமா? தன்னுடைய கற்பனா சக்திதான் கால் முளைத்து நடக்கிறதா? தன்னைத் தானே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள் இளவரசி.

**நா**ட்கள் அதன் வழியே நகர்ந்து கொண்டிருக்க... இடையில் ஒருமுறை தொழிற்சாலை வரை அவனோடு சேர்ந்து நடக்க வேண்டியிருந்தது. நடப்பது போலவே இல்லை. மிதப்பது போல உணர்ந்தாள். அவள் கண் களில் தெரிந்த கனவினைக் கண்டும் காணாதவன் போல நடந்து கொண்டிருந்தான் தருண்.

அவள் தனியாகச் சென்றபோது வக்கிரம் பேசாத கண்கள் அவனோடு சென்றபோது ஆயிரம் கதைகள் கற்பித்தன.

"மணி... என்ன ஷோக்கா போவுது பார்த்தியா? சின்னவரு வந்து இத்தினி நாளாச்சே... இன்னும் எதுவும்

நடக்கலயேன்னு நினைச்சேன். ஜோடி சேர ஆரம்பிச் சிடுச்சு."

விடுப்புக் கிடைக்காத பழைய வயிற்றெரிச்சலில் முருகேசன்தான் பற்ற வைத்தான்.

"ஹூக்கும்... பசை போட்டு ஒட்டுனா மாதிரி சின்னவரு ரூமு பக்கத்திலயேதானே கிடக்குது. பத்திக்காமலா இருக்கும்? பெரிய இடத்துல எதுவும் நடக்கும்.

"நமக்கு ஏன் பொல்லாப்பு? வேலையைப் பாரு முருகேசு... இந்த பிளாக்குக்கும் அந்த பிளாக்குக்கும் நடந்து நடந்து காலுதான் புண்ணாகுது..." – சலித்துக் கொண்டே சென்றான், மற்றொரு அட்டெண்டரான சின்னமணி.

**"ரெ**ண்டு நாள் அப்பாவும், நானும் மும்பை வரைக்கும் போக வேண்டியிருக்கு. உன்னால ஒற்றை ஆளா நிர்வாகத்தைப் பார்த்துக்க முடியுமா?"

திடீரென்று தருண் கேட்டதும், ஒரு கணம் திகைத்து விழித்தவள்... 'சரி!' என்று சம்மதம் தெரிவித்தாள்.

நிர்வாகத்தைப் பார்த்துக் கொள்வது வேதனை யில்லை. தட்டுத் தடுமாறியாவது சமாளித்து விடுவாள்.

முழுதாய் நாற்பத்தெட்டு மணி நேரம் அவனைப் பார்க்காமல் இருக்க வேண்டுமே!

இரண்டு நாட்கள் அவன் முக தரிசனம் கிடைக்கப் போவதில்லை என்ற வேதனையில் அவன் எதற்காக



மும்பை போகிறான் என்று கூடக் கேட்கத் தோன்ற வில்லை.

"இரண்டு நாள் கழிச்சு கண்டிப்பா வந்துடுவீங்க தானே?" என்று அவள் கேட்டபோது, அவன் அதரங்களில் மெலிதான புன்னகை.

கண்களில் மின்னிய குறும்போடு அவன் அவளைப் பார்க்க...

"இவ்வளவு பெரிய நிர்வாகத்தை இரண்டு நாளைக்கு மேல் ஒற்றையா சமாளிக்க முடியாது. அதுதான்..." என்று அவள் இழுக்க... அவன் புன்னகை மேலும் அகல மானது.

## 10

**அ**லுவலகத்தில் இருந்த வேலைப் பளுவில் இரண்டு நாட்கள் எப்படியோ உருண்டோடி விட, இளவரசியின் உள்ளம் நிலையின்றித் தவித்தது.

ஒரு சிறு பிரிவிற்குப் பின் அவனை மீண்டும் பார்த்ததும், உள்ளே ஜிவ்வென்று ஏதோ இறங்கியது.

அன்று கொடேஷன்களைச் சரி பார்த்தபோது... அவள் அருகிலேயே அவன் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர, அவன் அருகாமை தந்த திடீர் மயக்கத்தில் அவள் இதயமே கிறங்கிப் போனது.

அவன் மட்டும் லேசுப்பட்டவனா?

அவனது ரகசியப் பார்வை அவளைத் தழுவிச் செல்ல... அவள் உதடுகளின் நிறத்தோடு அன்றைய உடை போட்டியிடுவதைக் கண்டான்.

தலைக்குக் குளித்துக் காற்றில் அலை பாய்ந்த அவள் கருங்கூந்தலைக் கலைத்து விளையாட அவன் விரல்கள் பரபரத்தன.

அழகாய் மேடிட்ட அந்த ஆப்பிள் பழக் கன்னங்கள் என்னைச் சற்றுச் சுவைத்துத்தான் பாரேன்... என்று அழைக்க, அவனுக்குள் புதிதாய்த் தீ மூண்டது.

தேகங்களின் தீண்டல் இன்றி இருவர் மனதிலும் மோகம் தலை விரித்தாட... தன்னையும் மீறிச் சிவந்த முகத்தை மறைக்கத் தெரியாமல் தவித்துக் கொண்டிருந் தவளை, அணு அணுவாய் அருகிலிருந்து ரசித்துக் கொண்டிருந்தான் தருண்.

அவன் பார்வைத் தீவிரவாதத்தின் தாக்குதலில் அவள் உடலின் சக்தியெல்லாம் ஒட்டு மொத்தமாய்ச் சலனப்பட்டுப் போயிருந்தது.

"கெட் ரெடி. இன்னைக்கு லஞ்ச் வெளியேதான்." - கணீரென்று ஒலித்தது அவன் குரல்.

"நீங்க போயிட்டு வாங்க. ஐ அம் ஹாவிங் மை ஓன் லஞ்ச்!" என்று மறுத்தாள்.

"ஹலோ... பொழுது போகாம உன்னை நான் கூப்பிட்டேன்னு நினைச்சியா? சிங்கப்பூர்ல இருந்து நமக்கு நியூ ஆர்டர் வரப் போகுது. டெலிகேட்ஸ் இன்னைக்கு



வர்றாங்க. டேபிள் ரிசர்வ் பண்ணியிருக்கேன். புது ஆர்டர் சம்பந்தமா என்ன பேசறோம்னு உனக்குத் தெரிய வேண்டாமா? அக்ரீமெண்ட் சைன் பண்ணப் போறோம்."

இது என்ன புதிதாய் என்று வியப்போடு அவனைப் பார்த்தவள், அலுவலக வேலை என்பதால் வேறு வழி யின்றி அவனோடு செல்லச் சம்மதித்தாள்.

டிரைவரைத் தவிர்த்து விட்டு அவனே கார் எடுக்கவும்... சற்றே அவள் தயங்கி நிற்க...

"உட்காருன்னு சொன்னாத்தான் உட்காருவியா? கெட் இன்."

கதவைத் திறந்து விட்டு, அவன் கோபமாய்க் கர்ஜிக்கவும், வேறு வழியின்றி ஏறி அமர்ந்தாள் இளவரசி.

வண்டி அந்த ஸ்டார் ஹோட்டலை நோக்கி வழுக்கிக் கொண்டு விரைந்தது.

ரிசர்வ் செய்யப்பட்டிருந்த டேபிளில் சிங்கப்பூரின் பிரபலமான கம்பெனியைச் சேர்ந்த இரண்டு ஆண்களும், இரண்டு பெண்களும் அவர்களுடன் சேர்ந்து கொள்ள... பேச்சு புதிய வகை தொழில் நுட்பங்களைக் குறித்துத் திரும்பியது.

சுற்றுப்புறம் மறந்து அவன் தொழிற்சாலை விஷயங்களிலேயே மொத்தமாகக் கவனம் செலுத்தத் தொடங்கியிருந்தான். நடக்கும் சம்பாஷணைகள் முற்றிலும் ஆங்கிலத்திலேயே இருக்க... ஆஸ்திரேலியன் ஸ்டைல்

கலந்து அவன் ஆங்கிலம் பேசுவதை உள்ளுக்குள் ரசித்துக் கொண்டிருந்தாள் இளவரசி.

கலவையான உரையாடலில் நேரம் போனதே தெரியவில்லை. முக்கியமான விஷயங்களை அவள் குறிப்பெடுத்துக் கொண்டிருக்க... அவர்களின் பேச்சு திடீரென்று மலாய் மொழிக்குத் தாவியது.

என்ன பேசுகிறார்கள் என்று புரியாமல் அவள் அவன் முகத்தைப் பார்க்க... எப்போதும் போல் பளீர்ப் புன்னகை. அவனும் மலாய் மொழியில் ஏதோ சொல்ல... அந்தப் பெண்கள் இருவரும் அவளைப் பார்த்துச் சிரிக்க... தருணின் பார்வையில் விஷமம் தெரிய... நிச்சயம் அது அலுவலக சம்பந்தமான விஷயம் இல்லை என்று மட்டும் புரிந்தது.

பதிலுக்கு அவளும் புன்னகைத்து வைத்தாள்.

பேச்சு வார்த்தை முடிந்ததும் உணவருந்தி... மீண்டும் அவனுடன் காரில் செல்லும் போது இமைகளின் பாரம் அவள் கண்களை அழுத்தத் தொடங்கியது. பயணம் செய்யும்போது ஏற்படும் புரிந்தும் புரியாத அரைகுறை நித்திரை...!

அவள் தாழம்பூ நிறத்து முகத்தை ரசித்துக் கொண்டே, டிரைவிங்கில் இருந்தான் தருண். அந்த மெல்லிய ரோஜா இதழ்களைச் சத்தமின்றி முத்தமிடலாமா என்று உள்ளம் குறுகுறுக்க... தன்னிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கண்டு நகைத்துக் கொண்டான்.



அவன் அந்தக் கம்பெனியில் எம்.டி.யாக அமர்ந்த முதல் நாள் இளவரசி மீது கோபம்தான் எட்டிப் பார்த்தது. வேலையில் வேகம் இல்லையே... என்று தன் தந்தையிடம் கடுகடுக்கக் கூடச் செய்திருக்கிறான்.

“உங்க ஃபிரெண்டுக்கு வாக்குக் கொடுத்ததுக்காக இப்படி ஒரு பி.ஏ.வை நான் சகிச்சுக்க முடியாது. அவளுக்கு நம்ம ஃபேக்டரியிலயே வேற ஏதாவது வேலை போட்டுக் கொடுத்துடலாம்.”

பொறுமையின்றி அவன் பேசியபோது பிரபாகரன் தான் சமாதானப்படுத்தினார்.

“அவ சின்னப் பொண்ணுடா. இப்பதான் காலேஜ் முடிச்சிருக்கா. ரேகா இன்னும் விளையாட்டுத்தனமா இருக்கிறதில்லையா? அதே மாதிரிதானே இவளும்...! வேலைக்கு வந்துதான் ஆகணும்னு அரசிக்கு ஒண்ணும் கட்டாயம் இல்லை.

“அவளுக்கு இருக்கிற ஆர்வத்துல வர்றா. ஆர்வமிருக்கிற இடத்துல திறமையும் நிச்சயம் இருக்கும். தட்டிக் கொடுத்துச் சொல்லிக் கொடுத்தா நாளடைவுல பிக்கப் பண்ணிக்கப் போறா.

“எல்லோரும் உன் வேகத்துக்கு ஈடு கொடுக்கணும்னா எப்படி மகனே? புதுசா ஒரு செக்ரட்டரி அப்பாயிண்ட் செய்தா மட்டும் நீ எதிர்பார்க்கிற வேகத்துக்கு எல்லாம் நடக்குமா? இது ஆஸ்திரேலியா இல்லை மகனே! இங்க எல்லாமே மெதுவாத்தான் நடக்கும்.”

அமைதியான குரலில் பிரபாகரன் சொன்னபோது, சலிப்போடு அவன் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

நீ இருந்தாலும், இல்லாவிட்டாலும் உன் நினைவுகள் என்னைத் துரத்தும் என்பது போல அரசி விடுமுறையில் சென்ற நேரம்... அவள் முகமே அவன் கண் முன் வந்து நிற்க... ஏன் இப்படி மாறிப் போனோம் என்று வியந்து தான் போனான்.

இன்று காலை வடித்து வைத்த சிற்பமாய் மீண்டும் அவன் கண் எதிரில் அவள்.

அவளைக் கண்டதும் அவனுள் இதமாய்ப் பரவிய அந்த அற்புத சுகம். அவளுக்கும் அப்படித்தான் இருந் திருக்குமோ?

அவன் முகம் பார்த்ததும் நிமிடத்தில் மலர்ந்த அந்த அல்லி மலர் விழிகள். அதில் தோன்றிய கிளர்ச்சி. செங்காந்தளாய் மருதாணிப் பூச்சு விரல்கள்.

தூரிகையின் ஓவியமாய் மனதில் பதிந்து போன வளை அனுமதியின்றியே அள்ளி அணைத்துக் கொள்ள இதயம் துடித்தது.

திடீரென்று வண்டி பிரேக் அடித்ததில்... திடுக்கிட்டுக் கண் மலர்ந்தாள் இளவரசி.

எப்போதும் அலுவலகத்தில் சாப்பிட்டவுடன் மேஜை யில் தலை கவிழ்த்து ஒரு குட்டித் தூக்கம் போடும் பழக்கம். இன்று காரிலும் தூங்கியாகிவிட்டது. ஏற்கெனவே ஸ்லோ என்பான். இனி தூங்குமூஞ்சி என்று சொல்வானோ?



என்னவோ சொல்லிவிட்டுப் போகட்டும். அடுத்த ஜென்மத்தில் கும்பகர்ணனாகப் பிறந்து, வருடத்தில் ஆறு மாதம் எந்தத் தொந்தரவும் இல்லாமல் தூங்க வேண்டும். அவள் அடிமனதின் அல்பத்தனமான அந்த ஆசை மீனாட்சிக்கு மட்டும்தானே தெரியும்.

அன்று மாலை ரேகாவிடமிருந்து அழைப்பு வரும்வரை இளவரசியின் உள்ளம் துள்ளும் மானாய்த் துள்ளிக் கொண்டிருந்தது.

அன்றைய தினத்தின் வினோதமான நிகழ்வுகளால் மனதில் கரை புரண்டு ஓடிய சந்தோஷ அலைகள்.

"சொல்லுடி! ரொம்ப நாளா ஃபோனும் காணோம். ஆளையும் காணோம்..." என்று ஆரம்பித்தாள் இளவரசி.

"நான் மும்பையில இருந்து பேசறேன், இளா! பதினைஞ்சு நாள் முன்னாடியே நான் அத்தை வீட்டுக்குப் புறப்பட்டு வந்துட்டேன். என் அத்தை பையன் சுரேந்தரோட எனக்குத் திருமணம் நிச்சயம் பண்ணிட்டாங்கப்பா! நேத்துதான் நிச்சய ஃபங்ஷன் கிராண்டா நடந்தது. பொண்ணு கொடுத்து பொண்ணு எடுக்கிறதுன்னு சொல்லு வாங்களே... அந்த மாதிரி இளா...!

"சுரேனோட தங்கையைத்தான் அண்ணனுக்கு நிச்சயம் பண்ணியிருக்கு. எல்லாமே அவசரமா நடந்ததால யாருக்குமே தகவல் சொல்லக் கூட நேரமில்லை. முகூர்த்தம் கூடச் சீக்கிரமே வெச்சுட்டாங்க. மத்த விஷய மெல்லாம் நான் அங்க வரும்போது பேசறேன் இளா!

இப்ப குடும்பத்தோட சித்தி விநாயகர் கோவிலுக்குக் கிளம்பிட்டு இருக்கோம்."

அதற்கு மேல் அவள் பேசுவதைக் கேட்க அலை பேசி கையில் இல்லை.

இடியைத் தாங்கி வந்த அந்த எலெக்ட்ரானிக் பெட்டி நழுவிக் கட்டிலில் விழுந்தது கூடத் தெரியாமல் அதிர்ச்சி யில் உறைந்து போனாள் இளவரசி.

ரேகா சரியாகத்தான் சொன்னாளா?

'அண்ணனுக்கு நிச்சயம். பொண்ணு கொடுத்துப் பொண்ணு எடுப்பது... சீக்கிரமே முஹூர்த்தம்...'

அவள் சொன்னது சரியாகத்தானே காதில் விழுந்தது. கண்களை இருட்டிக் கொண்டு வர, இதயமே சுக்கு நூறாய் வெடித்து விடும் போல இருந்தது.

பூமி இரண்டாகப் பிளந்து அப்படியே தன்னை விழுங்கி விடக் கூடாதா?

இன்று காலையிலிருந்தே மிகவும் உற்சாகமாக இருந்தானே! அவன் நடவடிக்கைகள் எல்லாமே வித்தி யாசமாக இருந்ததே... அதற்குக் காரணம் இதுதானா!

தனக்குத் திருமணம் நிச்சயமாகப் போவது அவனுக்கு முன்பே தெரிந்திருக்கிறது. தந்தையும், மகனும் சேர்ந்து மும்பை சென்றது இந்தக் குடும்ப விழாவிற்காகத் தானா? மும்பை போகிறேன் என்று சொன்னவன் காரணத் தைச் சொல்லவில்லையே? எதற்குப் போகிறாய் என்று கேட்டிருந்தால் சொல்லியிருப்பானோ?



ஆனால் அடிக்கடி அந்தப் பார்வையில் தெரிந்த பரவசம்...!

ஐயோ...! எவளையோ நினைத்து அவன் உருகி யிருக்கிறான். தன்னைத்தான் காதலோடு பார்க்கிறான் என்று இவள் கற்பனையில் மிதந்திருக்கிறாள்.

சீ...! நினைக்கும் போதே உடலெல்லாம் கூசுவது போல அருவருப்பாக இருந்தது.

முடிந்தது. எல்லாமே முடிந்தது. ரகசியமாய் அவள் நெஞ்சில் பூத்த காதல் ரகசியமாகவே காய்ந்து கருகியும் விட்டது. இது ஒரு தலை ஈர்ப்பு.

ஆரம்பத்திலிருந்தே அவள்தான் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டுக் கண்மண் தெரியாமல் பறந் திருக்கிறாள். அவனுக்கு அவள் மேல் எந்த அபிப்ராயமும் இல்லை. கட்டிலில் கவிழ்ந்து படுத்தவளின் உடல் அழுகையில் குலுங்கியது.

எத்தனை நேரம்தான் அழுதாளோ?

புலன்கள் அத்தனையும் செயலிழந்துதான் போயினவோ?

தலைக்கு மேலே சுழலும் காற்றாடியாய் மனம் சுழன்று கொண்டிருக்க, கன்னத்தின் ஓரமாய் வழிந்து கொண்டிருந்தன கண்ணீர்க் கோடுகள்...! மரக்கட்டையாய்க் கிடந்தவளை மீனாட்சியின் குரல்தான் உசுப்பியது.

"உனக்காக டீ கலந்து வெச்சு எவ்வளவு நேரம் ஆச்சு? ரூமை விட்டு வெளியே வராம என்னம்மா

பண்றே? இன்னைக்கு சங்கடஹர சதுர்த்தி. நான் கோவிலுக்குப் போகணும் இளா."

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, அவள் டைனிங் ஹாலுக்கு வர, மகளின் கோலம் கண்டு மீனாட்சியின் நெஞ்சம் துணுக்குற்றது.

"என்னடி! பைத்தியக்காரி மாதிரி இப்படி தலைவிரி கோலமா இருக்கே? விளக்கு வெக்கற நேரத்துல வீட்டுப் பொண்ணு இப்படியா இருப்பா?"

'பைத்தியம்தானம்மா! நானா ஒரு கற்பனை உலகத்தை சிருஷ்டிச்சுக்கிட்டு வாழ்ந்த பைத்தியம்.' தன் மனதுக்குள்ளேயே அழுது தீர்த்தாள் இளவரசி.

"லாவண்யா லேட்டாத்தான் வருவா. க்ரூப் ஸ்டடீஸ் பண்றேன்னு ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போயிருக்கா. நீ வீட்டை லாக் பண்ணிட்டுப் பத்திரமா இருடா. உடம்புக்கு ஏதாவது பண்ற மாதிரி இருந்தா மாத்திரை எடுத்துப் போட்டுக்கோ."

'ஜெயிப்பவர்களுக்குக் காதல் ஒரு வரம். தோற்ற வர்களுக்கு அதுவே மிகப் பெரிய ரணம்.'

எங்கோ எப்போதோ படித்தது.

வீட்டில் யாருமில்லாத நேரத்தில் இமைகள் சோர்ந்து போகும்வரை அழுது தீர்த்தாள் இளவரசி.

அன்னை அறியாமல் வடித்த கண்ணீர் அன்று இரவே காய்ச்சலாக மாறி உடம்பு கொதிக்கச் செய்தது.



கண்களெல்லாம் பொங்கிக் கிடக்க, அழுது வீங்கிய முகம் பார்ப்பதற்கே விகாரமாய் இருந்தது.

வர மாட்டேன் என்று அடம்பிடித்த மகளை, மறுநாள் காலை வற்புறுத்தி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார் மீனாட்சி.

கட்டிலை விட்டு அசையக் கூடத் தெம்பின்றி, "அம்மா... அம்மா..." என்று அவள் அனத்திக் கொண் டிருக்க, தாயுள்ளம் வேதனையில் கரைந்தது. மகள் வடித்த கண்ணீர் காய்ச்சலினால் ஏற்பட்ட வேதனையே என்று நினைத்து உள்ளம் மறுகினார் அன்னை.

"நல்லாத்தானடி இருந்தே. திடீர்னு எப்படி இப்படி ஆச்சு? யார் கண்ணு பட்டதோ? அழாதம்மா! அழுதா காய்ச்சல் இன்னும் அதிகமாயிடும்."

அவள் அருகிலேயே அமர்ந்து முதுகை வருடி விட்டார்.

இனம் புரியாத பயம் இதயத்தை நிறைத்திருக்க... சிறு குழந்தையாய் மாறித் தாயின் கரங்களை இறுக்க மாகப் பற்றிக் கொண்டாள்.

காய்ச்சலின் காரணமாகச் சகோதரிக்கு இரண்டு மூன்று நாட்கள் விடுமுறை தேவைப்படலாம் என்று லாவண்யா தருணுக்குப் போன் செய்து தகவல் சொன்ன போது...

இளவரசியைப் பார்க்க வேண்டும், அவளை அள்ளி அணைத்து ஆறுதல் சொல்லித் தேற்ற வேண்டும் என்று

மனம் கிடந்து அடித்துக் கொள்ள... எப்படி என்று வழி தெரியாமல் அவன் திகைத்துப் போனான்.

மறுநாள் சமையலறையில் வேலையாக இருந்த மீனாட்சி காலிங்பெல் ஒலி கேட்டுக் கதவு திறந்தபோது சுலோ நின்றிருந்தாள்.

"வாம்மா சுலோ! எங்க வீட்டுப் பக்கம் நீ வந்தே ரொம்ப நாளாச்சு!" என்று வாய் நிறையப் புன்னகையோடு வரவேற்றார்.

கல்லூரியில் படிக்கும் காலத்தில் நினைத்த நேரத் துக்கு வீடு தேடி வருபவள்.

வேலை தேடுகிறேன் பேர்வழி என்று இறங்கி விட்டதில் இந்தப் பக்கம் வருவதே குறைந்து போனது.

"எனக்கு ஒரு ப்ரைவேட் கன்சர்ன்ல் பிசினஸ் ப்ரோமொட்டிங் எக்சிகியூட்டிவா வேலை கிடைச்சிருக்கு ஆன்ட்டி. ஆரம்ப கட்டத்துல மாசம் பத்தாயிரம் சம்பளம் தர்றதா சொல்லியிருக்காங்க.

"வேலையில இருந்துக்கிட்டே எம்.ஃபில், பிஹெச்.டி.-ன்னு வரிசையா முடிச்சிடலாம்னு இருக்கேன். கடை வீதிக்குப் போகணுமேன்னு இந்தப் பக்கம் வந்தேன். அப்படியே ஸ்வீட்ஸ் கொடுத்துட்டுப் போலாமேன்னு உங்க வீட்டுக்கும் வந்துட்டேன்."

"ஹும்... இந்தக் காலத்துல பொண்ணுங்க எல்லோருமே வேலைக்குப் போகத்தான் பிரியப்படறீங்க. என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்கள்."



மீனாட்சி அவளுக்கு ஆரஞ்சு ஜூஸ் கலந்து கொண்டிருக்க, சுலோ டைனிங் டேபிளில் இருந்த பீன்ஸ் உசிலியை ஒரு ஸ்பூனால் அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள்.

"பொண்ணுங்களுக்குக் கல்வி எந்த அளவுக்கு முக்கியமோ, அதே அளவு பொருளாதாரச் சுதந்திரமும் வேணும்னு ஆயிடுச்சே ஆன்ட்டி! காலத்துக்குத் தகுந்த உஷாரோட இருக்க வேண்டியிருக்கே. இளா ஃபேக்டரில இருந்து வந்ததும் நான் வந்துட்டுப் போனேன்னு சொல் லிடுங்க."

"அவ வேலைக்கே போகல சுலோ! கணகணன்னு காய்ச்சல் வந்ததுல எந்திரிக்க முடியாம ரூம்ல படுத் திருக்கா. மருந்து கொடுத்துப் பார்த்தாச்சு. இன்னும் குறையலே. இப்பல்லாம் ஏதேதோ விஷக் காய்ச்சல் வருது. அந்த மாதிரி ஏதாவது இருக்குமோன்னு பயமா இருக்கு."

வெளியே நடந்து கொண்டிருக்கும் சம்பாஷணை எதுவுமே காதில் விழாதவளாய் உணர்வற்றுக் கிடந்தாள் இளவரசி.

காய்ச்சலின் மிகுதியில், சுலோ தன் அறைக்குள் வந்ததோ, இளா என்று அழைத்ததோ, கழுத்தையும், நெற்றியையும் தொட்டுப் பார்த்ததோ, சில மணித் துளிகள் வரை அவள் அருகிலேயே அமர்ந்திருந்ததோ, எதுவுமே அவளுக்கு உறைக்கவில்லை.

அன்றைய தினம் காய்ச்சல் தொற்றிக் கொண்டு விடுமோ என்ற பயத்தில் லாவண்யா தன் அம்மாவின் அறையில் படுத்துக் கொள்ள, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை உறக்கம் கலைந்து, இளவரசியின் அறையை எட்டிப் பார்த்துச் சென்றார் மீனாட்சி.

முழுதாக நாற்பத்தெட்டு மணி நேரம் அனலாக உடலை வருத்திய உஷ்ணம் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது. கட்டிலை விட்டு எழுந்தாலே தலை கிறுகிறுக்க, வெறும் அரிசிக் கஞ்சியும், ரொட்டியுமே ஆகாரமாகிப் போனது. என்ன உண்கிறோம் என்ற உணர் வின்றியே அம்மாவின் வற்புறுத்தலுக்காக எதையோ விழுங்கி வைத்தாள்.

சுந்தரம் துபாயிலிருந்து வெப்-கேமில் பேசினார்.

அப்பாவைப் பார்த்ததும் அழுகை பீறிட்டு வந்தது. "அப்பா..." என்று அவள் ஈனஸ்வரத்தில் அழைக்க...

"ரெண்டு காய்ச்சலுக்கே இப்படி இளைச்சிருக்கியே, கண்ணம்மா?" என்று மனம் நொந்து போனார்.

'பாவம்... காய்ச்சல் அவள் உடலில் இல்லை... மனதில்...!' என்று அவருக்கு எப்படித் தெரியும்?

ஊரிலிருந்து பாட்டியும், நடேசனும் நேரிலேயே புறப்பட்டு வந்துவிட, அந்த வாரம் முழுவதுமே விடுப் பெடுக்கும்படி ஆனது.

உடல் நிலை சற்றுத் தேறிய பின் அவள் மீண்டும் அலுவலகம் சென்ற நேரம், அவள் அமரும் அறைக்



கதவு பூட்டப்பட்டிருக்க, திகைத்துப் போய்ப் பார்த்தாள் இளவரசி.

குழப்பத்துடன் அவள் தருணைச் தேடிச் செல்ல, அதே நேரம் அவனும் தன் அறையிலிருந்து வெளிப்பட, சற்றும் எதிர்பாராத விதமாக அவன் மீதே மோதிக் கொண்டு நிற்க முடியாமல் தடுமாறியவளைத் தன் பிடிக்குள் தாங்கி நிறுத்தினான்.

யுக யுகமாய் எதிர்பார்த்த அந்த விரல்களின் தீண்டல்...! இன்று கம்பளிப் பூச்சி ஊர்வதைப் போல் கனமாய் இருக்க... சட்டென்று அவனிடமிருந்து விலகி நின்றாள்.

அவன் பார்வை அவள் அந்தரங்கத்தையே ஊடுருவிச் சென்றது.

"ரொம்பவும் இளைச்ச மாதிரி இருக்கே?" அவன் கண்களின் தாபம், குரல் வழியே கலந்து வழிந்தது.

லேசாகத் தலையாட்டியவள், "என்னோட ரூம்?" என்று இழுக்கவும்...

"உன்னுடைய டேபிளும் என் ரூமுக்கே மாற்றி யாச்சு. ஒவ்வொரு முறையும் இன்டர்காம்ல கூப்பிட்டு நேரத்தை வீணாக்கறதை விட நேரடியாவே பேசிட்டா நல்லதுதானே!"

அதிர்ந்து போனாள் இளவரசி.

நாள் முழுதும் இவனோடு ஒரே அறையில் இருப்பதா? பழைய அரசியாக இருந்தால் இந்தச் செய்தி

கேட்டதும், உள்ளம் உவகையில் ஊஞ்சலாடியிருக்கும். யாருகயோ சொந்தமாகப் போகும் இவனை எப்படி நாள் முழுதும் பார்த்துக் கொண்டிருப்பது?

“பழைய ரூமே எனக்குக் கொடுத்திடுங்களேன். எனக்கும் கொஞ்சம் ப்ரைவசி தேவைப்படும் இல்லையா?”

அவள் உருவத்தைப் போலவே அவள் குரலும் பலஹீனமாய் இருப்பதை உணர்ந்தான் தருண்.

“நம்ம ஆபீசுக்குப் போடப் போற புது ஃபர்னிச்சர்ஸ் எல்லாம் அங்க போடச் சொல்லிட்டேன். ஒரு பத்துப் பதினைஞ்சு நாள்ல ஷிஃப்ட் ஆயிடும். அதுவரைக்கும் அட்ஜஸ்ட் பண்ண முடியாதா?”

வேறு வழியில்லாமல் தலையாட்டிவிட்டுத் தன் இருக்கையில் அமர்ந்தாள் இளவரசி.

அவள் விடுப்பெடுத்திருந்த அந்த வாரத்தின் நிகழ்வு களை அவள் அருகிலேயே நின்று கொண்டு அவன் விளக்கிக் கொண்டிருந்தான்.

அவளது செல்களில் பூப் பூக்கச் செய்த அவனது அருகாமை இன்று எந்த உணர்வுகளையும் தட்டி எழுப்பவில்லை.

மானிட்டரில் தெரிந்த ஒரு குறிப்புரையை அவன் விரல் கொண்டு சுட்டிக் காட்டியபோது, அவனுடைய முழுக்கைச் சட்டை அவள் தோளை உரசிச் சென்றது.

தெரிந்தே நடந்ததோ? தெரியாமல் நடந்ததோ? வறண்டு கிடந்த அவள் மனதில் மெலிதாய் ஒரு சிலிர்ப்பு.



அவள் சிலிர்த்துக் கொண்டது தேகத்தின் நடுக்கமாய் வெளிப்பட்டதோ?

“காய்ச்சல் இன்னும் முழுசா விடலையா? நடுங்குற மாதிரி இருக்கேம்மா!” என்று அவள் நெற்றியில் கை பதித்தான் தருண்.

சற்றும் எதிர்பாராத அந்தச் செயலால் நிலை குலைந்து போனாள் இளவரசி.

அந்தப் பக்கம் திருமணம் நிச்சயம் செய்து விட்டு இங்கே ஏன் இப்படி நடந்து கொள்கிறான்? சட்டென்று அவன் கையைத் தட்டிவிட்டு அவனை எரித்து விடுவதைப் போல அவள் பார்க்க, அவன் முகமோ வசீகரப் புன்னகை யில்...!

“தொட்டுப் பேச வேண்டாம் ப்ளீஸ்.”

“ஏன்? ஹாய், ஹலோன்னு கை கொடுக்கும் போது தொட்டுத்தான் பேசறோம். அது தப்பில்லேன்னா இதுவும் தப்பில்லை.”

லாஜிக் இல்லாத மேஜிக்காய் அவன் வார்த்தைகள் அவளை வாய் மூட வைத்தன.

அவன் பக்கமே திரும்பாமல் அவள் தன் வேலை யில் மட்டுமே முனைப்பாய் இருந்த நேரம்...!

அவன் தன் சுழல் நாற்காலியில் அமர்ந்து அங்குலம் அங்குலமாய் அவளை ஆராய்ந்து கொண் டிருந்தான்... பார்வையால்!

அவள் கன்னங்களின் பூரிப்பு சற்றே வடிந்திருக்க, ஏற்கெனவே குண்டு குண்டாய் இருக்கும் கண்கள் முகத்தை அடைத்தது போல் பெரிதாய்த் தெரிந்தன. கழுத்தின் எலும்புகள் துருத்திக் கொண்டு நிற்க... காய்ச்சலில் இளைத்துப் போன அவளைப் பார்க்கவே பாவமாக இருந்தது.

உள்ளுணர்வு ஏதோ அறிவுறுத்த, வெடுக்கென்று அவள் திரும்பிப் பார்த்த நேரம், ஒன்றுமே அறியாதவன் போல் கணினியின் திரையைப் பார்க்கத் தொடங்கினான் தருண்.

திருமணம் நிச்சயமான பிறகு எதற்கு இந்தப் பார்வை? அவன் வருங்கால மனைவியைப் பற்றிய நினைப்பில் அவள் மீது பார்வையை ஓட விடுகிறானோ?

ச்சே... ஏன்தான் இங்கு வந்து அமர்ந்தோமோ என்று அருவ'ருப்பாய் இருந்தது.

ஏற்கெனவே சரியாக இருந்த துப்பட்டாவை அவள் மீண்டும் ஒருமுறை இழுத்துச் சரி செய்ததைக் கண்டு அவன் முகத்தில் ஏகத்திற்குப் புன்னகை.

அவன் சிரிப்பைக் கண்ட அவளுக்கோ உள்ளே சுறுசுறுவென்று கிளம்பியது.

இவன் காரியதரிசி மட்டும் தேடவில்லை. இவன் ரசனைகளுக்குத் தீனி போடுவதற்கும் ஆள் தேடுகிறான். ஒரு பக்கம் திருமணமாம். இன்னொரு பக்கம் மற்றப் பெண்களையும் ரசிப்பானாம்.



என்ன ஒரு கேவலமான புத்தி!

"இப்ப எதுக்கு என்னையே பார்த்துட்டு இருந்தீங்க? இதுக்காகத்தான் டேபிளை இந்த ரூமுக்கு மாற்றினீங்களா?"

அவளது திடீர்க் குற்றச்சாட்டில் ஒரு கணம் திக்கு முக்காடிப் போனவன் அவள் ரௌத்திரம் கண்டு மெலிதாகச் சிரித்துக் கொண்டான்.

"உன்னையே பார்த்தா என்னம்மா தப்பு? தொட்டாத்தான் தப்புன்னே. பார்த்தாலும் குற்றம்னா எப்படி? மலர்கள் அழகா இருந்தா ரசிக்கிறதில்லையா? அதே மாதிரிதான்."

"இப்படிச் சொல்ல வெட்கமாயில்லை. மலர்களும், பெண்களும் ஒண்ணா? பெண்களுக்குன்னு சில உணர்வுகள் இருக்கு."

"மலர்களும் பெண்களும் ஒண்ணில்லையா? நீங்க தானே உங்களை மலர்களோடு ஒப்பிட்டு வர்ணிக்கிறீங்க. தாமரை போன்ற கண்கள், எள்ளுப்பூ நாசி, முல்லைப்பூ பல் வரிசை, ரோஜா நிற இதழ்கள், அனிச்சமலர் மேனி, கொடி போன்ற இடையாள்!

"இப்படியெல்லாம்தானே பெண்களைப் பற்றி வர்ணனை செய்யறாங்க. ஆண்களைப் பற்றி வர்ணிக்கும்போது மட்டும் சிங்கம் போன்ற நடை... கழுகு போலப் பார்வை... கரடி போலத் தலை முடின்னு ஒரே காட்டுவாசிக் கதையாக இருக்கு."

காட்டுவாசி என்று அவன் சொன்னதைக் கேட்டதும், அமேசானைப் பற்றி ஞாபகம் வர அடக்க முடியாமல் சிரித்து விட்டாள் இளவரசி.

"இரண்டு மணி நேரம் பதினைந்து நிமிடம்..." என்று கைக்கடிகாரத்தைப் பார்த்து நேரம் சொன்னான் தருண்.

"எஃப்.எம். ரேடியோல சொல்ற மாதிரி இருக்கு. இப்போ எதுக்கு டைம் சொன்னீங்களாம்?"

"என் செக்ரட்டரி முகத்துல சிரிப்பைப் பார்க்க இரண்டு மணி நேரம் பதினைந்து நிமிடம் ஆகியிருக்குன்னு சொன்னேன்."

"ஹூம். இதுக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை."

பேச்சு சுவாரசியத்தில் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் அவள் வார்த்தைகளை விட...

"வேறு எதுக்குக் குறைச்சலாம்?" என்று கணீரென்று கேட்டுக் கொண்டே அழுத்தமான நடையோடு, அமர்த்தலான புன்னகையோடு, அவளருகில் அவன் நெருங்கி வர, தன் வார்த்தைப் பிரயோகங்களின் தாக்கம் புரிந்து அவள் சுதாரிப்பதற்குள், அவள் எழுந்து செல்ல முடியாத அளவு நீளமான கால்கள் அவள் மேஜையை நெருங்கி விட்டிருந்தன.

தன் வலிமையான கரங்களை அவள் மேஜையின் இரு பக்கமும் ஊன்றி, அவன் அணை கட்டி நிற்க... அவனது அருகாமை மீண்டும் அவளை நிலை தடுமாற வைத்தது. அவனை ஏறெடுத்துப் பார்க்கவும் முடியாமல்,



முகத்தை வேறு புறம் திருப்பிக் கொள்ளவும் முடியாமல், தவித்துக் கொண்டிருந்தாள்.

அவன் மேலிருந்து எழுந்த பாடி ஸ்ப்ரே வாசனை அவள் சுவாசத்தைத் தீண்டிச் செல்ல... விட்டிருந்த காய்ச்சல் இன்னும் வேகமெடுக்கும் போல இருந்தது.

நாசிக்கும், உதட்டுக்கும் நடுவே முத்து முத்தாய்ப் பூத்த வியர்வையைக் கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டாள் இளவரசி.

நல்லவேளையாக அலுவலகத் தொலைபேசி ட்ரிங் ட்ரிங்... என்று அலறி அவனை விலகிச் செல்ல வைத்தது.

மறுமுனையில் தெரிவித்த தகவலை உன்னிப்பாய்க் கேட்டவன், "சரி... உள்ள அனுப்புங்க. நான் பேசிக்கிறேன்..." என்று சொல்லவும்,

யார் வரப் போகிறார்களோ என்ற ஆர்வத்தோடு அறை வாசலைப் பார்த்துக் கொண்டே வேலையில் ஆழ்ந்தாள்.

"ப்ளீஸ்... மே ஐ கம் இன் சார்!" என்ற பழக்கப்பட்ட குரலைக் கேட்டுத் தூக்கிவாரிப் போட்டது.

"மோஸ்ட் வெல்கம் மிஸ் லாவண்யா! உள்ளே வாங்க..." என்று கம்பீரமாக வரவேற்றான் தருண்.

லாவண்யாவும், அவளது தோழி ஷைலஜாவும் கையில் சில குறிப்புப் புத்தகங்களோடு அவனெதிரே இருந்த இருக்கையில் அமர்ந்தனர்.

இவள் எதற்கு இங்கே வந்திருக்கிறாள் என்ற கேள்வியோடு இளவரசி அவள் தங்கையைப் பார்க்க... "ஹாய் அக்கா!" என்று கையசைத்தாள் லாவண்யா.

"குவாலிடி மேனேஜ்மென்ட் பற்றி ப்ராஜக்ட் ஒர்க் பண்ணச் சொல்லியிருக்காங்க அக்கா! எங்கயாவது போய்ப் பண்றதை விட நீ வேலை பார்க்கிற இடத்திலேயே செய்தா எனக்கும், என் ஃபிரெண்டுக்கும் பாதுகாப்பா இருக்கும். ரெண்டு நாள் முன்னாடியே சார் கிட்ட ஃபோன்ல பெர்மிஷன் கேட்டேன். நேர்ல வாங்க, பேச லாம்னு சொன்னார்."

அக்காவின் கேள்வியான பார்வைக்குத் தங்கை தன்னிலை விளக்கம் அளித்தாள்.

"ஆல் தி பெஸ்ட் லவண்!" என்று இளவரசி தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தாள்.

"அக்காவும், தங்கையும் பேசி முடிச்சாச்சா? நாம ஃபேக்டரி பக்கம் போகலாமா? குவாலிடி மேனேஜ்மென்ட் அங்கதான் கத்துக்க முடியும்..." என்று தன் இருக்கையை விட்டு எழுந்தான் தருண்.

லாவண்யா அவனிடம் சகஜமாகப் பேசிக் கொண்டே சென்றது மிகவும் வியப்பாக இருந்தது.

எப்படி இவர்களுக்குள் பழக்கமானது?

லாவண்யா இங்கே வரப் போகும் விஷயத்தை அவளிடம் சொல்லவே இல்லை. இவனும் இதைப் பற்றி வாயே திறக்கவில்லை.



ஹ்ம்... அத்தனை பெரிய திருமண நிச்சயத்தையே அவளிடம் மறைத்தவன்...! இதெல்லாம் இவனுக்கு ஜுஜுபி.

தன் தங்கையோடு அவன் அந்த ஃபேக்டரியின் மணல் பரப்பில் நடந்து செல்வதைக் காரிடாரில் நின்று பார்த்தாள். இந்தப் பக்கம் ஷைலஜா, அந்தப் பக்கம் லாவண்யா என்று நடுவில் அவன் சிரித்துப் பேசிக் கொண்டே செல்ல... வயிறு குமுட்டி அடுப்பாய்க் கணகணவென்று எரிந்தது.

'அலுவலகத்தில் வேலை செய்யும் எத்தனை பேர் இந்தக் கண் கொள்ளாக் காட்சியைப் பார்க்கப் போகிறார் களோ?' என்று மனம் நினைத்தது.

'நீ அவனோடு நடந்து செல்லும் போதும் இப்படித்தானே பார்த்திருப்பார்கள். அப்போது மட்டும் இனித்ததா?' என்று மற்றொரு மனம் வெவ்வவ்வே காட்டியது. தன் இருக்கையில் வந்து அமர்ந்த பிறகும், அவளுக்கு வேலையே ஓடவில்லை.

## 11

**அ**டுத்து வந்த சில நாட்களும் ப்ராஜக்ட் வேலை என்று லாவண்யாவும், அவள் தோழியும் அலுவலகம் தேடி வந்து போய்க் கொண்டிருக்க...

அவர்கள் இருவரும் அவனோடு சேர்ந்தமர்ந்து மணிக்கணக்காய்ப் பேசுவதும், சிரிப்பதும், தினமும் தருண்

அவர்களைத் தொழிற்சாலைப் பக்கம் அழைத்துச் செல்வதும் எனப் பரபரப்பாய்க் கழிந்தது.

குவாலிட்டி மேனேஜ்மென்ட் மட்டுமல்லாமல், ஆர்கிமெடிஸ் பிரின்சிபிள், நியூட்டன் லா, அக்சிலரேஷன் தியரி என்று எதைப் பற்றி யெல்லாமோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

இளவரசி முற்றிலும் வணிகவியல் படித்துத் தேறியவள் என்பதால் அவர்கள் பேசியதெல்லாம் எப்போதோ பிள்ளைப் பிராயத்தில் படித்ததாய் நிழலாடியது.

தன்னால் அவர்களுடன் உரையாடலில் கலந்து கொள்ள முடியாத ஆதங்கம், அவர்களிடம் அவன் சிரித்துச் சிரித்துப் பேசுகிறானே என்ற கவலை!

அடுத்து வந்த நாட்களில் அவள் முகத்திலிருந்த புன்னகை முற்றிலுமே தொலைந்து போயிருந்தது.

அதைக் கவனித்தும் கவனிக்காதவன் போல் தருண் வேண்டுமென்றே அந்தப் பெண்களிடம் இன்னும் அதிக சுவாரசியத்தோடு உரையாடலில் ஈடுபட்டான்.

அவன் பார்வை அவ்வப்போது இளவரசியின் முகத்தில் படிய... அங்கே தீப்பிழம்புகள் எரிவதைக் காண அவனுக்குப் பரமானந்தமாய் இருந்தது. தன் மேலுள்ள காதலின் மிகுதியால் ஏற்பட்ட பொறாமையின் விளைவு என்று அவன் மனம் கணக்கிட்டது.

அவள் மனமோ வேறு விதமாகக் கணக்கிட்டது. அங்கே எவளோ ஒருத்தியோடு திருமண நிச்சயதார்த்தம். இங்கே மற்றப் பெண்களோடு வழிசலா?



இப்படியொரு பெண் பித்தனாய் இருப்பான் என்று இளவரசி நினைத்தும் பார்க்கவில்லை.

போயும், போயும் இந்த லாவண்யா ப்ராஜக்ட் செய்கிறேன் என்று இங்கேதான் வர வேண்டுமா?

இளவரசிக்கு உள்ளே குமுறியது.

ஷைலஜாவுக்குப் பிறந்த நாள் என்று வந்து நின்ற போதுதான் உச்சகட்ட உணர்ச்சிப் போராட்டம்.

"ஸ்வீட்ஸ் எடுத்துக்கோங்க சார்... இன்னைக்கு எனக்குப் பர்த்டே!" என்று சாக்லெட் பாக்ஸை அவன் முன் நீட்டினாள் ஷைலஜா.

'மெனி ஹேப்பி ரிட்டர்ன்ஸ் ஆஃப் தி டே..." என்று சொல்லிக் கொண்டே, இனிப்பைக் கையிலெடுத்தவன், "வெறும் சாக்லெட் மட்டும்தானா? பெரிசா ட்ரீட் எதுவும் இல்லையா? ஒரு காலேஜ் லெக்சரருக்குச் சரியா உங்க ரெண்டு பேருக்கும் சயின்ஸ் ட்யூஷன் எடுத்திருக்கேன்மா... ஏதோ பார்த்துச் செய்யுங்க..." என்று பணிவு கொண்டவனாக அவன் கேட்க, இரண்டு பெண்களும் கலீரென்று சிரித்தனர்.

அந்தக் கலீர்ச் சிரிப்பைக் கேட்டதும், இளவரசிக்கு உள்ளே திகுதிகுவென்று எரிந்தது. இப்படிக் கவர்ச்சியாய்ப் பேசிப் பேசி இன்னும் எத்தனை பெண்களிடம் கடலை போடுகிறானோ? உள்ளுக்குள் குமைந்தாள்.

"லெக்சரர் இவ்வளவு வருத்தப்படறதுனால பீசா கார்னர் கூட்டிட்டுப் போயிடுவோம்... லவண்... என்ன

சொல்றே...?" என்று ஷைலஜா கேட்கவும், "ஷ்யூர்... வொய் நாட்...?" என்று சம்மதம் தெரிவித்தாள் லாவண்யா.

வீட்டில் பிள்ளைப் பூச்சி போல இருப்பவள், இங்கே இப்படிப் பேசுவதைப் பாரேன்! அவனோடு சேர்ந்து பீசா கார்னர் போக வேண்டுமா?

அக்கா எதிரே இருக்கிறாள் என்ற பயம் கூட இல்லாமல் சம்மதம் சொல்லச் சொல்கிறது. மனதுக்குள் புகைந்து போனாள்.

"அக்கா... நீங்களும் வாங்கக்கா..." என்று ஷைலஜா அழைத்த போதுதான் உச்சகட்ட ஆத்திரத்தில் வார்த்தைகள் தவறின.

"உங்களோடு ஊர் சுத்தத்தான் எனக்கு ஆபீஸ்ல சம்பளம் கொடுக்கறாங்களா...?"

பிறந்த நாளும் அதுவுமாக முகத்தில் அறைந்தது போல் அவள் கேட்ட கேள்வியில் ஷைலஜாவின் முகம் இருண்டு விட, லாவண்யாவுக்கோ தன் அக்காவா இப்படிப் பேசுவது என்று திடுக்கென்று இருந்தது.

"வரலேன்னா, வரலேன்னு ஸாஃப்டாச் சொல்ல வேண்டியதுதானே? எதுக்கு அவங்களை ஹர்ட் பண்றே?" என்று தருண் குறுக்கே வர,

"எனக்கு இப்படித்தான் பேச வரும். ஆளுக்குத் தகுந்த மாதிரி வேஷம் போடற வித்தை யெல்லாம் எனக்குத் தெரியாது!" வெடுக்கென்று அவனையும் எடுத்தெறிந்து பேசினாள்.



இரண்டு பெண்களும் மேலும் அதிர்ச்சியோடு அவனைப் பார்க்க,

அவன் புருவங்கள் கோபத்தில் நெரிய, தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவனாய்,

"கம்... லெட் அஸ் கோ... பர்த்டே மூட் டிஸ்டர்ப் ஆக வேண்டாம்..." என்று புறப்பட்டுச் சென்றான்.

சற்று நேரம் கழித்து ஒற்றை ஆளாய்த் திரும்பி வந்தவன், நேராகத் தொழிற்சாலைப் பக்கம் சென்று விட, கோப்புகளில் அவனிடம் கையெழுத்து வாங்குவதற்காகக் காத்திருந்தவள், அவன் வராமல் போகவே, அத்தனையும் தூக்கி அவன் மேஜை மீது அடுக்கி விட்டு, வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

வீட்டுக்கு வந்த பிறகும் ஆத்திரம் அடங்கவில்லை. மீனாட்சி, டிபார்ட்மெண்ட் ஸ்டோர் வரை சென்றிருக்க, எப்போதும் போல் லாவண்யா, தன் புத்தகங்களைப் பரப்பி வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"ஏய்... உனக்கின்னும் எத்தனை நாள் ப்ராஜக்ட் வொர்க் இருக்கு...?" என இளவரசி அதட்டலான குரலில் கேட்கவும்...

எப்போதும் லவண் என்று பாசமாய் அழைப்பவள், ஏய் என்று ஒருமையில் அழைத்து அதட்டுகிறாளே என்று லாவண்யாவுக்கும் சுர்ரென்று கிளம்பியது.

"ஏன்? எத்தனை நாள் இருந்தா உனக்கென்ன? நான் உனக்கும் இந்த ப்ராஜக்ட்டுக்கும் என்ன சம்பந்தம்? நான்

தருண் சார் கிட்டதானே உதவி கேட்கிறேன்...?" என்று வெடுக்கென்று கேட்டாள் இளையவள்.

"ஹூம்... ப்ராஜக்ட்டுன்னு சொல்லிட்டு நீங்க அடிக்கற கூத்தெல்லாம் தெரியாமத்தான் இருக்கு..." என்று இளவரசி முணுமுணுக்க, அது அட்சர சுத்தமாய்க் காதில் விழவும் அதிர்ந்து போனாள் லாவண்யா.

கோபத்தில் அவள் பார்வை அக்காவைப் பொசுக்கி விடும் போல் இருந்தது.

"அக்கா... நீயா இப்படிப் பேசுற...? என்ன பேசுறோம்... யார் கிட்டப் பேசுறோம்ன்னு தெரிஞ்சுதான் பேசுறியா?"

"வந்தமா... ப்ராஜக்ட் சம்பந்தமா என்ன வேலையிருக்கோ பார்த்தோமா... கிளம்பிப் போனோமான்னு இருக்க வேண்டியதுதானே? புதுசா என்ன அவரோட சேர்ந்துட்டு ஊர் சுத்தற பழக்கம்?"

"ஏன்? உனக்கேன் எரியுது? உன் ஃபிரெண்ட்ஸ் கூடச் சேர்ந்து நீ தியேட்டருக்குப் போகலாம்... நாங்க பீசா கார்னருக்குப் போகக் கூடாதா? ஊர் சுத்தறோமாம்...! பர்த்டே ட்ரீட்னு உன்னையும்தானே கூப்பிட்டோம்? நீ முறுக்கிட்டு நின்னா அதுக்கு நான் என்ன செய்ய?

"எங்க மனசுல எந்தத் தப்பும் இல்லை. நீயா ஆயிரம் கற்பனையில இறங்குனா அதுக்கு நான் பொறுப்பும் இல்லை. தருண் சார் எனக்கு ஒரு நல்ல ஃபிரெண்ட். அவர் கிட்டப் பேசுறதுக்கோ, பழகறதுக்கோ உன் அனுமதி எனக்குத் தேவையுமில்லை!"



அமைதியே உருவான தங்கையா இந்தப் பேச்சுப் பேசுகிறாள் என்று ஆடிப் போனாள் இளவரசி. தங்கையிடம் மூக்குடைபட்ட ஆத்திரத்தில், அன்று முழுவதும் அவள் உர்ரென்று இருக்க, அக்காளும், தங்கையும் ஏன் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரியாமல் மீனாட்சிதான் தவித்துப் போனார்.

"உங்க ரெண்டு பேருக்குள்ள என்னடி ஆச்சு?" என்று பலமுறை அவர் கேட்டும், எந்தப் பக்கமிருந்தும் பதிலில்லை. அன்று இரவு உறங்கிய போதும் எதிரும் புதிருமாக முகத்தைத் திருப்பிக் கொண்டு உறங்கினார்கள்.

லாவண்யா வேண்டுமென்றே எஃப்.எம். ரேடியோவை உச்ச ஸ்தாயியில் அலற வைக்க, எரிச்சலோடு தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்டாள் இளவரசி.

மறுநாள் லாவண்யா அலுவலகம் வந்தபோது, அவள் யாரென்றே தெரியாதது போல இளவரசி சட்டை செய்யாமல் இருக்க, உனக்கு நான் சற்றும் சளைத்தவள் அல்ல என்பது போல், தங்கையும் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

எப்போதும், "ஹாய் அக்கா...!" என்று சொல்லும் ஷைலஜா கூட, அன்று அவள் பக்கம் திரும்பவில்லை.

நடப்பதை யெல்லாம் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் தருண்.

முன்தினம் இளவரசி தன்னை எடுத்தெறிந்து பேசிய கோபம் இம்மியளவு கூட அவனுக்கு அடங்கவில்லை.

எதையும் வெளிப்படுத்திக் கொள்ளாமல், அவன் மனம் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தது.

**ரே**காவின் குடும்பம் மும்பையில் இருந்து திரும்பியிருக்க, அன்று மாலை அவர்கள் வீடு உறவினர்களால் கலகலவென்று நிறைந்திருந்தது.

தன் நகை ஷோ ரூமிலிருந்த அத்தனை லேட்டஸ்ட் டிசைன்களையும் கொண்டு வந்து வீட்டில் குவித்திருந்தார் ரகுநந்தன்.

திருமணத்திற்காக வாங்கிய புடவைகளையும், நகைகளையும், வெள்ளிப் பொருட்களையும் ஆராய்வதில் உறவினர்கள் ஈடுபட்டிருக்க, தன் அருமை மகன் அங்கே இல்லாததைக் கவனித்தார்.

"தருண் எங்க போனான்? இந்த நகை, புடவையெல்லாம் அவனும் பார்க்க வேண்டாமா? அவனை வரச் சொல்லும்மா சசி!"

அவனுக்கிருந்த மன நிலையில், யாருடனும் ஒட்டாமல் தன் சித்தி வீட்டுப் பால்கனியில் அமர்ந்திருந்தான். மாடியேறிச் செல்லச் சோம்பேறித்தனப்பட்டு, அண்ணனை செல்லில் அழைத்தாள் அருமைத் தங்கை.

"அண்ணா... இங்க எல்லோரும் சாரீஸ், ஜுவெல்ஸ் எல்லாம் பார்த்துட்டு இருக்கோம்... நீங்களும் கீழே வாங்கண்ணா...!"

"உனக்குப் பிடிச்சிருந்தா சரிதான் டாலி. லேடீஸ் மேட்டர்... நீங்களே பாருங்க...!" எப்போதும் கணீரென்று



ஒலிக்கும் அவன் குரல் சோர்ந்து போய்க் கேட்க, யோசனையோடு செல்லை அமர்த்தினாள் ரேகா.

இரவு ரகுநந்தன் வீட்டு டைனிங் டேபிள், அரட்டைக் கச்சேரியில் களை கட்டியிருந்தது. காஷ்மீர் புலாவ், வெள்ளரி ரைத்தா, இனிப்பு வகைகள், சப்பாத்தி, புல்கா, நவரத்தினக் குருமா, பன்னீர் 65, ஆப்பிள் டெசர்ட் என்று டேபிளை நிறைக்கும் விதமாய்...!

கேலியும், கிண்டலுமாய்க் குடும்பத்தினர் அனைவரும் கூடி உணவருந்திக் கொண்டிருக்க, தருண் மட்டும் பட்டும் படாமலும் பேசிக் கொண்டு, பெயருக்கு ஏதோ கொறிப்பதைக் கவனித்தாள் சசிரேகா.

"அண்ணா... மத்தவங்களுக்கு மிச்சம் வைக்காம ஃபுல் கட்டுக் கட்டுவீங்க... இன்னைக்கு என்ன யோசனை?" என்று அவன் காதருகே கிசுகிசுத்தாள்.

"என்னை டிஸ்டர்ப் பண்ணாம இருக்கியா?"

உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்த எரிச்சலில் அவன் வார்த்தைகளைக் கடித்துத் துப்ப, அவன் முகத்திலிருந்த கோபம், அவளை அரண்டு போகச் செய்தது. என்ன டென்ஷனோ என்று அமைதியாகிப் போனாள்.

டாம் அண்ட் ஜெர்ரி போல் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்ளும் அண்ணனும், தங்கையும் இன்று அமைதியாய்ச் சாப்பிடுவதைப் பார்க்க, சுபத்ராவுக்கே கூட ஆச்சரியமாக இருந்தது.

"இந்திராவும், மாப்பிள்ளையும் எங்க போனாங்க? அவங்களுக்கு டின்னருக்கு நேரமாகலையா?" ரேகாவின் பாட்டி (சுபத்ராவின் தாயார்) கேட்டுக் கொண்டிருந்தார்.

"ரேகாவுக்கும், யௌவனாவுக்கும் சீர் செய்ய என்னென்னவோ வாங்கணுமாம். அக்காவும், அத்தானும் ஷாப்பிங் போயிருக்காங்க... வர லேட்டாகும்..."

"இந்துவைத் திருத்தவே முடியாது. இன்னும் எவ்வளவுதான் அள்ளி அள்ளிக் கொடுப்பாளோ போ..." என்று சலித்துக் கொண்டார் பாட்டியம்மாள்.

இரவு விருந்து முடிந்து, தருண் தன் ஸ்கோடாவை நெருங்கிய போது, பின்னாலேயே வந்தாள் அருமைத் தங்கை.

"என் மேல ஏதாவது கோபமா அண்ணா? ஏன் ஒரு மாதிரி கடுகடுன்னு பேசுனீங்க?" என்று அவள் கேட்ட போது, அவனுக்கு மனம் உருகியது.

"உன் மேல் எனக்கென்னடா கோபம்? நான் வேற ஏதோ டென்ஷன்ல இருந்தேன்... குட் நைட்!"

சிரிப்பைத் தொலைத்த முகத்தோடு செல்லும் அண்ணனையே கவலையோடு பார்த்துக் கொண்டு நின்றாள் சசிரேகா.

அங்கே இளவரசிக்கும், லாவண்யாவுக்கும் யுத்தம் இன்னும் முடிவதாக இல்லை. நைட் ஸ்டடீஸ் பண்ணுகிறேன் பேர்வழி என்று, லாவண்யா விளக்கை அணைக்காமல் இருக்க, "நீ ஹால்ல போய்ப் படிக்க



வேண்டியதுதானே! நான் தூங்க வேண்டாமா?" என்று கத்திக் கொண்டிருந்தாள் இளவரசி.

"நீ அன்னைக்குக் கதைப் புத்தகம் படிக்கும்போது, எவ்வளவு நேரம் லைட் எரிஞ்சது? நான் பொறுத்துட்டுப் போகல... அதே மாதிரிதான். முடியலேன்னா, நீ போய் ஹால் சோபாவுல படுத்துக்கோ!" என்று அக்காவை வாய் மூட வைத்தாள் இளையவள்.

"ஏன்டி இப்படி ரெண்டு பேரும் லபோ திபோன்னு அடிச்சிக்கறீங்க...?" சத்தம் கேட்டு அறைக்கு வந்தார் மீனாட்சி.

"திமிரு... திமிரு... அமுக்குணி மாதிரி இருந்தவ என்னென்ன பேச்சுப் பேசுறா!" தங்கையை எரித்து விடுவதைப் போல முறைத்தாள் இளவரசி.

"என்னைச் சீண்டிப் பார்த்தா அப்படித்தான் பேசுவேன்..." சிலுப்பிக் கொண்டு நின்றாள் இளையவள்.

**ம**றுநாள் கடுப்புக் குறையாமல் அலுவலகம் சென்றவள், எம்.டி. சீட்டில் பிரபாகரன் வந்து அமருவார் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை.

"அங்கிள்... வாட் எ சர்ப்ரைஸ்...!" என்று வாய் நிறையப் புன்னகையோடு வரவேற்றாள் இளவரசி.

"எப்படியிருக்கே பொண்ணே? பர்த்டே பார்ட்டில பார்த்தது... அப்போதைக்கு இப்போ கொஞ்சம் இளைச்ச மாதிரி இருக்கியே? என் மகன் ரொம்ப மிரட்டறானோ?"

"அமேசான் ஊர்ல இல்லையா அங்கிள்? நீங்க வந்திருக்கீங்க?"

"என்னம்மா இப்படிக் கேட்கிறே? அவன் இன்னைக்கு சிங்கப்பூர் போற விஷயம் உன் கிட்டே சொல்லலையா? நாலு நாள் முன்னாடியே ட்ரிப் கன்ஃபார்ம் பண்ணிட்டானே! பிசினஸ் ட்ரிப் போயிருக்கான். அவன் வர்ற வரைக்கும் இந்தக் கிழவனோட டார்ச்சரை நீ தாங்கிக்க வேண்டியதுதான்!"

இளவரசிக்குக் குழப்பமாக இருந்தது.

இரண்டு நாட்கள் மும்பை சென்ற போது கூடச் சொல்லிவிட்டுச் சென்றவன், சிங்கப்பூர் பயணத்தை அவளிடம் சொல்லாதது ஏன்?

புதிதாய் மனதில் எழுந்த கவலைகளோடு தன் வேலையில் ஆழ்ந்தாள் இளவரசி.

பிரபாகரனும் அப்படி யொன்றும் அலுவலகத்திலேயே அமர்ந்து விடவில்லை. புதிய மிஷின்களைப் பொருத்திச் செல்ல டெக்னீஷியன்கள் வந்திருந்ததால், மேற்பார்வை பார்க்க வேண்டிப் பெரும்பாலும் தொழிற்சாலை வளாகத்திலேயே இருந்தார்.

அவசரமாகத் தேவைப்பட்டஆலோசனைகளைக் கூட, அவரை அலைபேசியில் அழைத்துத்தான் கேட்க வேண்டியிருந்தது.

இதற்கிடையில் பரமத்திக்குச் சரக்கேற்றிச் சென்ற லாரி பள்ளத்தில் கவிழ்ந்து விட, சரக்குகளைத் திருடு



போகாமல் காப்பாற்றி மாற்று வண்டியில் ஏற்றி விடும் தலைவலி என்று அத்தனையும் சேர்ந்து கொள்ள, எதற்குமே பொறுமை இழக்காத பிரபாகரன், சற்று டென்ஷனாகத்தான் இருந்தார்.

தருண் சிங்கப்பூரில் இருந்து தொடர்ச்சியாய் பேக்ஸ் அனுப்பிக் கொண்டிருக்க, அதற்கேற்றபடி வேலைகளை உடனுக்குடன் முடித்துப் பதில் அனுப்பிக் கொண்டிருந்தாள் இளவரசி.

அன்று பகல் தன் தந்தைக்குப் போன் செய்து, வெகு நேரம் தொழில் சம்பந்தமாகப் பேசிக் கொண்டிருந்தவன், தன்னிடம் ஒரு வார்த்தையாவது பேசுவான் என்று எதிர்பார்த்தவளுக்கு, ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது.

இருப்பதெல்லாம் போதாது என்று, மாலை வீடு திரும்பிய போது பெரிய அதிர்ச்சி. அபார்ட்மெண்ட்ஸில் குடியிருந்த மஞ்சுளா மகளின் பூப்புனித நீராட்டு விழாவிற்கு மீனாட்சி சென்றிருக்க, லாவண்யா ஹாயாக சோபாவில் அமர்ந்து தருணுடன் அலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள்.

காதிலிருந்து கிளம்பிய புகையைக் கட்டுப்படுத்தத் தெரியாமல், கனன்று கொண்டிருந்தாள் இளவரசி.

"இட்ஸ் ஓகே தருண் சார்... ப்ராஜக்ட் ஃபினிஷிங் ஸ்டேஜ் வந்தாச்சு. நான் மேனேஜ் பண்ணிக்கிறேன். ஹேவ் எ நைஸ் ஸ்டே. வரும்போது எனக்காக என்ன வாங்கிட்டு வருவீங்க...?" என்று அவள் மிகவும்

உரிமையோடு கேட்டுக் கொண்டிருக்க, அந்தப் பக்கம் அவன் என்ன சொன்னானோ, கலகலவென்று சிரித்தாள் லாவண்யா.

அல்லிமலர்க் கண்கள் அமிலக் கண்களாக மாற, தங்கை அவனிடம் பேசிச் சிரிப்பதை வயிறெரியப் பார்த்துக் கொண்டு நின்றாள் இளவரசி.

“லாவண்யா... எங்க எம்.டி. கிட்டயா பேசிட்டு இருந்தே?”

“ஆமாம்... அவர்தான் சிங்கப்பூர்ல இருந்து போன் செய்தார். அதுக்கு என்ன? ஃபிரெண்ட்ஸ் கிட்டப் போன்ல பேசறது கூடத் தப்புன்னு சொல்லுவியா?”

என்னதான் நடக்கிறது? தங்கையிடம் பேசத் தெரிந்தவனுக்குத் தன்னிடம் ஒரு வார்த்தையாவது பேச வேண்டும் என்று தோன்றவில்லையா?

‘அவன் எவளுக்கோ சொந்தமாகப் போகிறவன் என்று தெரிந்தும், மீண்டும் உன் மனதில் ஏக்கங்களை வளர்த்துக் கொள்கிறாயே இளா...!’ என்று மனச்சாட்சியார் மண்டையில் அடித்தார்.

அன்று இரவுவரை அவனிடமிருந்து தனக்கும் அழைப்பு வருமா என்ற நப்பாசையில் காத்திருந்தவள், அப்படி எதுவும் நடக்காமல் போகவே, அலுவலக சம்பந்தமாக முக்கியமான விஷயம் பேச வேண்டியிருப்பதைப் போல, அவளாகவே அவன் செல்லுக்கு டயல் செய்தாள். ரிங் போய்க் கொண்டே இருக்க, அவனிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.



## 12

அடுத்து வந்த நாட்களும் மின்னல் வேகத்தில் நகர்ந்தன. விபத்துக்குள்ளான லாரி, அதற்கான இன்சூரஸ் வேலைகள், டிரைவர், கிளீனரின் மருத்துவச் செலவு, காவல்துறைக் கெடுபிடிகள், சிங்கப்பூர் ஆர்டர்களை உடனுக்குடன் நிறைவேற்றுவது என்று பிரபாகரன் ஒரு பக்கமும், இளவரசி ஒரு பக்கமும், அவரவர் வேலைகளில் இருக்க, மூச்சு விடக் கூட நேரமில்லாமல் வேலைப் பளு அழுத்தியது.

கண்ணைக் கட்டி விட்டது போல் இருந்த நேரம், சசியிடமிருந்து அழைப்பு.

ஏனோ சசியின் குரலைக் கேட்பதற்கே வெறுப்பாக இருந்தது.

“ஹேய் இளா... நான் மும்பையில் இருந்து வந்தாச்சுப்பா... நம்ம ஃபிரெண்ட்ஸ் எல்லோருக்கும் என் சார்பா மேரேஜ் ட்ரீட்... ஷெரட்டன்ல அரேஞ்ச் பண்ணியிருக்கேன் இளா... சாயந்தரம் அவசியம் வந்துடு...”

‘ஹும்... நான் இருக்கும் நிலையில் ட்ரீட் ஒன்றுதான் குறைச்சல்...!’ என்று மனதுக்குள் சலித்துக் கொண்டவள், அவசியம் வருவதாக ஒப்புக்குச் சம்மதித்தாள்.

அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் க்ளோஸ்ட் ரூப், ஓபன் ரூப் என்று இரண்டு பகுதிகளாக இருக்க, திறந்த வெளிப் புல் மைதானத்தில் இரண்டு டேபிள்கள் ரிசர்வ் செய்திருந்தாள் சசிரேகா.

உமேஷ், ஸ்டீபன், வினோத் மூவரும் சற்றுத் தள்ளியிருந்த மேஜையில் அமர்ந்திருக்க, சுலோ, வினயா, ரேகா மற்றொரு டேபிளில் அமர்ந்து கொண்டனர்.

"என்னடி... இளா இன்னும் வரக் காணோம்?" என்று ரேகா புருவம் சுருக்கினாள்.

"போன் செய்து பாருடி... பார்ட்டி இருக்கிறதே மறந்துட்டாளோ என்னவோ? சீக்கிரமா வரச் சொல்லு!" சுலோதான் துரிதப்படுத்தினாள்.

"இளா... உனக்காகத்தான் காத்திருக்கோம். எங்கப்பா இருக்கே?" செல்லில் ஒலித்த ரேகாவின் குரல் எரிச்சலை மூட்டியது.

"சாரி ரேகா... எனக்கு ரொம்பவும் தலைவலியா இருக்கு. நான் வரலப்பா... நீங்க கன்டினியூ பண்ணுங்க."

"என்னடி, இப்படிச் சொல்றா? தலைவலியா இருக்காம்..." என்று ரேகா மற்றவர்களைப் பார்க்க,

"கொடுப்பா, நான் பேசறேன்..." என்று செல்லை வாங்கிக் கொண்டாள் சுலோ.

"என்னடி பிரச்னை உனக்கு? பேக்டரிக்குப் போக முடியும்... இங்க வர முடியாதோ? அப்படியே தலைவலி இருந்தாலும், அதோடயே வந்து சேரு. ரேகா கல்யாணம் பண்ணிட்டு மும்பை போயிட்டா மறுபடியும் எப்பப் பார்ப்போமோ?"

'வரலேன்னா விடேன். தலைவலி கூடத் தகவல் சொல்லிட்டு வருமா? ரேகாவை நான் எப்பப் பார்க்கணுமோ அப்பப் பார்த்துக்கறேன். என்னை அங்க எதிர் பார்க்க வேண்டாம். நீங்க செலிபரேட் பண்ணிக்கோங்க."



முகத்தில் அடித்தது போல் சுள்ளென்று பேசி இளவரசி தொடர்பைத் துண்டிக்கவும்... சுலோவின் முகம் சுருங்கிப் போனது.

"என்னடி ஆச்சு இவளுக்கு? முகத்துல அடிச்ச மாதிரிப் பேசறா? நம்ம இளாவான்னு சந்தேகமா இருக்குப்பா."

'விடுப்பா. என்ன மூட்ல இருக்காளோ என்னவோ? கூல் டௌன் ஆகட்டும். என்ன வேணுமோ ஆர்டர் பண்ணுங்க. வந்த வேலையைப் பார்ப்போம்."

அவரவர்களுக்குத் தேவையான உணவை ஆர்டர் செய்துவிட்டு அரட்டைக் கச்சேரியில் ஈடுபட்டனர்.

சுலோவின் முகம் மட்டும் நீண்ட நேரம் சிந்தனை யிலேயே இருக்கவும்... என்ன விஷயம் என்று விசாரித் தாள் சசிரேகா.

**ம**றுநாள் காலை. இருட்டென்னும் அரக்கனை இழுத்துத் தள்ளி விட்டுப் பூமிப் பந்து பூபாள ராகம் பாடிய வேளை.

லாவண்யா படித்துக் கொண்டிருக்கும் குரல் எங்கோ தூரத்திலிருந்து கேட்பது போல ஒலிக்க, அரை குறை நித்திரையோடு புரண்டு படுத்தாள் இளவரசி.

தூக்கத்தைத் தொடர முடியாமல் அவன் முகம் நினைவில் வந்து அலைக்கழிக்க, ச்சே... இனியும் ஏன்

அவனையே நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று வெறுப்பாய் இருந்தது.

ஒரு காலத்தில் இதே முகம் அவள் கனவில் வந்து உறக்கத்திலேயே உடல் சிலிர்க்க வைத்த விந்தையை நினைத்துக் கொண்டாள். காலையில் விடியும் போதே இப்படி எரிச்சலோடு விடிய வேண்டுமா!

பல் துலக்கி விட்டு மொட்டை மாடிக்குச் சென்றவள் மனதின் அலைக்கழிப்பு நீங்க நீண்ட நேரம் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தாள்.

காலை நேரத்துப் பனி தேகத்திற்கு இதமாய் இருந்தது. தினமும் இப்படி வெள்ளனே எழுந்து இந்தக் குளிரை அனுபவித்தால் நன்றாகத்தான் இருக்கும்.

"அடடே... இன்னைக்கு வெள்ளனே எழுந்துட்டியா? உலகத்தின் எட்டாவது அதிசயம்தானடி மகளே!" மொட்டை மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தவளைத் தன் பாணியில் வரவேற்றார் மீனாட்சி.

"அரசிம்மா! நம்ம ஜானு மாமி சுமங்கலி பூஜை செய்தாங்களாம். வெத்தலை பாக்கு பழத்தோட புடவையும் வெச்சுக் கொடுத்தாங்க. இன்னைக்கு நிறைஞ்ச முஹூர்த்த நாளா இருக்கு. கட்டிக்கோயேன்."

குளிக்காமல் கொள்ளாமல் ஹால் சோபாவில் வந்து அலுப்போடு அமர்ந்த மகளிடம் தன் கோரிக்கையை வைத்தார் மீனாட்சி.

"புடவையைக் கட்டிக்கிட்டு நான் ஆபீஸ் போறதா? வேலை நடந்த மாதிரிதான். எனக்கு எப்பவுமே சுரிதார் தான் வசதியா இருக்கும். உங்களுக்குத்தானே கொடுத்தாங்க. நீங்களே கட்டிக்கோங்க."



"என் வார்த்தையை மதிக்கக் கூடாதுன்னே கங்கணம் கட்டிகிட்டுத் திரிவியா? நான் என்ன சொல்லி... இதுவரைக்கும் நீ கேட்டிருக்கே? அம்மாவைக் கண்டா அவ்வளவு அலட்சியம்! உங்களுக்கு வேளா வேளைக்குச் செஞ்சு போட மட்டும்தான் நான் வேணும். ஒரு சமையல் காரி அளவுக்குத்தான் எனக்கு இந்த வீட்டுல மரியாதை."

திடீரென்று கிளம்பிய கோபத்தில் மீனாட்சி முகம் சிவந்து நிற்க, மகள்கள் இருவருமே பதறிப் போனார்கள்.

"இப்போதைக்குள்ள உங்களுக்கு அடிக்கடி கோபம் வருதும்மா! இப்ப என்ன ஆயிடுச்சுன்னு இப்படிச் சத்தம் போடறீங்க? புடவை கட்டுறது ஒரு சாதாரண விஷயம். இதுக்குப் போய் டென்ஷன் ஆவானேன். இன்னொரு நாள்தான் கட்டிட்டுப் போகட்டுமே. அசௌகரியமா இருக்குன்னு சொல்றா இல்லை." லாவண்யா தமக்கைக்காகப் பரிந்து கொண்டு வந்தாள்.

"பேசுடி... நீயும் அவளோட சேர்ந்துட்டுப் பேசு. கட்டுன புருஷனை அத்தி பூத்த மாதிரி என்னைக்கோ ஒரு நாள் பார்க்கணும். பெத்த புள்ளைங்கள கண்ணுக்குக் குளிர்ச்சியா அலங்காரம பண்ணிப் பார்க்கிற கொடுப்பினை கூட எனக்கில்ல. எனக்கு என்னதான்டி வாழ்க்கையில மிச்சமிருக்கு? ஊர்ல இருக்கிற யாரும் புடவை கட்டிட்டு ஆபீஸ் போறதே இல்லை பாரு. உன் அக்காளைத்தான் புதுசா செய்யச் சொல்லிட்டாங்க."

முகத்தை நொடித்துக் கொண்டு மீனாட்சி சமையல் கட்டுக்குள் சென்று விட, சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் கேள்வியோடு பார்த்துக் கொண்டனர்.

"அம்மாவுக்கு அப்பா ஞாபகம் அதிகமா வருதுன்னு தோணுதுக்கா. வெளிய சொல்ல முடியாம மனசுக் குள்ளயே வெச்சு அழுத்திக்கறாங்க. அன்னைக்கு வாஷிங் மெஷின் போட்டுட்டு இருந்தப்ப கூட கண் கலங்கியிருந் தாங்க. கேட்டதுக்கு சோப் நுரை கண்ணுல தெறிச்சதா சொன்னாங்க. ராத்திரி சரியா தூக்கமில்லாம புரண்டு புரண்டு படுக்கறாங்க. இப்பவும் நம்மகிட்ட பேசும்போது அப்பாவைப் பற்றித்தான் முதல் வார்த்தை வருது பார்த்தியா?"

அம்மாவின் நிலை கண்டு இளவரசிக்குக் கண்களில் நீர் தளும்பி நின்றது.

உண்மையிலேயே அந்த ஜீவனுக்கு என்னதான் சுகமிருக்கிறது? எந்நேரமும் இரண்டு பெண்களுக்கும் வாய்க்கு ருசியாய்ச் சமைத்துப் போட்டுக் கொண்டு, அக்கம் பக்கத்தில் அரட்டை அடித்துக் கொண்டு, மிச்ச மிருக்கும் நேரத்தில் ஒன்று கடை வீதிக்குப் பையைத் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டியது, அல்லது கோவிலுக்குப் போகிறேன் என்று பூக்கூடையோடு புறப்பட வேண்டியது...!

ஒரு கல்யாணம் காட்சியென்றால் கூட கணவனோடு ஜோடி போட்டுக் கொண்டு போக முடிகிறதா? ஒற்றை யாகத்தான் நிற்கிறார்கள்.



வெட்டிங் அனிவர்சரியைக் கூடத் தனியாகத்தானே கொண்டாடினார்கள். இளாவும், ரேகாவும் வாங்கிக் கொடுத்த புதுப் புடவைகளைக் கூட வற்புறுத்தலுக்காகத் தானே கட்டிக் கொண்டார்கள். வெப்-கேமில் அப்பா வாழ்த்துச் சொல்ல, அதன் வழியாகவே அப்பாவுக்குச் சென்று சேர்ந்த அம்மாவின் எலெக்ட்ரானிக் புன்னகை.

"அம்மா... ப்ளீஸ் திரும்புங்க...!" மீனாட்சியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினாள் இளவரசி.

மீனாட்சி திரும்பாமல் சமையல்கட்டு மேடை மீது பாத்திரங்களை உருட்டிக் கொண்டிருக்க, அவர் கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் இளவரசியின் கை மீது பட்டுத் தெறித்தது.

"என்னம்மா இது? உங்களை அழ வெச்சிட்டு நான் எப்படி ஆபீஸ்ல நிம்மதியா வேலை பார்க்க முடியும்? அந்தப் புடவையை எடுத்துக் கொடுங்க. நான் கட்டிக் கறேன்."

"பூஜை ரூம்ல வெச்சிருக்கேன்டி. தலைக்குக் குளிச்சிட்டு வந்து சுவாமியை நமஸ்காரம் பண்ணிட்டு கட்டிக்கோ. சீக்கிரமா நல்ல இடமா தகைஞ்சு வரப் போகுதா இல்லையான்னு பாரு."

அம்மா சொன்னதற்குச் சலிப்பாய்ப் புன்னகைத் தவள் குளியலறை தேடிச் செல்ல, அங்கு ஷவரின் நீரோடு அவள் கண்ணீரும் சேர்ந்து கரைந்து கொண் டிருந்தது.

குளித்து விட்டு நைட்டியில் வந்தவள், பூஜையறையில் தேங்காய்ப் பழத் தட்டு மீது வைக்கப்பட்டிருந்த மெரூன் நிறக் காட்டன் புடவையைக் கையிலெடுத்தாள்.

இரண்டங்குலத் தங்க நிறச் சரிகையுடன், உடல் பகுதியில் அங்கங்கே சிதறிக் கிடந்த தங்க நிற நட்சத்திரங்களோடு அழகாய் இருந்தது.

ஜானு மாமி பொதுவாக வீட்டு உபயோகத்திற்குக் கட்டும் புடவைகளே அழகாகத்தான் இருக்கும். சுமங்கலி பூஜை என்றால் கேட்கவே வேண்டாம்.

அவள் வகுப்பில் படித்த ப்ரீத்தி குப்தாவின் திருமணத்தின் போது தோழிகள் அனைவரும் ஒரே நிறத்தில் உடுத்திக் கொள்ள வேண்டும் என்று தைத்து வைத்த மெரூன் நிற ரவிக்கை...! இப்போதும் அளவு சரியாகத்தான் இருந்தது.

காட்டன் புடவையில் பாந்தமாய் வந்து நின்ற மகளுக்கு அழகாய்த் தொடுக்கப்பட்ட முல்லைப்பூச் சரத்தினைக் கூந்தலில் சூடிவிட்டாள் அன்னை.

"பாட்டி கொடுத்த சங்கிலி போட்டுக்கோ இளா!" என்று அவர் சொல்ல, விழுந்து விழுந்து சிரித்தாள் லாவண்யா.

"என்ன சொல்லிட்டேன்னு இப்படிச் சிரிக்கறே?" மீனாட்சி மீண்டும் கடுப்பானார்.

"இன்னும் ஒட்டியாணம், வங்கி, அட்டிகைன்னு எல்லாமே போட்டுக்கோ அக்கா. ஸ்கூட்டியோட சேர்த்து எவனாவது கடத்திட்டுப் போகட்டும். நாடு இருக்கற இருப்புக்கு இதெல்லாம் தேவைதான்."



கேலி செய்த லாவண்யாவிடம் மீனாட்சி கை ஓங்க... "எஸ்கேப்!" என்று அவளும் குளிப்பதற்காக ஓடினாள்.

சண்டைக் கோழிகளாய் இருந்த சகோதரிகள் இருவரும் ஒன்றாய் அமர்ந்து ஆனியன் தோசை, புதினா சட்னி என்று ஒரு பிடி பிடித்துக் கொண்டிருக்க, எப்போதும் அக்காளின் முகத்திலிருக்கும் புன்னகை காணாமல் போயிருப்பதைக் கவனித்தாள் லாவண்யா.

டிஃபன் முடித்து, புத்தகங்களை அடுக்கி வைத்து, காஃபியும் குடித்து முடிக்கையில் கல்லூரிக்கு நேரமாகி விட, வாசல்வரை சென்றவள், "அக்கா... ஆல் தி பெஸ்ட்!" என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

"எதுக்குடி அவ ஆல் தி பெஸ்ட் சொல்றா?" என்று மீனாட்சி விழிக்க...

"எனக்கு மட்டும் என்ன தெரியும்? இந்தப் புடவை கட்டினா நல்ல இடம் தகைஞ்சு வரும்னு சென்டிமென்ட் பேசுனீங்களே, அதுக்காகப் பெரிய மனுஷி வாழ்த்தியிருப்பாளா இருக்கும்."

மீனாட்சியிடம் விடை பெற்று அவளும் அலுவலகம் புறப்பட, மகளின் அழகு அவர் கண்களுக்குத் தெய்விகமாய்த் தெரிந்தது.

**வ**ழக்கம் போல் முக்கியமான தபால்களைக் கொண்டு வந்து அவள் மேஜை மீது வைத்து விட்டுச் சென்றான் சின்னமணி. அதில் பெரும்பாலானவை வியாபார சம்பந்தமாகச் சிங்கப்பூரிலிருந்து வந்திருந்த கடிதங்கள்.

இதற்கெல்லாம் என்ன பதில் அனுப்ப வேண்டும்? இப்போதே அனுப்ப வேண்டுமா?

அவன் வரும்வரை காத்திருக்க வேண்டுமா?

அவன் வருவதற்கு நாட்கள் மிச்சமிருக்கின்றனவே!

இந்தப் பிரபா அங்கிள் வந்தாலாவது கேட்கலாம். இன்னமும் வந்தபாடில்லை.

இதற்கு நடுவே கொட்டியூருக்குச் சரக்குச் சென்று சேரவில்லை என்று தொலைபேசியில் வந்த குற்றச்சாட்டு வேறு. ஒற்றை ஆளாய் இந்தச் சின்னப் பெண் எத்தனை வேலைகளைச் சமாளிப்பாள் என்று பிரபாகரன் யோசிக்க வேண்டாம்?

குடோன் சூபர்வைசருக்குப் போன் செய்து விவரம் கேட்டறிய முயன்றாள்.

கொட்டியூர் செல்லும் வழியில் பாலம் முறிந்து விழுந்து மிகப் பெரிய போக்குவரத்து நெரிசலில் லாரி சிக்குண்டு நிற்பதாகத் தகவல் வந்தது. அதைக் கஸ்டமரிடம் தெரிவித்து ரிஸீவரை வைத்து விட்டு அவள் திரும்பவும், கதவைத் திறந்து கொண்டு அவன் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

அவனைச் சற்றும் அங்கே எதிர்பார்க்காதவள் என்ன நடக்கிறது என்று சுதாரித்துக் கொள்ளும் முன்பே, வேங்கையாய் அவள் கைகளைப் பின்புறம் வளைத்துப் பிடித்தவன், கண நேரத்தில் அவள் முகத்தின் மீது போர் தொடுத்தான்... தன் அழுத்தமான உதடுகளால்!



பயத்தில் விரிந்த அவள் விழிகள் அவன் உதட்டுத் தாக்குதலின் உக்கிரம் தாங்காமல் தவித்துத் தடுமாறின. "யூ ப்ளடி!" என்று வாய் திறந்தவளை அதற்கு மேல் பேச அவன் அனுமதிக்கவில்லை.

தேகங்கள் இரண்டும் இடைவெளியின்றி நெருங்கி யிருக்க, தன் முரட்டுப் பிடியிலிருந்து அவன் அவளை விடுவித்த வேளை சூறாவளியில் சிக்கித் துவண்டவளாய்த் தடுமாறி நின்றாள் இளா.

தாழம்பூ முகம் தாமரை வண்ணத்தைப் பூசியிருக்க, ஹார்மோன்களின் திடீர்ப் புரட்சியில் உடல் முழுதும் சூடான ரத்தம் தாறுமாறாய்ப் பாய்ந்து கொண்டிருந்தது.

கண்ணெதிரே அவன் நின்றாலும், காணும் காட்சி நிஜம் தானா என்று புரியாமல் தலை கிறுகிறுக்க, இதயம் படபடவென்று அடித்துக் கொள்ள, நடுங்கும் கைகளால் பின்புறம் இருந்த மேஜையைப் பிடித்துக் கொண்டாள் இளவரசி.

அவன் சுவை தேடியதில் அவள் உதட்டின் மீது ஒற்றைத் துளியாய் ரத்தப் பூ...!

ஆஜானுபாகுவாய் எதிரில் நின்றவனின் பார்வை யில் காதல், காமம், வேகம், வேட்கை... அத்தனையும் கலந்து நிற்க, அவன் சுவாசமும் தாள லயம் தப்பி மேலும் கீழுமாய் உஷ்ணத்தோடு ஏறி இறங்கியது.

சினம் கொண்ட சிங்கமாய் நின்றவன் பளபளக்கும் விழிகளோடு அவளை விழுங்கி விடுவதைப் போலப்

பார்த்தான். அவனை அறைய வேண்டும் என்று கோபத் தோடு ஓங்கிய அவள் கரங்களைப் பிடித்து மீண்டும் தன்னருகே இழுத்துக் கொண்டான் தருண்.

"வெட்கமாயில்ல உங்களுக்கு? இப்படிக் காட்டு மிராண்டித்தனமா நடந்துக்கறீங்க?" சினம் கொண்ட வளாய்ச் சீறினாள் இளவரசி.

அவளைச் சற்றும் தன் பிடியிலிருந்து விடுவிக் காதவன், "நீதானம்மா 'தானே' புயல், அமேசான் காட்டு வாசின்னு எனக்குப் பேர் வெச்சே. இந்தக் காட்டுவாசி இப்படித்தான் நடந்துக்குவான்..." என்று அடிக்குரலில் கர்ஜித்தான் தருண்.

"என்ன அப்படிப் பார்க்கறே? அப்பா இந்த வாயாடியைப் பத்தின எல்லாமே சொல்லிட்டாரு. அங்கிள், அங்கிள்ன்னு வாய்க்கு வாய் அவரைக் கூப்பிட்டே. அங்கிள்ன்னா மாமாதானே! இந்த மாமன் மகனுக்கு உன்கிட்ட விளையாட உரிமையிருக்குதானே?"

அவன் உதட்டில் மர்மமாய்ப் புன்னகை நெளிந்தது.

"கதையெல்லாம் புதுசா இருக்கு. என்கிட்டே விளை யாடற உரிமையை உங்களுக்கு யார் கொடுத்தாங்களாம்? எவ கூடவோ திருமணத்தை நிச்சயம் பண்ணிட்டு என் கிட்ட விளையாட வருவீங்களா?"

துளைத்துவிடும் துப்பாக்கிக் குண்டுகளாய் வார்த் தைகள் சீறிக் கொண்டு வந்து விழுந்தன.

"வாட்...? என்ன உளறிக்கிட்டு இருக்கே? எனக்குத் திருமணம் நிச்சயமானதை நீ எப்பப் பார்த்தே?"



"அடேங்கப்பா! நல்லாத்தான் நடிக்கிறீங்க. பொண்ணு கொடுத்துப் பொண்ணு எடுக்கற விஷய மெல்லாம் ரேகா என்கிட்ட சொல்லிட்டா. நீங்க மும்பை போனது உண்மைதானே? அங்க உங்களுக்கும் உங்க அத்தை பெண்ணுக்கும் திருமணம் நிச்சயமானது உண்மைதானே?

"உங்க அத்தை பெண்ணோட அண்ணனைத் தான் ரேகா கட்டிக்கப் போறாங்கறது உண்மைதானே? இது எதுவுமே எனக்குத் தெரியாதுன்னு நினைச்சிட்டு உங்க இஷ்டத்துக்கு வேஷம் போட்டுட்டு இருக்கீங்க. அந்தப் பக்கம் திருமணமும் நிச்சயம் பண்ணிப்பிங்க. இந்தப் பக்கம் மற்றப் பொண்ணுங்க கிட்டயும் வழிவீங்க. அதுக்கெல்லாம் வேற ஆளைப் பாருங்க."

அவள் சொன்ன அத்தனையும் முகம் நிறையத் திகைப்போடு கேட்டுக் கொண்டிருந்தவன், முடிவில் சிரிப்பை அடக்க முடியாமல், நீண்ட நேரம் இடைவிடாமல் உடல் குலுங்கச் சிரித்தான்.

"எதுக்கு இப்படிச் சிரிக்கறீங்க? முதல்ல என் மேல இருந்து கையை எடுங்க. இல்லேன்னா சத்தம் போட்டு அத்தனை பேரையும் கூப்பிடுவேன்."

"அத்தனை பேரையும் என்ன? போலீசையே வேணாலும் கூப்பிடு. நான் இங்கயே இருக்கேன்."

கைகளை விலக்காமல் பளீர்ப் புன்னகையோடு அவன் அவளையே பார்க்க, சொன்ன வார்த்தைகளை

நிறைவேற்றத் தயங்கியவளாய்த் துவண்டு நின்றாள் இளவரசி.

அவள் தொண்டைப் பந்து ஏறி இறங்குவதை அழகாய் ரசித்தவன் அவளைத் தன்னருகே இன்னமும் நெருக்கமாய் இழுத்துக் கொண்டு நெற்றியில் உதடு பதித்தான்.

"உன்னால முடியாதுன்னு எனக்குத் தெரியும் இளா. நீ என்னைக் காதலிக்கறேன்னு எனக்கும் தெரியும். நான் உன்னை நேசிக்கறேன்னு நீயும் யூகம் பண்ணியிருக்கலாம். வாய் திறந்து சொல்லலைன்னாலும் நம்ம கண்களும், மனசும் இத்தனை நாள்ல காட்டிக் கொடுத்திருக்கும். உன்னைத் தவிர இந்த மனசுக்குள்ள வேற எவளுமே இல்லடி! நீதான் முட்டாள்தனமான முடிவுல இருக்கே."

புரியாத புதிராய்த் தவிக்கும் விழிகளோடு அவன் முகத்தைப் பார்த்தாள்.

"அப்ப ரேகா சொன்னது..."

"முட்டாள். முட்டாள்! ரேகாவுக்கு ஒரே ஒரு அண்ணன்தான் இருக்கணும்னு சட்டசபையில் தீர்மானம் போட்டுட்டாங்களா? எனக்கு மேல ஒருத்தன் இருக்கான்.

"அஜய்ன்னு பேரு. அமெரிக்கால இருக்கான். அவனுக்கும் யௌவனாவுக்கும்தான் திருமணம் நிச்சயமாயிருக்கு. நீயா எதையோ போட்டு உழப்பிக்கிட்டு இருந்திருக்கே."



அவன் சொன்னதைக் கேட்டுச் சிலை போல உறைந்து நின்றாள் இளவரசி.

ரேகாவுக்கு மற்றொரு அண்ணன் இருப்பதையே தெரிந்து கொள்ளாமல் தருணுக்குத்தான் நிச்சயம் என்று நினைத்து, உச்சபட்சக் கற்பனையில் அவளாக முடிவு எடுத்து, அழுது தீர்த்து, உள்ளத்தை ரணகளமாக்கி... ஐயோ...! தன் முட்டாள்தனத்தை நினைத்து முகத்திலேயே அறைந்து கொள்ளலாம் போல இருந்தது.

"என்ன சொல்றது? உன்கிட்ட இவ்வளவு லட்சணமா தகவல் சொன்ன ரேகா மேல குற்றமா! அதை அரையும் குறையுமா புரிஞ்சிட்ட உன் மேல குற்றமா! அட்லீஸ்ட் நான் மும்பையில இருந்து வந்த பிறகு நீ வாழ்த்துக்கள் சொல்லியிருந்தாலாவது எனக்கெதுக்கு வாழ்த்து சொல்றேன்னு நான் கேட்டிருப்பேன்.

"உங்க பையனுக்குக் கால்கட்டுப் போடப் போறீங்களான்னு உன் பிரபா அங்கிளையாவது ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம். மேட்டர் அப்பவே க்ளியர் ஆயிருந்திருக்கும். மரமண்டைன்னு சொன்னா மட்டும் கோபம் வருது. நீயா எதையோ கற்பனை பண்ணிட்டு உன்னை நீயே வருத்திக்கிட்டு இருக்கியே, கண்ணம்மா!"

க..ண்..ண..ம்..மா...!

அந்தப் பரிவான வார்த்தையில் அதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம், கோபம், வெறுப்பு, வேதனை அத்தனையும் உடைத்துக் கொண்டு வெளியே வர, தன்

கைகளில் முகம் புதைத்து உடல் குலுங்கச் சத்தமாகவே அழத் தொடங்கினாள்.

அணை உடைத்த வெள்ளமாய் அவள் கண்கள் கண்ணீரைப் பெருக்க, அவளைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டு கூந்தலை ஆதரவாய் வருடிவிட்டான் தருண்.

நிமிடங்கள் ஓடிக் கொண்டேயிருக்க, அவள் விசும்பலோ நிற்பதாகவே இல்லை.

அவன் கரங்கள் அவள் முதுகில் படர்ந்திருக்க, தன் நிலை மறந்து அவனுள் புதையுண்டு கிடந்தாள் இளவரசி.

"இளா! போனது போகட்டும். எதுக்கு இன்னும் அழுதுட்டே இருக்கே?"

"நான் எதுக்கோ அழறேன். உங்களுக்கு என்ன வாம்?" அவன் மார்பிலிருந்து முகத்தை அகற்றாமல் விசும்பலோடு சொன்னாள்.

"அப்ப சரி. நாலு நாள் ரூம் போட்டு அழுதுட்டு சாவகாசமா வந்து பேசு. உனக்காகச் சீக்கிரம் வந்தேன் பாரு. என்னைச் சொல்லணும்."

"எனக்காக வந்தீங்களா? எதுக்குப் பொய் சொல் றீங்க? போகும்போது என்கிட்ட சொல்லிட்டா போனீங்க? பிரபா அங்கிள் சொல்லித்தான் எனக்கே தெரியும்."

"சொல்ற மாதிரி சூழ்நிலையா நீ உருவாக்கி வெச் சிருந்தே? அன்னைக்கு என்ன வார்த்தைகளால் என்னைக் காயப்படுத்தினேன்னு ஞாபகம் இருக்கா?



ஆளுக்குத் தகுந்த மாதிரி வேஷம் போடறவனா நான்? என்னடி வேஷம் போட்டேன்? எதை நீ பார்த்தே? ம்ம்..."

அவன் பார்வையில் காதல் நீங்கிக் கோபம் எட்டிப் பார்த்தது. அந்தப் பக்கம் மோதிரம் மாற்றிவிட்டு இந்தப் பக்கம் மற்றப் பெண்களிடம் வழிகிறானே... என்ற ஆத்திரத்தில் பேசிய பேச்சு அது.

அது, இந்த அளவுக்கு, அவன் மனதைக் காயப் படுத்தும் என்று அவள் நினைத்துப் பார்க்கவே இல்லை. அப்படிப் பேசியதற்கான காரணத்தை மறைக்காமல் அவனிடம் சொன்னாள். சொல்லும்போதே பார்வை மன்னிப்புக் கேட்டு இறைஞ்சியது.

"ஹூம்... மேடம் என்னைப் பற்றின தவறான எண்ணத்துலயே இருந்திருக்கீங்க. இப்ப என் மேல எந்தச் சந்தேகமும் இல்லையே? மேடம் காதலிக்கற அளவுக்கு நான் இன்னும் எலிஜிபிள் பேச்சலர்தானே?" அவள் கன்னத்தைக் கிள்ளினான்.

"சசி உங்களைக் கொம்பேறி மூக்கன்னு சொன்னது சரிதான். கோபம் வந்தா... இப்படியா ஒரு வார்த்தை கூடப் பேசாம இருப்பாங்க. எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? சிங்கப்பூர்ல வேலை முடிஞ்சதா? சீக்கிரம் வந்துட்டீங்க."

"திடீர்னு உன்னைப் பார்க்கணும் போல இருந்தது."

கண்களில் தாபம் வழிய, அவள் மெல்லிய உதடு களை விரல்களால் நிரடிக் கொண்டே, அவன் சொல்ல, அவள் இதயம் கள் வெறி கொண்டது.

"பார்க்கணும் போல இருந்தா... அதுக்காக இப்படித் தான் முரட்டுத்தனமா வந்து காதலைச் சொல்வாங்களா?"

"நான் இப்படித்தான்டி சொல்லுவேன். கையில ஒரு ரோஜாப்பூவை வெச்சிக்கிட்டு மண்டியிட்டுச் சொல்றதுக் கெல்லாம் எனக்குப் பொறுமையில்லை. நீயா உன்னை வெளிப்படுத்திக்குவேன்னு காத்திருந்தா... அதுவும் இந்த ஜென்மத்துல நடக்காது."

வெப்பமான மூச்சுக் காற்றின் இடையே வார்த்தை கள் வந்து விழ, மோகத் தீயின் முகவரி தேடியவன், அவளைத் தன்னோடு இரும்புப் பிடியாய் அணைத்துக் கொண்டான்.

தவறு என்று உள்ளுணர்வு எச்சரித்தாலும், மழையை எதிர்பார்த்த பூமியாய் அவள் மனமும் தவித்துக் கிடக்க...

அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் மேனி வளைந்து கொடுத்தது.

காதல் மொழி பேசிக்கொண்டே அவள் கூந்தலில் கை நுழைத்து, தோள் வளைவில் முகம் புதைத்து, அவன் காதலின் சுகம் தேடத் தொடங்க, அவனது வெப்ப மான சுவாசம் அவள் தோள்களையும் தகித்தது.

மெல்ல மெல்லத் தன் சுய உணர்வுகளைத் தொலைத்துக் கொண்டிருந்தாள் இளா.

அன்று அவள் கனவில் கண்டதெல்லாம் இன்று நிஜத்தில் நடந்து கொண்டிருந்தது.



அவனது அழுத்தமான உதடுகள் அவள் தொண்டைப் பந்தோடு விளையாடி ரசவாதங்களைத் தூண்டிய நேரம், பின்னங் கழுத்தில் அவன் விரல்களின் ஸ்பரிசம்...! இனிய அவஸ்தையைத் தாங்க மாட்டாமல் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

"இளா...!" காற்றின் ஒலி கலந்து அவள் காதோரம் ரகசியமாய் அவன் உச்சரிக்க,

"ம்ம்..." என்ற கிறக்கமான ஒலியில் தேகங்கள் இரண்டும் தீப்பிடித்து எரியத் தொடங்கின.

சரியான நேரத்தில் தருணின் செல்பேசி அழைத் திருக்கா விட்டால்?

"தருண்... வீட்டுக்குக் கூட வராம ஏர்போர்ட்ல இருந்து நேரா ஆபீஸ் போயிட்டியாம். அப்படி என்னடா அவசரமான வேலை? அம்மாவைப் பார்க்க வரணும்னு கூடத் தோணலையாப்பா!" இந்திரா தேவியின் குரல் கோபமாக ஒலித்தது.

கண்களில் சலிப்பைக் காட்டியவன், "சாரிம்மா. ஆபீசுல ஒரு முக்கியமான விஷயம். உடனே பார்க்க வேண்டியிருந்தது. நேரா இங்க வந்துட்டேன். இன்னும் அரை மணி நேரத்துல வீட்டுக்கு வந்துடுவேன்."

நீண்ட நெடிய பெருமூச்சோடு செல்லை அமர்த் தியவன், எதிரில் நின்றவளின் முகம் பார்க்க, அந்தி வானத்துச் சூரியனாய்ச் சிவந்து கிடந்தாள். மையல் கொண்ட அவள் விழிகள் அவனைப் பார்க்கும் சக்தி யிழந்து தரையைப் பார்த்தன.

அவன் தன் சுழல் நாற்காலியில் சரிந்து இரண்டு கைகளாலும் முகத்தை அழுந்தத் தேய்த்துக் கொண்டான். கொந்தளிக்கும் உணர்வுகளைக் கட்டுப்படுத்த இருவருக்குமே கால அவகாசம் தேவைப்பட்டது.

சிறிது நேர இடைவெளியில் நிமிடங்கள் நகர்ந்து விட, "இதுதான் நீங்க ஆபீசுல பார்க்க வந்த முக்கியமான வேலையா?" என்று தரையைச் சுட்டிக் காட்டினாள் இளவரசி.

காதலுக்குக் கண் இல்லை என்பதை இப்படிக் கூடச் சொல்லலாமோ? கண்மண் தெரியாமல் புயலடித்த வேகத்தில் மேஜையின் மீதிருந்த கடிதங்களும், ஃபைல்களும் நழுவி விழுந்திருக்க, அவன் மேஜையைச் சுற்றிலும் காகித மேடாகக் காட்சியளித்தது.

மெல்ல நகைத்துக் கொண்டவன், "சாரிடா... நீயே எல்லாம் செட் ரைட் பண்ணிடு. ஹூம்... வேலையிலதான் நீ ஸ்லோன்னு நினைச்சேன். காதலிக்கற விஷயத்துல இப்படித் தத்தியா இருப்பேன்னு நினைக்கலே? நான் வீட்டுக்குப் போயிட்டுச் சீக்கிரம் வந்துட்டுமா?"

போகும் முன் எப்போதும் போல் அவன் வம்பிழுத்து விட்டுச் செல்ல, எங்கிருந்துதான் அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்ததோ?

"என்ன எப்பப் பார்த்தாலும் ஸ்லோ, ஸ்லோன்னு கிண்டல் பண்ணிட்டு இருக்கீங்க? இதைவிட வேகமா எப்படி வேலை செய்யறதாம்?"



கலைந்திருந்த தலைமுடியோடு, கண்களை உறுத்து விழித்துச் சண்டைக் கோழியாய் அவள் சீறிக் கொண்டு வர, அந்தக் கோலத்தில் அவளைப் பார்த்தவனுக்கு மீண்டும் இருப்புக் கொள்ளவில்லை.

உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டு அவளருகில் வந்த அந்தக் காதல் தீவிரவாதி கருணையே இல்லாமல் அவளை மீண்டும் திணறடித்துக் கொண்டிருந்தான்.

"இதுதான் ஸ்பீட் புரிஞ்சுதா? ராஜினாமா கடிதம் எழுதறதுல இருக்கிற அவசரம் எல்லா விஷயத்துலயும் இருக்கணும்."

சொன்ன வேகத்தில் வெடுக்கென்று அவளை விடுவித்து விட்டு, அதே வேகத்தில் அறையை விட்டு அவன் வெளியேற, ஆடிக் காற்றில் அலைக்கழிந்த பட்டமாய் அலங்க மலங்க நின்று கொண்டிருந்தாள் இளவரசி.

உள்ளத்தின் பதட்டத்தைத் தணிக்கக் குளிர்ச்சியான நீரைத் தேடிக் கைகள் நீள, கரங்களின் நடுக்கத்தில் சில துளிகள் அவள் மீது பட்டுத் தெறித்தன. கட்டியிருந்த காட்டன் சேலை அங்கங்கே மடிப்புக் கலைந்திருக்க, சூடியிருந்த மலர்ச் சரம் பாதி மலர்களும், பாதி நூலுமாய்த் தொங்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று யாராவது இந்தக் கோலத்தைப் பார்த்தால் ஆபீஸ் என்று நினைப்பார்களா? வேறு ஏதாவது நினைத்துக் கொள்வார்களா?

மனதைச் சூழ்ந்த பயத்தில் மலர்ச் சரத்தைக் கூந்தலில் இருந்து விடுவித்துக் குப்பைத் தொட்டியில் வீசியவள், கலைந்திருந்த கூந்தலைச் சீராக்கிக் கொண்டு, இறைந்து கிடந்த கடிதங்களையும், கோப்புகளையும் வரிசைப்படி அடுக்கத் தொடங்கினாள்.

கைகள் வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், செய்த தவறுகளின் பயனாய், இதயம் இன்னும் தடதடத்துக் கொண்டே இருந்தது. அவனது செய்கைகளுக்கு அனுமதி அளித்த குற்ற உணர்வில் நெஞ்சு ‘குறுகுறுக்கத் தொடங்கியது.

அவனோ கார் சாவியைத் தூக்கிப் போட்டுப் பிடித்து விளையாடிக் கொண்டே, சீழ்க்கை ஒலியோடு உற்சாகமாய் வீட்டிற்குள் நுழைந்தான். அவன் கால்கள் சுழலும் பம்பரமாய்...!

## 13

**இ**ரண்டு மணி நேர இடைவெளிக்குப் பின் மீண்டும் அவன் அலுவலகம் திரும்பி வந்தபோது ரேகாவையும் உடன் அழைத்து வந்திருந்தான்.

இளவரசிக்கு நேரெதிரே மேஜையில் அமர்ந்தவள் அவளையே முறைத்துக் கொண்டிருக்க, அரசிக்கோ தர்ம சங்கடமாய் இருந்தது.

“பார்ட்டிக்கு வர முடியாத அளவுக்கு அண்ணி பெரிய ஆள் ஆயிட்டிங்க! ஃபோன் பேசும்போது



வள்ளுன்னு விழுந்தப்பவே எனக்கும், சுலோவுக்கும் நம்ப இளாவான்னு சந்தேகமா இருந்தது. அதுக்குப் பின்னாடி இப்படியொரு சரித்திரம், பூகோளம் எல்லாம் இருக்கும்னு நான் நினைக்க...வே இல்லை அண்ணி!”

சரித்திரம், பூகோளம் இரண்டையும் விரல்களால் காற்றில் வட்ட வட்டமாய் வரைந்து காட்டினாள் சசிரேகா.

அண்ணி என்று அழைத்தவளைத் திகைப்புடன் அவள் பார்க்க, நடப்பதை யெல்லாம் ஒரு நமுட்டுச் சிரிப்போடு வேடிக்கை பார்த்துக் கொண்டே தன் வேலையில் ஆழ்ந்தான் தருண்.

“என்னடி அப்படிப் பார்க்கிறே முட்டைக் கண்ணி? எல்லா விஷயமும் எனக்குத் தெரியும்.” இடுப்பில் கை வைத்தபடி ரேகா அவளை முறைத்துக் கொண்டு நிற்க, அவள் பார்வையைச் சந்திக்கத் திராணியின்றி கீபோர்டை நோண்டிக் கொண்டிருந்தாள் இளா.

“தியேட்டர்ல அண்ணன் பக்கத்துல உட்காரவே தயங்குன அண்ணிதானே நீங்க!” என்று அவள் விடாமல் கேலி செய்ய, அவனிடமிருந்து சிறு நகைப்பொலி. இளாவுக்குத்தான் தர்ம சங்கடமாக இருந்தது.

“இதுதான் என்னுடைய என்கேஜ்மென்ட் ஆல்பம். நல்லா உற்றுப் பார்த்து, உன் சந்தேகத்தை க்ளியர் பண்ணிக்கோ தாயே. எனக்கு இன்னொரு பெரியம்மா இருக்காங்க. வசுந்தரான்னு பேரு. அவங்க பையன்தான் அஜய். வருஷக்கணக்கா குடும்பத்தோட அமெரிக்காவுல இருக்காங்க.

"இது தெரிஞ்சுக்காம நீயா என்னென்னவோ உழப்பி வைக்க, தருண் அண்ணா என்னைப் புடிச்சு வாங்கு வாங்குன்னு வாங்கிட்டான். காய்ச்சல்ல கூட அண்ணா பேரைச் சொல்லி உளர்ற அளவுக்கு உனக்கு முத்திப் போயிருக்கும்னு எனக்கு எப்படி...டி தெரியும்?"

அவன் பார்வை குறும்போடு அவள் முகத்தை மேய்ந்து கொண்டிருக்க,

"ரேகா... என்ன உளர்றே?" சினத்துடன் சீறினாள் இளவரசி.

"தோடா... உண்மையைச் சொன்னா அண்ணிக்குக் கோபம் வருது. சுலோதான் சொன்னா. அவ உன் வீட்டுக்கு வந்தபோது சுயநினைவே இல்லாத நிலையிலும் அண்ணன் பேரையே ஜபிச்சுக்கிட்டு இருந்தியாம்."

அவன் கண்களின் கேலியும், அவள் வார்த்தை களின் கிண்டலும் சேர்ந்து அவளை மூச்சுத் திணற வைக்க, அதற்கு மேல் சமாளிக்க முடியாமல் கதவைத் திறந்து கொண்டு காரிடாருக்கு ஓடினாள் இளவரசி.

இன்னும் சற்றுச் சிவப்பேற்றுகிறேன் என்று அவனுடைய உரத்த சிரிப்பு விடாமல் துரத்திக் கொண்டு சென்றது.

சுரேந்தர் - சசிரேகா

அஜய் - யௌவனா

வானவில்லின் வர்ணமாய் மின்னிய அந்த எழுத்துக்களை வைத்த கண் வாங்காமல் பார்த்துக்



கொண்டிருந்தாள் இளவரசி. தூக்க முடியாத அளவுக்குக் கனமான ஆல்பத்தைத் தன் மடி மீது வைத்து அவள் பார்த்துக் கொண்டிருக்க, அந்தக் காரிடாரின் மதிலில் சாய்ந்து நின்று கொண்டு, தன் தோழியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் சசிரேகா.

வேகமாய் வீசிய காற்று இருவரின் கூந்தலையும் அசைத்துச் செல்ல, கண்ணில் பட்ட கற்றை முடியை ஒதுக்குவதற்காகத் திரும்பியவள், ரேகா அவளையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"என்ன அப்படிப் பார்க்கறே?"

"காதலிக்கிற எல்லாருமே அமுக்குணி மாதிரிதான் இருப்பீங்களாடீ! நீலாவும் இப்படித்தான் இருந்தா. காதலுக்கு ஸ்பெல்லிங்கே தெரியாதுன்னு அப்பாவி மாதிரி இருந்துட்டு என்னென்ன அட்டகாசம் பண்ணியிருக்கே நீ?

"இந்த விஷயம் முதல்லயே தெரிஞ்சிருந்தா மூணு நிச்சயதார்த்தத்தையும் ஒண்ணாவே வெச்சிருக்கலாம்னு பெரியம்மா வருத்தப்பட்டாங்க."

திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தாள் இளவரசி.

"ரேகா, நாங்களே இப்பத்தானே வெளிப்படுத்திக் கிட்டோம். அதுக்குள்ளே எல்லோருக்கும் விஷயம் தெரி யுமா?"

கண்களில் கலவரத்தோடு கேட்டவளைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தாள் சசிரேகா.

'அண்ணனோட வேகத்தைப் பற்றி நீ இன்னும் தெரிஞ்சுக்கலயே அண்ணி. அவன் சிங்கப்பூர்ல இருந்து சீக்கிரம் திரும்பி வந்ததே உனக்காகத்தான். சுலோ உன் வீட்டுக்கு வந்த விவரத்தையும், காய்ச்சல்ல நீ உளறுன விவரத்தையும் என்கிட்டே சொன்னா. நான் அண்ண னுக்கு ஃபோன் செய்து விஷயத்தைச் சொன்னேன். அவன் உடனே சிங்கப்பூர்ல இருந்தே பெரியப்பாகிட்டப் பேசிட்டான். உன்னைப் பார்க்காம இருக்க முடியலேன்னு கிடைச்ச ஃப்ளைட்ல ஏறி வந்துட்டான்.

"இப்ப ரெண்டு மணி நேரமா வீட்டுல அண்ண னோட ரவுசுதான். ரவுண்ட் டேபிள் கான்ஃபரன்ஸ்தான். மூணு கல்யாணமும் ஒண்ணாவே நடக்கட்டும்னு பிடிவாதம் பிடிச்சு பெரியம்மா, பெரியப்பாவை உங்க வீட்டுக்கு அனுப்பியிருக்கான். என் அம்மா, அப்பாவும் துணைக்குப் போயிருக்காங்க. இது போதாதுன்னு உன்னை இனிமே அண்ணின்னுதான் கூப்பிடணும்னு எனக்கும் கண்டிஷன் போட்டிருக்கான்."

இளவரசிக்குத் தலையே சுற்றும் போல இருந்தது. இத்தனை வேகமாகக் கூட ஒருவன் செயல்பட முடியுமா? திடீரென்று விஷயம் தெரிய வந்தால் அம்மா தவித்துத் திணறுவார்களே!

**அ**ன்றைய தினம் சமையலறை வேலைகள் முடிந்ததும் அஷ்டோத்திர நாமாவளி புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு அமர்ந்த மீனாட்சியைக் காலிங் பெல் சத்தம் அழைத்தது. இந்த நேரத்தில் யாராக இருக்கும்



என்று சலிப்போடு ஜன்னல் வழியே வெளியே பார்த்த வருக்கு வியப்பில் விழிகள் விரிந்தன.

அவர் பரபரப்பாகக் கதவைத் திறந்து அவர்களை வரவேற்க, முகம் நிறைந்த புன்னகையோடு பிரபாகரனும், இந்திரா தேவியும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து சுபத்ராவும், ரகுநந்தனும்...!

தேவியின் கையில் சிறிய வெள்ளி ட்ரே. அதில் பழ வகைகளும், மல்லிகைச் சரமும் இருக்க, அதன் மீது ரேகாவின் திருமணப் பத்திரிகை.

அவர்களை வரவேற்று அங்கிருந்த சோபாவில் அமரச் செய்தவர் வீடு தேடி வந்தவர்களைக் கண்டு மலைத்துப் போய் நின்றிருந்தார்.

"என்னை ஞாபகம் இருக்கா? நான்தான் பிரபாகரன். சுந்தரத்தோட பால்ய கால நண்பன். இவ என்னுடைய மனைவி இந்திரா. உங்க திருமணத்தின் போது உங்களைப் பார்த்தது. உங்க பொண்ணு இளவரசிக்கு ஒரு காலத்துல நான் எம்.டி."

"சும்மா இருங்க. வந்ததும் வராததும் இப்படியா பேசுவாங்க..." என்று தன் கணவரைச் செல்லமாகக் கடிந்து கொண்டார் இந்திரா தேவி.

"என்னண்ணே இப்படிச் சொல்லிட்டீங்க? அவர் தான் வார்த்தைக்கு வார்த்தை உங்களைப் பற்றிப் பேசி யிருக்காரே. எங்க கல்யாண ஆல்பத்துல உங்களைப் பார்த்திருக்கேன். இப்ப சமீபத்துல நீங்க உங்க ஃபேக்டரி

சார்பா அவார்ட் வாங்கினது நியூஸ் பேப்பர்ல வந்தது. இவர்தானம்மா எங்க எம்.டின்னு இளா காமிச்சிருக்கா."

"நல்லதும்மா. நான் நேரடியா விஷயத்துக்கு வர்றேன். உங்க மக இளவரசியை எங்க மருமகளாக்க விருப்பப்படறோம். என் மகன் தருணும், உங்க மகளும் ஒருத்தரை ஒருத்தர் மனசார விரும்பறாங்க. எனக்கும், இந்திராவுக்கும் இதுல பரிபூரணச் சம்மதம். சுந்தரத்துக் கிட்ட இது பற்றி நான் ஃபோன்லயே பேசிட்டேன்.

"என் பொண்ணோட விருப்பம்தான் எனக்கு முக்கியம். உடனே புறப்பட்டு வர்றேன்னு சொல்லிட்டான். இந்தத் திருமணத்துல உங்க சம்மதமும் முக்கியம் அம்மா. முறைப்படி நேர்லயே பேசிடலாமேன்னு வந்திருக்கோம்."

திக்ப்ரமை பிடித்தது போல நின்று கொண்டிருந்தார் மீனாட்சி.

காதலா? அவர் மகளா?

கல்யாணமே வேண்டாம் என்றல்லவா சொல்லிக் கொண்டிருந்தாள்.

பிரபாகரன் பேசியதும் மீனாட்சியின் அருகே வந்தார் இந்திரா.

"எங்க வீட்டுல ஒரே நாள்ல ரெண்டு திருமணம் நடக்கப் போகுது அண்ணி. என் அண்ணன் மகன் சுரேந்தர் என் தங்கை மக சசிக்கு மாப்பிள்ளையா வரப் போறான். சுரேந்தரோட தங்கையை எங்க அஜய்க்கு மனைவியாக்கப் போறோம். உறவுக்குள்ள சம்பந்தம்



பேசறது எங்க குடும்பத்துல சகஜம். எங்க அஜய்க்கும் யௌவனாவுக்கும் ஏழு வருஷம் வயசு வித்தியாசம். இருந் தாலும் முறைப் பொண்ணைத்தான் கட்டுவேன்னு அவன் பிடிவாதமா இருக்கான்.

"கட்டுனா இளவரசியைத்தான் கட்டுவேன்னு என் மகனும் பிடிவாதமா இருக்கான். உங்களை வாய் நிறையச் சம்பந்தின்னு கூப்பிட்டு ரெண்டு திருமணத்துக்கும் அழைப்பு வைக்கணும்ன்னு ஆசைப்படறோம். வாங்கிக் கோங்க அண்ணி. நீங்க சம்மதம் தெரிவிச்சா நம்ம பசங்களோட திருமண இன்விடேஷனையும் தனியா அச்சடிக்கக் கொடுத்துடலாம். மூணு திருமணமும் ஒரே மேடையில நடந்தா எங்களுக்கும் வசதியா இருக்கும்."

இந்திரா தேவி வெள்ளித் தட்டின் மீது பத்திரி கையை வைத்துக் கொடுக்க, திகைப்பு நீங்காமல் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார் மீனாட்சி.

தன் மகள் காதலில் விழுந்தாள் என்பதையே அவரால் இன்னும் நம்ப முடியவில்லை. அதோடு இத்தனை பெரிய இடத்திலிருந்து அவர்களாகவே பெண் கேட்டு வந்திருக்கிறார்கள். துளியும் கர்வமில்லாத இந்திராவின் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றார் மீனாட்சி.

"வந்து... திடீர்னு என்னென்னவோ சொல்றீங்க? இப்போதைக்குக் கல்யாணமே வேண்டாம்னு சொன்ன என் மகளா காதல்ல விழுந்தானு பிரமையா இருக்கு. நான் என் வீட்டுக்காரர் கிட்டப் பேசிட்டு வந்துடட்டுமா?"

வெகுளியாக அவர் பேசியதைக் கேட்டுப் பிரபா கரனும், இந்திராவும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

“நிதானமா பேசிட்டு வாங்கம்மா. நாங்க காத்திருக் கோம்...” என்று பிரபாகரன் சொல்லவும், அவசரமாக உள்ளே சென்றார். வந்திருந்த அனைவருக்கும் ஆரஞ்சுப் பழச்சாறு கொண்டு வந்து உபசரித்தவர், அவர்கள் பருகும் வேளையில் துபாயிலிருந்த தன் கணவரைச் செல்லில் அழைக்க, அவள் அழைப்பிற்காகவே காத் திருந்தவர் போல முதல் ரிங்கிலேயே செல்லை எடுத்தார் சுந்தரம்.

“என்னங்க இது? திடீர்னு உங்க ஃப்ரெண்ட் சம்பந்தம் பேச வந்து நிக்கறாரு? நான் என்ன சொல லட்டும்?”

“பிரபாவை ஏம்மா குறை சொல்றே? காதலிச்சது நம்ம பொண்ணும், மாப்பிள்ளையும்...! மறுபேச்சில்லாம அவன் மகனுக்கு நம்ம பெண்ணைக் கட்டிக் கொடுக்க லாம். தங்கமான குடும்பம்.”

“பொசுக்குன்னு மாப்பிள்ளைனு சொல்லிட்டீங்க. கோவில்ல பூப் போட்டுப் பார்த்துக் குல தெய்வத்துக்கிட்ட சம்மதம் வாங்க வேண்டாமா?”

“இது காதல் திருமணம் மீனா. நாம பார்த்து ஜோடி சேர்த்தது இல்லை. எப்படியிருந்தாலும் அவங்க மனசால ஒருத்தரோட ஒருத்தர் இணைஞ்சிட்டாங்க. இதுல சடங்கு,



சம்பிரதாயம்னு அவங்களை மிரட்டிப் பார்க்கணுமா? ஒருவேளை பூப் போட்டுப் பார்த்து நமக்குச் சாதகமா பதில் வரலேன்னு வை. என்ன பண்ணப் போறே?

“நம்ம பொண்ணோட ஆசைக்கு எதிரா செயல்படப் போறியா? அப்படி நீ செய்தா நம்ம இளா தாங்குவாளா?

“மாப்பிள்ளைக்கு வேற பொண்ணோட நிச்சயம் ஆயிடுச்சுன்னு தப்புக் கணக்குப் போட்டுக் காய்ச்சல்ல படுத்து எந்திரிச்சவ உன் மக. இந்த விஷயம் அவளே மாப்பிள்ளை கிட்ட சொன்னதுதான். இன்னைக்கு பிரபாவும், மாப்பிள்ளையும் என்கிட்ட எல்லாத் தகவலும் சொல்லிச் சிரிச்சாங்க. இளவரசி கிட்ட இப்பத்தான் பேசி னேன். தட்டுத் தடுமாறி எல்லாத்தையும் ஒப்புக்கிட்டா.

“ஜோசியம் பார்க்கறது, குறி கேக்கறது, பூ விழுதான்னு பார்க்கறது இந்த மாதிரியான நிகழ்வுகளை யெல்லாம்... மனுஷனா, அவனோட ஆத்ம திருப்திக்காக ஏற்படுத்திக்கிட்டதுதான். இப்படியெல்லாம் செய்யச் சொல்லி எந்தத் தெய்வமும் கட்டாயப் படுத்தல.

“எனக்கு என் குழந்தைங்க சந்தோஷம் முக்கியம். நீ வேண்டாம்னு சொன்னாலும் மாப்பிள்ளை அவளைத் தூக்கிட்டுப் போய்த் தாலி கட்டுனாலும் ஆச்சரியம் இல்லை. அந்த அளவுக்கு வேகமா இருக்காருன்னு பேசும்போதே தெரியுது.”

அடுத்து வந்த சில நொடிகள் மௌனமாகவே கழிய... “மீனா... ஏதாவது பேசு,” என்று சுந்தரம் குரல் கொடுக்கவும்,

“என்ன பேசறதாம்? அதான் வார்த்தைக்கு வார்த்தை மாப்பிள்ளைன்னு நீங்களே சொல்லிட்டிங்களே. இனி நான் பேச என்ன இருக்கு?” என்று மீனாட்சி பதில் சொல்ல, வீடு கல்யாணக் களை கட்டத் தொடங்கியது.

மீனாட்சி உள்ளே யிருந்து வரும்போதே தட்டில் இனிப்பு வகைகளை வைத்துக் கொண்டு வர, அவரது சம்மதம் புன்னகை வழிந்த அவர் முகத்திலேயே தெரிந்தது.

“தப்பா நினைச்சுக்காதீங்க அண்ணா! எங்க வீட்டுல எந்த நல்ல விஷயமா இருந்தாலும் குல தெய்வத்துக்கிட்ட பூப் போட்டுக் கேட்கற பழக்கம். அதுதான் உடனே என்ன பதில் சொல்றதுன்னு தெரியாம அவர்கிட்ட கேட்டுட்டு வந்தேன். பசங்க சந்தோஷம்தான் முக்கியம்னு ஒரே வார்த்தையா சொல்லிட்டாரு. இனிப்பு எடுத்துக்கோங்க.”

சுப காரியங்கள் கூடி வந்த சந்தோஷத்தில் அனைவருமே இனிப்பை எடுத்துக் கொள்ள, ரேகாவின் திருமணப் பத்திரிகை வெள்ளித் தட்டோடு சம்பந்திகளிடையே கை மாறியது. சம்பந்திகளாகி விட்ட மகிழ்ச்சியில் அவர்கள் ஐவரும் சகஜமாக உரையாடிக் கொண்டிருக்க, அங்கே இளவரசி தருணிடம் வாதிட்டுக் கொண்டிருந்தாள்.

“எந்தத் தைரியத்துல சம்பந்தம் பேசற அளவுக்கு அங்கிளையும், ஆன்ட்டியையும் நீங்க அனுப்பி வெச்சிருக்கீங்க? நான் என் அப்பா, அம்மா கிட்டப் பேச வேண்டாமா? நம்ம பொண்ணு எல்லாத்தையும் மறைச்சிட்டாளேனு என்னைத்தானே தப்பா நினைப்பாங்க? நானே நேரம் பார்த்துச் சொல்லியிருப்பேனே!”



“சொல்ற மூஞ்சியைப் பார்க்கலே. மனசுல இருக்கறதை என்கிட்ட சொல்லவே தைரியம் இல்லை. உன்னை நம்பிக்கிட்டு இருந்தா நீ அவ்வையார் ஆகற வரைக்கும் காத்திருக்க வேண்டியதுதான். இனிமே நடக்க வேண்டியது எல்லாம் நானே பார்த்துக்கறதுன்னு முடிவு பண்ணிட்டேன். இது எல்லாமே ஜஸ்ட் ஃபார் ஃபார்மாலிட்டீஸ். பெரியவங்களுக்கு மரியாதை கொடுக்கணும்னு பண்ணிக்கிட்டு இருக்கறது. இதுல யாருடைய சம்மதமாவது கிடைக்கலேன்னாலும் நான் கவலைப்படமாட்டேன்.

“நீயே மனசு மாறி வேண்டாம்னு சொன்னாலும் உன்னைத் தூக்கிட்டுப் போயாவது தாலி கட்டுவேன். இதுக்கு மேல காத்திருக்க எனக்குப் பொறுமையில்ல. புரியுதா?”

அவள் மோவாயை இறுக்கப் பிடித்து அவன் பேசிக் கொண்டிருக்க... அவன் முரட்டுத்தனத்தைக் கண்டு மிரண்டு போனாள் இளவரசி. அவன் பற்றியிருந்த இடம் கன்றிச் சிவந்து போயிருந்தது.

“ரேகாவோட கல்யாணத் தேதியிலேயே நம்மளோடதும் வெச்சுக்கலாமான்னு சொல்லி அனுப்பியிருக்கீங்க. இப்படி அவசரப்படுவானேன்? எங்க பக்கம் செய்ய வேண்டிய சீர் செனத்தியெல்லாம் ரெடி பண்ண வேண்டாமா?”

“யாருக்கு வேணும் உன்னோட சீர் செனத்தி? இதெல்லாம் கொண்டு வந்தாதான் ஆச்சுன்னு இங்க யாராவது லிஸ்ட் போட்டுக் கொடுத்தாங்களா?

"லுக் இளா! எங்க சொந்த பந்தங்களோட எண்ணிக்கை ரொம்ப அதிகம். அதுல நிறையக் குடும்பங்கள் வட இந்தியால இருக்கறவங்க. அவங்க எல்லோரும் ரேகா கல்யாணத்துக்கு வந்துட்டு, ஊருக்குத் திரும்பிப் போய், மறுபடியும் நம்ம கல்யாணத்துக்கு வர்றது சிரமமான விஷயம். முக்கியமா வயசானவர்களுக்கு...! நான் சொல்றது உனக்குப் புரியுதா?

"அது மட்டும் காரணம் இல்லை...! நிச்சயம், சடங்கு, சம்பிரதாயம்னு ஃபார்மாலிடீஸ் பார்த்துட்டு இருந்தா நீ என்னைக்கு எங்கிட்ட வந்து சேருறது? என் பொறுமையைச் சோதிக்கக் கூடாது இளா!"

அவன் கண்களில் தெரிந்தது கனலா, காதலா, வேட்கையா? இல்லை, மூன்றும் கலந்த கலவையா? ஒரேயடியாக வேகமாகத்தான் இருக்கிறான். அவளையும் மீறி முதுகுத் தண்டு சிலிர்த்துக் கொள்ள, அவனிடம் வாதிடுவதை நிறுத்திக் கொண்டாள் இளவரசி.

"ஹும்... இன்னைக்கு இந்த ஆபீசுல வேலை நடந்த மாதிரிதான். உங்க கொஞ்சல்ஸ்க்கு நடுவுல நான் எதுக்குப்பா? நான் வீட்டுக்குக் கிளம்பட்டுமா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் சசிரேகா.

"நீ இன்னும் போகலயாடி! எதுக்குக் கரடியாட்டம் எங்களையே சுத்தி வர்றே?"

"டேய் அண்ணா... இதெல்லாம் ரொம்ப ஓவர்டா. சும்மா இருந்தவளை ஆல்பத்தைத் தூக்கிட்டு ஆபீசுக்கு



வரச் சொல்லிட்டு... இப்போ அப்படியே உல்டா அடிக்கறே. போங்கடா... நீங்களும் உங்க காதலும்...!"

ரேகா கோபத்தோடு வெளியேற, "ஏன் இப்படி அட்டகாசம் பண்ணறீங்க? பாவம் அவ!" என்று ரேகாவின் பின்னால் செல்ல முயன்றவளைத் தன்னருகே இழுத்துக் கொண்டான்.

"நான் அவளைச் சமாதானப்படுத்திக்கிறேன். இன்னைக்கு என்ன விசேஷம்? கிளாமர் தூக்கலா இருக்கு?"

கண்கள் அவள் கட்டியிருந்த புடவையின் அழகில் லயித்தன.

"அம்மாவோட வற்புறுத்தலுக்காகக் கட்டிட்டு வந்தேன். நீங்க இன்னைக்குத் திரும்பி வருவீங்கனு தெரிஞ்சிருந்தா கண்டிப்பா சாரீல வந்திருக்க மாட்டேன். இனிமே நீங்க என்னைத் தொடுறதா இருந்தா... அது திருமணத்துக்குப் பிறகுதான். அதுவரைக்கும் உங்க கை என் மேல படவே கூடாது. இட்ஸ் எ ப்ராமிஸ்!"

அவள் இடையில் நெளிந்த அவன் விரல்களைத் தட்டி விட்டுக் கொண்டே பதில் சொன்னாள்.

"உத்தரவு மேடம்!" என்பதைப் போல் பவ்யமாய்க் கைகட்டி நின்றவனைப் பார்த்துச் சிரிப்புத்தான் வந்தது.

**அ**ன்று மாலை அவள் வீட்டுக்குள் நுழையும்போது மீனாட்சியின் முகத்தில் புன்னகையும், பெருமிதமும் தாண்டவம் ஆடியது.

மகளை உச்சி மோந்து அணைத்துக் கொண்டவர், "சுமங்கலி பூஜை புடவையைக் கட்டிக்கோ. சீக்கிரமா நல்ல இடம் தகையும்னு சொன்னேனா இல்லையா?" என்று ஆரம்பிக்க...

"தோடா... இந்த லவ் ஸ்டோரி ரொம்ப நாளாவே ஓடிக்கிட்டு இருக்கு. என்னவோ இன்னைக்குத்தான் எல்லாமே ஆரம்பிச்ச மாதிரி சொல்றீங்க?" என்று கேலி செய்தாள் லாவண்யா.

"ரொம்ப நாளா ஓடுதுன்னு உனக்கு எப்படித் தெரியும்?" என்று பொய்யாகக் கண்களை உருட்டினாள் இளா.

"உன் மேல ஒரு இதுவும் இல்லாமலா உடம்பு சரியில்லாத நேரத்துல உன் பாஸ் தினமும் ஃபோன் செய்து இளா எப்படி இருக்கா? இளா எப்படி இருக்கானு... பஜனை பாடுனாரு! சரியாத் தெரிஞ்சுக்காம நாமளா எதுவும் பேச வேண்டாமேனு நானும் அமுக்கமா இருந்தேன். அன்னைக்கு உன் ஆளோட பீசா கார்னர் போறேன்னதும் உனக்கு எப்படிக் கோபம் வந்துச்சு?

"காலைல நான் ஆல் தி பெஸ்ட் சொல்லும்போதே எதுக்குன்னு நீ கேட்டிருக்கணும்? தருண் மாமா இன்னைக்கு வர்ற விஷயம் நேத்தே எனக்குத் தெரியுமே. அவர்தான் சொல்ல வேண்டாம்னு சொன்னாரு!" என்று கொக்கரிப்புக் காட்டினாள் லாவண்யா.

"முதல்லயே சொல்றதுக்கு என்ன?" என்று இளா தங்கையை அடிக்க ஓட, இளவரசியின் காதைப் பிடித்துத் திருகினார் மீனாட்சி.



"திருட்டுக் கழுதை! எனக்குக் கல்யாண...மே வேண்டாம். என்னை வீட்டை விட்டு விரட்டப் பார்க்கறீங்களா? என்னென்ன டயலாக் பேசுனே! இந்தத் தில்லுமுல்லு வேலைய மூடி மறைக்கத்தான் அப்படியெல்லாம் வசனம் பேசுனியா?

"ரேகாவோட கல்யாணத்தோட சேர்த்து வெச்சிக் கலாம்னு மாப்பிள்ளை அவசரப்படறாராம். உன் அப்பா ஊர்ல இருந்து வர வேண்டாமா? எங்க பக்கம் சீர் செனத்தின்னு ஆரம்பிச்சேன். அத்தனையும் நாங்க பார்த்துக்கறோம். நீங்க சம்மதம் மட்டும் சொல்லுங்கன் னாங்க. எனக்குத் தலையே கிறுகிறுத்துப் போச்சுடி.

"நேரம் வந்தா எல்லாம் தானா நடக்கும்னு சொல்றது இதுதான் போல இருக்கு. அவங்க கேட்ட தேதி சுகப்படுமான்னு பார்த்துட்டு எப்பவும் போல குளியலைப் போட்டுட்டு வா. நான் ஆசைப்பட்ட மாதிரி எல்லாம் அமோகமா அமைஞ்சு வந்தா... உன் கையால துர்க்கையம்மனுக்கு விளக்குப் போடறேன்னு நேர்ந்துட்டு இருக் கேன்."

**அ**தன் பிறகு நாட்கள் ஹெலிகாப்டரில் பறந் தனவா? ராக்கெட்டில் பறந்தனவா?

ஒரு வழியாய் சுந்தரமும் துபாயில் இருந்து வந்து விட, திருமண ஏற்பாடுகள் அதன் போக்கில் நடந்து கொண்டிருந்தன.

தினமும் ஒருமுறை ஃபோன் செய்து அவளை "அண்ணி!" என்று அழைத்துக் கலாய்த்துக் கொண்

டிருந்தாள் சசிரேகா. விஷயம் தெரிந்து நண்பர்கள் அனைவரும் வீடு தேடி வந்து வாழ்த்துச் சொன்னார்கள். தகவல் தெரிந்த வேகத்தில் ரங்கநாயகியும், சிவகாமியும் புறப்பட்டு வந்து விட்டார்கள்.

"அம்பாளைக் குறி கேட்க வேண்டாமோ? சடக்குன்னு நாள் பார்த்துட்டிங்களே!" என்று ஆதங்கப்பட்டார் ரங்கநாயகி.

"எல்லோரும் சேமமா இருக்கணும்னு நினைக்கறவ தான் அம்பாள். தன் கிட்ட குறி கேட்கலேன்னு கோபப் பட்டுப் பழி வாங்கறவளுக்குப் பேரு அம்பாளே கிடையாது." சுந்தரம் வெடுக்கென்று மாமியாரிடம் பதில் சொல்ல, அதோடு அந்த விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப் பட்டது.

பிரபாகரனும், சுந்தரமும் இணைந்தே திருமண வேலைகளைப் பார்த்துக் கொண்டார்கள்.

"மண்டபம் கொள்ளுமான்னு தெரியலப்பா. மூணு திருமணமும் ஒண்ணா நடக்கறதால கூட்டம் அளவுக்கு அதிகமா இருக்கும்."

"டேய்... பிரபா! என் பொண்ணுக்குச் செய்ய வேண்டிய சீர்வரிசையைப் பற்றி ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கற. மாப்பிள்ளையைக் கேட்டாலும் வாயே திறக்கலே. அப்புறம் என் இஷ்டப்படி நான் பண்ணிடுவேன். குத்தங்குறை சொல்லக் கூடாது."

"போடா...! அவனவனுக்கு இங்க ஆயிரம் வேலையிருக்கு. சொந்தக்காரங்களுக்கு இன்னும் ரெண்டு லாட்ஜ் சேர்த்துப் புக் பண்ணிடலாமான்னு யோசிச்சிட்டு இருக்கேன். நீ என்னடான்னா உப்புச் சப்பில்லாத விஷயத்தைப் பேசிட்டு இருக்கே."



பால்ய நண்பர்கள் இருவரும் சிறு வயதினரைப் போலச் சண்டையிட்டுக் கொள்வதைக் காண வேடிக்கையாக இருந்தது. சம்பந்தி வீட்டார் வாய் திறவாமல் போனாலும் மீனாட்சி தன் மகளுக்குச் செய்ய வேண்டியதில் எந்தக் குறையும் வைக்கவில்லை.

ஒற்றைத் திருமணம் என்றாலே ஓராயிரம் கோலாகலம். இதில் மூன்று ஜோடிகளின் திருமணங்கள் ஒரே மேடையில்...! கொண்டாட்டத்திற்குக் குறைவே இல்லாமல் போனது.

இதை விட விமர்சையாகத் திருமணம் நடக்க முடியுமா என்னும் அளவுக்குப் பிரம்மாண்டமான மேடை யலங்காரங்கள்.

யௌவனா, சசிரேகா, இளவரசி மூவரும் முப்பெரும் தேவியரைப் போலப் பொன்னும், வைரமும் அணிந்து மின்ன, அஜய், சுரேந்தர், தருண் மூவரும் அவர்களுக்கு இணையாய் மாப்பிள்ளைக் கோலத்தில்...!

திருமணச் சடங்குகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, வெஸ்டர்ன், கர்னாடிக், திரையிசை, நடனம் என்று வேளைக்கு ஒரு இன்னிசைக் கச்சேரி. சொர்க்கபுரியைப் போல அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த அரங்கத்தில் தேவதை போல வலம் வந்து கொண்டிருந்தாள் லாவண்யா.

அத்தி பூத்தாற் போல் விடுமுறை கிடைத்த சந்தோஷத்தில் கனகாவும் அவளோடு சேர்ந்து சுற்றிக் கொண்டிருந்தாள். தன் வயதை ஒத்த உறவினர்களோடு கலகலப்பாய்ப் பேசிக் கொண்டிருந்தான் மனோ.

ரங்கநாயகியின் முகத்தில் பெருமிதம் பிடிபட வில்லை. "எப்பேர்ப்பட்ட இடத்துல வாழப் போறா என் பேத்தி!" என்று பார்க்கும் உறவினர்களிடமெல்லாம் சொல்லிச் சொல்லித் தம்பட்டம் அடித்துக் கொண்டார்.

மீனாட்சிக்கு இணையாக அத்துணை வேலை களிலும் பங்கெடுத்துக் கொண்டார் சிவகாமி.

அக்காளின் மகளுக்குத் திடீரென்று திருமணம் தகைந்ததில் நடேசனுக்குக் கரை புரண்டு ஓடிய உற்சாகம்.

இளவரசியின் சுற்றமாகக் குறைந்தது இருநூறு பேராவது வந்திருந்தார்கள். அதில் பாதிப் பேருக்கு மனதில் ஊற்றெடுத்த ஆனந்தம். மீதிப் பேருக்கு... 'ஐயோ... இவளுக்கு இப்படி ஒரு டாம்பீக வாழ்க்கையா?' என்று நெஞ்சுக்குள் அனல்.

"ஹும்... உன் சின்னப் பொண்ணுக்கும் இந்தக் கூட்டத்துலயே ஒரு மாப்பிள்ளையைப் பிடிச்சிட வேண் டியதுதானே மீனாட்சி! எல்லாம் காரும், பங்களாவுமா வசதி...யா இருக்கா."

ஒன்று விட்ட அத்தைக்காரி மரகதம் நொட்டை பேசியபோது, குடும்பத்திற்கே பற்றிக் கொண்டு வந்தது.

"இளாவுக்கும், மாப்பிள்ளைக்கும் நல்லா சுத்திப் போடுடி மீனா. என்ன பேச்சுப் பேசிட்டுப் போறா பாரு.



ராங்கி...ராங்கி... வயித்தெரிச்சல் பிடிச்சவ!" என்று விரல்களை நொடித்தார் ரங்கநாயகி.

## 14

திருமணம் முடிந்த அன்று மாலையே ரேகா - சுரேந்தர், அஜய் - யௌவனா ஜோடிகள் மும்பை விமானத்தில் கிளம்பிவிட,

"மத்தச் சடங்கு, சம்பிரதாயமெல்லாம் அவங்க வீட்டுல வெச்சுக்கலாம்னு பிரியப்படறாங்களாம்!" என்று ரங்நாயகிக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தார் மீனாட்சி.

ப்ளஸ்டூவைக் காரணமாக்கிக் கனகாவும், நடேசனும், மனோவும் அன்றே ஊருக்குப் புறப்பட்டனர்.

"தாலி கட்டுன அன்னைக்கே நம்ம வீட்டு மாப்பிள்ளையும், பொண்ணும் ஜோடி போட்டு விமான நிலையத்துக்குப் போகாட்டி என்னவாம்? அவங்க வீட்டுப் பெரியவங்கதான் போயிருக்காங்களே. இவங்க ரெண்டு பேரும் இங்கயே ரெஸ்ட் எடுக்க வேண்டியதுதானே! ராத்திரிக்கு ரெண்டு பேரும் கண்ணு முழிக்க வேண்டாம்!" என்று ரங்கநாயகி புலம்பிக் கொண்டிருக்க... களுக்கென்று சிரித்தாள் லாவண்யா.

"ஏய்... உனக்கென்னடி இங்க வேலை? எழுந்து போய் அந்தப் பட்டுப் புடவை யெல்லாம் காத்தாட உலர்த்திப் போடு போ. மண்டபத்துல இருந்து கொண்டு வந்ததெல்லாம் அப்படியே இறைஞ்சு கிடக்குது!" என்று இளையவளை அங்கிருந்து விரட்டியடித்தார் மீனாட்சி.

ஆரத்தி எடுத்து அருமை மகளைப் புக்ககத்தில் சேர்த்து விட்டு வீடு வந்து சேர்ந்தபோது. அக்கடா என்று இருந்தது. லேசாகக் கண்ணை இருட்டிக் கொண்டு வரும் போல இருக்க, அப்படியே வெற்றுத் தரையில் தலைக்குக் கை கொடுத்துச் சாய்ந்து கொண்டார்.

"என்ன பண்ணுது நாத்தனாரே? காபி கலந்துட்டு வரட்டுமா?" என்று தொடுத்துக் கொண்டிருந்த பூச்சரத்தை அப்படியே வைத்துவிட்டு அடுக்களைக்குச் சென்றார் சிவகாமி.

"வீட்டைக் கட்டிப் பார். கல்யாணம் பண்ணிப் பார்'னு சும்மாவா சொன்னாங்க. இத்தனைக்கும் மேள தாளத்துல இருந்து பந்தி பரிமாறும்வரைக்கும் எல்லாம் அவங்களே ஆளுங்களை வெச்சு ஆர்ப்பாட்டமா முடிச்சிட்டாங்க.

"சும்மா மண்டபத்தைச் சுத்தி வந்ததுக்கே உடம்பு ஓய்ஞ்சு போச்சு போ. ராத்திரி அவளுக்கு அலங்காரம் பண்ணிவிட மறுபடியும் அவங்க வீட்டுக்குப் போகணும். சித்த அப்படியே கண்ணசந்து படு!" என்று மகளுக்கு உத்தரவிட்டுக் கொண்டிருந்தார் ரங்கநாயகி.

**பு**து மணமக்கள், சம்பந்திகள், உறவினர்கள் என்று புடை சூழ்ந்திருக்க, விமான நிலையமே கலகலத்துக் கிடந்தது. அனைவரையும் பிரியப் போகிறோமே என்ற ஆதங்கத்தில் ரேகா திடீரென்று கண் கலங்க, தோழியைப் பிரியப் போகிறோமே என்ற ஆதங்கத்தில் இளவரசியும் சேர்ந்து கண் கலங்கினாள்.



"அடடா... நீங்க ரெண்டு பேரும் பெருக்குற குற்றால அருவியில் ஃப்ளைட்டெல்லாம் கப்பலா மாறி மிதக்கும் போல இருக்கே!" என்று கேலி செய்து கொண்டிருந்தான் சுரேந்தர்.

விமான நிலைய அறிவிப்புக் கேட்டதும், புது ஜோடிகளுக்கும், உறவினர்களுக்கும் கையசைத்து விட்டுப் பிரபாகரனும், இந்திரா தேவியும் வேறு வண்டியில் வீட்டைச் சென்று அடைந்திருக்க, மனைவியோடு சாவகாசமாய்ப் பயணிக்க எண்ணியவனாய்ச் சுற்று வழிப் பாதையில் வந்து கொண்டிருந்தான் தருண். புது மாப்பிள்ளையாய் அவன் டிரைவிங்கில் அமர்ந்திருக்க, அவனருகே புதுக் கருக்குக் குறையாமல் அவள்.

"போற வழியில முருகன் கோவிலுக்குப் போயிட்டுப் போலாமா?" – திடீரென்று கேட்டாள்.

"அவர் ரெண்டு பொண்டாட்டிக்காரர் ஆச்சே. உனக்கு ஓ.கே.வா?" என்று வேண்டுமென்றே வம்பிழுத்தான்.

"அப்படின்னா பத்ரகாளியம்மன் கோவிலுக்குப் போங்க!" என்று அவள் முறைப்பாகச் சொல்லவும், அவன் முகத்தில் எப்போதும் போல் பளீர்ச் சிரிப்பு.

அவள் ஆசைப்பட்டதைப் போல முருகன் கோவில் அருகே வண்டி நின்றது. கட்டித் தொங்க விடப்பட்டிருந்த எலுமிச்சை மாலை வாங்கிக் கொண்டவள், அவனுடன் இணைந்து நடந்தாள்.

"அடிக்கடி கோவிலுக்குப் போற பழக்கம் உண்டா? பூஜை, விரதம் அந்த மாதிரி யெல்லாம்?"

"அப்படியெல்லாம் ஒரேயடியா கிடையாது. எப்பத் தோணுதோ அப்பப் போவேன். இன்னைக்கு உங்களோட சேர்ந்து வரணும்னு ஆசையா இருந்தது."

மெட்டிச் சத்தமும், காலின் கொலுசுச் சத்தமும் தாளமிட, அவள் பிராகாரத்தைச் சுற்றி வந்தபோது, அருகில் நடந்தவனின் பார்வை அவளையே வட்டமிட்டது.

சந்நிதியில் மனமுருக நின்றிருந்தாள் இளவரசி. மூடிய இமைகளுக்குள், 'உன் ஆசையை நான் நிறைவேற்றினேனா?' என்று கேட்டுப் பூவரசி அம்மன் அழகாய்ச் சிரித்தாள்.

அம்மனின் சந்நிதியில் தருணை நினைத்தவள், கந்தனின் சந்நிதியில் அம்மனை நினைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கே தன் செய்கை விநோதமாகப் பட, உதட்டில் புன்னகை மலர்ந்தது.

"சுவாமியை வணங்கிட்டு இருந்தப்ப திடீர்னு சிரிச்சியே? என்ன விஷயம்?" மீண்டும் காரில் சென்றபோது கேட்டுக் கொண்டிருந்தான்.

ஊருக்குச் சென்றிருந்தபோது அவனை நினைத்து அவள் பட்ட அவஸ்தைகளை ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொண்டே வந்தாள் இளவரசி.

இறுதியாகப் பூவரசி அம்மன் சந்நிதியில் அம்மனுக்குப் பதிலாக அவனை நினைத்ததை அவள் சொல்லிக் கொண்டிருக்க, அவள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அவனுக்குள் கிளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. கண்களில் வேட்கையோடு இளாவைத் திரும்பிப் பார்த்தான்.



கழுத்தில் புத்தம் புதுத் தாலிக் கயிறு. அரேபிக் மெஹந்தியில் சிவந்திருந்த விரல்கள். சற்றே கலங்கியிருந்தாலும் அழகு குறையாத தாமரை விழிகள். கடித்துப் பார் என்று அழைக்கும் கன்னம். என்னைத் தீண்டும் உரிமை உனக்கு மட்டும்தான் என்று அழைப்பு விடுத்த மெல்லிய உதடுகள்.

இரவின் களியாட்டத்திற்கு இன்னும் நேரம் மிச்சமிருக்க, அதை எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. காரின் ப்ளேயரை ஆன் செய்ய அதுவோ, 'தீப்பிடிக்க முத்தம் கொடுடா...' என்று உசுப்பேற்றியது.

ஒற்றைக் கையில் ஸ்டியரிங்கைப் பிடித்தவன் மறுகையில் அவள் விரல்களைக் கோத்துக் கொண்டான். சில்லென்று இருந்த அவளது உள்ளங்கை அவன் கிளர்ச்சியை மேலும் அதிகப்படுத்தியது.

அதுவரை பேசிக் கொண்டே வந்தவள் அவன் ஸ்பரிசம் பட்டதும் சட்டென்று ஊமையாகிப் போனாள். அவள் வளையல்களை அவன் உருட்டி விளையாடிக் கொண்டிருக்க, அவளுக்குள்ளும் மின்சாரம் பரவிக் கொண்டிருந்தது. அவன் பார்வைத் தீண்டலில் அவள் கன்னக் கதுப்புகள் சூடேற இரவின் முகவரிக்காக அவள் இதயமும் தவிக்கத் துவங்கியது.

செங்கமலம் சிரிக்குது சங்கமத்தை நினைக்குது!

கூகூ...குக்குகூகூ

கூகூ எனக் கூவும் குயில்

சின்னச் சின்னச் சத்தத்தில்

அந்திப் போர் நடத்தும்...

செல்லும் வழியில் எங்கோ ஸ்பீக்கரில் ஒலித்துக் கொண்டிருந்த பழைய பாடல். சாஸ்திரப்படி பெண் வீட்டில் தான் சாந்தி முஹூர்த்தம் நடைபெற வேண்டும் என்பதை ஏற்க மறுத்திருந்தான் தருண். அவனது தாம்பத்திய வாழ்க்கை அவன் வீட்டில் தொடங்க வேண்டும் என்று அவன் பிரியப்பட, அவன் போக்கிற்கு அத்தனை பேரும் தலையசைக்க வேண்டியதாய் இருந்தது.

அன்று இரவு நடைபெறப் போகும் சோபன முஹூர்த்தத்திற்காக இளவரசியை அலங்கரித்துக் கொண்டிருந்தபோதுதான் அந்த அலைபேசிச் செய்தி.

செய்தியைக் கேட்டதும் இந்திரா தேவி கேவிக் கேவி அழத் தொடங்க, பிரபாகரன் தன் மனைவிக்கு ஆறுதல் சொல்லத் தொடங்கினார்.

"வாட் இஸ் ஹேப்பனிங்?" என்றபடியே அருகில் வந்த மகனிடம் இந்திராவின் தாயார் திடீரென்று ஏற்பட்ட மாஸிவ் ஹார்ட் அட்டாக்கில் இறந்து விட்ட செய்தியைத் தெரிவித்தார் பிரபாகரன்.

சம்பந்தியிடம் என்னவோ கேட்க வந்த மீனாட்சி, ஹாலில் இருந்த நிலவரம் கண்டு திகைத்து நின்றார்.



நாத்தனாரைத் தேடிச் சிவகாமியும் வர, நீண்ட நேரமாகியும் அம்மாவும், அத்தையும் வராததால், இளவரசியும் ஹாலுக்கு வந்து சேர்ந்தாள்.

கடல் நீல வண்ண டிசைனர் பட்டில் தங்க நகைகளோடு தேவதையாக வந்து நின்றவளைக் கண்டு பெருமூச்செறிந்தான் தருண்.

"நல்ல நாளும் அதுவுமா இப்படி நடந்திருக்க வேண்டாம். பேரன், பேத்திகளோட திருமணத்தைப் பார்த்த திருப்தியில இந்த உலகத்தை விட்டே புறப்பட்டுப் போயிட்டாங்க." சுந்தரம் தன் குரலில் வருத்தத்தைத் தேக்கி வைத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

என்னவென்று புரியாமல் இளவரசி பார்த்துக் கொண்டிருக்க, "இந்த மாதிரி நேரத்துல எந்தச் சம்பிரதாயமும் இனி நடக்கறதுக்கு இல்லை. நீங்க ஊருக்குப் புறப்படுங்க சம்பந்தி. மற்றதெல்லாம் நாள் தள்ளிப் பார்த்துக்கலாம்..." என்று மீனாட்சி சொல்லவும், மருமகளின் முகத்தை நிமிர்ந்து பார்த்தார் இந்திரா தேவி.

பாவம்! எத்தனையோ எதிர்பார்ப்புகளோடு சின்னஞ் சிறுசுகள் காத்திருக்கும்போது இப்படியாகி விட்டதே... என்ற கவலை அவர் முகத்தில் தெரிந்தது.

மும்பைக்கு விமான டிக்கெட்டுகளை அவசர கதியில் புக் செய்து கொண்டிருந்தான் தருண். இளவரசியின் பெயரையும் சேர்த்துப் பதிவு செய்ய... வேண்டாம் என்று பெரியவர்கள் அத்தனை பேரும் மொத்தமாய்த் தடுத்து விட்டனர்.

"இன்னைக்குத்தான் முஹூர்த்தமே முடிஞ்சிருக்கு. எடுத்தவுடனே துக்க நிகழ்ச்சிக்கு ஜோடி போட்டுப் போக வேண்டாம்!" என்று பிரபாகரனே சொன்னபோது ஹாலில் அமைதி நிலவியது.

"யௌவனா, ரேகாவும் கூடப் புதுசா கல்யாண மானவங்கதானே! அங்கதானே இருக்காங்க..." என்று வாதிட்டுப் பார்த்தான் தருண்.

"அவங்க சொந்தப் பேத்திங்க மாப்பிள்ளை. சம்பவம் நடந்திருக்கறதே அவங்க வீட்டுலதான். மற்ற விஷயங் களுக்கு நாங்க உங்களுக்கு இணங்கி வரலையா? இந்த ஒரு விஷயம் மட்டும் பெரியவங்க இஷ்டப்படி விட்டுடுங்க!" என்று மீனாட்சி உறுதியாகக் கூறவும், வேறு வழி யில்லாமல் இளவரசியை உள்ளே வரும்படி பார்வையால் ஜாடை காட்டி விட்டு ஹாலின் மூலையிலிருந்த அறையை நோக்கி நடந்தான் தருண்.

"என்னுடைய ஆழ்ந்த வருத்தங்கள் தரூ. எதிர்பாராம என்னென்னவோ நடந்துடுச்சு. காலையில ரெண்டு பேரும் ஜோடியா விழுந்து ஆசிர்வாதம் வாங்கினோம். ராத்திரி இந்த மாதிரி ஆயிடுச்சு. பாட்டிம்மாவுக்கு என்ன வயசு?"

"எழுபத்து ஒன்பது. ச்சு... என்ன செய்ய? விதின்னு ஒண்ணு இருக்கே. யாருக்கு எப்போ என்ன எழுதி வெச் சிருக்குன்னு யாருக்குமே தெரியறதில்ல."

பேசிக் கொண்டே அவளை மெல்லத் தன்னருகில் இழுத்துக் கொண்டான் தருண்.



"தானே புயல்... தானே புயல்னு வார்த்தைக்கு வார்த்தை சொல்லிட்டு முக்கியமான நேரத்துல..."

அவள் தோள்களில் கையூன்றியவனாய்ப் பெரு மூச்சோடு அவன் சொல்ல, எதுவும் பேசாமல் அமைதி யாக நின்றாள்.

"ஈமச்சடங்கு, அதைத் தொடர்ந்து வர்ற சம்பிரதாயங் கள்னு எல்லாம் முடிய நாளாயிடும். அதுவரைக்கும் நாம ரெண்டு பேரும் பிரிஞ்சுதான் இருக்கணும்."

அவள் மருதாணி விரல்களைத் தன் நெஞ்சில் பதித்து அவன் பேச, அவனுடைய ஏக்கங்கள் அவளுக்கும் புரியாமல் இல்லை. அவள்தான் என்ன செய்ய முடியும்?

அடுத்து என்ன நிகழும் என்று தெரிந்து விட்டால் மனிதன் ஆண்டவனையே அல்லவா ஜெயித்து விடுவான். எதிர்பாராத திருப்பங்கள் நிறைந்ததுதான் வாழ்க்கை...!

"தீட்டு முடியற வரைக்கும்தானே! கொஞ்ச நாள் பொறுமையா இருப்போம்."

நிலம் பார்த்துப் பதில் சொன்னவளைத் தன் நெஞ் சோடு அணைத்துக் கொண்டான். அவளுக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லை.

ஆயுள் முழுக்க அவன் அணைப்பிலேயே அடங்கிக் கிடந்தால் போதுமென்று தோன்றியது.

அவனும் அமைதியான மோன நிலையில் அவள் கூந்தலை வருடிக் கொண்டு நின்றான். ஆத்மார்த்தமான

காதல்... இரண்டு இதயங்களின் இயக்கத் துடிப்பாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

"நான் மும்பையில் இருந்து திரும்பி வந்ததும் போன் பண்றேன். டேக் கேர்!" என்று மென்மையாக அவள் நெற்றியில் முத்தமிட, கண்கள் கலங்க, அவனை விட்டு விலகியவளை... மீண்டும் தன் தோளோடு சேர்த்துக் கொண்டான் தருண்.

"நீ இப்படி அழுதுட்டே போனா இதே முகம்தான் என் மனசுக்குள்ள நிற்கும்." அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீரை அவன் தன் விரல்களால் துடைத்து விட, எதையோ அவனிடமிருந்து எதிர்பார்த்தவளாய் இமை மூடி நின்றாள் இளவரசி.

அவள் இதயத்தின் ஏக்கம் புரிந்து மென்மையாய் அவள் கன்னங்களில் முத்தமிட்டான் தருண். அவள் உதடுகளைத் தன் உதடுகளால் அவன் அழுத்திய நேரம்...

"இளா...!" வெளியிலிருந்து சிவகாமியின் குரல் கேட்டது.

டக்கென்று தன்னை அவனிடமிருந்து விடுவித்துக் கொண்டவள் கண்களால் அவனிடமிருந்து விடை பெற்று அறையை விட்டு வெளியேறினாள். தருணிடமிருந்து பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

சம்பந்திகளுக்கு ஆறுதல் வார்த்தை கூறித் தங்கள் மகளையும் அழைத்துக் கொண்டு சுந்தரமும், மீனாட்சியும் வீடு நோக்கிப் புறப்பட்டனர். செழியனும் இல்லாததால் தருண் அவனே வண்டியெடுக்க வேண்டியிருந்தது.



"நீங்க மும்பை புறப்படற வேலையைப் பாருங்க. நாங்க கால் டாக்சி பேசிக்கறோம்!" என்று சுந்தரம் எடுத்துச் சொல்லியும் கூட அவன் கேட்பதாக இல்லை.

அவன் டிரைவிங்கில் இருக்க... அமைதியாக அவனருகே இளவரசி. மற்ற மூவரும் பின்னால்...!

விமான நிலையத்திலிருந்து திரும்பி வரும்போது இதே வண்டியில் ஏதேதோ கற்பனை செய்தபடி வந்ததை இருவருமே நினைத்துக் கொண்டனர். இப்போது அத்தனையும் தலைகீழ்ச் சூழ்நிலையாய்...!

தருண் வீடு வந்து சேர்ந்தபோது இந்திராதேவியும், பிரபாகரனும் ஊருக்குப் புறப்படுவதற்குத் தயாராய்ப் பெட்டிகளை அடுக்கிக் கொண்டிருந்தனர். அவனும் தனக்குத் தேவையானதை எடுத்து வைக்கத் தன் அறைக்குச் சென்றான்.

அந்த விஸ்தாரமான கட்டில் முழுதும் ரோஜா இதழ்களும்,மல்லிகை மலர்களும் பரவிக் கிடக்க, ரூம் ஸ்ப்ரே, ஊதுபத்தி வாசனை என்று கலவையாக இருந்தது. அவனுக்கு மிகவும் பிடித்த மல்லிகைச் சரங்களும், முல்லைச் சரங்களும் கட்டிலைச் சுற்றி நெருக்கமாய்த் தொங்க விடப்பட்டிருந்தன.

அத்தனை அலங்காரங்களும் அர்த்தமின்றிப் போனதாய்க் காட்சியளித்தன. இடுப்பில் கை வைத்தபடி கட்டிலையே வெறித்துக் கொண்டு நின்றான். கீழேயிருந்து பிரபாகரனின் குரல் கேட்க, அவன் கைகள் லாஃப்டில் இருந்த சூட்கேஸை நோக்கி நீண்டன.

15

"இதுக்குத்தான் நான் அப்பவே சொன்னேன். குல தெய்வத்துக்கிட்ட அனுமதி கேட்காம எல்லாம் செய்யப் போய் எப்படி வந்து முடிஞ்சிருக்கு பாரு!"

ரங்கநாயகி மீனாட்சியிடம் புலம்பிக் கொண்டிருந்தது சுந்தரத்தின் காதிலும் விழுந்தது.

மாமியாரின் தொணதொணப்பு எப்போதுமே அவருக்குப் பிடிப்பதில்லை.

"மீனா... உன் அம்மாவைச் சும்மா இருக்கச் சொல்லு. மொட்டைத் தலைக்கும், முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டுப் பேசறதே வேலையா போயிடுச்சு.

"நம்ம வீட்டு சார்பா நாளைக்கு நான் துக்கத்துல கலந்துக்கணும். நீயும் வர்றதுன்னா தேவையானதை எடுத்து வை. நாளைக்கு எர்லி மார்னிங் ஃப்ளைட்ல மும்பை போயிடலாம்."

"போய் எடுத்து வைங்க நாத்தனாரே! நானும், அத்தையும் இங்கதானே இருக்கோம். அரசியையும், லாவண்யாவையும் நாங்க பார்த்துக்க மாட்டோமா?" என்று சிவகாமிதான் துரிதப்படுத்தினார்.

மறுநாள் அதிகாலையிலேயே சுந்தரமும், மீனாட்சியும் மும்பை புறப்பட்டுச் சென்று விட்டனர்.

லாவண்யாவும் கல்லூரிக்குச் சென்றுவிட, வீட்டில் ரங்கநாயகி, சிவகாமி, இளவரசி மட்டுமே.



குட்டி போட்ட பூனையாய் வீட்டுக்குள் வளைய வந்து கொண்டிருந்த இளவரசியைக் காணச் சிவகாமிக்குப் பாவமாக இருந்தது.

"இளாம்மா... எனக்குச் சமையல்கட்டுல கூடமாட உதவி செய்யேன். உனக்கும் பொழுது போன மாதிரி இருக்கும். புதுசா ஏதாவது கத்துக்கிட்ட மாதிரியும் இருக்கும்!" என்று அவள் கவனத்தை வேறு புறம் திருப்பித் தன்னருகே வைத்துக் கொண்டார் சிவகாமி.

மாலை மயங்கும்வரை எப்படியோ பொழுதை ஓட்டி விட்டாள். இரவு நெருங்க நெருங்க இளமைக் கனவுகள் அவளை அலைக்கழிக்கத் துவங்கின.

கழுத்தில் புத்தம் புதிய மஞ்சள் கயிற்றோடு தன் அருகே படுத்திருந்த அக்காளையே பார்த்துக் கொண் டிருந்தாள் லாவண்யா. இளவரசி தூங்கவில்லை... வெறுமனே இமை மூடியிருக்கிறாள் என்பது அசைந்த அவள் கருவிழிகளிலேயே தெரிந்தது.

அவள் நினைவுத் தேடல்கள் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருக்க, அவளையும் அறியாமல் இதழோரம் மெலிதாய் ஒரு புன்னகை.

"அக்கா... மாமாவை நினைச்சு ட்ரீம் அடிச்சிட்டு இருக்கிறியா?" லாவண்யாவின் குரல் கேட்டுக் கண் விழித்தாள்.

"நீ இன்னும் தூங்கல?" என்று எழுந்து முழங் காலைக் கட்டிக் கொண்டு அமர்ந்தாள் இளவரசி.

"அப்படியே உன்னையே பார்த்துட்டு இருக்கணும் போல இருந்தது. பெண்களுக்குத் தாலி எவ்வளவு அழகு! இல்லையாக்கா? தினமும் பார்த்துப் பழகியிருந்தாலும் கழுத்துல இந்தப் புது மஞ்சள் கயிறோடு உன்னைப் பார்க்கும்போது தெய்விகமா இருக்கு. ஹூம்... உன் அழகு என்னையே தூங்க விடாமப் பார்க்க வைக்குதே? தருண் மாமா உன் பக்கத்துல இருந்தா..." என்று கேலி செய்து கொண்டிருந்த தங்கையைப் பட்டென்று தோளில் அடித்த போதே செல்பேசி சிணுங்கியது.

"ஹா...ஹா... தின்க் ஆஃப் தி டெவில். ஹியர் இட் கம்ஸ். மாம்ஸ்தான் லைன்ல இருக்காரு. பேசு பேசு. ஒட்டுக் கேட்க அனுமதியுண்டா?" என்று கேட்டவளை அறையை விட்டு வெளியே போ என்று சிரித்துக் கொண்டே சைகை காட்டினாள் இளவரசி.

அக்காவைக் கேலிப் பார்வை பார்த்துக் கொண்டே அறையை விட்டு வெளியேறிக் கதவைச் சாத்திக் கொண் டாள் லாவண்யா.

"ஏன்டா... ஃபோனை எடுக்க இவ்வளவு நேரம்? தூங்கிட்டு இருந்தியோ?"

முழுதாக இருபத்து நான்கு மணி நேரம் கழித்துத் தருணின் குரலைக் கேட்க வேண்டியிருந்தது.

"எங்க தூங்கறது? கண்ணை மூடினாலே நீங்க தான் தெரியறீங்க. அத்தை எப்படி இருக்காங்க? அதிகமா அழுதா அவங்க ஹெல்த் பாதிக்கப்படும்."



"தேங்க்ஸ் கண்ணம்மா! நீ எடுத்தவுடனே அம்மாவைப் பற்றி விசாரிப்பேன்னு நான் நினைக்கவே இல்லை."

"இட்ஸ் மை ட்யூட்டி. ரேகா, யௌவனா எல்லாம் எப்படி இருக்காங்க?"

"எல்லாம் ஆளுக்கு ஒரு திக்குல ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துட்டு உட்கார்ந்திருக்காங்க. துக்க வீட்டுல வேற என்ன செய்ய முடியும்? வீடு முழுக்கக் கசகசன்னு ஒரே கூட்டம். மொட்டை மாடியில நின்னு பேசிட்டு இருக் கேன்."

நீண்ட நேரம் பேசிக் கொண்டே இருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

கடிகார முட்கள் நள்ளிரவு பன்னிரண்டு மணியைத் தாண்டியிருக்க, "ஹையோ கடவுளே... இன்னுமா முடியலே? நான் ஹால்லயே தூங்கறேன் போ!" - அறைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு மீண்டும் சலிப்போடு சென்றாள் லாவண்யா.

"ஏய் லவா... இங்கேயே படு!" என்று இளவரசி தன் தங்கையை அழைப்பது அவனுக்கு அந்தப் பக்கம் துல்லியமாகக் கேட்டது.

"லாவண்யாவா... அவகிட்ட போனைக் கொடு!" என்று உத்தரவிட்டான் தருண்.

"மாமா பேசணுமாம்..!" என்று தங்கையிடம் செல்லைக் கொடுத்தாள் இளவரசி.

மச்சினியிடம் என்ன பேசினானோ? அந்தப் பக்கம் அவன் ஏதோ சொல்ல, இந்தப் பக்கம் கலகலவென்று சிரித்தாள் லாவண்யா. தங்கையின் முகத்தையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் இளவரசி.

"மாம்ஸ்... உலகத்தின் ஒன்பதாவது அதிசயம் கேள்விப்பட்டு இருக்கீங்களா? எப்பவும் நான் உங்ககிட்ட பேசினாலே அக்கா முகத்துல எரிமலை தெரியும். இன்னைக்கு ரொம்ப சமர்த்தா என்னை எரிக்காம உட்கார்ந்திருக்கா."

"ஏய்... சும்மா இருக்க மாட்டியா?" என்று இளவரசி செல்லைப் பிடுங்கிய போதே, அந்தப் பக்கம் அவன் சத்தமாகச் சிரிப்பது கேட்டது.

"அக்கா... தூக்கத்துல தருண், தருண்-னு உளறிக் கொட்டாம நிம்மதியா படுத்துத் தூங்குவியாம். அப்படியும் மீறி உளறுனா நான் அதைச் செல்லுல ரிக்கார்ட் பண்ணி வெக்கறதாம். அப்பக் காய்ச்சல் வந்தபோது நீ உளறுனதை அவர் கேட்காம விட்டுட்டாராம். உன் ஆளு ரொம்ப ஃபீல் பண்ணிச் சொன்னாருப்பா."

"போடி! உனக்கும் வேற வேலையில்ல. அவருக்கும் என்னைக் கிண்டல் பண்றதே வேலையாப் போயிடுச்சு. பேசாமப் படுத்துத் தூங்கு!" என்று தலைமாட்டில் இருந்த ஸ்விட்சைத் தட்டினாள் இளவரசி.

**ம**றுநாள் அதிகாலையில் சுந்தரமும், மீனாட்சியும் மும்பையிலிருந்து வந்து சேர்ந்துவிட, அன்று மதியமே ரங்கநாயகியும், சிவகாமியும் ஊருக்குச் செல்வது என்று முடிவானது.



"இளாவையும் கூட்டிட்டுப் போறோமே! இங்கிருந்து என்ன செய்யப் போறா? எப்படியும் சம்பந்தி வீட்டுக்காரங்க எப்ப அழைக்கறாங்களோ அப்பதானே அங்க போக முடியும்!"

பேத்தியைத் தன்னோடு அழைத்துச் செல்லப் பிரியப்பட்டார் ரங்கநாயகி.

என்ன செய்வது என்று புரியாதவளாய் இளவரசி மீனாட்சியின் முகத்தைப் பார்த்தாள். சற்று நேரம் சிந்தனையில் இருந்தவர், இருக்கும் சூழ்நிலையில் இடம் மாறி இருப்பதே அவள் மனதுக்கும் ஆறுதலாக இருக்கும் என்று ஒப்புக் கொண்டார்.

மீண்டும் மாமன் வீட்டுச் செண்டுப் பூக்களின் மணம், மருதாணிச் செடியின் வாசனை என்று மனம் கொள்ளை போனது. நிமிடங்கள் நகர மறுத்து யுகங் களாய்க் கழிந்தன.

அன்று தென்னந் தோப்புவரை தனியாகவே சென்று பொழுதைப் போக்கி விட்டு அன்ன நடையாக நடந்து வந்து கொண்டிருந்தாள் இளவரசி. இதமான காற்று வீசிக் கொண்டிருந்தது. செல்லும் வழியில் ஓரிடத்தில் காலி நிலம். அதில் குவியல் குவியலாய்க் கொட்டி வைக்கப் பட்டிருந்த தென்னை மட்டைகள் மற்றும் கொட்டாங் குச்சிகள். உள்ளே ஏதோ ஃபேக்டரியின் கடகடவென்ற மெஷினரி ஓசை.

வேடிக்கை பார்த்துக் கொண்டே வந்தவளின் பார்வை ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றது. அது... அது...

கனகாதானே...! இந்த ஃபேக்டரி காம்பவுண்டுக்குள் ஒளிந்து நின்று என்ன செய்து கொண்டிருக்கிறாள்?

திடீரென்று தன் தோள் மீது கை விழவும் அரண்டு போய்த் திரும்பிப் பார்த்தாள் கனகா.

"அண்ணி...அண்ணி..." என்று அவள் வாய் திக்கித் திணறியது.

"இங்கென்ன பண்றே? ஏன் முகமெல்லாம் வேர்த் திருக்கு? முதல்ல இந்தக் காம்பவுண்டை விட்டு வெளியே வா!" என்று கனகாவைக் கைப்பிடித்து வெளியே அழைத்துச் சென்றாள்.

"என்னம்மா? யாரைப் பார்த்துப் பயப்படறே? ஏன் ஒளிஞ்சிட்டு நிக்கறே?"

"அண்ணி.. இங்க எதுவும் பேச வேண்டாம் அண்ணி! வீட்டுக்குப் போய்ப் பேசலாம்." சுற்று முற்றும் பதட்டத்துடன் பார்த்துக் கொண்டே இளவரசியோடு சேர்ந்து நடந்தாள் கனகா.

வீட்டுக்குச் சென்றதும் இளவரசி மாடியில் தனக் கென்று ஒதுக்கப்பட்டிருந்த அறைக்குச் செல்லவும், சிறிது நேர இடைவெளியில் கையில் புத்தகங்களை அடுக்கிக் கொண்டு படிக்கச் செல்வது போல மாடிக்குச் சென்றாள் கனகா.

அவள் அறைக்குள் நுழைந்ததும், கதவைத் தாழிட்டாள் இளவரசி.

"சொல்லு கனகா. என்ன பிரச்னை உனக்கு?"



"இப்ப கொஞ்ச நாளா தினமும் ஸ்கூல்ல இருந்து வரும்போது என்னை ஒருத்தன் ஃபாலோ பண்ணிட்டே வர்றான் அண்ணி. ஆரம்பத்துல அவன் என்னைத்தான் ஃபாலோ பண்ணறான்னு புரியவே இல்லை. ஸ்கூல் பஸ் வந்து நிற்கும்போது பொண்ணுங்களை சைட் அடிக்க இவனை மாதிரி சில பேர் அங்கேயே ரவுண்ட் அடிச்சிட்டு நிற்பாங்க. அந்த மாதிரி இவனும் ஒரு பொறுக்கின்னு விட்டுட்டேன். அன்னைக்கொரு நாள் கோவிலுக்குப் போயிட்டு வரும்போது குறுக்கே வண்டியை நிப்பாட்டி எங்கிட்ட பேசவும் எனக்குத் திக்குன்னு ஆயிடுச்சு."

"என்ன பேசுனான்?"

"அவனுக்கு என்னை ரொம்பப் பிடிச்சிருக்காம். ரொம்ப நாளாவே என் மேல காதல் கிறுக்கு முத்திப் போய்த் திரியறானாம். நானும் அவனை லவ் பண்ணணு மாம். இல்லன்னா அவன் அப்பாகிட்ட சொல்லி ஆள் வெச்சாவது தூக்கிட்டுப் போய்க் கொட்டில்ல அடைக்கற மாதிரி அடைச்சு வெச்சிடுவானாம். இன்னும் என்னென் னவோ உளறுனான்."

"நீ என்ன சொன்னே?"

"நான் எதுவும் பேசலே அண்ணி. திடீர்னு அவன் வண்டியைக் கொண்டாந்து குறுக்க நிறுத்தவும் எனக்குப் பயத்துல மூச்சே நின்னு போச்சு. இன்னைக்கு ஃப்ரெண்ட் வீட்டுக்குப் போய் நோட்ஸ் எழுதிட்டு வந்துட்டு இருந்தேன். தூரமா அவன் பைக்ல வந்துட்டு இருந்தபோதே பார்த் துட்டேன். டக்குன்னு அந்த மில்லு காம்பவுண்டுக்குள்ள

ஒளிஞ்சிட்டேன். அவன் பார்வையில படாம தப்பிச்சா போதும்னு ஆயிடுச்சு."

"இதுவரைக்கும் எத்தனை முறை உன்கிட்ட வந்து பேசியிருக்கான்?"

"ரெண்டு தடவை பேசியிருக்கான், அண்ணி. ஆஞ்சநேயர் கோவில் கிட்ட ஒரு தரம். என் ஃப்ரெண்ட் லதா வீட்டுக்குப் போற வழியில ஒரு தரம்."

"இதை இப்படியே வளரவிடக் கூடாது, கனகா. மைனர் பொண்ணுகிட்ட காதலைச் சொல்றவன் எவ்வளவு மட்டமானவனா இருக்கணும். எங்க பார்த்தாலும் லவ் பண்ண மறுக்கற பொண்ணுங்க மேல ஆசிட் வீசறது, கடத்திட்டுப் போய்த் தாலி கட்டறதுன்னு அத்தனை அராஜகத்துக்கும் துணிஞ்சு திரியறானுங்க. நடேசு மாமாகிட்டயோ, மனோ கிட்டயோ சொல்ல வேண்டியது தானே?"

"சொன்னா... அடுத்த நிமிஷமே அப்பாவும், அண்ணனும் சேர்ந்து அவனைப் புரட்டி எடுத்துடுவாங்க அண்ணி. ஆனா அவனோட அப்பன் கட்டப் பஞ்சாயத்துப் பேசற ஆளு. இந்த ஊருக்குள்ள என்ன அடிதடி, சண்டை சச்சரவு வந்தாலும் அதுக்கு அவன்தான் காரணமா இருப்பான்னு நம்ம வீட்டுலயே பேசிப்பாங்க. உள்ளூர் போலீஸ் கூட அவன் அடாவடித்தனத்தைக் கண்டும் காணாம விட்டுடுவாங்களாம். நான் ஏதாவது சொல்லப் போய் நம்ம குடும்பத்தைச் சேர்ந்தவங்களை அவன்



எதுனாச்சும் பண்ணிடுவானோன்னு பயமா இருக்கு, அண்ணி."

சற்று நேரம் சிந்தனையில் அமர்ந்திருந்தாள் இளவரசி. கனகாவுக்கும் அந்தப் பொறுக்கியால் துன்பம் வரக்கூடாது. இந்த வீட்டைச் சேர்ந்த மற்றவர்களும் எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளக் கூடாது. என்ன செய்வது?

லோக்கல் போலீஸ் ஒழுங்காக இருந்தால் ஈவ் டீசிங் என்று புகார் கொடுக்கலாம். அதற்கும் வழியிருக்காது போலிருக்கிறது.

"இனிமே அந்த மாதிரி மில்லுக்குள்ள போய் ஒளியாதே. உள்ள இருக்கறவன் எவனாவது சத்தமில்லாம உன்னை இழுத்துட்டுப் போய் எதுனாச்சும் செய்தா என்ன ஆறது? சரி... நீ போய்ப் படி. என்ன பண்ணறதுன்னு யோசிப்போம்!" என்று பெருமூச்சோடு அவளை அனுப்பி வைத்தாள் இளவரசி.

அன்று இரவும் அலைபேசியிலேயே தருணோடு குடும்பம் நடத்தினாள் இளா.

கம்பெனியைக் காரணம் காட்டி, அவன் மட்டும் மும்பையிலிருந்து திரும்பி வந்திருந்தான்.

"யாரைக் கேட்டு நீ ஊர்ல போய் உட்கார்ந்திருக்கே? லோக்கல்ல இருந்தாலாவது ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கவாவது முடியும்."

அவளைக் காண முடியவில்லை என்ற ஆதங்கத்தில் அவன் குரல் கோபத்தோடு ஒலித்தது.

"அம்மாவும், பாட்டியும் சேர்ந்து செய்த சதி! உங்க வேகம் தெரிஞ்சுதான் என்னை இங்க அனுப்பி வெச்சிட்டாங்க." கலீரென்று சிரித்தாள் இளவரசி.

அவள் சிரிப்பில் அவனுக்குள் ஆயிரம் அலைகள். "ஜஸ்ட் எ ஃப்யூ டேஸ். அம்மா, அப்பா வந்துடுவாங்க. அதுக்குப் பிறகு இருக்குடி உனக்கு..." என்று மென்மையாக அலைபேசியில் அவளை முத்தமிட்டான்.

எலெக்ட்ரானிக் முத்தமாக இருந்தாலும், அதன் வேலையைக் காட்டத்தான் செய்தது.

ஒரு கணம் சொக்கிப் போய்க் கண்மூடி அமர்ந்திருந்தாள் இளவரசி. "கண்ணம்மா..." என்று இரண்டு மூன்று முறை அவன் குரல் கேட்ட பிறகே சுய உணர்வு திரும்பியது.

"தரு... ஐ நீட் எ ஃபேவர் ஃப்ரம் யூ."

"என்னுடைய இளவரசிக்கு இல்லாததுன்னு இந்த உலகத்துல ஏதாவது இருக்கா? என்னன்னு சொல்லு?"

அவள் சொன்னதை யெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான் தருண்.

"இது நான் எப்படி? ஓ.கே... கிவ் மீ சம் டைம். அப்பாகிட்ட பேசிப் பார்க்கிறேன். டேக் கேர் டியர்!" என்று முடித்து விட்டான்.

சடங்கு சம்பிரதாயங்கள் முடிந்து இந்திரா தேவியும், பிரபாகரனும் மும்பையிலிருந்து திரும்பி வர, இளவரசி தன் புக்ககம் திரும்பிச் செல்லும் நாளும் வந்தது.



எண்ணெய் வைத்துத் தலை குளித்துப் பூவரசி அம்மன் கோவிலுக்குச் சென்று நெய் விளக்கு ஏற்றி வழிபட்டாள். சலனங்கள் அத்தனையும் அடங்கிய நிலையில் அவள் மனம் அம்மனை உருக்கமாய் நினைத்து வழிபட்டது.

"சீக்கிரமே நீயும் உன் புருஷனும் ஜோடியாய் வந்து நம்ம வீட்டுல விருந்து சாப்பிடணும்!" என்று ஆசிர்வதித்து அனுப்பினார் ரங்கநாயகி.

தேங்காய், பழம், பூ, புடவை என்று மங்களகரமான பொருட்களோடு அவளை வழியனுப்பி வைத்தார் சிவகாமி.

நடேசனோடு தாய் வீட்டைச் சென்று அடைந்த போதே, அங்கே இந்திரா தேவியும், தருணும் அவளுக்காகக் காத்திருந்தார்கள்.

ஒரு சிறிய பிரிவுக்குப் பின் கணவனைக் கண்ட ஏக்கம் அவள் கண்களில் வெளிப்பட, அவன் பார்வையும் அவளைத் தென்றலாய் வருடிச் சென்றது.

"உன்னை அழைச்சிட்டுப் போக உன் மாமியாரே புறப்பட்டு வந்துட்டாங்க. ராத்திரி உனக்குச் செய்ய வேண்டிய அலங்காரமெல்லாம் கூட அவங்களே பார்த்துக்கறாங்களாம். பார்த்துப் பக்குவமா நடந்துக்கோ. நானும், அப்பாவும் காலையில வந்து பார்க்கறோம்." மகளின் காதில் ரகசியம் பேசி வழியனுப்பி வைத்தார் மீனாட்சி.

அன்று இரவு மெல்லிய மெட்டிச் சத்தமும், கொலுசின் ஒலியும், பட்டுப் புடவையின் சரசரப்பும் அவள் வருகையைத் தெரிவிக்க, அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான் தருண்.

'அவள் அழகோ? காமன் சிலையழகோ?' என்று மனம் கவிதை பாடத் துவங்கியது. பால் சொம்பை அவனிடம் கொடுத்து விட்டு அவன் காலில் விழ முயன்ற வளை, ஒற்றைக் கையால் தடுத்து நிறுத்தினான்.

"என்ன இதெல்லாம் பத்தாம் பசலித்தனம்!" அவன் புருவங்கள் கோபத்தில் நெரிந்தன.

வந்த கோபம் அதே கணத்தில் திரும்பிச் செல்ல, அவள் கையை மென்மையாகப் பற்றித் தன்னருகே அமர்த்திக் கொண்டான்.

"முன்ன இருந்ததுக்குக் கொஞ்சம் மெலிஞ்ச மாதிரி இருக்கியேடா!" தான் அருந்திய பாலின் மிச்சத்தை அவளிடம் கொடுத்தான். அவன் கைகள் மெல்ல அவள் தோளை அணைத்துப் பின்னர் அவள் காது மடல்களை ஸ்பரிசிக்கத் தொடங்கின.

கை விரல்களை ஒன்றோடு ஒன்று கோத்தவளாய் உதட்டை அழுந்தக் கடித்து அமர்ந்திருந்தாள் இளவரசி.

"கனகா விஷயத்துல நீங்க ஆக்ஷன் எடுத்ததுக்கு ரொம்ப தேங்க்ஸ் தரு!"

"உன்னுடைய நன்றியெல்லாம் அப்பாவுக்குத்தான் சேரும். தனக்குத் தெரிஞ்ச நண்பர் மூலமா ஐ.ஜி கிட்ட



கம்ப்ளெய்ண்ட் கொடுத்து ரகசியமா அந்தப் பையனை ரெண்டு தட்டுத் தட்டி வைக்கச் சொன்னாரு. யார் கம்ப்ளெய்ண்ட் பண்ணினாங்க... எதுக்குப் போலீஸ் அவனைத் தூக்கறாங்க... எதுவும் அவனுக்குப் புரியாது. போலீஸ் பார்வை தன் மேல இருக்குன்னு தெரிஞ்சு அடங்கி இருப்பான். இதெல்லாம் பேச இதுதான் நேரமா கண்ணம்மா?"

அவன் முரட்டுக் கோபமாய் அவள் தோளில் படிவதைக் கிறங்கும் விழிகளோடு பார்த்தாள் இளவரசி.

பல நாள் காத்திருந்த வேகம் அவன் அழுத்தமான முத்தங்களில் வெட்ட வெளிச்சமாக, அவன் கைகள் எங்கெங்கோ எல்லை மீறிப் பயணிக்க, அவள் மேனி துவளத் தொடங்கிய நேரம், அவன் அணைப்பின் மயக்கத்தில் அவள் விழிகள் மூட, கட்டிலில் விரவிக் கிடந்த மலர்களுக்கு நடுவே அவளையும் மலராய்ச் சரித்தான்.

காதல் மயக்கத்தில் தத்தளித்துத் தவித்த இருவரின் விழிகளும் மோகத்தை மொழியாக்கி, சங்கமத்திற்குச் சம்மதம் தெரிவித்தன. வரைமுறைகள் தகர்க்கப்பட்ட நிலையில் அவன் அணைப்பின் இனிய அவஸ்தைகளில் தவித்தவள், இறுதியில் அவனிடத்தில் தன்னை முழுமை யாக ஒப்படைத்தாள்.

காதலில் களித்து, காமத்தில் திளைத்து, மோகத்தை வென்று உடலும், உயிரும் இணைந்து விட்ட அற்புதமான தருணம்...!

விடியலை வரவேற்கும் குயில்களின் குரலோ, கதிரவனின் கிரணங்களோ எட்டிப் பார்க்க முடியாத வகையில் கனத்த திரைகளால் அடைக்கப்பட்டிருந்த விஸ்தாரமான ஏ.சி. அறை.

உறக்கத்திலும் அவன் கைகள் அவளை வளைத் திருக்க, அவன் நெஞ்சில் தஞ்சம் புகுந்தவளாய் விடிந்ததும் தெரியாமல் நிச்சலனமாய் உறங்கிக் கொண் டிருந்தாள் இளவரசி.

எப்போதும் உடலை முறுக்கிக் கொண்டு புரண்டு படுப்பவன், அன்றும் அதைச் செய்ய, பஞ்சுப் பொதியாய் அவன் நெஞ்சில் அவள்...!

உறக்கம் கலைத்து விடாமல் அசையாது இருந்து விட்டான்.

இரவு அவன் கரங்களில் கசங்கிய பூமாலையாய் அவள் பட்ட இனிய அவஸ்தைகள் ஒவ்வொன்றாய் நினைவுக்கு வர, அவன் உதட்டில் மெல்லிய புன்னகை. இன்று இரவும் தொடரப் போகும் காதல் கணைகளை மலரினும் மெல்லிய இந்தத் தேகம் தாங்குமா?

அவன் விரல்கள் அவள் மேனியை மெல்ல வருடிக் கொண்டிருக்க, எங்கோ பறப்பதைப் போல உணர்ந்தாள் இளா.

மேகங்களுக்கு மேலே, இன்னும் உயரே... சிறகு விரித்து... ஐயோ... மேகங்களில் கூட ஊசியாய்க் குத்தும் முட்கள் இருக்கு'மா?



மெல்லக் கண் திறந்தவளுக்கு அவன் மார்பின் முடியைப் பஞ்சு மெத்தையாய் நினைத்துப் படுத்திருப்பது தெரிந்தது.

வெட்கத்தில் விலக முயன்றவளை வேகமாய்த் தன்னோடு இழுத்துக் கொண்டான் தருண்.

உனக்கும் எனக்கும் இனி இல்லை இடைவெளி என்பதுபோல் இருவரும் பிணைந்து கிடக்க, அவனை ஏறிட்டுப் பார்க்க மறுத்து... நெருப்புக் கோழியாய்த் தன் முகத்தை அவன் கழுத்து வளைவில் மறைத்துக் கொண் டாள் இளவரசி.

சற்றே சத்தமாகச் சிரித்தவன், அவள் உச்சந் தலையில் உதடு பதித்த நேரம், இன்டர்காம் அழைத்தது.

“இந்த நேரத்துல டிஸ்டர்ப் செய்யக்கூடாதுதான். ஆனா உனக்கும், அவளுக்கும் வயிறு பசிக்குமே! மணி எட்டாகுதேப்பா!”

எட்டு மணியாகியும் கீழே இறங்கி வராத விவரத்தை மகனிடம் நாசூக்காய்த் தெரிவித்தார் இந்திரா தேவி.

சுற்றியிருந்த போர்வையை ஆடையாக்கிக் கொண்டு அவள் குளியலறை நோக்கி விரைய, கசங்கியிருந்த மலர்களின் மீது உடலை முறுக்கிக் கொண்டு புரண்டு படுத்தான் அவன்.

இரவு முழுக்க எங்களை இம்சித்து விட்டாயே... இன்னுமா எழுந்திருக்க மனம் வரவில்லை என்று அவை கவலையோடு கேட்டன.

# 16

குளியலறையிலிருந்து ட்ரஸ்சிங் ரூம் செல்வதற்கு மற்றொரு வழியிருக்க, குளித்து விட்டு வெளிர் நீலப் புடவையில் ஒப்பனை ஏதுமின்றிப் புத்தம் புது மலராய் அவள் வெளியே வந்தாள்.

அவள் ட்ரஸ்சிங் ரூமிலிருந்து வெளியே வருவதற்குள் அவனும் குளித்து முடித்திருந்தான் என்பதை அவன் மேனியில் ஒட்டியிருந்த நீர்த் திவலைகள் உணர்த்தின. வெற்று மார்போடு, இடுப்பில் வெறும் டவலோடு குறுக்கே நின்றவனைத் தாண்டிச் செல்வதற்கு வழி தெரியாமல் திகைத்தாள் இளவரசி.

"தலைக்குக் குளிச்சிருக்கேனே... துவட்டி விட மாட்டியா?" அவளருகே அவன் நெருங்கியபோது, மேனியிலிருந்து எழுந்த சோப்பின் சுவாசம் தீண்டியது.

அவன் கட்டிலில் அமர, மறு பேச்சில்லாமல், அவன் தலையைத் துவட்டிக் கொண்டிருந்தாள் இளா.

ஹேர் ட்ரையர் போட்டால் வேலை முடிந்தது. வேண்டுமென்றே அவன் செய்கிறான்... என்பது புரிய, உதடுகளை அழுந்தக் கடித்துக் கொண்டாள்.

அவள் தலையைத் துவட்டிக் கொண்டிருந்த நேரம், அவன் கைகள் அவள் இடையைச் சுற்றி வளைத்திருக்க, அவள் இடையில் படிந்த அவன் அதரங்களின் குறுகுறுப்புத் தாங்காமல் வதனமே ரோஜா நிறத்தைக் கொண்டது.



"ப்ளீஸ்... காலங்காத்தால வேண்டாமே..." என்று அவள் மெல்லிய குரலில் அவன் காதோரம் சொல்ல... சேதி சொன்ன இதழ்கள் அதற்கான தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தன.

'வேண்டாம் வேண்டாம்...' என்று சொல்லிக் கொண்டே இரவில் நடந்த அத்தனையும், மீண்டும் ஒரு முறை அங்கு அரங்கேறிக் கொண்டிருக்க, அரங்கேற்றத்தின் முடிவில் அழுது கொண்டிருந்தாள் இளவரசி.

"எதுக்கு அழறே?" என்று புரியாமல் கேட்டான் தருண்.

"இவ்வளவு லேட்டா கீழே இறங்கிப் போனா எல்லோரும் என்னைப் பற்றி என்ன நினைப்பாங்க?"

"ஒண்ணுமே நினைக்க மாட்டாங்க. அவங்களும் திருமணத்துக்குப் பிறகு இந்த நிலையெல்லாம் தாண்டித் தான் வந்திருப்பாங்க. புரியாதா என்ன? எதையாவது நினைச்சுக் குழப்பிக்காத! என் மனைவியான பிறகு உன் கண்ணுல கண்ணீரே வரக் கூடாதுன்னு நான் நினைக்கிறேன். நீ என்னடான்னா நினைச்ச நேரத்துல ஷவரைத் திறந்து விடறே."

ஷவரிலிருந்து பொசுங்கும் வெந்நீர் மேனியைச் சுட்ட பிறகுதான் உடல் வலி கொஞ்சமாவது விடுவேன் என்றது. அங்கங்கள் அத்தனையும் ரத்தம் கட்டியது போல் விண்ணென்று வலியில் தெறிக்க, ரத்தச் சிவப்பு நிறச் சுரிதார் அணிந்து முகம் நிறையச் சோர்வுடன் அவள் வெளியே வந்தபோது,

முதுகுக்கு இரண்டு தலையணை கொடுத்துக் கட்டிலில் சாய்ந்து அமர்ந்திருந்தவன், "என்னடா... சுரிதார்ல வந்திருக்கே... புடவை கட்டல!" என்று திகைப் பாய்க் கேட்கவும், "போதும் சாமி!" என்பது போல் தலை மீது கை வைத்துக் கும்பிட்டாள்.

அவன் பளீர்ப் புன்னகை பதிலாய் வந்து சேர, மீண்டும் அந்தப் புன்னகையில் தன் வசமிழக்க விரும்பாதவளாய், முகத்தைத் திருப்பிக் கொண்டு, அறையை விட்டு வெளியேறினாள் இளவரசி.

அம்மா, அப்பா, லாவண்யா எல்லோரும் வந்திருப் பார்கள் என்ற குறுகுறுப்போடு இறங்கி வந்தவளுக்கு அந்தப் பிரம்மாண்டமான ஹால் வெறிச்சென்று இருப் பதைக் காண ஆச்சரியமாக இருந்தது.

"வாம்மா... இவ்வளவு நேரம் கழிச்சு சாப்பிட்டா உடம்பு என்னத்துக்கு ஆகறது?" இந்திரா தேவி அவள் கூந்தல் நிறைய முல்லைச் சரத்தைச் சூட்டிவிட்டவர் அவளைக் கைப் பிடித்து டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றார்.

"அவன் குளிச்சிட்டு இருக்கானா?" என்று கேட்டுக் கொண்டே தட்டில் இட்லி, சாம்பார், தேங்காய்ச் சட்னி, புதினா சட்னி என்று வரிசையாக அவர் பரிமாற, அருகிலேயே ஒரு கிண்ணத்தில் கேரட் அல்வாவைக் கொண்டு வந்து வைத்தாள் சமையல் வேலைக்கு இருக்கும் சாரதாம்மா.

"எங்க வீட்டுல இருந்து யாருமே வரலயா ஆன்ட்டி?" ஏக்கத்தோடு கேட்டவளைப் புன்னகையோடு பார்த்தார்.



"இனிமே இதுதானம்மா உன் வீடு. உன் அம்மா, அப்பா வந்தாங்க இளா. உங்களுக்காகக் காத்திருந்து பார்த்துட்டு பக்கத்துல இருக்கற கோவிலுக்குப் போயிருக் காங்க. கூடவே உன் மாமனாரும் போயிருக்காரு. வந்துடு வாங்கம்மா. நீ சாப்பிடு!" என்று சொல்லிக் கொண்டிருந்த நேரம், வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது.

முகத்தில் பெருமிதத்தோடு மீனாட்சி உள்ளே வர, சுந்தரமும், பிரபாகரனும் லானில் அமர்ந்து கொண்டனர்.

தாயும், மகளும் பேசிக் கொள்ளட்டும் என்று நாகரிகமாக விலகிச் சென்றார் இந்திராதேவி.

"மருமகளை உட்கார வெச்சு மாமியார் பரிமாறிட்டு இருக்காங்க. கொடுத்து வெச்சவடி நீ. உன் வீட்டுக்காரர் வர்றவரைக்கும் காத்திருந்து சாப்பிட வேண்டாமா?" என்று மகளின் காதருகே முணுமுணுத்தார் மீனாட்சி.

"அவங்களே எதையும் தப்பா எடுத்துக்கல. நீங்க ஏம்மா எடுத்துக் கொடுக்கறீங்க?" என்று இளவரசி முகம் சுருக்கிய நேரத்தில் இறங்கி வந்தான் தருண்.

டைனிங் டேபிளில் வந்து அமர்ந்த வேகத்தில், "இளா டார்லிங்... நாளைக்கு மார்னிங் ஃப்ளைட். டார்ஜீலிங் போறோம். ஹனிமூன் பேக்கேஜ் புக் பண்ணி யிருக்கேன். தேவையானதெல்லாம் பார்த்து எடுத்து வெச்சிக்கோ. பத்து நாள் கழிச்சுத்தான் வீட்டு ஞாபகமே வரணும்..." என்று அவன் சொன்னபோது, இளவரசி மட்டு மல்ல... மீனாட்சியும் கூட அசந்து போனார்.

"திடீர்னு நாளைக்கு ஃப்ளைட்னு சொன்னா எப்படிங்க? அம்மா நம்ம ரெண்டு பேரையும் குல தெய்வம் கோவிலுக்குக் கூட்டிட்டுப் போகணும்னு சொன்னாங்க. மறு வீட்டு விருந்துக்கு அழைக்கணும்னு சொல்லிட்டு இருந்தாங்க."

"அதெல்லாம் வந்து பார்த்துக்கலாம். உனக்கு சர்ப்ரைஸா இருக்கட்டுமேனுதான் நான் முதல்ல சொல்லல. டார்ஜீலிங்ல இருந்து வந்ததும் பிசினஸ் விஷயமா நான் பேங்காக் போக வேண்டியிருக்கு. லக்கேஜ் பேக் செய்ய இளாவுக்கு உதவி பண்ணுங்க அத்தை!" மாமியாருக்கும் சேர்த்து உத்தரவிட்டான்.

காலை உணவு முடிந்ததும், தன் அறையில் பரபர வென்று ஊருக்குத் தேவையானதைப் புரட்டிக் கொண் டிருந்தாள் இளவரசி.

"ஆனாலும் உன் வீட்டுக்காரருக்குப் பிடிச்சாப் பிடிச்ச பிடிதான்டி. எல்லாத்துக்கும் அவசரம்!" என்று மாப்பிள்ளையைப் பற்றி மகளிடம் அலுத்துக் கொண்டே அவள் எடுத்துக் கொடுத்த உடைகளை அந்த ட்ராலி சூட்கேஸில் அடுக்கிக் கொண்டிருந்தார் மீனாட்சி.

"லாவண்யா எங்கம்மா? அவளையும் அழைச்சிக் கிட்டு வந்திருக்கலாமே?"

"அவ காலேஜ் கட்டடிச்சிட்டு வருவாளா? கல்யாணத் துக்கு லீவ் போட்டதுக்கே ஒரு வாரம் லீவ் போட்டுட்டேன். எவ்வளவு நோட்ஸ் எடுக்க வேண்டியிருக்குமோனு புலம்பிக்கிட்டே போனவ."



சம்பந்தி வீட்டிலேயே விருந்துண்டு, திருமண ஆல்பங்களையும், சி.டி.களையும் பார்த்துக் கொண்டிருந்து விட்டுச் சுந்தரமும், மீனாட்சியும் மாலையில் விடை பெற்றனர்.

"இளாம்மா... மாப்பிள்ளை எல்லா விஷயத்தையும் சொன்னாருடா. சந்தோஷமா ஹனிமூன் போயிட்டு வாங்க. மாப்பிள்ளை எப்படி ஆசைப்படறாரோ அப்படி நடந்துக்கோம்மா. மறுவீடு, விருந்து எல்லாம் வந்து பார்த்துக்கலாம். போன ஜென்மத்துல நீ செய்த புண்ணியம். அதுதான் இப்படியொரு குடும்பத்துல வாழ்க்கைப் பட்டிருக்கே. நாளைக்கு விமான நிலையத் துக்கு வர்றோம்மா!" என்று சொல்லிவிட்டுச் சுந்தரம் வண்டியில் ஏறிய போது மனைவியின் கண்கள் கலங்கு வதையும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவள் போராடுவதையும் கவனித்தான் தருண்.

"செழியா... அவங்களைக் கொண்டு போய் வீட்டுல விட்டுட்டு வா!" என்று அவன் டிரைவரை ஏவிக் கொண் டிருந்த நேரம், தடதடவென்று தன் அறைக்கு ஓடிச் சென்று கட்டிலில் விழுந்தவள், அப்பாவையும், அம்மாவையும் நிரந்தரமாகப் பிரிந்து விட்டதைப் போலக் குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தாள்.

கவிழ்ந்து படுத்து அழுது கொண்டிருந்தவளை அறை வாசலில் நின்று பார்த்தான் தருண். என்னதான் உள்ளங்கையில் வைத்துத் தாங்கினாலும் இந்தப் பெண் ணுக்கு அம்மா வீட்டின் நினைவு தீரவில்லையே என்று கவலையாக இருந்தது.

தன் எண்ணத்தை அவன் இந்திரா தேவியிடம் வெளிப்படுத்த, "கொஞ்ச நாளைக்கு அப்படித்தான்டா இருக்கும். நாற்றைப் பறிச்சு இன்னொரு இடத்துல நட்டு வைக்கறோம். ஒரே நாள்ல வேர் பிடிக்கணும்னா எப்படி? நிதானமாதான் நடக்கும். உனக்கு எல்லாத்துலயும் அவசரம்!" என்று மகனைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்.

**ம**றுநாள் மேகக் கூட்டங்களின் நடுவே அலுமினியப் பறவை யொன்று பறந்து கொண்டிருந்தது.

ஹனிமூன் செல்பவர்களின் சொர்க்க பூமி என்று வர்ணிக்கப்படும் டார்ஜீலிங்கில் ஒரு புறம் வெள்ளைப் பனிப் போர்வை போர்த்திய மலை மகள். மற்றொரு புறம் பச்சைப் பட்டாடை உடுத்திய நில மகள். வெள்ளியாய் உருகி ஓடும் தீஸ்தா நதி. ஆடம்பரமான ரிசார்ட்டில் தங்கி அன்று முழுவதும் ஓய்வெடுத்தார்கள்.

மறுநாளிலிருந்து ஊர் சுற்றிப் பார்க்கும் வேலை தொடங்கியது. இளம் குளிரில் அவனோடு ஒண்டிக் கொண்டு நடப்பதை இதமாக உணர்ந்தாள் இளா. மரகதப் பச்சையாய் விரிந்து கிடந்த தேயிலைத் தோட்டங்கள். டைகர் ஹில்ஸிலிருந்து பனி மூடிய கஞ்சன்ஜங்கா மலைத் தொடரைப் பார்த்து ரசிப்பது ஜில்லென்று இருந்தது.

பனிமலைச் சாரலில் நீண்ட முடிகளைக் கொண்ட காட்டெருதின் மீதமர்ந்து இருவருமே சவாரி செய்த விநோத அனுபவம்.



ரங்கீத் பசுமைப் பள்ளத்தாக்கின் மீது கேபிள் காரில் பயணித்தார்கள்.

தலைக்கு மேல் நீலப் போர்வையில் பஞ்சுப் பொதிகளாய் ஆகாயம். காலுக்குக் கீழே இயற்கை இன்னும் அழிந்து விடவில்லை என்று பறை சாற்றும் பசுமைத் தோட்டங்கள். டார்ஜீலிங்கின் மொத்த அழகையும் உயரத்திலிருந்து ரசித்துக் கொண்டிருந்தாள் இளா.

அவள் இயற்கையை ரசித்துக் கொண்டிருக்க, குளிர் ஊடுருவாமல் இருக்க லெதர் ஜாக்கெட் அணிந்து, வெள்ளை நிற ஃபனா பர் தொப்பி, கைகளுக்கு க்ளவுஸ் என்று ஆங்கிலப் படத்தில் வரும் ஹீரோயினைப் போல இருந்தவளை வைத்த விழி விலக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் தருண்.

"நாம இப்ப என்ன உயரத்துல இருக்கோம் தரு?" என்று கேட்டுக் கொண்டே அவள் திரும்ப, அவன் கண்களில் தெரிந்த அந்த வேட்கை...!

வேட்கையின் பொருள் புரிந்து அவள் வெட்கப்பட, "உன் கன்னங்கள் திடீர்ன்னு சிம்லா ஆப்பிள் கலருக்கு மாறிடுச்சு. என்ன விஷயம்?"

அவள் தோளை அணைத்துக் கொண்டு ரகசிய மொழியில் அவன் கேட்டான்.

"ஒண்ணுமே தெரியாத சின்னப் பாப்பா!" என்று பொய்க் கோபம் காட்டி கிளவுஸ் அணிந்த முஷ்டியால் அவன் புஜத்தில் குத்தினாள்.

"ஹா" என்ற மெல்லிய ஒலியோடு அவன் முகத்தைச் சுருக்க, நிஜமான வலியின் வேதனை முகத்தில் தெரிந்தது.

"என்னாச்சு தரு?"

"உன்னாலதான். முதல்ல உன் நகங்களைக் கட் பண்ணு!" என்று கண்களில் குறும்பு மின்ன அவன் சொல்லவும், சொன்னதன் பொருள் புரிந்து அவள் வெட்கத்தில் உதடு கடிக்க, அவனிடம் மெல்லிய நகைப்பொலி.

இரண்டு நாட்கள் இயற்கையின் எழிலில் முழுமையாகத் தங்களை ஆழ்த்தியிருந்தவர்கள், அன்றைய தினம் மாலை அந்த அழகிய ரிசார்ட்டில், தங்கள் அறைக்கு முன் வேயப்பட்டிருந்த புல்வெளி பால்கனியில் ஏகாந்தமாய் அமர்ந்திருந்தனர்.

உடலைக் குத்தும் பனியில் கூட வெட்ட வெளியில் ஸ்வெட்டரோடு அமர்ந்திருப்பது அவர்கள் இருவருக்குமே பிடித்திருந்தது. அந்தக் குளிருக்கு வேண்டிய இதமாய் இருவரும் ஒருவரோடு ஒருவர் விரல் கோத்து அமர்ந்திருக்க, அவனுடைய ஆஸ்திரேலிய வாழ்க்கையைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது.

'என்ன படித்தான்? எங்கே படித்தான்?' என்பதையெல்லாம் சொல்லிக் கொண்டே வந்தவன், "ஆஸ்ல இருந்து வரவே கூடாதுன்னுதான் நினைச்சேன். அம்மாவோட பிடிவாதத்துல எல்லாமே மாறிப் போச்சு!" என்று பெருமூச்சோடு சொன்னபோது, அதிர்ந்து போனாள் இளா.



"தரு... நீங்க குருப்ரபா மேனேஜ்மெண்ட் ஏத்துக்கிட்...டது."

"நிச்சயமா விருப்பப்பட்டு இல்லை இளா."

"புரியலைப்பா!" என்று கேள்வியோடு அவனைப் பார்த்தாள்.

"ம்ம்... உனக்கு ஆரம்பத்துல இருந்து சொன்னாதான் புரியும். இந்தக் குருப்ரபா இண்டஸ்ட்ரீஸ் என் அம்மா வழியா வந்த சொத்து. அம்மாவோட அப்பா, அதாவது என் தாத்தா ராம் பகதூர் ஆரம்பிச்ச தொழிற்சாலை இது. எங்க வகையறா மொத்தமும் வட இந்தியாவுல இருந்த காலமது. ஒருசில குடும்பங்கள் மட்டும் வியாபார நிமித்தமா தென்னிந்தியா வந்து செட்டில் ஆனதா சொல்லுவாங்க. அப்படி வந்ததுல தாத்தாவும் ஒருத்தர்.

"தாத்தா கிட்ட மேனேஜரா வந்து வேலைக்குச் சேர்ந்தவர்தான் உன் மாமனார் மிஸ்டர் பிரபாகரன். அந்தக் காலத்துல சிங்கிள் டிகிரி படிச்சிருந்தாலே அரசனுக்குக் கொடுக்கற மரியாதையைக் கொடுப்பாங்களாம். அப்பா வேலை கேட்டு நின்னவுடனே தாத்தா நேரடியா மேனேஜர் போஸ்டுக்கே அப்பாயிண்ட் பண்ணிட்டாராம். தட்டிக் கொடுத்து வேலை வாங்கறதுல எங்க தாத்தா கில்லாடி. வேலையைக் கத்துக்கற விஷயத்துல அப்பாவும் சளைச்சவரில்ல.

"தாத்தாவுக்கு மூணு பொண்ணுங்க. இப்ப அமெரிக்கால இருக்கற வசுந்தரா பெரியம்மாதான்

மூத்த பொண்ணு. அடுத்தது என் அம்மா. அதுக்குப் பிறகு சுபத்ரா சித்தி. தாத்தாவுக்கு ஒரே ஒரு ஆண் வாரிசு. அவர்தான் ரேகாவோட மாமனார். இதுல வசுந்தரா பெரியம்மா கல்யாணத்துல வைத்துதான் அப்பா என் அம்மாவை முதல் முதல்ல பார்த்திருக்கிறார்."

"ஹை... அண்ணலும் நோக்கினார். அவளும் நோக்கினாள். லவ் ஸ்டோரியா? சொல்லுங்க... சொல்லுங்க!" என்று ஆர்வமானாள் இளவரசி.

அவள் தலையில் செல்லமாகக் குட்டியவன், "அண்ணல் நோக்கவே இல்லை. அவள் மட்டும்தான் நோக்கினாள்!" என்று முடிக்க... திருதிருவென்று விழித்தாள் இளவரசி.

"வசுந்தரா பெரியம்மா திருமணம் முடிஞ்சதும் ஃபேக்டரில வேலை பார்த்த மற்ற ஊழியர்கள் கிளம்பிப் போன மாதிரி அப்பாவும் போயிட்டாரு. அம்மாவால்தான் அதுக்குப் பிறகு அவரை மறக்க முடியாம போயிடுச்சு. பெரியம்மா கல்யாண ஆல்பத்துல இருந்த அப்போவோட ஃபோட்டோவ அடிக்கடி எடுத்து வெச்சுப் பார்த்திருக்காங்க. இது எப்படியோ என் பெரியம்மா கண்ணுல பட, அவங்க பாட்டி, தாத்தா கிட்டப் போட்டுக் கொடுச்க... ஏக களேபரம் ஆயிடுச்சு.

"உருட்டி மிரட்டி விசாரிச்சதுல தன் மனசுல இருந்ததை எல்லாம் அம்மா தைரியமாச் சொல்லிட்டாங்க. கண்டதும் காதலா! இதெல்லாம் குருட்டுத்தனமானது. ஜாதி, அந்தஸ்துனு என்னென்னவோ பேசி அம்மா மனசைக் கலைக்கப் பார்த்திருக்காங்க. மிரட்டியும்



பார்த்திருக்காங்க. அம்மாவுக்குச் சின்ன வயசுல இருந்தே பிடிவாத குணம் அதிகம்.

"எத்தனை பேர் மிரட்டியும் அம்மாகிட்ட எதுவுமே எடுபடலே. கல்யாணம்னு ஒன்னு பண்ணிக்கிட்டா அது பிரவுவைத்தான். இல்லேன்னா கடைசி வரைக்கும் இப்படியே இருந்துக்கறேன்னு சொல்லிட்டாங்களாம். ஊர் விட்டு ஊர் சொந்தக்காரங்க வீட்டுக்கு அனுப்பி வெச்சா மனசு மாறும்னு ஒண்ணு விட்ட சித்தப்பா வீட்டுக்கு அனுப்பியிருக்கார் தாத்தா. அங்க இந்திரா தேவி அவர்கள் சாப்பிடாம கொள்ளாம பட்டினி கிடந்து எலும்பும், தோலுமா திரும்பி வரவும், இதுக்கு மேல பொண்ணு தாங்க மாட்டான்னு நேரடியா அப்பா வீட்டுல சம்பந்தம் பேசிட்டார்.

"அதுக்குப் பிறகு எல்லாமே சுபம்தான். தாத்தா தன்னோட சொத்துக்களைப் பிரிச்சு எழுதும்போது, ஃபேக்டரியை அம்மா பேருக்கு எழுதி வெச்சிட்டார். அம்மாவுக்குன்னா என்ன? நிர்வாகம் பண்ணப் போறதென்னவோ அப்பாதானே?

"அப்பாவோட நிர்வாகத் திறன் மேல தாத்தாவுக்கு அசாத்திய நம்பிக்கை. இன்னைக்கு இந்த அளவு ஃபேக்டரி வளர்ந்து நிற்குதுன்னா அதுக்கு அப்பாவோட உழைப்பும், திறமையும் முக்கியக் காரணம்.

"எனக்குப் படிப்பு முடியற நேரத்துல என் அம்மாவுக்கு என்னவோ ஆயிடுச்சு. அங்கேயே வேலை தேடிக்கிட்டு அப்படியே செட்டில் ஆயிடலாம்னு நினைச்சபோது, இந்தியா வந்துதான் ஆகணும், ஃபேக்டரிய நீதான் ஏத்து நடத்தணும்னு ஒரேயடியா ரகளை பண்ண ஆரம்பிச்

சிட்டாங்க. முடியவே முடியாதுன்னு நானும் பிடிவாதமா மறுக்க, டென்ஷன் அதிகமாகி மூச்சுத் திணறல் வந்து..."

அதற்கு மேல் பேச முடியாமல் கண்களை மூடி நாற்காலியில் சாய்ந்து கொண்டான் தருண்.

அவன் முகத்தில் எண்ண அலைகளின் ஓட்டம். ஏதோ ஒரு கடினத் தன்மை. அவன் நிலை புரிந்து தன் நாற்காலியிலிருந்து எழுந்து வந்தவள், அவன் தலையைத் தன் வயிற்றோடு அழுத்திக் கொண்டு, சற்று நேரம் அவன் நெற்றியை இதமாய் அழுத்திக் கொடுத்தாள். அந்த அழுத்தம் தந்த சுகத்தில் மெய்ம்மறந்து அமர்ந்திருந்தான்.

உட்கார்ந்தபடியே பின்புறம் நீண்ட அவன் கைகள் அவள் இடையை வளைத்துப் பிடிக்க,

"ஹூம்... முழுசாச் சொல்லி முடிச்சாத்தான்!" என்று மீண்டும் தன்னிடத்தில் வந்து அமர்ந்தாள் இளவரசி.

"என்ன சொல்லச் சொல்றே? ஆஸ்திரேலியால இருந்திருந்தா ஒரு எம்.என்.சி.-யில ஜாயின் பண்ணி னோமா, ஏ.சி. ரூம்ல உட்கார்ந்தோமா, வேலையைப் பார்த்தோமா, சம்பளம் வாங்கினோமா... நாலு கேர்ள் ஃபிரெண்ட்ஸ் கூட ஊர் சுத்தினோமான்னு ஜாலியா இருந்திருக்கலாம். எமிலி, ரேச்சல், பெல்லா, லில்லி..." என்று அவன் அடுக்கிக் கொண்டே செல்ல,

"ஐயோ, போதும்!" என்று காதுகளைப் பொத்திக் கொண்டவளைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தான் தருண்.



"ஹேய்... சும்மா சொன்னேன். ஃப்ரெண்ட்ஷிப் தாண்டி எதுவும் இல்லை. ரைட்..." என்று அவள் கன்னத்தில் செல்லமாய்த் தட்டியவன், மேலும் தொடர்ந்தான்.

"அம்மாவுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதும், அப்பா அவங்களைத் தூக்கிட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கார். எனக்கும் தகவல் வந்து கிடைச்ச ஃப்ளைட்ல ஏறி வந்தேன். நான் உயிரோட இருக்கணும்னா ஃபேக்டரிய ஏத்துக்கறேன்னு சத்தியம் பண்ணிக் கொடுன்னு அம்மா கேட்க... அந்த நிமிஷம் அம்மாவோட உடல் நிலையை நினைச்சு அப்பாவும் கலங்கி நிற்க, எனக்கு என்ன பண்றதுன்னே தெரியல."

" 'என் மனைவி உயிரோட இருக்கிறதுதான்டா எனக்கு முக்கியம். அவ என்ன கேட்கறாளோ செய்டா!'னு அப்பாவும் கெஞ்ச ஆரம்பிச்சிட்டார். வேற வழியில்லாமப் படிப்பு முடிஞ்சதும் வந்து நிர்வாகத்தை ஏத்துக்கறதா சொல்லிட்டுத் திரும்பிப் போனேன். அந்த நேரத்துலதான் நீ வந்து வேலையில ஜாயின் பண்ணியிருக்கே.

"ஓ! சொன்ன மாதிரி கோர்ஸ் முடிஞ்சதும் வந்து ஃபேக்டரில உட்கார்ந்தாச்சு. அதுக்குப் பிறகும் ரெண்டு மூணு முறை நான் திரும்பிப் போறேன்னு பிடிவாதம் பிடிச்சுப் பார்த்தேன். ஒவ்வொரு முறை நான் அப்படிப் பேசும்போதும் அம்மாவுக்கு டென்ஷனாகி உடம்புக்கு முடியாம போயிடுச்சு. ப்ச்... அதுக்குப் பிறகு அதைப் பற்றி பேசறதையே விட்டுட்டேன். விருப்பம் இருக்கோ, இல்லையோ, இனி இதுதான் வேலைன்னு ஆயிடுச்சு."

சலிப்புடன் அவன் சொல்லி முடிக்கச் சிந்தனையில் இருந்தாள் இளவரசி.

"என்னடி யோசிச்சிட்டு இருக்கே?" பற்றியிருந்த அவள் விரல்களை இறுக்கினான் தருண்.

"அத்தையோட புத்திசாலித்தனத்தைப் பற்றி யோசிச் சிட்டு இருக்கேன். ஒரே கல்லுல மூணு மாங்காய் அடிச் சிட்டாங்க. நீங்க அவங்களுக்கு ஒரே மகன். தன்னுடைய மகன் தன் பக்கத்துல இருக்கணும்னுதானே எந்தத் தாயுமே ஆசைப்படுவாங்க.

"ரெண்டாவது, உங்க அப்பா இந்த ஃபேக்டரிக்காக நிறையப் பாடு பட்டிருக்காருன்னு நீங்களேதான் சொன்னீங்க. அப்படிப்பட்டவருக்கு ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல ஓய்வு தேவைன்னு உங்க அம்மா நினைச் சிருக்கலாம். நீங்க வந்து பொறுப்பு ஏத்துக்கறவரைக்கும் உங்க அப்பாவும் எம்.டி. சீட்டை விட்டு நகர முடியாது. வாடா பிரபு கண்ணா... வந்து வீட்டுல உட்காருடான்னு சொன்னா உங்க அப்பா கேட்கப் போறாரா?

"மூணாவது இவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்த தொழிற்சாலையை வேற யாருக்கும் கை மாற்றி விடவும் மனசு வராது. அதுக்குத்தான் உங்களை வரவழைச்சிருக் காங்க. சத்தியத்தைத் தவிர வேற எதுக்கும் இந்த முரட்டுக் குதிரை அடங்காதுன்னு அத்தைக்குத் தெரிஞ்சிருக்கும்."

"யாருடி முரட்டுக் குதிரை?" என்று அவன் இடத்தை விட்டு எழ,



"நீங்கதான்!" என்று சொல்லிவிட்டு அவளும் ஓட, அவனும் அவளை இரண்டே எட்டில் துரத்திப் பிடிக்க, அப்போதுதான் எட்டிப் பார்த்த வெள்ளி நிலா வெட்கம் வந்து மீண்டும் மேகத்துக்குள் ஒளிந்து கொண்டது.

"அம்மா இப்படித்தான் யோசிச்சிருப்பாங்கன்னு எப்படிச் சொன்னே? எனக்கும், அப்பாவுக்குமே இதெல் லாம் லேட்டாத்தான் புரிய வந்தது."

கேட்டவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவன் கண்களுக்குள் குறும்பாய்ப் பார்த்தாள்.

"யாரு ஸ்லோன்னு இப்பப் புரியுதா?" என்று கேலி செய்தவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

"அத்தை... இப்படி ஒரு முடிவெடுக்கலேன்னா எனக்கு நீங்க கிடைச்சிருக்க மாட்டீங்களே!" கண்களில் மையலோடு அவள் கேட்க,

"ஹும்... உன்கிட்ட மாட்டிக்கணும்னு தலையில எழுதியிருக்கே! என்ன செய்ய?" என்று அவன் சோகமாய் முகத்தை வைத்துக் கொள்ள, கோபத்தோடு உள்ளே சென்று சோபாவில் சுருண்டு கொண்டாள் இளவரசி.

"இளா டார்லிங்... சும்மா விளையாட்டுக்குத் தானேடா!" என்று அவன் கொஞ்சிச் சமாதானப் படுத்துவான் என்று அவள் நப்பாசையோடு எதிர்பார்க்க...

அவனோ, "பொம்மக்கா... எழுந்து வா. இன்னும் கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம்!" என்று வேண்டு மென்றே சீண்டிப் பார்த்தான்.

சலிப்புடன் அவன் சொல்லி முடிக்கச் சிந்தனையில் இருந்தாள் இளவரசி.

"என்னடி யோசிச்சிட்டு இருக்கே?" பற்றியிருந்த அவள் விரல்களை இறுக்கினான் தருண்.

"அத்தையோட புத்திசாலித்தனத்தைப் பற்றி யோசிச்சிட்டு இருக்கேன். ஒரே கல்லுல மூணு மாங்காய் அடிச்சிட்டாங்க. நீங்க அவங்களுக்கு ஒரே மகன். தன்னுடைய மகன் தன் பக்கத்துல இருக்கணும்னுதானே எந்தத் தாயுமே ஆசைப்படுவாங்க.

"ரெண்டாவது, உங்க அப்பா இந்த ஃபேக்டரிக்காக நிறையப் பாடு பட்டிருக்காருன்னு நீங்களேதான் சொன்னீங்க. அப்படிப்பட்டவருக்கு ஒரு குறிப்பிட்ட வயசுக்கு மேல ஓய்வு தேவைன்னு உங்க அம்மா நினைச்சிருக்கலாம். நீங்க வந்து பொறுப்பு ஏத்துக்கறவரைக்கும் உங்க அப்பாவும் எம்.டி. சீட்டை விட்டு நகர முடியாது. வாடா பிரபு கண்ணா... வந்து வீட்டுல உட்காருடான்னு சொன்னா உங்க அப்பா கேட்கப் போறாரா?

"மூணாவது இவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்த தொழிற்சாலையை வேற யாருக்கும் கை மாற்றி விடவும் மனசு வராது. அதுக்குத்தான் உங்களை வரவழைச்சிருக்காங்க. சத்தியத்தைத் தவிர வேற எதுக்கும் இந்த முரட்டுக் குதிரை அடங்காதுன்னு அத்தைக்குத் தெரிஞ்சிருக்கும்."

"யாருடி முரட்டுக் குதிரை?" என்று அவன் இடத்தை விட்டு எழ,



"நீங்கதான்!" என்று சொல்லிவிட்டு அவளும் ஓட, அவனும் அவளை இரண்டே எட்டில் துரத்திப் பிடிக்க, அப்போதுதான் எட்டிப் பார்த்த வெள்ளி நிலா வெட்கம் வந்து மீண்டும் மேகத்துக்குள் ஒளிந்து கொண்டது.

"அம்மா இப்படித்தான் யோசிச்சிருப்பாங்கன்னு எப்படிச் சொன்னே? எனக்கும், அப்பாவுக்குமே இதெல்லாம் லேட்டாத்தான் புரிய வந்தது."

கேட்டவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவன் கண்களுக்குள் குறும்பாய்ப் பார்த்தாள்.

"யாரு ஸ்லோன்னு இப்பப் புரியுதா?" என்று கேலி செய்தவளைத் தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

"அத்தை... இப்படி ஒரு முடிவெடுக்கலேன்னா எனக்கு நீங்க கிடைச்சிருக்க மாட்டீங்களே!" கண்களில் மையலோடு அவள் கேட்க,

"ஹும்... உன்கிட்ட மாட்டிக்கணும்னு தலையில எழுதியிருக்கே! என்ன செய்ய?" என்று அவன் சோகமாய் முகத்தை வைத்துக் கொள்ள, கோபத்தோடு உள்ளே சென்று சோபாவில் சுருண்டு கொண்டாள் இளவரசி.

"இளா டார்லிங்... சும்மா விளையாட்டுக்குத் தானேடா!" என்று அவன் கொஞ்சிச் சமாதானப் படுத்துவான் என்று அவள் நப்பாசையோடு எதிர்பார்க்க...

அவனோ, "பொம்மக்கா... எழுந்து வா. இன்னும் கொஞ்ச நேரம் பேசிட்டு இருக்கலாம்!" என்று வேண்டுமென்றே சீண்டிப் பார்த்தான்.

"இந்தப் பேரு உங்களுக்கு எப்படித் தெரிஞ்சது?"

"உபயம் உன் தங்கை!" என்று அவன் கண் சிமிட்டினான்.

"இந்தப் பேர்ல என்னைக் கூப்பிடாதீங்க. எனக்குப் பிடிக்காது."

"அப்படித்தான் கூப்பிடுவேன். பொம்மக்கா... பொம்மக்கா... பொம்மக்கா!"

அவனை அடிப்பதற்காகப் பொய்யாகக் கை ஓங்கிக் கொண்டு வந்தவளைச் சரேலென்று தன் மீது அவன் சரித்துக் கொண்ட போது, இருவர் மனமும் காதல் மிகுதியில் கள் வெறி கொண்டன.

ஒரு காதல் என்பது
உன் நெஞ்சில் உள்ளது
உன் நெஞ்சில் உள்ளது
கண்ணில் வந்ததடி...!

நாட்கள் நகர்ந்ததே தெரியாமல் இளமையின் வேகம் அவர்களை இழுத்துச் செல்ல, தேனிலவுப் பயணத்தின் முடிவில் உடலும், உயிரும் சங்கமித்துக் களித்த உணர்வோடு வந்து சேர்ந்தார்கள்.

வந்து சேர்ந்த இரண்டே நாட்களில் அவன் பேங்காக் புறப்பட்டபோது, ஒரு மனைவியாய்ப் பிரிவின் வேதனையை உணர்ந்தாள் இளா.

அவன் தோளில் சாய்ந்து அவள் கண்ணீர் பெருக்கியபோது, "ப்ளீஸ் கண்ணம்மா! இப்படி அழுதா நான் எப்படிப் போக முடியும் சொல்லு? ஜாலி ட்ரிப்பா இருந்தா உன்னையும் அழைச்சிட்டுப் போயிடுவேன். பிசினெஸ் ட்ரிப் ஆச்சேடா! நிறைய அலைய வேண்டியிருக்கும்."



"நீங்க வர்ற வரைக்கும் அம்மா வீட்டுல இருக்கட்டுமா?"

"இங்க உனக்கு என்ன குறைச்சல்? இங்கயே நிம்மதியா ரெஸ்ட் எடுக்கலாமே!"

"நீங்க இல்லாத இந்த ரூம்ல எனக்குத் தூக்கம் வரும்னு நினைக்கறீங்களா?" கண்களில் நீர் மல்க அவள் கேட்டபோது, அவன் இதயமே உறைந்து போனது.

அவள் நிலையைப் புரிந்து கொண்டவனாய், அவனே தன் மனைவியை அழைத்துச் சென்று மீனாட்சியிடம் ஒப்படைத்து விட்டு வந்தான்.

அவன் விமானம் புறப்பட்டுச் சென்ற இரண்டு மணி நேரத்தில் தன் வீட்டில் மயங்கிச் சரிந்தார் மீனாட்சி. சமையல்கட்டில் பாத்திரங்கள் உருளும் ஓசை கேட்டு, சுந்தரமும், இளவரசியும் அரக்கப் பரக்க ஓடி வந்தனர். அந்தக் குடும்பத்தைத் தாங்கிய தூண் தரையில் கிடந்ததைக் கண்டு, "அம்...மா!" என்று அலறினாள் இளா.

## 17

டாக்டர் பரமேஸ்வரிக்குக் கனிவான முகம். ஐம்பது வயதைக் கடந்திருப்பார் என்பதைக் காதோர நரைகளே எடுத்துச்

சொல்லின. மேஜையின் மீது லேப் ரிப்போர்ட்டும், ஸ்கேன் ரிப்போர்ட்டும் விரித்து வைக்கப் பட்டிருந்தன.

"பயப்பட வேண்டாம். ஜெனரல் வீக்னஸ். ட்ரிப்ஸ் ஏத்தச் சொல்லியிருக்கேன். இந்த வயசுல பெரும்பாலான பெண்களுக்கு வர்றதுதான். மெனோபாஸ் ஸ்டேஜ்!" என்று அவர் சொல்லி நிறுத்தத் தந்தையும், மகளும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நம்ம பாஷையில சொன்னாத் தீட்டு நின்னு போறது... நாற்பத்தைந்து வயசுல இருந்து ஐம்பத்தைந்து வயசுக்குள்ள எப்ப வேணாலும் நடக்கலாம்... அதுக்கு முன்னாடியே நடக்கற ப்ரிமெச்யூர் மெனொபாசும் உண்டு.

"இந்த மாதிரி நேரத்துல அடிக்கடி கோபம் வரும், காரணமே இல்லாம உடம்பு உஷ்ணம் ஆகும். நிறைய முடி கொட்டும், இருமல் வரும். திடீர்னு உடம்பு வெயிட் கூடிப் போகும், ராத்திரி நேரத்துல சரியாத் தூக்கம் வராமக் கஷ்டப்படறது, திடீர் திடீர்னு வியர்த்துக் கொட்டறது, சிறுநீர் கழிக்க முடியாம அவதிப்படறது, அந்த இடத்துல எரிச்சல், வலி... இந்த மாதிரி என்ன அறிகுறிகள் வேணாலும் இருக்கலாம். அம்மாகிட்ட இந்த மாதிரி ஏதாவது அறிகுறிகள் தெரிஞ்சுதாம்மா?"

"இருந்தது டாக்டர். இப்போதைக்குள்ள சின்னச் சின்ன விஷயத்துக்கெல்லாம் கோபப்பட்டாங்க. ராத்திரி நேரம் தூக்கம் வராமப் புரண்டு புரண்டு படுத்தாங்க. நாக்கு வறட்டுதுன்னு அடிக்கடி எந்திரிச்சு தண்ணி



குடிச்சாங்க. ரொம்பவும் தூங்கி ரெஸ்ட் எடுக்கறேனோ! வெயிட் ஏறுன மாதிரி இருக்குன்னு சொன்னாங்க.

"அப்பா வெளிநாட்டுல வேலையில இருக்காரு டாக்டர். என் திருமணத்துக்காகச் சமீபத்துலதான் இந்தியா வந்தாரு. அப்பாவோட ஞாபகத்துல அம்மா தூங்க முடியாம கஷ்டப்படறாங்களோன்னு நாங்க நினைச்சோம். இந்த மாதிரி இருக்கும்னு நினைச்சுக் கூடப் பார்க்கல."

"ஓ..." என்று உதடு குவித்தார் டாக்டர் பரமேஸ்வரி.

"உங்களையும் தப்புச் சொல்ல முடியாது. நிறைய அம்மாக்கள் தங்கள் உடம்புக்கு என்னங்கறதை புருஷன் கிட்டயும் சொல்றதில்ல. பிள்ளைங்க கிட்டயும் சொல்ற தில்ல. பிரச்னை அதிகமான பிறகு வீட்டுல இருக்கிறவங்க எல்லாம் அலறி அடிச்சிட்டு வந்து அவங்களை அட்மிட் பண்றதுதான் வாடிக்கையா நடக்குது.

"பெண்ணாய்ப் பிறந்த ஒவ்வொருத்தரும் இந்த மெனோபாஸ் ஸ்டேஜை சந்திச்சுத்தான் ஆகணும். எந்த வயசுலங்கறது அவங்கவங்க உடல் நிலைக்குத் தகுந்தபடி வேறுபடும்.

"அய்யய்யோ... இப்படி ஆயிடுச்சேன்னு பயப்படற பெண்களும் இன்னும் இருக்கத்தான் செய்யறாங்க. பேஷண்டோட ரத்தத்துல ஈஸ்ட்ரோஜென் லெவல் குறைச்சலா இருக்கு. மருந்து மாத்திரை எழுதித் தர்றேன். தவறாம எடுத்துக்கச் சொல்லுங்க. உணவுல நிறையப் பழங்கள், காய்கறிகள் சேர்த்துக்கணும். முடிஞ்சவரைக்கும் காபி குடிக்கறதை அவாய்ட் பண்ணச் சொல்லுங்க.

"அடிக்கடி பட்டினி கிடக்கிறது, அரை வயித்துக்குச் சாப்பிடறது, இதெல்லாம் கூடவே கூடாது. அவங்க உடல் நிலை அடிக்கடி எரிச்சல், கோபத்தை வரவழைக்கும். அதுக்குக் காரணம் ஹார்மோனல் இம்பாலன்ஸ். வீட்ல இருக்கறவங்கதான் அவங்க நிலைமையைப் புரிஞ்சிட்டு அட்ஜஸ்ட் பண்ணிட்டுப் போகணும். ஷீ நீட்ஸ் மோர் லவ் அண்ட் அடென்ஷன் நௌ. நான் சொல்றது புரியுதா?

"ஈஸ்ட்ரோஜென் லெவலைக் கண்டுக்காம விட்டுட்டா எலும்புகள் வலுவிழந்து தானாவே நொறுங்கற அபாயம் வந்துடும். ஆஸ்டியோபோரோசிஸ்னு கேள்விப்பட்டிருப் பிங்களே. நிறையப் பெண்களுக்கு இப்ப இந்தப் பாதிப்பு வரத் தொடங்கிடுச்சு. மனைவியை ஆரோக்கியமா இருக்கும்படி பார்த்துக்கோங்க சார்."

டாக்டர் சொன்னதற்கெல்லாம் தலையாட்டிவிட்டு அவர் எழுதிக் கொடுத்த ப்ரிஸ்க்ரிப்ஷனையும் வாங்கிக் கொண்டு அறைக்கு வந்தபோது மயக்கம் தெளிந்து கண் விழித்திருந்தார் மீனாட்சி. ஐ.வி. பொருத்தப்பட்டு ட்ரிப்ஸ் ஏறிக் கொண்டிருந்தது.

சுந்தரம் குற்ற உணர்ச்சியில் தவித்துப் போனார். பணம், பணம் என்று... பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருந்து, மீனாட்சியோடு வாழ வேண்டிய வாழ்க் கையைத் தொலைத்து விட்டோமோ என்று இதயம் குத்திக் கிழித்தது.

வீடு வந்து சேரும்வரை இளவரசி எதுவுமே பேச வில்லை. மனதுக்குள் குற்ற உணர்ச்சி குறுகுறுத்துக்



கொண்டே இருந்தது. எல்லாம் அம்மா பார்த்துக் கொள் வார்கள் என்று அத்தனை பொறுப்புகளையும் அவர் மீது சுமத்தி விட்டு விளையாட்டுத் தனமாகவே இருந்து விட்டோமே என்று வருத்தமாக இருந்தது.

"போதுமாம்மா! பிரதோஷம், சங்கடஹர சதுர்த்தி எதுக்கெடுத்தாலும் விரதம் இருந்தீங்களே! உங்க உடம்புல எந்தத் தெம்புமே இல்லையாம். அதுக்குத்தான் ட்ரிப்ஸ் ஏத்தியிருக்காங்க. இப்ப சந்தோஷமா?"

கண்களில் நீர் மல்கக் கேட்ட மகளிடம் என்ன சொல்வது என்று புரியாமல் கணவர் முகத்தைப் பார்த்தார் மீனாட்சி.

"அவரை ஏம்மா பார்க்கறீங்க? அவருக்கு நாம எல்லாருமே ரெண்டாம் பட்சம்தான். அவருக்குத் துபாய் போகணும். கத்தை கத்தையா சம்பாதிக்கணும். எங்க மறுவீடு விருந்து முடிஞ்சிருந்தா இந்நேரம் றெக்கை கட்டிப் பறந்திருக்க மாட்டாரு."

மகளின் குற்றச்சாட்டில் உறைந்து நின்றார் சுந்தரம்.

"ஏன்டி இப்படிப் பேசி நோகடிக்கறே? அவர் நமக்காகத்தானே போனாரு..." - கணவருக்காகப் பரிந்து கொண்டு வந்தார் மீனாட்சி.

"இருக்கட்டுமே... மூணு வருஷம் முன்னாடியே சம்பாதிச்ச வரைக்கும் போதும். திரும்பி வாங்கன்னு நாம எல்லோருமே சொன்னோமா இல்லையா? வந்திருந்தா... இப்ப... இப்படி..."

அதற்கு மேல் வெளிப்படையாகப் பேச முடியாமல் வெடுக்கென்று தன் அறைக்குள் சென்று விட்டாள் இளவரசி.

"என்னங்க ஆச்சு இந்தப் பொண்ணுக்கு? ஒரு சாதாரண மயக்கத்துக்கு ஏன் இந்தப் பேச்சுப் பேசறா?"

"அவ சொல்றதுல எந்தத் தப்பும் இல்லை மீனா! நான் கொஞ்சமாவது உன் மேல அக்கறைப் பட்டிருக்கணும். நீ படுத்து ரெஸ்ட் எடும்மா. சமையல் வேலையெல்லாம் நானே பார்த்துக்கறேன்."

"நீங்க ஏன்..." என்று மீனாட்சி இழுக்க...

"ஒரு தப்பும் இல்லை. வெளிநாட்டுல இருந்தபோது நானேதான சமைச்சுக்கிட்டேன். அந்த மாதிரி நினைச்சுக்க வேண்டியதுதான்."

சுந்தரம் அரிசியைக் கழுவிக் கொண்டிருந்த நேரம் கிச்சன் வாசலில் வந்து நின்றாள் இளவரசி.

"ஐ அம் ஸாரிப்பா! ரொம்ப ஹார்ஷா பேசிட்டேனா?"

"நீ எதுவும் தப்பாச் சொல்லலையே... நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் சத்தியம். இந்த அப்பாவுக்கு வலிக்காத மாதிரிக் கொஞ்சம் ஸாஃப்ட்டா சொல்லியிருக்கலாம். வயசாச்சு இல்லையா? வார்த்தையால் சுடும்போது லேசா இங்க வலிக்குதும்மா...!" – அவர் நெஞ்சைத் தொட்டுக் காட்ட...

"ஸாரிப்பா... ஸாரிப்பா...!" – என்று துடித்துப் போனாள்.



தன் தோளைப் பற்றிக் கொண்டு அழுத மகளைச் சமாதானப்படுத்தினார் சுந்தரம்.

"குடுங்கப்பா... நான் செய்யறேன். நீங்க அம்மா பக்கத்துல இருங்க..." என்று அவரை வலுக்கட்டாயமாக வெளியே அனுப்பி வைத்தாள் இளவரசி.

**அ**ன்று இரவு லாவண்யா ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, இளவரசிக்கு உறக்கம் வருவேனா என்றது.

டார்ஜீலிங்கில் அவளும், தருணும் கழித்த நாட்களே நினைவு வந்து கொண்டிருக்க.... உறக்கம் பிடிக்காமல் எழுந்து வெளியே வந்தவள் நடையில் சுந்தரத்தின் பேச்சுச் சத்தம் கேட்கவும், இருட்டிலேயே மதிலோடு மதிலாக ஒட்டி நின்றாள்.

"என்னை மன்னிச்சுடு மீனாட்சி!"

சுந்தரத்தின் குரல் மிக மெலிதாக ஒலித்தாலும், அதில் நடுக்கம் இருப்பதை இளவரசியால் உணர முடிந்தது.

"என்னங்க இது? மெனோபாஸ் வந்துட்டா வாழ்க்கையே அஸ்தமிச்சுப் போயிடுமா என்ன? அதுக்குப் பிறகும் சந்தோஷமா வாழறவங்க இருக்கத்தான் செய்யறாங்க.

"நம்ம பொண்ணுக்கே கல்யாணம் ஆயிடுச்சு. பேரன், பேத்தி எடுக்க வேண்டிய வயசுல இனி நம்பளைப் பற்றி யோசிச்சு என்னாகப் போகுது? வயசுக் காலத்துல இதெல்லாம் யோசிச்சு இருந்தாலாவது ஏதாவது அர்த்தமிருக்கு. எனக்கு இப்படியே தனியா வாழ்ந்து

பழகிடுச்சு. என்னை மாதிரிப் புருஷனை வெளிநாட்டுல சம்பாதிக்க விட்டுட்டு இளமையைத் தொலைச்சிட்டு நிற்கிறவங்க இந்த உலகத்துல இன்னும் எத்தனை பேரோ?

“தண்ணி குடிக்கலாம்னு எந்திரிச்சேன். பக்கத்துல ஆளைக் காணோமேன்னு பார்த்தா இங்க வந்து விசனமா உக்காந்திருக்கீங்க. நான் எதையுமே பெருசா எடுத்துக் கலை. நீங்களும் விசனப்பட வேண்டாம். நீங்க வேலையை ராஜினாமா செய்துட்டு இங்கே வர்றேன்னு சொன்னதே போதும். போய்த் தூங்குங்க.”

அம்மாவின் பேச்சைக் கேட்டு இளவரசியின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. எத்தனை ஆசைகளை உள்ளடக்கி வாழ்ந்தார்களோ என்று நினைக்கும்போது இதயமே கனத்துப் போனது. கண்களைத் துடைத்துக் கொண்டு வந்த சுவடு தெரியாமல் தன் அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டாள்.

கண நேரத்தில் கடந்து சென்றுவிடும் அழகான தருணங்கள் வாழ்க்கையில் மீண்டும் வருவதே இல்லை.

## 18

**செ**ல்லின் தொலைபேசி சிணுங்கலில் அதிகாலை நேரத்திலேயே கண் விழித்தாள் இளவரசி.

தருண்தான் அழைத்திருந்தான். பக்கத்தில் லாவண்யா இல்லை. படிப்பதற்காக எழுந்து சென்று



விட்டாள் போலிருக்கிறது என்று நினைத்துக் கொண்டே தூக்கம் கலையாத சோம்பலோடு, “ஹலோ!” என்றாள்.

“ஏய் சோம்பேறி! இன்னும் எந்திரிக்கவே இல்லையா? எனக்குக் கண் விழிச்சதும் உன் முகம்தான் கண்ணு முன்னாடி நின்னது. உடனே போன் பண்ணிட் டேன்...” - காலை நேர உற்சாகத்தோடு பேசினான் தருண்.

“ம்ம்... இந்திய நேரத்தை விட அங்க ஒன்றரை மணி நேரம் கூடுதல். நீங்க என்னைச் சோம்பேறின்னு சொல்றிங்களாக்கும்... இங்க ஏழு மணிதான் ஆகுது பாஸ்...!”

நேரம் போவது தெரியாமல் இருவரும் பேசிக் கொண்டே இருந்தனர். ஸ்வீட் நத்திங்ஸ்.

இறுதியில் அவன், “ஐ லவ் யூ இளா!” என்று முடிக்க...

“யூ ஆர் எவ்ரிதிங் டு மீ!” என்று அவள் சொல்லவும்... அவனுக்குள் ஒரு ஆனந்தத் திகைப்பு.

“இளா...” இனம் புரியா ஆழ்ந்த உணர்வுகளோடு அவன் குரல் ஒலித்தது.

“யெஸ்... ஐ மீன் இட். யூ ஆர் மை ஹார்ட். மை சோல்... எவ்ரிதிங். உங்களோடு வாழும் ஒவ்வொரு நொடியும் நான் ரசிச்சு ரசிச்சு வாழணும் தரு! சந்தோஷமான தருணங்களைச் சேர்ந்து அனுபவிக்காம

விட்டுட்டோமேன்னு பிற்காலத்துல நான் வருத்தப்படவே கூடாது."

வெறி பிடித்தவள் போல அந்த எலெக்ட்ரானிக் பெட்டியில் தன் முத்தங்களைப் பதித்தாள் இளவரசி.

திகைத்துப் போனான் தருண்.

"கண்ணம்மா... என்னடா ஆச்சு? ஏன் இவ்வளவு எமோஷனலா இருக்கே?"

"ப்ச்... எனக்கே தெரியலை. ஐ அம் மிஸ்ஸிங் யூ தரு! மிஸ்ஸிங் யூ எ லாட். இப்பவே உங்களைப் பார்க்கணும் போல இருக்கு. உங்களைக் கட்டிப் பிடிக்கணும் போல இருக்கு. உங்க மடியில படுத்துக்கணும் போல இருக்கு. உங்க சிரிப்பு... ஐ லைக் தி மோஸ்ட்... இப்பவே அந்தச் சிரிப்பைப் பார்க்கணும்..." - பேசிக் கொண்டே இருந்தவள்... திடீரென்று கதறி அழத் தொடங்கினாள்.

மனைவி தன்னை நினைத்து ஏங்குகிறாளே என்ற கணவனாகக் கர்வப்படுவதா? இப்படிக் கதறுகிறாளே என்று காதலனாகத் துன்பப்படுவதா? அவன் இதயம் தவிப்பில் துடித்தது.

"இளா... ப்ளீஸ் கண்ட்ரோல் யுவர்செல்ஃப். இந்த மாதிரி அழுதா பிசினஸ் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம்னு அடுத்த ஃப்ளைட்லயே வந்துடுவேன்."

"வேண்டாம்... வேண்டாம். நீங்க வொர்க் முடிச்சிட்டு வாங்க..." - அவசரமாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் இளவரசி.



தருண் பேங்காக்கிலிருந்து திரும்பி வந்ததும் மறுவீட்டு விருந்து, குல தெய்வ வழிபாடு, உறவினர் வீட்டுச் சீராட்டல் என்று நாட்கள் அதன் போக்கில் நகர்ந்து கொண்டிருந்தன.

அவளை உள்ளங்கையில் வைத்துத் தாங்கும் மாமனார், மாமியார், உயிருக்குள் வைத்துத் தாங்கும் கணவன் என்று பூர்வ ஜென்ம புண்ணியமாய்க் கிடைத்த வாழ்க்கை.

மாமியாரும், மருமகளும் ஜோடி போட்டுக் கொண்டு ஷாப்பிங் சென்றார்கள். மாமனாரும், மருமகளும் அதிகாலை நேரம் ஷட்டில் விளையாடினார்கள். தருண் ரெஃபரியாக இருந்து வேண்டுமென்றே மனைவிக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கினான். அதென்னவோ அவளை வம்புக்கு இழுப்பதென்றால் அவனுக்குப் பரமானந்தமாக இருக்கிறது.

சின்ன மாமியார் சுபத்ராவின் வீடு இப்போது இளவரசியின் சொந்த வீடு போல ஆனது. ரேகா அங்கு இல்லாத ஏக்கத்தை மறக்க, இளவரசி தன் மகளாக வந்து சேர்ந்ததாகவே சுபத்ரா நினைத்தார்.

தன் குடும்பத்தாரோடு அவள் ஒன்றிவிட்ட பாங்கறிந்து இதயம் பூரித்தான் தருண்.

அழகான நீரோடையாய்ச் சென்று கொண்டிருந்த வாழ்க்கையில் தாம்பத்திய உறவின் கௌரவமாய்ச் சிப்பிக்குள் முத்து...!

தாய்மை அடைந்து நின்ற மனைவியைத் தன் கரங்களில் ஏந்திச் சுற்றினான் தருண்.

"டேய் அமேசான்... உன் முரட்டுத்தனத்தை எல்லாம் நான்தான் தாங்குவேன். உள்ளே இருக்கிற குட்டிப் பாப்பா தாங்குமா? இறக்கி விடுடா!" - இளவரசி வேண்டுமென்றே அவனை 'டா' போட்டுப் பேசினாள்.

"என்னடா திடீர்னு டா போட்டுப் பேசறே?" என்று அவனும் விளையாட்டாய் மிரட்ட...

"சப்போர்ட்டுக்குத்தான் என் மகன் வரப் போறானே. இனி, தாராளமா உங்களை மிரட்டலாம்..." என்று அவளும் பதிலுக்கு வாயாட,

"மகனோட சேர்ந்து என் மகளும் வந்தா என்ன செய்வியாம்? எப்பவுமே பொண்ணுங்க அப்பாவுக்குத் தான் சப்போர்ட் பண்ணுவாங்க..."

"தோடா... ஐயாவுக்கு ரெட்டைக் குழந்தைங்க வேணுமோ?" என்று அவள் கேலி செய்ய...

"அப்படி நடந்தா சந்தோஷப்படுவேன். நீ ஒரு முறை பிரசவ வலியை அனுபவிச்சாலே போதும், இளா!" என்று அவன் சொன்னபோது, அவள் வார்த்தைகள் ஊமையாகிப் போயின.

ஐந்தாவது மாதமே மகளுக்கு வளைகாப்பு செய்கிறேன் என்று மீனாட்சி அனுமதி கேட்க, மகனிடமே கேட்டுக் கொள்ளுங்கள் என்று பிரபாகரனும், இந்திராவும் தருணைக் கை காட்டி விட்டனர். அவனோ ஒரே பிடிவாதமாய்ப் பிரசவமே தன் வீட்டில்தான் நடக்க



வேண்டும் என்று சொல்லத் தொடங்க.. முதன் முறையாக அங்கே மாமியார் - மருமகன் யுத்தம் தொடங்கியது.

"மனைவி மேல பாசம் இருக்க வேண்டியதுதான். ஆனா இதெல்லாம் ரொம்பத்தான் மாப்பிள்ளை. என் பொண்ணுக்கு வாய்க்கு ருசியா ஆக்கிப் போடணும், என் வீட்டுல வெச்சுச் சீராட்டணும்னு எனக்கு இருக்காதா? எல்லாமே உங்க பிடிவாதத்துக்கே நடக்கணும்னா எப்படி மாப்பிள்ளை. அவளுக்கும் மசக்கை அது இதுன்னு படுத்தி எடுக்குது. எப்படிச் சமாளிப்பா?"

கடைசியில் அரை மனதாக ஏழாவது மாத இறுதியில் வளைகாப்பு செய்து அழைத்துச் செல்ல அனுமதித்தான். அதுவரை மீனாட்சியும், சுந்தரமும்தான் அடிக்கடி சம்பந்தி வீடு வரை வந்து அவளைப் பார்த்துச் சென்றனர்.

"பொண்டாட்டி ஊருக்குப் போனா போதும். தலைவலி விட்டதுன்னு எல்லா ஆம்பளைங்களும் சந்தோஷப்படுவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன். நீங்க என்னடான்னா உள்ளூர்ல இருக்கிற அம்மா வீட்டுக்குக் கூட அனுப்ப மாட்டேங்கறீங்க...!" - இளவரசியே கூட அவன் போக்கைக் கண்டு சலித்துக் கொண்டாள்.

"சில உணர்வுகளை யெல்லாம் சொல்லிப் புரிய வைக்க முடியாது, இளா! அது மனசோட சம்பந்தப்பட்டது. உனக்கு இங்க என்ன குறை? உன்னை ஸ்பெஷலா பார்த்துக்க ரெண்டு ஆள் வேணாலும் போடறேன். ஏழாவது மாசம் வளைகாப்பு நடக்கட்டும்னு சொல்லிட் டேனே.... அதையும் மீறி இப்பவே போகணும்னு நீ

ஆசைப்பட்டா..." வார்த்தைகளை முடிக்காமல் பெரு மூச்சோடு தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

அதன் பிறகு தினமும் அவள் வயிற்றில் இருக்கும் சிசுவோடு அவன் பேச்சுக் கொடுப்பதும், இனிய இசைகளை ஒலிக்க விடுவதும், 'ஆரஞ்சு ஜூஸ் குடிச்சியா? கிரேப் ஜூஸ் குடிச்சியா?' என்று அலுவலகத்திலிருந்து ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை விசாரித்ததும்... வரும்போதே அவளுக்குப் பிடித்த ஜாதிமல்லியை வாங்கி வருவதும் அவளுக்குள் இனிய நினைவுகளாய்...!

## 19

**கை**யில் இருந்த வளையல்களை உருட்டிக் கொண்டு ஒருக்களித்துப் படுத்திருந்தாள் இளவரசி. தாய் வீட்டுக்கு வந்து ஒன்பதாவது மாதம் கூடத் தொடங்கி விட்டது.

லாவண்யா செமஸ்டர் பரீட்சைகள் முடிந்து விடுமுறையில் இருந்தாள். பிரசவத் தேதிக்கு இன்னும் இருபது நாட்கள் மட்டுமே மிச்சமிருக்க... வீட்டில் கந்த சஷ்டி கவசமும், விஷ்ணு சகஸ்ர நாமமும் மாறி மாறிக் கேசட்டில் ஒலித்துக் கொண்டிருந்தன.

அன்று காலை கண் விழித்ததிலிருந்தே அவனுடைய நினைவுகள் அதிகமாய் அலைக்கழித்தன. இத்தனைக்கும் இரண்டு நாட்கள் முன்னர்தான் அவளை நேரில் சந்தித்து விட்டுச் சென்றிருந்தான். காலையில் ஒரு தரம், மதியம் ஒரு தரம் என்று நீண்ட நேரம் அவனோடு



பேசிக் கொண்டிருந்தும் மனதுக்குள் ஏதோ ஒன்று காரணமறியாத் தவிப்பாகவே இருந்தது.

"இன்னைக்குப் பிரதோஷமாச்சே... கோவிலுக்குப் போகலையாம்மா?" - மாலையில் அவளுக்குத் தலை வாரிப் பூச்சூடி விட்ட அன்னையிடம் கேட்டுக் கொண்டிருந்தாள் இளவரசி.

"இந்த நிலைமையில உன்னைத் தனியா விட்டுட்டு எங்கடி போக முடியும்? லாவண்யா போயிருக்கா. அது போதும். இளா... பாத்ரூம் போகும் போதெல்லாம் ஜாக்கிரதையா கால் வெச்சுப் போகணும். தனியாப் போகக் கூடாது. ராத்திரி நேரத்துல அடிக்கடி போகணும் போலத் தோணும். என்னையோ, லாவண்யாவையோ துணைக்கு அழைக்கணும். இதுக்கெல்லாம் கூச்சம் பார்த்துட்டு விளையாட்டுத்தனமா எதுவும் பண்ணிடாதே."

"பேரன் என்னம்மா சொல்றான்?" என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்து அமர்ந்தார் சுந்தரம். மகளுக்காக அவர் உரித்துக் கொண்டு வந்திருந்த மாதுளை முத்துக்கள் கிண்ணத்தில் இருந்தன.

"உங்களை இப்படி ரிலாக்ஸ்டா பார்க்க எவ்வளவு சந்தோஷமா இருக்கு, தெரியுமாப்பா?"

"அதுதானே... ஆம்பளைங்களை டம்மியாக்கி வீட்ல உட்கார வைச்சுப் பார்க்கிறதுல பெண்களுக்கு ஒரு சந்தோஷம்!" என்று அவர் மனைவியைப் பார்க்க... எப்போதும் போலப் பொய்யாக முகத்தை நொடித்துக் கொண்டார் மீனாட்சி.

அன்று இரவு இளவரசியால் உறங்கவே முடிய வில்லை. குழந்தையின் அசைவுகள் மிகவும் அதிகமாக இருந்தன.

ஏழெட்டு முறை அம்மாவையும், லாவண்யாவையும் மாறி மாறி எழுப்பி விட்டு பாத்ரூமுக்குத் துணைக்கு அழைத்துச் சென்றாகிவிட்டது.

"ஸாரிம்மா... என்னால உங்களுக்குத் தூக்கம் கெடுதில்ல...!"

"பச்சப் புள்ளத்தனமாப் பேசக் கூடாது, இளா! அம்மான்னு ஒருத்தி இருக்கிறதே இதெல்லாம் செய்யத்தான். இந்த மாதிரிச் சங்கடமெல்லாம் புருஷனால சமாளிக்க முடியாதுன்னுதான் தாய் வீட்டுக்கு அழைச்சிட்டு வந்து பிரசவம் பார்க்கிறோம். உங்க ரெண்டு பேரையும் வயத்துல தாங்குனப்போ எனக்கு எட்டாவது மாசமே இந்தத் தொல்லை யெல்லாம் ஆரம்பிச்சிடுச்சு. உன் பாட்டிதான் அலுப்புச் சலிப்பில்லாம துணைக்கு வருவாங்க. இப்ப நான் என் பொண்ணுக்குச் செய்யறேன்."

அடிக்கடி எழுந்து சென்று வந்ததில் கால் குடைச்சல் வேறு. நான்காவது மாத மசக்கை நேரத்தில் கடுமையான பாத வலியோடு அவள் துவண்டு போய்க் கிடந்தபோது, அவன்தான் அவள் பாதங்களை மெல்ல அழுத்திக் கொடுத்துத் தூங்க வைத்தான். அந்த நேரத்திலும் அவன் நினைவுகள் அணை கட்ட, கடிகாரத்தைப் பார்த்தாள்.

மூன்றரை மணி என்று கடிகாரத்தின் முட்கள் தெரிவித்தன. சட்டென்று புரண்டு படுக்கவும் முடியாது.



எழுந்து அமர்ந்து மீண்டும் ஒருக்களித்துப் படுக்க வேண்டும். தட்டுத் தடுமாறித் தன் முழுப் பாரத்தையும் தாங்கிக் கொண்டு எழுந்து அமர்ந்தாள். ஒருக்களித்துப் படுக்க வேண்டும் என்று நினைத்தபோது மீண்டும் இயற்கையின் உபாதை.

இன்னும் எத்தனை முறைதான் இந்த அவஸ்தையைத் தாங்குவது என்று நினைத்தவளுக்குக் கண்களில் கண்ணீரே எட்டிப் பார்த்தது. தாய்மை, தாய்மை என்று எல்லோரும் உயர்த்திப் பேசும்போது, புரியாமல் இருந்ததெல்லாம் இந்த நேரத்தில் புரியத் தொடங்கியது.

வயிற்றில் கருவைச் சுமக்கும் ஒவ்வொரு ஜீவனும் போற்றுதலுக்கு உரியதே...!

"அம்மா!" என்ற அழைப்பில் மீனாட்சி அசைவதாகவே இல்லை. அடித்துப் போட்டது போலக் கிடந்தார்.

லாவண்யாவும் அடிக்கடி கண் விழித்து எழுந்ததில் மரக் கட்டையாகக் கிடக்க... இளாவுக்கு அவர்களைப் பார்க்கவே பாவமாக இருந்தது. அடக்க முடியாத நிலையில் அவளே அருகில் இருந்த பொருட்களைப் பிடித்துக் கொண்டு நிதானமாக அடியெடுத்து வைத்தாள்.

பாத்ரூம் கதவைத் திறந்து அவள் நிதானமாகவே பாதம் பதித்து நடக்க... "அம்மா...ஆஆஆ...." என்ற வீறிடலில் அந்த வீடே விழித்துக் கொண்டது.

"இளா..." என்று பதறித் துடித்து எழுந்தார் மீனாட்சி.

"அக்கா..." என்று அலறிக் கொண்டே எழுந்தாள் லாவண்யா.

"என்னம்மா மீனா... என்னடா?" - அரைகுறை நித்திரையில் அரக்கப் பரக்க ஓடி வந்தார் சுந்தரம்.

பாத்ரூமில் கண்ட காட்சி மூவரின் இதயத்தையும் உறைய வைத்தது.

"டியூட்டி டாக்டரைச் சீக்கிரமா வரச் சொல்லுங்க."

"தலையில அடிபட்டிருக்கு. ரத்தம் போகுது...."

"எப்படி ஆச்சு?"

"பாத்ரூம்ல நிலை தடுமாறி விழுந்ததுல இரும்புக் குழாயில அடிபட்டுடுச்சாம்."

"இடுப்புலயும் பலமா அடி வாங்கியிருக்காங்க. சீக்கிரம் ஆபரேஷன் தியேட்டரை ரெடி பண்ணுங்க. டாக்டர் கமலேஸ்வரிக்குப் போன் பண்ணு..."

நர்சுகள் பேசிக் கொண்டது அத்தனையும் லாவண்யாவும், சுந்தரமும் மட்டுமே கேட்டுக் கொண் டிருக்க... மீனாட்சியின் கண்களில் எந்த ஜீவனும் இல்லை.

ஆஸ்பத்திரியில் தொங்க விடப்பட்டிருந்த ஏழு மலையானின் படத்தையே பிரமை கொண்டவராக வெறித்துக் கொண்டிருந்தார்.

தகவல் தெரிந்து வெறி கொண்டவனாக வந்து சேர்ந்தான் தருண். அவன் இரவு உடையும், கலைந் திருந்த தலையும், சிவந்திருந்த விழிகளும் பார்ப்பதற்கே பயங்கரமாய்...!



சுந்தரம் தருணின் தோளைத் தொட்ட வேகத்தில், "ஹும்..." என்று ஆங்காரமாய் அவன் உறும, அரண்டு போய்ப் பார்த்தாள் லாவண்யா.

பொங்கி வழியும் கண்ணீரை அடக்க முடியாமல் அப்படியே அவனைத் தொடர்ந்து வந்த இந்திரா தேவி, அவருக்குத் துணையாகச் சாரதாம்மா. வண்டியைப் பார்க்கிங்கில் போட்டு விட்டு மூச்சு வாங்க ஏறி வந்த பிரபாகரன்.

"என்னடா... என்னடா... ஏன்டா இப்படி?" என்று நண்பனை நெருங்கிய வேகத்தில்,

"டேய் பிரபா... என் பொண்ணு..." என்று கட்டிக் கொண்டு அழத் தொடங்கினார் சுந்தரம்.

நர்ஸ் நீட்டிய பாரங்களில் கடகடவென்று கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்தான் தருண். சற்று நேரத்தில் அத்தனை ஆரவாரங்களும் அடங்கி விட... ஆபரேஷன் தியேட்டரின் முன்பு விளக்கு எரியத் தொடங்கியது.

"என் மருமகளையும், எங்க வாரிசையும் காப்பாத்து சாமி!" என்று மனதிற்குள் வேண்டியவராய் இந்திராவும், மீனாட்சி அருகிலேயே அமர்ந்திருக்க... மீனாட்சியின் பார்வை இன்னும் அந்தப் படத்தின் மீதே நிலைகுத்தி நின்றது.

வழியும் கண்ணீரைத் துடைக்கக் கூட மனமின்றி ஆபரேஷன் தியேட்டர் வாசலையே வெறித்துப் பார்த்த வளாய் லாவண்யா...

அந்த நேரத்தில் வண்டிச் சத்தம் கேட்கிறதே என்று எட்டிப் பார்த்து விட்டுத் துணைக்கு ஓடி வந்த பக்கத்து வீட்டுப் பத்மா மாமி.

ஜன்னலில் தலை சாய்த்துப் பைத்தியம் பிடித் தவனைப் போல அமர்ந்திருந்தான் தருண். அவன் மனம் எந்தத் தெய்வத்தையும் வேண்டவில்லை. இளா, இளா, இளா... என்று இளாவை மட்டுமே உச்சரித்துக் கொண்டிருந்தது.

அத்தனை இதயங்களும் படபடவென்று துடித்துக் கொண்டிருக்க... பரபரப்பாய் வெளியே வந்தார் நர்ஸ்.

"சார்... குழந்தைங்களைக் காப்பாத்திட்டோம். அவங்களுக்கு இன்னும் நினைவு திரும்பல..." என்று நல்லதையும், கெட்டதையும் இணைந்து சொல்லி விட்டுப் போக... கண நேரத்தில் எழுந்த சந்தோஷம் அதே வேகத்தில் காணாமல் போனது.

சேதி தெரிந்து ரகுவும், சுபத்ராவும் கூட அந்த அதிகாலை நேரத்திலேயே புறப்பட்டு வந்துவிட்டனர்.

"பகவானே... சின்ன உசுரு, பெரிய உசுரு ரெண்டையும் சேதாரமில்லாம காப்பாத்துப்பா..." என்று கண்களில் கண்ணீர் வழிய நடேசனோடும், மனோவோடும் டாக்ஸியில் ஏறினார் ரங்கநாயகி.



சிவகாமி இறைவனிடம் காணிக்கை கட்டி வைத்து, கனகாவோடு டாக்ஸியில் ஏறிக் கொண்டார்.

மெத்தென்ற பூந்துவாலையில் சுற்றப்பட்ட ரெட்டைக் குழந்தைகள். ஒன்று ஆண். மற்றொன்று பெண்.

'ரெட்டைக் குழந்தைகளா இருந்தா சந்தோஷப் படுவேன்...' என்று அவன் சொன்னது 'ததாஸ்து' தேவதைகளுக்குக் கேட்டிருக்குமோ?

குழந்தைகளைத் தாயின் அருகே படுக்க வைத் தார்கள். பிஞ்சுப் பாதங்களை நர்ஸ் சுண்டி விட, இரண்டும் வீறிட்டு அழுதன. மனதை உருக்கும் அந்த அழுகுரலுக்கே நினைவு திரும்பியிருக்க வேண்டும்.

ஆனால் இளவரசி கண் விழிக்க மறுக்கிறாள்.

டாக்டர் கமலேஸ்வரி மானிட்டரைப் பார்த்தார். நாடித் துடிப்பு சீராகத்தான் இயங்கிக் கொண்டிருந்தது.

வெளியே அத்தனை பேரும் தவிக்கும் மனதோடு காத்திருக்க... "இளா கண் விழித்து விட்டாள்!" என்ற செய்தி இன்னமும் வந்து சேரவில்லை. பொழுது கூடப் பொல பொலவென்று புலர்ந்து விட்டது.

பெறாத மகனின் தோள் மீது ரகுநந்தன் கை வைக்க, "சித்தப்பா!" என்று சிறுபிள்ளையாய் மாறி, அவர் கைகளில் முகம் புதைத்து அழுதான் தருண்.

"எல்லாம் சரியாயிடும். பயப்படாதேப்பா!" என்று மகனை அணைத்து ஆறுதல் சொன்னார்.

ரங்கநாயகி குடும்பத்தினர் கூட வந்து சேர்ந்து விட்டார்கள். தாயைக் கண்டதும் சேயாக மாறி அவரைக் கட்டிக் கொண்டு அழுதார் மீனாட்சி. இளாவுக்கு நினைவு திரும்பவில்லை என்றதும் இடிந்து போய் நின்றது நடேசனின் குடும்பம்.

"சார்... டாக்டர் உங்களை உள்ளே கூப்பிடறாங்க...!" என்று நர்ஸ் வந்து தருணை அழைக்கவும்... அனைவரிடமும் பரபரப்பு தொற்றிக் கொண்டது.

ரோஜா நிற முகம் வெளிறிப் போய்க் கிடக்க... தலைக் காயத்திற்கு வெள்ளைத் துணி கட்டப்பட்டு ஓய்ந்து போய்ப் படுத்திருந்தாள் இளவரசி.

அவளிடம் எந்த அசைவும் இல்லை. மூச்சு மட்டும் சீராக ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

"எமெர்ஜென்சி கேஸ். ஜெனரல் அனஸ்தீசியா குடுக்க வேண்டிய நிலைமை. எப்படி இருந்தாலும் இந்நேரம் கண் விழிச்சிருக்கணும். பட், ஷி இஸ் நாட் ரெஸ்பாண்டிங். குழந்தைகளைக் கூட அழவிட்டுப் பார்த்துட்டோம். அவங்க புலன்களைத் தட்டியெழுப்ப ஏதாவது ஒண்ணு நடக்கணும்.

"ஈவன் தி சவுண்ட்ஸ் அண்ட் டச்சஸ் வில் டூ தி மேஜிக். ரொம்பப் பிரியமானவங்களோட குரல், தொடுகை அவங்க உணர்வுகளைத் தட்டி விடலாம். எங்களோட கோ-ஆபரேட் பண்ணுங்க சார்! அவங்ககிட்ட பேச்சுக் கொடுத்துட்டே இருங்க. அவங்களுக்கு எப்படிப் பிடிக்குமோ அந்த மாதிரி."



கமலேஸ்வரி எத்தனையோ பிரசவங்களை வெற்றிகரமாய் நடத்தியவர். இதென்ன சோதனையாய்? அவருக்குள்ளும் பதட்டம் இருக்கத்தான் செய்தது. வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

எந்த உணர்வும் இன்றிப் படுத்திருந்தவளை நடுங்கும் விரல்களோடு தொட்டான்.

"இளா..."

"இளாம்மா..."

"இளவரசி..."

"இளா... கேன் யூ ஹியர் மீ. கண்ணைத் திறடா!"

அவள் கரத்தைக் கையிலேந்தி முத்தமிட்டான்.

எதற்கும் எந்த அசைவும் இல்லை. கண்களில் அச்சத்தோடு அவன் மருத்துவரைப் பார்க்க... மீண்டும் குழந்தைகளின் பாதங்களைச் சுண்டி விட்டு அழச் செய்தார். குழந்தைகளின் அழுகைச் சத்தம் அவன் நெஞ்சை அறுத்தது. தாங்க முடியாதவனாய்த் தவித்துப் போனான்.

"இளாம்மா... குழந்தைங்க அழற சத்தம் காதுல விழலையா? கண்ணைத் திறடா கண்ணம்மா! என்னையும், நம் குழந்தைங்களையும் தவிக்க விட்டு வேடிக்கை பார்க்கறியே!"

அவன் கண்ணில் ஊற்றெடுத்த கண்ணீர் அவள் கையில் வழிந்தோடியது.

உதடு துடிக்க அவள் உள்ளங்கையில் மீண்டும் முத்தமிட்டான். எந்தத் தீண்டலும் அவளை எழுப்பி விடுவதாய் இல்லை. அவள் கையைத் தன் கன்னத்திலேயே பதித்து விழி மூடி அமர்ந்திருந்தவனுக்குப் பைத்தியமே பிடித்து விடும் போல இருந்தது.

டாக்டர் அருகில் இருப்பதையும் மறந்து 'இளா, கண்ணம்மா...' என்று அழைத்து அவள் கன்னத்தை வருடத் தொடங்கினான்.

எந்த அசைவும் அவளிடம் ஏற்படாமல் போக... தன் தலையை இரு கைகளாலும் தாங்கிப் பிடித்து அமர்ந்திருந்தவன், திடீரென்று ஏதோ தோன்ற, தனக்குள் எழுந்த பயங்களையும், துக்கங்களையும் கட்டுப்படுத்திக் கொண்டு மிகவும் கஷ்டப்பட்டுப் பழைய குறும்புக் குரலுக்கு வந்தான்.

"மிஸ் மனிதாபிமானம்...!"

ஐஸ் கட்டியாய்க் காதில் நுழைந்து அவள் உயிரையே உருக்கும் குரல்! எங்கோ மேகத்தில் சஞ்சரிப்பதைப் போல உணர்ந்தவளின் தேகம் சிலிர்த்துக் கொண்டது.

"மிஸ் மனிதாபிமானம்... எப்ப கண் விழிக்கப் போறீங்க?"

ஆயுள் முழுக்க அவள் கேட்க விரும்பும் அதே நையாண்டிக் குரல். ஆகாயத்திலிருந்து கீழே இறங்கி வருவது போல ஏதோ ஒரு விசித்திர உணர்வு. ஒருமுறை



அவன் இப்படி அழைத்தாலே அவள் உருகி விடுவாளே! ஏன் இந்தக் குரல் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டிருக்கிறது?

மூடிய அவள் இமைகளுக்குள் அசைவு தெரிய, "தேங்க் காட்!" என்று அவளுக்கு அடிபட்டதையும் மறந்து முகம் முழுதும் முத்தமிட்டான் தருண். அதே புயல் வேக முத்தம். இளவரசியின் புலன்கள் அத்தனையும் செயல் படத் தொடங்கின.

குழந்தைகளின் அழுகுரல் அவள் செவிகளில் விழுந்து தாய்மை உணர்வைத் தட்டியெழுப்ப... மெல்லக் கண் விழித்தாள் இளவரசி.

கலைந்த தலைமுடியும், கலங்கிய கண்களுமாய் அவள் கண்ணெதிரே அவன்.

கணவனின் கம்பீரத்தை மட்டுமே பார்த்துப் பழகியவளுக்கு இந்தக் கோலத்தில் அவனைக் காணச் சகிக்கவில்லை. சோர்ந்து கிடந்த அவளது அல்லி மலர் விழிகளையே வெறித்தபடி அமர்ந்திருந்தான் தருண். அவளது மெலிந்த விரல்கள் இன்னமும் அவனது உள்ளங்கையிலேயே அடங்கிக் கிடந்தன.

விழியோரம் நீர் வழியக் கணவனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தவளை மருத்துவரின் குரல்தான் கலைத்தது.

"என் வயசுக்கு எத்தனையோ பிரசவங்களை நான் பார்த்திருக்கிறேன். என்னையே பயமுறுத்திப் பார்த்துட்டயே!

உன் புருஷனைப் பார்த்தது போதும். முதல்ல உன் குழந்தைங்களைப் பார்."

பூப் போல இருந்த தன் குழந்தைகளின் பிஞ்சுப் பாதங்களைத் தொட்டுப் பார்த்தான் தருண். அவன் ஆண்மையின் அடையாளங்களாய் இரண்டு ரோஜாப் பூக்கள். மனைவியின் முகத்தைப் பார்த்தான். களைப்பையும் மீறி அவள் முகத்தில் மெலிதாய்ப் படர்ந்த வெட்கம்.

தனக்கு உயிரானவளைத் தன் விழிகளுக்குள் நிறைத்துக் கொண்டு அவன் புன்னகையோடு வெளியே செல்ல...

அவன் முகத்தில் புன்னகையைக் கண்டதும் வெளியில் நின்ற அத்தனை பேர் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர்.

ஏழுமலையானின் பாதங்களில் முகம் பதித்து அழுதார் மீனாட்சி.

## 20

**மா**தங்கள் உருண்டோட, ரத்தத்தைப் பாலாக்கி, குழந்தைகளுக்கு அமுதூட்டி, அக்ஷயா என்று பெண்ணுக்கும், அபிஷேக் என்று மகனுக்கும் பெயரிட்டுச் சீராட்டித் தாலாட்டி வளர்த்த குழந்தைகள் இருவருக்கும் ஏழாவது மாதம் பூவரசி அம்மன் கோவிலில் காது குத்தும் வைபவமும், முடி இறக்கும் வைபவமும் விமரிசையாக நடந்து கொண்டிருந்தன.



நடேசன் குடும்பத்தோடு பிரபாகரன், ரகுநந்தன், சுந்தரம் அத்தனை பேரும் புடை சூழ நின்றிருக்க... ரேகாவும் மும்பையிலிருந்து தன் குட்டிப் பையன் விஷாலோடு வந்திருந்தாள்.

மனோவுக்குப் படிப்பு முடிந்து ஒரு எம்.என்.சி. கம்பெனியில் வேலை கிடைத்திருக்க... அவனும் விடுமுறை எடுத்து வந்து சேர்ந்திருந்தான். பட்டுப் பாவாடை தாவணியில் நடப்பதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் கனகா.

இளவரசிக்குச் சகோதரர்கள் என்று யாரும் இல்லாததால் தன் மடியிலேயே குழந்தைகளை அமர்த்திக் கொண்டான் தருண்.

"விழா முடிஞ்சதும் திருஷ்டி சுத்திப் போடுடி மீனா. ரெண்டு குழந்தைங்களும் கொழுக் மொழுக்குன்னு உட்கார்ந்திருக்கிறதைப் பாரேன்." ரங்கநாயகியின் முகத்தில் எப்போதும் போல் பெருமையின் ஊர்வலம்.

**வி**ழா முடிந்த அன்று மாலையே பிரபாகரன் குடும்பம் தங்கள் பேரப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டுச் செல்ல, சுந்தரமும், மீனாட்சியும், லாவண்யாவும் சில நாட்கள் ரங்கநாயகி வீட்டிலேயே தங்கிச் செல்வது என்று முடிவானது.

அன்று அர்த்த ராத்திரியில் கொல்லைப் பக்கம் சென்ற சிவகாமி பேச்சுச் சத்தம் கேட்டு இருட்டிலேயே திகைத்து நின்றார்.

"எனக்கும் படிப்பு முடிஞ்சிடுச்சு. உங்களுக்கும் வேலை கிடைச்சாச்சு. சீக்கிரமா அத்தை கிட்டயும், மாமா கிட்டயும் விஷயத்தைச் சொல்ல வேண்டியதுதானே, மனோ அத்தான்!"

"நானும் அதுக்குத்தான் நேரம் பார்த்துட்டு இருக்கேன், லாவண்யா. ஜாதகப் பொருத்தம், பூப் போட்டுப் பார்க்கிறதுன்னு பாட்டி ஆரம்பிச்சாங்கன்னா பெரிய தலைவலியாப் போயிடும். அதுதான் என்ன பண்ணலாம்னு யோசிச்சிட்டு இருக்கேன்."

"இப்படியே யோசிச்சிட்டே இருந்தா எனக்கு வயசாயிடும். அம்மா ஏற்கெனவே அந்த மேரேஜ் பீரோல இருந்து ஜாதகம் வந்திருக்கு. இந்த ஃபிரெண்ட் கிட்ட இருந்து ஜாதகம் வந்திருக்குன்னு ஆரம்பிச்சிட்டாங்க."

"வந்தா சரின்னு சொல்ல வேண்டியதுதானே!" என்று அவன் வேண்டுமென்றே வம்பிழுக்க...

"அதுக்குத்தான் மனசுக்குள்ளயே உங்களைப் பூட்டி வெச்சு லவ் பண்ணமாக்கும்..." என்று அவன் மீசையைப் பிடித்து இழுத்தாள் லாவண்யா.

"கோல்ட் மெடல் வாங்கினதுக்கு இந்த அத்தானுக்கு ட்ரீட் கொடுத்தியா?" - அவன் விரல்கள் லாவண்யாவின் உதடுகளையே வருடிக் கொண்டிருந்தன.

"கல்யாணத்துக்கு அப்புறம் மொத்தமா கொடுக்கலாம்னு இருந்தேன்..." என்று சொன்னவளின் முகத்தில் வெட்கப் புன்னகை.



முகத்தில் மெல்லிய புன்முறுவலோடு வந்த சுவடு தெரியாமல் சென்றார் சிவகாமி.

"என்னம்மா மருமகளே! உன் அக்காவுக்குச் செய்ய வேண்டியது எல்லாம் ஆச்சு. அடுத்து உன் ஜாதகம் பார்க்க வேண்டியதுதானே! நம்ம ஊர்லயே நல்ல பையனா ஒருத்தன் இருக்கான். நீ சரின்னு சொன்னா மாமாவைப் பார்க்கச் சொல்றேன்."

மறுநாள் காலை நேர உணவின் போது திடீரென்று பேச்சை ஆரம்பித்த சிவகாமி அத்தையைக் கலக்கத்தோடு பார்த்தாள் லாவண்யா. மனோவும் அதிர்ச்சியோடு அம்மாவின் முகத்தைப் பார்த்தான்.

"என்னடா... ஆடு திருடுன கள்ளனாட்டம் முழிக்கிறே? அந்த நல்ல பையன் நான்தான்னு பட்டுன்னு அவகிட்ட சொல்ல வேண்டியதுதானே!" என்று லொட்டென்று கரண்டியால் அவன் தோளில் தட்டினார் சிவகாமி.

"அம்....மா!"

"ம்ம்... ம்ம்... நேத்து ராத்திரியே நம்ம வீட்டுப் பப்பாளி மரம் எல்லாக் கதையும் சொல்லிடுச்சு..." என்று சிவகாமி சொன்னபோது உதட்டைக் கடித்துக் கொண்டாள் லாவண்யா.

"நீங்க பேசிட்டா ஆச்சா? ஜாதகம் பொருந்த வேண்டாமா?" என்று சுந்தரமும் நடேசனும் இணைந்து உள்ளே வந்தனர்.

"எது எப்படி இருந்தாலும் நான் அத்தானைத்தான் கட்டிக்குவேன். என் முடிவு எதுக்காகவும் மாறாது." கோபத்தோடு அப்பாவை உறுத்து விழித்தாள் லாவண்யா.

"போதும் உங்க விளையாட்டெல்லாம்! பத்துக்கு எட்டுப் பொருத்தம் நல்லாத்தான் இருக்கு. இப்பத்தான் பக்கத்துத் தெரு ஜோசியரைப் பார்த்துட்டு வர்றோம்," என்று மீனாட்சியும் ரங்கநாயகியும் உள்ளே நுழைய... சுந்தரமும், நடேசனும் லாவண்யாவைப் பார்த்துக் கேலியாகச் சிரிக்க... அவளோ வெட்கம் தாங்காமல் உள்ளே விரைந்தாள்.

"மாப்பிள்ளை... அம்மன் கிட்ட வாக்கு..." என்று ரங்கநாயகி ஆரம்பிக்கவும், சுந்தரம் மாமியாரை முறைக்கவும், கப்பென்று அடங்கிப் போனார்.

"நல்ல தாம்பத்திய வாழ்க்கைக்கு மற்ற எந்தப் பொருத்தத்தையும் விட மனப் பொருத்தம்தான் முக்கியம். என் ரெண்டு பொண்ணுங்களுக்குமே அது இருக்கு. எனக்கு அது போதும்..." என்று மாமியாரின் வாயை அடக்கி விட்டார் சுந்தரம்.

"உன்னை மாதிரி ஒரு அமைதியான பொண்ணு மருமகளா வந்தா நல்லா இருக்குமேன்னு எத்தனையோ முறை மனசுக்குள்ள நினைச்சிருக்கேன்டி..." என்று மருமகளுக்கு நெட்டி முறித்தார் சிவகாமி.

"கோபம் வந்தா நீ எப்படி பத்ரகாளியா மாறுவேனு அம்மாவுக்கு இன்னும் தெரியல!" என்று மனோ மெல்லிய குரலில் கேலி செய்தான்.



"சும்மா இருங்க அத்தான்! நீங்களே மாமியார் மருமக சண்டையை மூட்டி விடாதீங்க!" என்று செல்லமாய் முறைத்தாள் லாவண்யா.

"அண்ணி... உங்க கல்யாணத்தை வர்ற தை மாசம் வெச்சிக்கலாம்னு அம்மாவும், அப்பாவும் பேசிட்டு இருந்தாங்க..." அன்று மாலை கனகா உற்சாக மிகுதியில் ஓடி வந்து சொல்லவும்...

"சரிங்க நாத்தனாரே!" என்று லாவண்யா வேண்டுமென்றே கை கட்டி நிற்க,

"போங்க அண்ணி!" என்று வெட்கத்தோடு சொல்லி விட்டு ஓடிப் போனாள்.

**நா**ட்களின் பயணத்தில் இளவரசியின் உடல் நிலை மெல்ல மெல்லத் தேறி வந்தது. பேரன், பேத்தியைக் கொஞ்சி மகிழ்ந்த திருப்தியில் பிரபாகரனும், இந்திரா தேவியும் ரகுநந்தன் குடும்பத்தோடு இரண்டு நாள் பயணமாகப் பக்தி யாத்திரை புறப்பட்டுச் சென்றிருக்க... அவ்வளவு பெரிய வீட்டில் தருணும், இளவரசியும் குழந்தைகளும் மட்டுமே.

சாரதாம்மா எப்போதும் போல் கீழே தன்னறையில் முடங்கியிருக்க... அன்று இரவு குழந்தைகளைத் தூங்கச் செய்து கொண்டிருந்தாள் இளவரசி.

தன் தனியறையில் அமர்ந்து லேப்டாப்பை நோண்டிக் கொண்டிருந்தான் தருண். அறை வாசலில் நிழலாட... திரும்பிப் பார்த்தான். நிலையில் சாய்ந்து

நின்றபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் இளவரசி.

"என்னடா... பசங்க தூங்கிட்டாங்களா? நீயும் தூங்க வேண்டியதுதானே!"

"தூக்கம் வரலே..." நிலை வாசலை விரலால் நோண்டிக் கொண்டே சொன்னவளைப் புன்னகையோடு பார்த்தான்.

"தூக்கம் வராத அளவுக்கு உடம்புக்கு என்ன பண்ணுது?"

"என்ன பண்ணுதுன்னு உங்களுக்குத் தெரியா தாக்கும்?"

"தெரியலையே... பேஷன்ட் பக்கத்துல வந்தாலாவது டாக்டர் நாடி பிடிச்சுப் பார்க்கலாம். அங்கேயே நின்னா எப்படி?"

பூப்பாதங்கள் பூமியில் பதிய நெருங்கி வந்தவளைப் புயல் வேகத்தில் தன்னிடம் இழுத்துக் கொண்டான் தருண். அவள் தேகம் சூடேறிக் கிடந்ததை உணர்ந்தவன், "உன் உடம்பு தேறட்டுமேன்னு கஷ்டப்பட்டு அடங்கி இருந்தேன்டி!" என்று தன் முத்திரைகளைப் பதிக்கத் தொடங்க... அவள் கண்களில் காதலோடு சேர்ந்த தாபம் வழிந்து கொண்டிருந்தது.

வருடங்கள்தான் எத்தனை வேகமாக றெக்கை கட்டிப் பறக்கின்றன! வினயா, சுலோ, வினோத், ஸ்டீபன், உமேஷ் என்று அத்தனை பேரும் அவரவர் குடும்ப



வலையில் சிக்கிவிட, மெல்ல மெல்ல நட்பு வட்டம் மறைந்து தன் வீடு, தன் பிள்ளைகள் என்று எல்லாமே மாறிப் போனது.

இளவரசியின் குழந்தைகள் இருவரும் பிரபாகரன் இல்லப் புல்வெளியில் குடுகுடுவென்று ஓடிக் கொண்டிருந்தார்கள்.

"அபிஷேக்! நில்லுடா. என்னால ஓட முடியலை. அக்ஷயா! நீயாவது நில்லுடி. ரெண்டும் இந்தப் பாடு படுத்துதே!"

சாப்பாட்டுத் தட்டோடு அவர்கள் பின்னே விரைந்து கொண்டிருந்தாள் இளவரசி.

அங்கே பிரபாகரன் மடியில் பேத்தியும், இந்திரா தேவியின் மடியில் பேரனும் அமர்ந்து செல்லம் கொஞ்சிக் கொண்டிருந்தனர்.

"என்னால இதுங்க ரெண்டையும் சமாளிக்க முடியல. சாப்பிட மாட்டேன்னு ரெண்டு பேரும் இங்க வந்து உட்கார்ந்திருக்காங்க."

புலம்பிக் கொண்டே வந்த மருமகளைப் புன்னகை யோடு பார்த்தார் பிரபாகரன்.

"தாத்தா, பாட்டி கிட்ட சமத்தா மம்மு சாப்பிடறீங் களா?" என்று இரண்டு குழந்தைகளுக்கும் அவரே ஊட்டி விட்டார்.

அன்று இரவு அக்ஷயாவும், அபிஷேக்கும் தருணின் மடியில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

"டாடி... நானும் அக்ஷுவும் குடுகுடுன்னு ஓடினமா? மம்மியால எங்களைப் பிடிக்கவே முடியல. மம்மி எப்பவுமே ஸ்லோ டாடி..."

திடீரென்று அபிஷேக் சொல்லவும்... கணவன், மனைவி இருவருமே அதிர்ந்து போய் மகனின் முகத்தைப் பார்த்தனர்.

"அப்படியே நீங்க பேசற மாதிரியே பேசறான் பாருங்க...!" என்று கணவனை முறைத்தாள் இளவரசி.

அவன் முகத்திலோ அதே பளீர்ச் சிரிப்பு.

"ஏன்டா அம்மாவை அப்படிச் சொல்றே?" என்று சண்டைக் கோழியாய்ச் சிலுப்பிக் கொண்டு நின்றாள் அக்ஷயா.

'இதுக்கு என்ன சொல்லுவே?' என்பது போல் ரகசியமாய்ப் புருவங்களை உயர்த்தித் தன் மனைவியை அவன் பார்க்க... பார்வையைத் தாழ்த்திக் கொண்டவள் அவன் தோளோடு முகம் புதைத்தாள். அவனிடத்தில் மெல்லிய இளநகை.

## 21

காலச் சக்கரத்தின் அடுத்த சுழற்சியாய் ஆர்.கே.எஸ். மண்டபம். பிரபாகரன் - இந்திரா தேவி தம்பதிக்குச் சஷ்டியப்த பூர்த்தி விழா.

வாழை மரங்கள், தோரணங்கள் என்று மண்டபமே களை கட்டி இருந்தது. வீட்டு மருமகளாய் முன்னின்று



நடத்திக் கொண்டிருந்தாள் இளவரசி. பட்டு வேட்டியில் மண்டபத்தை வளைய வந்து கொண்டிருந்தான் தருண்.

அக்ஷயாவும், அபிஷேக்கும் தங்கள் தாத்தா, பாட்டியான சுந்தரத்திடமும், மீனாட்சியிடமும் விளையாடிக் கொண்டிருந்தனர்.

மனோவும், லாவண்யாவும் தங்கள் குட்டிப் பெண் ஷாலினியுடன் இரண்டு நாட்களுக்கு முன்பே இளவரசி வீட்டுக்கு வந்து விட்டார்கள்.

கனகா இப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தாள். வயதுக்கேற்ற வகையில் அவள் யௌவனம் கூடியிருந்தது.

நடேசனும், சிவகாமியும் தங்கள் குட்டிப் பேத்தி ஷாலினியை மாறி மாறிக் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

ரங்கநாயகிக்குக் கண் பார்வை குறைந்து விட்டாலும், "என் பேத்தி வீட்டு விசேஷத்துக்கு நான் வராம எப்படி?" என்று ஆவலின் மிகுதியில் வந்து அமர்ந்திருந்தார்.

சித்தப்பா, சித்தியின் சஷ்டியப்த பூர்த்தி என்பதால் அஜய் தன் மனைவி யௌவனாவையும், தன் மகன் விவேகானந்தையும் அமெரிக்காவிலிருந்து அழைத்து வந்திருந்தான். வசுந்தராவின் கணவருக்கு உடல் நிலைக் கோளாறு காரணமாக அவர்கள் இருவரும் வர முடியாத சூழ்நிலை.

ரகுநந்தனும், சுபத்ராவும் தங்கள் வீட்டு விசேஷமாக நினைத்து வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருந் தார்கள்.

சுரேந்தரும், ரேகாவும் தங்கள் மகன் விஷாலோடு விழா மேடையில் இருந்தார்கள்.

வெகு நாட்களுக்குப் பிறகு தன் தோழிகள் சுலோ வையும், வினயாவையும் குடும்பத்தோடு சந்தித்ததில் ரேகாவுக்கும், இளவரசிக்கும் ஆனந்தம்.

மந்திர உச்சாடனங்கள் நடந்து கொண்டிருக்க... இந்திரா தேவியும் பிரபாகரனும் மேடையில் பெரு மிதத்தோடு அமர்ந்திருந்தார்கள்.

வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் ஜெயித்து விட்ட பூரிப்பு அவர்கள் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

விழா முடிந்ததும் பந்தி பரிமாற எல்லாம் தயாராக இருக்கிறதா என்று சரி பார்க்கச் சென்ற மனைவியைச் சத்தமில்லாமல் மாடிப் படிகளுக்கு அடியிலேயே மடக்கினான் தருண்.

"எல்லோரும் கூடியிருக்கிற இடத்துல என்ன விளையாட்டு?" என்று பொய்க் கோபத்தோடு அவன் காதைப் பிடித்துத் திருகினாள் இளவரசி.

"இரண்டு குழந்தைகளைப் பெற்ற பிறகும் பிறருக்குத் தகுந்த மாதிரி இளமை குறையாமத்தான் இருக்கே. பியூட்டிஃபுல் ஃப்ராக்ரன்ஸ்!" என்று அவள் கூந்தலின் ஜாதிமல்லியை இழுத்து முகர்ந்தான் தருண்.



"டேய் அமேசான்... காதோரம் ஒரு நரைமுடி கூட எட்டிப் பார்க்க ஆரம்பிச்சிடுச்சு. இன்னும் ரொமாண்டிக் ஹீரோன்னு நினைப்பா? ஸ்டேஜ்ல நாம இல்லையேன்னு தேடப் போறாங்க..."

"ரொமாண்டிக் ஹீரோவா இல்லையான்னு இன்னைக்கு நைட் பார்த்துடுவோமா? குழந்தைகளைச் சீக்கிரம் தூங்க வெச்சிடு..." என்று அவள் விழிகளுக்குள் ஊடுருவிப் பார்த்தான்.

அதில் காதல், காமம், வேகம், வேட்கை அத்தனை யும் கண்களில் பளபளப்பாய்த் தெரிந்தது.

இளவரசிக்கு முதுகுத் தண்டு சிலிர்த்துக் கொண்டது.

"மம்மி..." என்று எங்கோ இருந்து அக்ஷயாவின் குரல் கேட்க...

சட்டென்று இருவரும் இடத்தை விட்டு அவரவர் வழியில் அகன்றனர்.

மேடையில் மாலையும், கழுத்துமாய் மங்களகரமாய் நின்ற பிரபாகரனும், இந்திரா தேவியும் தங்கள் மகனையும், மருமகளையும் ஆசிர்வதித்துப் பரிசு கொடுத்தார்கள்.

அந்த அழகிய ரோஜா வண்ண வைர மோதிரத்தைத் தன் மனைவியின் விரலில் அணிவித்தான் தருண்.

"நீங்க ரேகாவுக்குப் பரிசா கொடுத்த மோதிரமும் முதல்ல இளா விரல்லதானே ஏறுச்சு. ஸோ, அவளுக்கு நீங்கதான்னு அப்பவே தீர்மானமாயிருக்கு."

முன்பு நடந்த சம்பவங்களை நினைத்து, சுலோ, வினயா இருவரும் அவர்களைக் கேலி செய்ய... கன்னங்கள் நிறம் மாறத் தன் காதல் கணவனை ஏறிட்டுப் பார்த்தாள் இளவரசி.

எப்போதும் அவன் முகத்தில் தெரியும் அதே வசீகரப் புன்னகை.

இன்னாருக்கு இன்னார் என்று எழுதி வைத்தானே தேவன் அன்று...!